

கலை
தீபாவளி மலர்-61.
TANJORE
ஐரிஸ் மூவீஸ்
பங்காளிகள்
தயாரிப்பு: கண்மணி-கண்ணன் & P.ரெங்கசாமி செட்டியார்
திரைக்கதை,வசனம்: சோலைமலை · டைரக்ஷன்: G.ராமகிருஷ்ணா B.Sc.
BALU BROS




T.12733



# மனித தெய்வங்களுக்கு
## எமது அஞ்சலி

வாள் வீரரமைக்கும் வனப்பு வாய்ந்த சாம்ராஜ்யங்களும், மன்னர் திலகங்களின் சிறப்பு வாய்ந்த ஆட்சி முறையின் பெருமிதமும், கவிஞனின் நெஞ்சையள்ளும் சொற்செறிவும்—எழுத்தழகும் — மதவாதிகளின் முக்தி காட்டும் பேச்சழகும், அறிஞர்களின் பொன்மொழிகளும், மனித சமுதாயத்திற்கு எந்த நேரமும் பயன் விளைவித்துக் கொண்டு இருப்பதில்லை! ஆனால் மனித தெய்வங்களான விஞ்ஞானிகள் படைத்த இலட்சியப் படைப்புக்கள் மட்டும் என்றும் நிலைத்து நின்று பயன் விளைவிக்கக் கூடியவை. அவைகூட மனிதனுடைய அறிவு பண் படுத்தப்படாவிட்டால் அழிவு வேலைகளுக்குத்தான் பயன்படுத்தப் படுகின்றன. எனவே தான் மனிதனுடைய அறிவை செப்பனிட்டுத் தந்த வள்ளுவப் பெருந்தகையை இந்த விஞ்ஞானிகளுக் கெல்லாம் விடிவெள்ளியாக முன் நிறுத்தி, கண்கண்ட இந்த மனித தெய்வங்களுக்கு சிரம் தாழ்த்துகின்றோம். இருகைகுவித்த அஞ்சலியையும் செலுத்திக் கொள்ளுகிறோம்.






# பிலிப்ஸ் ரேடியோ

சுலபமான மாதத்தவணையில் கிடைக்கும்

PHILIPS

தந்தி: EMARESS Phone: 27

# மாடர்ன் ரேடியோஸ்

12B, பெரிய தெரு, கும்பகோணம்

கிளை.— 51, கச்சேரி ரோடு, விழுப்புரம்.


எல்லோருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!
வெள்ளி விழாக்கள் கொண்டாடும்
சித்திரங்களையும், நூறு நாட்களு
க்குமேல் ஓடும் சித்திரங்களையும்
விநியோகிப்பவர்கள்.....
Phone: 84178.
சிவாஜி பிலிம்ஸ் (பிரைவேட்) லிட்.,
3. பஸந்த் ரோடு ........ சென்னை-6.
BALU BROS





A SUBSIDIARY OF BINNY & CO. (MADRAS) LTD
BANGALORE CITY

பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட்
அக்ரஹாரம் ரோடு, பெங்களூர் 2
உரிமையாளர்கள் : பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்

JWT/BM-SS-1346

பளபளக்கும் தர மேன்மையை நீங்களே தெரிந்து கொள்ளலாம்







**Spartan** ஆட்டோ-லாக்கெர்ஸ்...

வர்ணத்தின் திட்டத்திற்கு உறுதி, உபயோ
கிப்பதில் எளிமை, நீண்ட கால சோபிதம்,
நீடித்த பளபளப்பு மற்றும் சீரான தர மேன்மை

அடிஸன் பெயின்ட்ஸ் & கெமிகல்ஸ் லிட்., செம்பியம், சென்னை-11.

மெம்பர்: இந்தியன் பெயின்ட் அசோஸியேஷன்



எஸ். ஆர். ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே.

**எல்லோரும் நினைப்பது!**



பொற்கொல்லர் 'பொடி' வைத்து ஊதுவதும் உண்டு



பெண்டிர்தம் ஆடவர்க்கு சொக்குப்பொடி போடுவதும் உண்டு



வழக்கறிஞர் 'பொடி' வைத்துப் பேசுவதும் உண்டு



சிறுவர்களை 'பொடி'யன் என்று சொல்லுவதும் உண்டு

ஆனல் 'பொடி'யென்றல் எல்லோரும் நினைப்பது

# T·A·S·ரத்தினம்



**பட்டணம் பொடி** ஒன்றைத்தான்

தயாரிப்பாளர்: T.A.S. ரத்தினம் பிரதர்ஸ் தபால் பெட்டி 1151, மதராஸ் 21

★ மங்கள கங்கா ஸ்நானத்திற்கு

★ மார்கோ சோப்பை மறவாத

ஆதரவாளர்களுக்கும்

வாடிக்கைகாரர்களுக்கும்

அன்பார்ந்த

**தீபாவளி வாழ்த்துக்கள்**

**சுத்தம் மிகுந்தது!**
**தூய்மை நிறைந்தது!**




**மார்கோ**
டாய்லெட்
**சோப்**

விசேஷ நற்குணங்கள்
வாய்ந்த வேப்பிலை போன்ற
பச்சை நிற டாய்லெட் சோப்

தயாரிப்பு:
தி கல்கத்தா கெமிகல் கம்பெனி
லிமிடெட்,
கல்கத்தா-29.

CMC 13 TM






## இந்தியன் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டட் ஆபீஸ்
"இந்தியன் சேம்பர் பில்டிங்ஸ்"
சென்னை-1

கிளைகள்:

சென்னை: [24 கிளை அலுவலகங்கள் உங்கள் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.]

மற்றும்

சென்னை, மைசூர், ஆந்திரா, கேரளா, பம்பாய், நியூ டெல்லி, கல்கத்தா, ஜெம்ஷெட்பூர் முதலிய பிரதேசங்களில் நற்பணியாற்றி வரும்

**116 கிளைகள்**

சிங்கப்பூர் - மலாக்கா - கோலாலம்பூர் பினங் - கொழும்பு முதலிய இடங்களில் அந்நிய நாட்டு பிராஞ்சுகள் உள்ளன. லண்டன் நியூ யார்க்கில் கரஸ்பாண்டண்டுகள் உள்ளனர்.

* ரிகரிங் டிபாசிட்டுகள்
* 3% வட்டி அளிக்கும் சேவிங்ஸ் பாங்க்
* 4% வட்டி ஈட்டும் குறுகிய கால டிபா சிட்டுகள்
* 5% வட்டி அளிக்கும் 5 வருட டிபாசிட்டுகள்
* மற்றும் இதர பாங்கிங் அலுவல்கள்

(அந்நிய நாட்டு பரிவர்த்தனை உட்பட)

விவரங்களுக்கு அருகாமையிலுள்ள இந்தியன் பாங்க் கிளை ஒன்றை அணுகவும்,

G. S. சுந்தரம்,
காரியதரிசி.

கலை

## மலருக்கு மணம் ஊட்டியவர்கள்

கி. ஆ. பெ. விசுவநாதம்
டாக்டர் மு. வரதராசனர்
டாக்டர் அ சிதம்பரநாதன்
டாக்டர் மா. இராசமாணிக்கனர்
கி. வா. ஜகந்நாதன்
சாண்டில்யன்
பாஸ்கர தொண்டமான்
குன்றக்குடி அடிகளார்
எல்லார்வி.
முன்னள் உதவி கமிஷனர்–குழந்தைவேலு
டாக்டர் இரத்தினவேல் சுப்ரமணியம்
பாரதிதாசன்
கண்ணதாசன்
மருதகாசி
வாணிதாசன்
சிவனடியார்
கௌதமன்
அருண்
டாக்டர் டி. எஸ். சத்தியமூர்த்தி
ச. து. நாராயணசாமி
கௌண்டின்யன்

### இயற்கை வண்ணப் படங்கள்

ஆர். என். நாகராஜராவ் (குருவாயூரப்பன் ராகினி)
மீனட்சிசுந்தரம் (இருபக்கப் படம்)

### அரிய புகைப் படங்கள்:

ஆனந்தன்
சென்னை அரசாங்க செய்தி இலாகா
பம்பாய் கலை நிருபர் நரஸிம்மன்

வெளியீடுவோர்: ஓவியன் அ. பாலு ஆசிரியர்: ஓவியன் அ. சீனு

இதில் வரும் கட்டுரைகளில் வரும் சம்பவங்கள், பெயர்கள் போன்றயாவும் கற்பனையே.

# வேங்கடத்தானின் பெருமை

அலுமேலு சீனிவாசன்


வேங்கடமலையும் அதிலே எழுந்தருளியுள்ள மாலவனும் சிலப்பதிகாரக் காலம் தொட்டே தமிழகத்தின் காவல் தெய்வமாக இலக்கியங்களில் குறிக்கப்படுகின்றனர்.

வடமாலவன் குன்றம் என்று சேர இளவலால் குறிக்கப் படும் இந்த வேங்கடம் இன்று பாரத மக்கள் அனைவருடைய உள்ளத்தையுமே கவர்ந்த சாந்தி நிலையமாகத் திகழ்கின்றது. எப்படிப்பட்ட சஞ்சலத்துடன் வேங்கட மலையில் அடிஎடுத்து வைப்பவருக்கும் இருபக்கத்துக் குன்றுகளிலும் பச்சைப் பசேலென்று செழித்திருக்கின்ற சஞ்சீவி மூலிகைகளில் இருந்து வரும் இனிய தென்றல் காற்று ஒருவித புத்துணர்வையும் புதுமலர்ச்சியையும் ஊட்டுகிறது. ஏதோ இனம் புரியாத ஒருசக்தி, காந்தம் இரும்பைக்கவர்வது போல பக்தர்களின் நெஞ்சைக் கவர்கிறது.

அதனால்தான் இந்த அணு யுகத்திலே கூட வேங்கடத்தானிற்கு ஒவ்வொருமாதமும் எட்டு இலட்சத்திற்கும் மேல் காணிக்கை வந்து குவிகிறது. இப்படிகாணிக்கையாக கொண்டு வந்து வடமாலவனின்கால்களிலேகொட்டும் பக்தர்கள், சிலர் நினைப்பதுபோல பாமரர்கள் மட்டும் அல்ல. அவர்களிலே படித்தவர்களும் இருக்கிறார்கள் எதையும் காரண காரியம் கொண்டு ஆராயும் விஞ்ஞானிகள் இருக்கிறார்கள். முதல்தர அதிகாரிகள் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் அவர்களிலே பகுத்தறிவுவாதிகள் கூட இருக்கிறார்கள்.

வேங்கடத்தான் இவ்வாறு எல்லோரையும் கவரும் காந்த சக்தியாக இருப்பதற்கு அந்தக்கோயிலின் நேர்மையான நிர்வாகமும் ஒருகாரணமாகும். திருப்பதி உண்டியலில் போடும் பணம் வீணாவதில்லை. அது கல்விக்கும் மற்றும்பல நற்காரியங்களுக்கும் பயன்படுத்தப் படுகின்றது என்ற நம்பிக்கை மக்களுக்கு இருப்பதால்தான் போதும் போதும் என்கின்ற அளவிற்கு அங்கு காணிக்கைப் பொருள் குவிகிறது.

நம்முடைய கோயில்களும் திருப்பதியைப் போல சிறந்த முறையில் செயலாற்ற வேண்டுமென்றால் வேங்கடத்தைப் போன்றே வந்துகுவியும் காணிக்கைகள் எல்லாம் கல்விக்கும், மருத்துவதொண்டிற்கும், இன்னும் பிற மக்கட்பணிகளுக்கும்பயன்படுதல் வேண்டும்.



திருப்பதி வெங்கடேஸ்வர பெருமாள் உற்சவ மூர்த்தி





செடி மார்க்
சிவபுரி புகையிலை

சிவபுரி புகையிலை
(பிரைவேட்) லிட்.,
71. ஸ்டேஷனரோடு, சிதம்பரம்.

எப்பொருள் யார் யார்
வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்
பொருள் காண்பதறிவு

அன்னையும் பிதாவும்
முன்னறி தெய்வம்
லோகா அமிர்தம்
எங்கள் தெய்வம்

# தமிழ்த் தாய்க்கு எங்கள் காணிக்கை


தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடும் சூழ் கலைவாணர்களும் இவள் என்று பிறந்தனள் என்றுணரா நிலைபடைத்த தமிழன்னையே! கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் உன் உதிரத்து உதித்தெழுந்து ஒன்று பல வாயிடினும் நின் சீரிளமைத் திறம் குறையாத தமிழ்த் தாயே! உன்னுடைய மலரடிக்கு எங்களுடைய உழைப்பால் உருவாகிய இந்த வண்ண மலரை காணிக்கையாக்குகின்றோம்.

உனக்கு சிலம்பு அணிவிக்க நாங்கள் சேர இளவல் அல்ல. மணிமேகலை பூட்ட கூலவாணிகசாத்தன் அல்ல. வளையாபதியும், குண்டலகேசியும், சீவக சிந்தாமணியும் படைத்துத் தருவதற்கு நாங்கள் பழந்தமிழ்ச் சான்றோர்கள் அல்ல.

உனக்கு மணிமகுடம் சூட்டுவதற்கு நாங்கள் ஒல்காத புகழ் படைத்த தொல்காப்பியர் அல்ல. அல்லது உனக்கு ஒப்பரியசெங்கோல் தருவதற்கு நாங்கள் பொய்யாமொழியாரான வள்ளுவப் பெருந்தகையும் அல்ல.

இருந்தும் எங்களுடைய ஆர்வம் ஒன்றையே துணையாகக்கொண்டு, காவியச் சக்ரவர்த்திகளான கம்பரும், ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும்கூட கடக்க முடியாத தமிழ்க் கடலைக் கடக்க முன் வந்திருக்கிறோம்.

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசும் வளர்நிலை பெற்ற நீ, இந்த எளியவர்களின் காணிக்கையையும் ஏற்றருள வேண்டுகிறோம்.



# மிகைநாடி

# மிக்க கொள்க

தமிழகம் வேறு எத்துறையில் தேய்ந்திருந்தாலும் பத்திரிகைத் துறையைப் பொறுத்த மட்டில் பாரத நாட்டிலேயே அதுதான் முற்றிலும் வளர்ந்துள்ள முழுநிலவு. மற்றைய மாநிலங்கள் கனவிலும் எட்டிப் பிடிக்க இயலாத அளவிற்கு சீரும் சிறப்பும் மிகுந்த தமிழகத்தில், பழம் பெரும் ஏடுகள் எண்ணத்திலும் வண்ணத்திலும் சிறந்த மலர் போடும் நேரத்தில் நாமும் ஏதோ எடுத்தோம் தொடுத்தோம் என்று இந்த மலரை உருவாக்கினோம். மயன் வீடு கட்டியது போன்று மலர் வெளியிடக்கூடியவர்களுக்கு இடையே மணல்வீடு கட்டும் சிறுவனைப் போல நாம் இருக்கின்றோம். உலகப் புகழ்படைத்த ஓவியர்களுக்கு கிடையே சிறு குழந்தை ஒன்று தன் பிஞ்சு விரல்களால் குறுக்கும் நெடுக்குமாக கோடுகள் இழுத்தால் எப்படி இருக்குமோ அப்படியே புகழ் வாய்ந்த பெரியவர்களின் கண் கவரும் மலர்க்கிடையே நாமும் இந்த சிறியவர்களின் மலரை தமிழ் மக்களின் திருமுன் படைக்கின்றோம்.



தமிழ் மக்களிடையே தூண்டுதலாலும், எப்படியும் எங்களுடைய 'கலை' இந்த ஆண்டும் வண்ண மலராக மலர வேண்டும் என்ற வாசகர்களின் அன்புக் கட்டளையாலுமே வசதிக் குறைவையும் பொருட்படுத்தாது இவ்வாண்டும் மலர் வேலைகளில் இறங்கினோம்.

எங்களுடைய இந்த மலர், தமிழர்களுக்கு நம்மால் இயன்ற காணிக்கையை இவ்வாண்டும் படைக்க வேண்டும் என்ற எங்களுடைய தமிழார்வத்தாலும் சிறு குழந்தை தீட்டிய ஓவியமாக இருந்தாலும் பெற்றோர்களுக்கு அதுதான் மட்டானியா தீட்டிய ஓவியத்தைவிட இனிக்கும் என்பது போன்று, நாம் செய்யும் குறைகளையும் தமிழ் மக்களுடைய அன்பு உள்ளம் மன்னிக்கும் என்ற மனஉறுதியாலுமே இந்த மலரை உருவாக்க முயன்றோம்.

வழக்கம் போல தடைபல குறுக்கிட்டன. ஒவ்வொன்றையும் பணவாள் கொண்டு கடக்கவேண்டியிருந்தது. பத்திரிகைத் தட்டு வந்து பயமுறுத்தியது அதையும் நமது தளராத முயற்சியால் தகர்த்து எறிய வேண்டியிருந்தது.

கோட்டை முற்றுகைபோல எங்களை இரவையும் பகலாக்கி உழைக்க வைத்த இந்த இலட்சியப் படைப்பின் சுவையைப் பருகக் காத்திருக்கும் உங்களுக்கு இடையே இன்னும் தடையாக நிற்க நாங்கள் விரும்பவில்லை. ஆனால் அதற்கு முன் ஒரு சிலருக்கு நன்றி-கூற வேண்டியதும் எங்களுடைய தலையாய கடமையாகும்.

முதலிலே இந்த வண்ணமலருக்கு தம்முடைய எழுத்தால் மெருகூட்டிய சான்றோர்கள் அனைவரும் தமிழ்த்தாயின் தவப்புதல்வர்கள். அவர்கள் இந்த மலரில் எழுதியது சிறுவர்களான நமக்காக அல்ல. கலைத்தாய்க்காக அவர்கள் அளித்த தமிழ்க் காணிக்கைஇது. இந்தக் காணிக்கைக்கு-சுவையும் பொருளுமிக்க செந்தமிழ்த் தேனிற்கு நாம் மட்டும் அல்ல தமிழ்உலகமே தொழுதுபின் நிற்கவேண்டும்.

அடுத்ததாக இந்த மலருக்கு தங்களுடைய விளம்பரங்களால் பொருளாதார பலம் கொடுத்த விளம்பரதாரர்களுக்கும், மலர்ப்பணியில் உடன் இருந்து உழைத்த அனைவர்களுக்கும் எம் இதயம்கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மூன்றாவதாக நாம் இந்த அளவிற்கு பத்திரிகைத் துறையில் வளர்வதற்குக்காரணமாக இருந்த மேதை வாசன் அவர்களுக்கும், மறைந்த எழுத்து வேந்தன் கல்கி அவர்களுக்கும் நமது இதயபூர்வமான நன்றியையும் இருகரம் குவித்த வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஏன் என்றால் நாம் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியும் இந்த மேதைகள் காட்டியதுதான். மறைந்த கல்கியவர்களுடைய தூண்டுதல் தான் எங்கள் கலைக்கூட மலர். அதனுடைய தொடர்ச்சிதான் இந்த வண்ண மலர்.

வாழ்த்து

''சமுதாய வளர்ச்சியில் விழாவிற்குத் தனியிடம் உண்டு. சிறுவர் முதல் வயோதிகர் வரை விழா மகிழ்ச்சியில் பங்கு கொள்கிறார்கள். நம் நாட்டின் விழாக்களுள் தீபாவளித் திருவிழா குறிப்பிடத்தக்க ஒன்றாகும். புத்தாடை உடுப்பதில் மட்டும், விழா நிறைவு பெற்று விடாது. நாட்டின் நல்வாழ்விற்குரிய எண்ணங்களை அந்த நாளில் எண்ணவேண்டும். அத்தகைய மன எழுச்சியைப் பத்திரிகைகள் வெளியிடும் சிறப்பு மலர்கள் மக்களிடையே உருவாக்க இயலும்.

இந்த அடிப்படையில் 'கலை' தீபாவளி மலர் ஒற்றுமை உணர்ச்சியையும், கடமை உணர்ச்சியையும் மக்களிடையே வளர்க்கும் வகையில் சிறப்புற அமைய என் நல் வாழ்த்துக்கள்.

அன்புடன்,
சி. சுப்ரமணியம்,
கல்வி, நிதி அமைச்சர்.

ஆசிரியர்,
கலை,
சென்னை,

மூளைவசதி ஒன்றைத் தவிர வேறு வசதி ஏதுமற்ற சிறியவர்களின் படைப்பாதலால், இதிலே குற்றம் குறைகள் இருப்பதை சிற்சில-இடங்களில் அச்சுக் குறைகள் இருப்பதைத் தவிர்க்க இயலவில்லை. எனவே ''குணம் நாடி குற்றம் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொள்ளும்'' நீங்கள் இதில் உள்ள நல்லவைகளுக்காக எங்களைப் பாராட்டும் அதே நேரத்தில் இதில் உள்ள தீமைகளுக்காக அருள் கூர்ந்து எம்மை மன்னித்து விடும்படி தமிழ்ப்பெருங்குடி மக்களாகிய உங்களிடம் கரம் குவித்து வேண்டிக் கொள்ளுகிறோம்.

இந்தக் காணிக்கையை முடிப்பதற்கு முன் தமிழர் நலனும்—தமிழின் வளர்ச்சியுமே எங்கடைய கொள்கை என்பதையும், இந்தக் கொள்கைக்கு குறுக்கே நிற்பவர்கள் வடமேரு போன்ற புகழ் மிக்கவர்களாக இருந்தாலும் கலை அவர்களை எதிர்க்கத் தயங்காது என்பதையும், அதே நேரத்தில் இந்தக் கொள்கைக்கு ஆக்கம் தேடுபவர்கள் எவ்வளவு குறைந்தவர்களாக இருந்தாலும் கலை அவர்களை உச்சிமீது வைத்துப் போற்றத் தயங்காது என்பதையும் பணிவுடன் ஆனால் அதேநேரத்தில் உறுதியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வாழ்க தமிழர். வளர்க செந்தமிழ்



# எங்கும் நியூட்ரைன் என்பதே பேச்சு

**Nutrine**

மிட்டாய்கள்







அழகுமிக்க டின்களில் வரும் ருசிமிக்க நியூட்ரைன் மிட்டாய்கள் தீபாவளி தினத்திற்கு மிகவும் உகந்த பரிசு. உங்கள் அன்பிற்கு ஒரு இனிமையான அடையாளம்.

நியூட்ரைன் கன்பெக்ஷனரி பிரைவேட் லிமிடெட், சித்தூர் ஆந்திரப் பிரதேசம்


NC-75-A




கனவு பலித்ததம்மா... கர்மவீரர் ஆட்சியிலே...






# உடை மாறினல் போதுமா?

தமிழ் நாட்டின் தலைவிதியையே நிர்ணயிக்க வல்ல எட்டுத் தலைவர்கள் இங்கு தங்களுடைய வழக்கமான உடையில் இருந்து மாறுபட்டுக் காட்சி தருகிறார்கள்.


தமிழ் மொழியைக் காக்கும் சிலம்புச் செல்வரும், தொழிலாளர் நலன் காக்கும் சிந்தனையாளர் ராமமூர்த்தியும், சமதர்ம சமுதாயம் காணத்துடிக்கும் ஆசிய ஜோதியும், தமிழ் நாட்டிற்குக் கல்விக் கண் கொடுக்கும் கர்ம வீரரும், தமிழ்மானம் காக்க முன் நிற்கும் அறிஞர் அண்ணாவும், நியாயத்தை வற்புறுத்த வந்துதித்த நேர்மையாளர் ராஜாஜியும், எது செய்ய நாட்டுக்கு, என துடிக்கும் சொல்லின் செல்வரும், ஜாதியை ஒழிக்க வந்துள்ள பெரியார் ஈ. வே. ரா.வும் தனித் தனியாகப் பிரிந்து நிற்கின்றவரையில் தமிழர்களுக்கு வாழ்வில்லை.





# உள்ளம் மாற வேண்டாமா?

இன்று மூலைக்கு ஒருவராக இருந்து கொண்டு நாட்டிற்குத் தேவையானஒவ்வொன்றை வற்புறுத்திக் கொண்டிருக்கும் இவர்கள் எண்மரும் ஒரே கொடியின் கீழ் இல்லாவிட்டாலும் ஒருவருக்கு ஒருவர் ஓரளவு விட்டுக் கொடுத்தால்தான் தமிழ்நாட்டில் உண்மையான ஜனநாயகம் நிலைக்கும்.

எனவே இனியாவது நம்முடைய அரசியல் தலைவர்கள் ஒரு கருத்தைப்பற்றி முடிவு கூற முற்படும்போது அதை யார் கூறினார் என்று கட்சி நலனைக் கொண்டு ஆராயாது - இந்தக் கருத்தால் நாட்டிற்கு நலன் கிடைக்குமா என்று தமிழர் நலத்தை முன் நிறுத்தி ஆராய வேண்டுகிறோம்.












நடமாடும் ஜனநாயகம்








"நாங்கள் பர்கோடைனையே (Barcotine) விரும்புகிறோம். ஏனென்றால் அதில் உணவு சத்து அதிகமாக இருப்பதுடன், சாக்லேட் மணம் நிறைந்து அற்புதமான ருசியுடன் இருக்கிறது."



பர்கோடைன் உணவு சத்தை தயாரிப்பவர்கள்:

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ.,

"ஸ்ரீராம பவான்"

46, தம்பு செட்டித் தெரு, :: சென்னை-1.

போன் : 23665 தந்தி : "கோசட்டினி"

# சிலப்பதிகாரமும் கலையும்



சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலத் தமிழ்ச் சொற்களஞ்சியத்துறைத் தலைவர்

டாக்டர். அ. சிதம்பரநாதன், எம்.ஏ., எம்.எல்.சி.

சிலப்பதிகாரத்திற் கலைகளைப் பற்றி வந்துள்ள குறிப்புக்களைப் பற்றித் தனியே ஒரு புத்தகம் எழுதலாம். ஆயிரத்துத்தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்திலிருந்த கலைத்திறமும் கலையுணர்ச்சியும் இக்காப்பியத்தில் நன்றாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. இதனுள் வரும் அரங்கேற்றுகாதை என்ற மூன்றாவது காதை மாத்திரங்கூட அக்காலக் கலையுலகைத் தெள்ளிதின் காட்டுதற்குப் போதிய பெருஞ்சான்றாகும். அக்காதை கொண்டே பழந்தமிழ்நாட்டு இசைக்கலையின் நிலையையும் நாட்டியக் கலையின் நிலையையும் பற்றி அடிப்படை ஆராய்ச்சிகள் செய்யப்படுவதுண்டு. ஆடலிலும் பாடலிலும் சிறப்பார்வமுடைய அழகினரைத் தேர்ந்தெடுத்து நாட்டியம் கற்பிக்கும் வழக்கம் அக்காலத்தில் உண்டென்பது தெளிவாகிறது.
மாதவி

> ''ஆடலும் பாடலும் அழகும் என்றிக்
> கூறிய மூன்றில் ஒன்றுகுறை படாமல்''

இருந்தாள் என்பதை அரங்கேற்றுகாதைத் தொடக்கம் தெரிவிக்கிறது. ஐந்து வயது முதல் நாட்டியம் கற்பிப்பதும், ஏழாண்டு பயிற்சிக்குப் பிறகு அரங்கேற்றம் செய்வதும் அக்கால வழக்கமாக இருந்தது.

நாடக அரங்கில் ஏற்றிய விளக்கின் வெளிச்சத்தில் தூண்களின் நிழல் விழாமல் தடுக்கக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இடது பக்கத் தூணில் ஓர் உருவுதிரையும், வலப்பக்கத் தூண்கள் இரண்டில் உருவுதிரைகள் இரண்டும் அமைக்கப்படுவது வழக்கம். இவ்விரண்டு திரைகளையும் 'பொருமுக எழினி' என்பார்கள். மேற்கட்டுத் திரையாக ஒன்று அமைக்கப்படுவது உண்டு. அதனைக் 'கரந்துவரல் எழினி' என்பது மரபு. அத்திரை வழியாக விண்ணவர்கள் வந்திறங்குவது போன்ற காட்சிகள் அமைத்தல் இயலும். இவையே அல்லாமல் ''ஓவிய விதானம்'' எனப் பெயர் கொண்ட மேற்கட்டி கட்டப்படுவதுண்டு. அதில் அழகிய படங்கள் வரையப்பட்டிருக்கும். அப்படங்கள் ஓவியக் கலையின் வளர்ச்சிக்கு வழி காட்டிகளாகவும், மக்கள் உள்ளத்தை மகிழ்விக்க வல்லனவாகவும் அமைந்திருந்தன என்பது அறியப்படுகிறது.

வாரப்பாடல் பாடப்பட்டதும், குயிலுவக் கருவிகள் கூடி இசைக்கும். இக்கூட்ட இசையை இக்காலத்தில் 'ஆர்க்கெஸ்ட்ரா' என்கின்றனர். நல்ல ஆடலரங்கங்களில் புல்லாங்குழலின் இசையைத் தழுவி யாழிசை அமைவதுண்டென்பதும், யாழிசைக்கேற்ப மத்தள இசை அமைவதுண்டு என்பதும், அதன் பின் வழிக் குடமுழா ஒலிப்பதுண்டு என்பதும், குடமுழாவொடு ஆமந்திரிகை என்னும் இடக்கைக் கருவியோசை கூடிநின்று இசைப்பதுண்டென்பதும் வரிசையாக அரங்கேற்றுகாதையிற் கூறப்பட்டுள்ளன.

நின்று ஆடுதலை ''நிலை'' என்றும், கீழே விழுந்து ஆடுதலைப் ''படிதம்'' என்றும் கூறுவது அக்காலத்திய மரபு. நின்றாடல்களும் வீழ்ந்தாடல்களும் ஆகிய ஆடல்களிற் பதினோராடல்கள் சிறப்பாக எடுத்தோதப்பட்டுள்ளன. அவற்றுள், திருமால் ஆடல்களாக மூன்றும், சிவன் ஆடல்களாக இரண்டும், முருகன் ஆடல்களாக இரண்டும், திருமகள், துர்க்கை, இந்திராணி, காமன் ஆகிய இவர்களுடைய ஆடல்களாக ஒவ்வொன்றும் கூறப்பட்டுள்ளன. இவற்றைச் சேர்த்துப் பதினோராடல்கள் என்பது வழக்கம்.

திருமால் ஆடிய ஆடல்கள் அல்லியத் தொகுதி, மல்லாடல், குடம் என்பன. கண்ணனுடைய மாமன் கம்சன் செய்த வஞ்சனைகளை வெல்லுவதற்காகக் கண்ணபிரான் ஆடிய பல ஆடல்களுள் அல்லியத் தொகுதி ஒன்று. கம்சன் வஞ்சனையோடு அனுப்பிய யானையினுடைய கொம்பை ஒடிப்பதற்காகக் கண்ணன் நின்றாடிய ஆடலின் வகை அல்லியத் தொகுதி எனப்படும். வாணாசுரன் இழைத்த இன்னல்களைப் போக்கும் நோக்கத்தோடு அவனை வெல்லுவதற்காக மாயவன் மல்லர் கூட்டத்திற் சேர்ந்து அவருள் ஒருவனாய்ச் சென்று அறைகூவி வெகுண்டெழுந்து, அவ்வசுரனைச் சேர்ந்தவுடன் கெட்டியாகப் பிடித்து அவன் உயிர் போகும்படி நெரித்து அழித்துவிட்ட ஆடல் மல்லாடல் எனப்படும். வாணாசுரன் தன்னுடைய ''சோ'' என்னும் பட்டணத்தில் அநிருத்தனைச் சிறை வைத்ததற்காக அவனை எதிர்த்துச்சென்று திருமால் ஆடிய கூத்துவகையைக் குடக் கூத்து என்பார்கள். குடத்தைக்கொண்டு ஆடிய கூத்து குடக்கூத்து எனப்பட்டது. பிற்காலத்தில், இக்கூத்தினை ஐந்து விதமான உலோகங்களாற் செய்யப்பட்ட குடத்தைக்கொண்டு ஆடும் கூத்தாக அமைத்துவிட்டனர்.

சிவன் ஆடிய கூத்துக்கள் கொடு
கொட்டி என்றும், பாண்டரங்கம் என்றும்
பெயர் பெறும்.

.'பாரதி ஆடிய பாரதி யரங்கத்துத்
திரிபுரம் எரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப
உமையவள் ஒருதிற னாக ஓங்கிய
இமையவன் ஆடிய கொடுகொட்டியாடலுந்
தேர்முன் நின்ற திசைமுகன் காணப்
பாரதி ஆடிய வியன்பாண்ட ரங்கமும்'

என்று கடலாடு காதையில் இவ்விரண்டு
ஆடல்களும் கூறப்பட்டுள்ளன. திரிபுரங்
கள் தீயிற்பட்டு எரிவதைக் கண்டும் இரங்
காமல் கைகொட்டிச் சிவன் ஆடிய கூத்து
கொடுகொட்டி எனப்பட்டது. தேரை
இவர்ந்து வந்த நான்முகன் காணும்படி
சிவன் ஆடிய ஒரு வகை ஆட்டம் பாண்
டரங்கம் எனப்பட்டது. இதனைப்பற்றி
அடியார்க்குநல்லார் எழுதியிருக்கும் ஒரு
விளக்கவுரை தமிழ் நடை காரணமாகப்
படித்தின்புறத்தக்கது: "வானோராகிய
தேரில் நான்மறைக் கடும்பரிபூட்டி நெடும்
புற மறைத்து வார்துகின் முடித்துக்
கூர்முட்பிடித்துத் தேர்முனின்ற திசை
முகன் காணும்படி பாரதி வடிவாய இறை
வன் வெண்ணீற்றை அணிந்தாடிய
பாண்டரங்கக் கூத்தும்" என்று வங்
துள்ள பகுதியைப் படித்து மகிழ்தல்
கூடும்.

முருகன் ஆடிய ஆடல்கள் துடிஎன்றும்,
குடை என்றும் கூறப்படும். கடல் நடுவே
அலைகளே அரங்கம்போல் அமைய ஆங்கு
நின்று முருகன சூரனை வெல்வதற்காக
ஆடிய ஆட்டம் துடி எனப்படும். சூரன்
வேற்றுருக்கொண்டு நின்றபொழுது முரு
கனூர் துடியைக் கொட்டி ஆடியதாகக்
கூறப்படுவர். படைக்கலங்களைக் கீழே
போட்டுவிட்டு அசுரர்கள் ஓடும்படி முரு
கன் குடையைப் பின்னல் பிடித்துக்
கொண்டு ஆடிய ஒருவகை ஆட்டத்தைக்
குடைக்கூத்து என்பார்கள். பின்னே
சாய்த்துப் பிடிக்கப்பட்ட குடையே ஒரு
வகைத் திரைபோல் அமைய, முருகன்னின்
ருடிய கூத்து குடக்கூத்து எனப்பட்டது.

திருமகள் ஆடிய கூத்துபாவைக்கூத்து
எனப்பட்டது. எதிர்த்துவந்த அசுரர்கள்
வந்த போர்க்கோலத்தோடே மயங்கிக்
கீழே விழும்படி கொல்லிப்பாவை வடி
வில் திருமகள் ஆடிய ஆட்டம் பாவைக்
கூத்து எனப்படும். எதிர்த்த அசுரர்கள்
பாம்பு தேள் முதலிய வடிவங்கள் எடுத்து
நுழைதலை உணர்ந்துகொண்ட துர்க்கை
தானும் வஞ்சனையால் அவர்களை வெல்லக்
கருதி ஆடிய ஒருவகைஆட்டம் மரக்கால்
ஆடல் எனப்படும். பாம்பு தேள்முதலிய
வற்றை அழிப்பதற்காக மரக்கால்
கொண்டு ஆடிஅவற்றை அவள் உழக்கிக்
களைந்துவிட்டாள் என்று கூறப்படுவது
உண்டு.

இந்திராணி ஆடிய கூத்து கடையம்
எனப்படும். இதனையே கடைசிக் கூத்து
என்பதும் உண்டு. அதாவது, உழவர்
குலப் பெண் ஆடுவது போன்று அமைந்த
கூத்து இது. வாணாசுரனுடைய ஊரின்
வாயிலிடத்தில் நின்றுகொண்டு இந்தி
ராணி உழத்தியர் வடிவில் ஆடிய கூத்து
வகை "கடையம்" எனப்படும். காமன்
ஆடிய கூத்து பேடிக்கூத்து எனப்படும்.
தன் மகன் அநிருத்தன் உழையைக் காத
லித்ததற்காக உழையின் தந்தையாகிய
வாணன் அவனைச் சிறைவைத்தபொழுது,
அநிருத்தனைச் சிறையினின்று மீட்டுச்
'சோ' நகரத்தில் பேடி வடிவத்திற் காமன்
ஆடிய ஆடல் பேடிக்கூத்து எனப்படும்.

இவை பதினோராடல் என அக்காலத்
திற் சிறப்பெய்தி இருந்தன. இவ்வாறு
பதினோராடல்களை ஆடவல்லவர் அக்கால
த்திற் பலர் இருந்தனர். அவருள் மாதவி
மிக்க நயமும் எடுப்பும்உடையவள்என்பது
அறியப்படுகிறது.

மாதவி நீராடுதற்காக அமைந்த தண்
ணீரைப்பற்றிக் கவிஞர் கூறியிருப்பதைக்
கொண்டு அக்காலக் கலையுள்ளம்ஒருவாறு
அறியப்படும். அவள் ஆடுதற்கமைந்த
நன்னீரிற் பத்து வகைத்துவர்களும் ஐந்து
வகை விரைகளும், முப்பத்திரண்டு வகை
ஓமாலிகைகளும் ஊறியிருந்தன என்று
கவிஞர் கூறியுள்ளார். பூவந்தி முதலிய
துவர்கள் சொல்லப்பட்டுள்ளன, ஆஞ்சி
போன்ற ஐந்து விரைப் பொருட்கள் சொல்
லப்பட்டுள்ளன. இலவங்கம், பச்சிலை, தக்
கோலம், நன்னாரி, கஸ்தூரி, இலாமிச்சம்,
நெல்லி, துத்தம், புழுகு, புன்னைத்தாது,
தமாலம், வகுளம் போன்ற முப்பத்தி
ரண்டு ஓமாலிகைகள் கூறப்பட்டுள்ளன.
இவற்றுள் பல நமக்குப் பெயரளவில்
தான் இப்பொழுது தெரிகின்றன.

மாதவி ஒருநாள் அணிந்து கொண்ட
அணிகலன்களைப்பற்றி இளங்கோவடிகள்
வருணித்திருப்பதிலிருந்து அக்கால நடப்
புநயம் அறியப்படும். காலிருந்து தலைவரை
அவள் அணிந்திருந்த அணிகலன்களின்
பெயர்களே இப்பொழுது நமக்கு விந்தை
யாக உள. அவள் கால்களிற் பரியகம்,
சிலம்பு, பாடகம், சதங்கை இவற்றை அணிந்
திருந்தாள். அவளுடைய மெல்விரல்களில்
அணிந்திருந்த மரகதமணி மோதிரங்கள்
வண்டுகள் பல ஊர்வதுபோல யாழினின்
மீது பட்டன என்று ஓரிடத்திற் கவிஞர்
வருணித்துள்ளார்.

"மரகதமணித் தாள்செறிந்த
மணிக்காந்தண் மெல்விரல்கள்
பயிர்வண்டின் கிளைபோலப்
பண்ணரம்பின் மிசைப்படர"

என்னும் இரண்டு அடிகளிலுள்ள கலை
யுணர்வு சுவைக்கத்தக்கது.

சிலப்பதிகாரத்திற் காணப்படும் கலைத்
திறத்திற்கும் கலையுணர்விற்கும் இவை
சில எடுத்துக் காட்டுக்கள்.



# பிரமன் கோயிலில் பைந்தமிழ் முழக்கம்

குறள் நெறி வளர்க்கும் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

தமிழகம் தெய்வ மணம் கமழும் திருநாடு. இறை மணம் கமழும் இனபத் திருநாடு. மனித நாகரிகத்தின உச்ச கட்டத்திலேயே சமயம் தோன்றுகிறது - வளர்கிறது. தமிழ நாகரிகம காலத்தால மூத்த நாகரிகம். பாரத நாகரிகத்திறகுத் தாய்மை நிலையிலுள்ளது தமிழ் நாகரிகம். தமிழ் நாகரிகததினூடே இழையோடிக் கிடப்பது சமய நாகரிகமேயாகும். தமிழருடைய சமய நெறி அவர்களுக்கே உரிய நெறி. தமிழ்ச் சமுதாயத்திலேயே கால்வழிக்காலாக வளாந்தநெறி - எம்மொழியினரிடமிருந்தும் எந்த இனத்தவரிடமிருந்தும் தமிழா களுககுச் சமய வாழ்வு-நாகரிகம் வரவில்லை. தமிழர்களுடைய அறிவிலே பூத்துக காய்த்துப் பொலிவு பெற்றிருபபதே நமமுடைய சமய நெறி. தமிழா சமயநெறி நம்பிக்கைக்கும நல்வாழ்க்கைக்கும் ஏற்றது. இனிமேல், வினக்கள் எழுபப இயலாத அளவிறகு வளர்ந்த முழுநெறி.

தமிழருடைய வாழ்க்கையில் சமயம இணைந்தும் பிணைந்தும் கிடந்தது.சமயம வேறு வாழகைக வேறு என்றோ, சமயத்தை நம்பிக்கையின்பாறபட்ட தென்றோ அவர்கள் கருதவில்லை. அறிவிறகும அனுபவத்திறகும் உரியது சமயம எனறே கருதினர். தமிழா வாழ்வு, சமயநெறி, உயிரியல்-உளவியல்-விஞ்ஞானம போல வளர்ந்து வந்திருக்கறது. மனிதனுடைய அகததுறை வாழ்க்கையைப் பண்புடையதாகச் சமைப்பதே சமய நெறியின இலட்சியம். சடங்குகளோடு நினறுவிடுவதன்று சமயம்-சடங்குகளின வழி பயனை-அனுபவத்தை உயிர்கள் பெற வேண்டும். உயர்ந்த சமய வாழ்வில் தாகத்தின கனலைக் காண முடியும். அங்கு உலகியல் வேறுபாடுகள் செத்தொழிகின்றன. உலகமே தெரிகிறது. ஒரு குலமே காட்சியளிக்கிறது."ஒன்றே-குலம் ஒருவனே தேவன்" என்ற உயரிய மறைமொழி பிறக்கிறது.

சமய வர்ழ்வின் தகுதிப் பாட்டைப் புறச் செயல்களும் புறக்கோலமுமே வரையறுததுக் காட்டுவன அல்ல. அகத்தின் மாட்சியே அருளார்ந்த சமய வாழ்க்கையின் பயன். சமய வாழ்வினுடைய மறுவார்த்தை "பூரண வாழ்வு"-அங்கு துஞ்சலுமில்லை-சோம்பலுமில்லை. தன்னலமுமில்லை - தனியுடைமையுமில்லை. காழ்ப்பும் கிடையாது. கலகமும் கிடையாது. உயர்ந்த வாழ்க்கை. அப்பரடிகளின் வாக்குப்படி சொன்னால், உயர்ந்த சமய வாழ்க்கையில் நல்லதொரு வீணையின் நாதத்தைக் கேட்கலாம், வெண்ணிலவின் தண்ணமுதப் பொழிவை அனுபவிக்கலாம். தென்றலை உணரலாம். இளவேனிலின் இன்பத்தைப் பெறலாம். அந்த இன்பத்திற்கு ஈடில்லை-இணையுமில்லை. இன்பம ஒருவருக்குரியது அன்று. உயர்ந்த சமய வாழ்வுடையோர்க்கு மட்டுமின்றி, அவரைச் சார்ந்தோருக்கும் அஃது இன்பமளிக்கும்.

உலகியலில் உயிர்கள் அனைத்தும் குறைவுடையன. இறைவன் ஒருவனே நிறைவுடையவன்.குறைவுடைய உயிர்கள் நிறைவை நோக்கிப் பயணம் செய்வதே வாழ்க்கை. அந்நிறைவைப் பெறுதற்குக் காரணமாக இருக்கின்ற வாழ்க்கை முறையே சமயம். அவ்வாழ்க்கை முறையின் சிந்தனையாக, செயலாக அமைந்து, நிறைவை உரிமை ஆக்கிக் கொள்ளும் உயிர்களின் முயற்சியே வழிபாடு. வழிபாடு என்றால், வழிப்படுத்திக் கொளல் என்றும் சொல்லலாம்.இறைவன் குறைவிலா நிறைவன்-கோதிலா அமுதம். நன்றுடையான்-தீயதில்லான்.இக்கால மனோ தத்துவமுறை எண்ணத்தின் வழியே உயிர்கள் சிறபபடைகின்றன என்று கூறுகிறது. திருவள்ளுவரும், "எண்ணிய எண்ணியாங் கெய்துவர்" என்றார். நிறைவான பொருளை எண்ணிச் சிந்தித்து அப்பொருளின் தன்மையைத் தனக்கு உரிமையாக்கிக்கொண்டு அவ்வழியில் நடைபயிலத் துணை புரிவதே வழிபாடு.

வழிபாட்டிற்குச் சிந்தனை அடிப்படை. சிந்தனையை ஒட்டியனவே மற்றையச் செயல்கள. சிந்தனையோடு கூடிய செயல் பயன் நல்கும். சிந்தனையோடு கலவாத செயல்கள் பயன்தரா. சிந்தனை இருந்து செயலில்லையாயினும் குறையில்லை. அதனாலன்றோ திருவாசகம்,

"சிந்தனைநின் தனக்காக்கி நாயி
னேன் தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக்
காகவி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி
வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்கள்
ஆர
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த
விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே
உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய
மேனித்
தனிச்சுடரே! இரண்டுமிலித் தனிய
னேற்கே."

என்று சிந்தனையை முன் வைத்து வழிபாட்டிற்குரிய செயல் முறைகளைப் பின வைத்துப் பேசுகிறது. மனிதர்களிற் பெரும்பாலோருக்குத் தாய்மொழி வழியிலேயே சிந்தனை தோன்றிச் சிறக்க முடியும் இது மனித இயற்கை. மேலும்

வழிபாட்டிற்கு உணர்வு இன்றியமையாத ஒன்று. ஒருகால பிறமொழி வழிச் சிந்தனை தோன்றினாலும் உணர்விற் கலப்பதில்லை. பிறமொழி அறிவு அறிவிற்குப் படுமேயொழிய உணர்வுக்கு வருவதில்லை. வழிபாட்டிற்கு உணர்வோடு கலந்த காதல், கனிவு, கசிவு, இவை வேண்டும். இவற்றைத் தாய் மொழியில் தவிர வேறு மொழிகளில் பெற இயலுமோ? "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" வழிபாடு செய்ய வேண்டும் என்பது மரபு. இத்தகு வழிபாட்டைத் தமிழர்கள் தம்முடைய அருமைத் தாய்மொழியான தமிழில் நிகழ்த்துவதாலேயே பெற முடியும்.

நாம், இத்தகு உண்மையான—மறுக்க முடியாத காரணங்களைக் கொண்டே தமிழகக் கோயில்களில் தமிழில் அருச்சனை-வழிபாடு வேண்டும் எனறு கூறுகின்றோம். இக்கருத்தில் கொஞ்சம்கூட மொழி வழிப்பட்ட உணர்வோ அல்லது மொழி வெறுப்போ இல்லை. ஆனால் உண்மைக்கு மாறாக நியாயததிற்கு விரோதமாக-தமிழ்ப் பெருங்குடி மக்களின் நல்வாழ்விற்குப் பகையாக எதை இழந்தாலும் பரவாயில்லை, சமஸ்கிருத ஆதிபத்தியத்தை மட்டும் விடமாட்டோம் என்று பிடிவாதம் பிடிக்கிறவர்கள் நமக்கு மொழிவெறிப் பட்டம் சூட்டுகிறார்கள். அவர்களை ஆண்டவன் மன்னிப்பாராக! நம்மைப் பொறுத்தவரை தமிழில்தான் அருச்சனை செய்ய வேண்டும் எனறுகூடச் சொல்லவில்லை. இறைவனை எல்லோரும் அவரவர் மொழிகளால் அவரவர்களே வாழத்த வேண்டும்-வணங்க வேண்டும என்பதே நமது குறிக்கோள்.

இக்கொள்கையைச் சிலர் பழக்கம் என்ற பெயரால் மறுக்கிறார்கள். மனித குலத்தின் வரலாற்றுண்மை அறிந்தவர்கள் பழக்கம் எனறஒன்றையே உறுதிப்படுத்த மாட்டார்கள். தத்துவமும் கொள்கைகளும் மாறுபடாமலிருக்கக் கூடும். ஆனால் நடைமுறைகள் மாறுபடுவதும் வளர்வதும் உல இயற்கை. அம்மாறுபாடு தவிர்க்க முடியாததுங்கூட. அதி மட்டுமின்றி, அங்ஙனம் ஏற்படுகின்ற மாறுபாடுகளே அக்கொள்கையைப் புதுமையோடும் பொலிவோடும் போற்றி வளர்த்துக் காப்பாற்றுகின்றன. அதனாலன்றோ திருவாசகம்.

"முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்குப் பேர்த்தும் அப் பெற்றியனே"


என்று பேசுகிறது.

முன்னைப் பழமையிலேயே நின்றால் பின்னைப் புதுமை ஏது?

"காலமொடு தேச வர்த்தமான மாகிக்
கலந்து நின்ற கருணை வாழி"

என்கிறார் தாயுமானாரும். எவ்வளவு அற்புதமான கருத்து! இதனை உணராமல் எங்கோ ஒரு காலத்தில் நிற்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்களே! இறைவனும்கூட உயிர்களை ஆட்கொள்வதற்காக எடுத்த கோலங்களும் கொண்ட நாமங்களும் ஒரு மாதிரி அல்லவே. ஆற்றிய திருவிளையாடல்கள்தான் எத்தனை எத்தனை! ஆதலால் எந்த ஒரு முயற்சிக்கும் பழக்கத்தை மட்டுமே காரணங் காட்டி மறுப்பதென்பது நியாயமல்ல. ஆனாலும் தமிழக கோயில்களைப்பொறுத்தவரையில் ஆதிகாலந்தொட்டு சமஸ்கிருதத்தில்தான் வழிபாடு நடந்து வந்தது என்று சொல்ல முடியாது. இக் கருத்து, வரலாற்றுக்கும் உடன்பாடுடையதன்று. உளநூல் கருத்துக்கும் ஒத்துவராது. தமிழ இலக்கிய மரபுக்கும் ஏற்புடைத்தன்று. பழந்தமிழர்கள் தாங்களே வழிபாடு செய்து வந்துள்ளார்கள். கண்ணப்பர் வரலாறு இதற்குத் தக்கதோர் எடுத்துக் காட்டு. தமிழில் மறைகளும் மந்திரங்களும் இருந்தன என்பதற்குத் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, திருமுறைகள், காஞ்சிபுராணம் ஆகியவற்றில் சான்றுகள் கிடைக்கின்றன. இடைக் காலத்திலேயே-சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே சமஸ்கிருத வழிபாடு வந்திருக்க வேண்டும். அப்படியானால் தமிழ்வழிபாட்டு முறை மிகப் பழமையானதன்றோ? அதையன்றோ நாம் ஏற்றிப் போற்றிக் காப்பாற்ற வேண்டும்?

தமிழகத் திருக்கோயில்களில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடிய அநுபூதிப் பாக்களைக் கொண்டு வழிபாடு செய்தல் வேண்டும். அபபொழுதே அகங் கலந்த பக்தி அமையும். வாழ்க்கையில் சமய மணம் கமழும்-அது நமது பிறப்புரிமை. பரமன் கோயிலில் பைந்தமிழில் வழிபாடு நடத்தி அருள்நலம் பெறுவோமாக. இக்கருத்தை இன்றைய அரசு, சிறப்பாக அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் ஓரளவு ஏற்றுக்கொண்டு திருமுறைஅருச்சனைக்கு வழிபதை செய்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தமிழ்கூறு நல்லுலகம் கடமைப்பட்டிருக்கிறது. ஆனாலும் காலவரையறையின்றி வேண்டுவோர் வேண்டும் போதெல்லாம், விழுமிய பயனை நல்கும் திருமுறைத் தமிழால் அருச்சிக்க ஏற்பாடு செய்தல் வேண்டும். அதற்குரிய காலம் விரைவில் மலரும் என்பது நமது உறுதியான நம்பிக்கை.



# கல் சொல்லும் கதை

கலைக்காவலர்

தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான்

கதை கேட்பது என்றால் எல்லோருக்குமே ஒரு இன்பம். சின்னக் குழந்தையாக இருக்கும்போது பாட்டி 'ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா' என்று கதையை ஆரம்பித்துக் கதை சொல்வதைக் கேடடு இன்புற்றிருக்கிறோம். வளர்ந்து வாலிபப் பருவம் அடைந்தபோது படிக்கும் காதல் கதைகள்தான் எத்தனை எத்தனை? பள்ளிக்கூடப் பாடங்களைக் கூட மறந்து நாவல்கள் எத்தனை படித்திருக்கிறோம். வயதுமுதிர்ந்து கிழடு தட்டியபின் ராமாயணம் மகாபாரதம் பாகவதம் முதலிய இதிகாசக் கதைகள் நடக்கும் இடம் சென்று இரவு முழுவதும் கொட்டு கொட்டென்று விழித்திருந்து கதை கேட்கிறோம். இப்படியே கதை கேட்கும் ஆவம் உடலோடு ஒட்டியே வளர்ந்திருக்கிறது.

இது எல்லாம் அதிசயம் இல்லை. நமது தமிழ்நாட்டில் கதை சொல்வதற்குப் பழைய பாட்டிகள் தான் இருந்தார்கள் என்றில்லை. எதிர்பாராத வகையில் எத்தனையோ கற்களும் கதை சொல்லியிருக்கின்றன. பழங்காலத்துத் தமிழகத்தில் போரில் வீரமரணம் அடைந்தவனுக்கு அவன் வீழ்ந்த இடத்திலேயே கல நட்டு வழிபடும் வழக்கம் இருந்திருக்கிறது. போர் வீரர்களுக்கு மாத்திரம் அன்றி வடக்கிருந்து உயிர் துறநதவர்களுக்கும் கற்பிற் சிறந்த பெண்களுக்குமே கல் நடுவதுண்டு என்றும் தெரிகிறது.


இக்கல் நடுவதைக் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல் பெரும்படை, வாழ்த்து என்று வகைப் படுத்திப் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. கல்லெழுதி வைத்த கலையாக வீரனது வாழ்க்கையை, வாழ்த்திலிருந்து பிற்காலத்தவர் கண்டு தெரிந்துகொள்ளும் வகையில் எழுதி வைத்திருப்பார்கள். இவை தவிர கல்வெட்டுகள் என்று குறிக்கும் வகையில்தான் எத்தனை எத்தனை கதைகள். மன்னர்களது வீரப்பிரதாபங்கள். அவர்கள் கட்டிய கோயில்கள், அக் கோயில்களின் பராமரிப்புக்கு என அவர்கள் அமைத்த நிபந்தங்கள்! இன்னும் அரசர் பெருமக்களது மெய்க் கீர்த்திகள் எல்லாம் கல்வெட்டுக்களாக இருப்பதினால் அன்றோ, பழந்தமிழ் நாட்டின் வரலாற்றையே ஒருவாறு உருவாக்க முடிகிறது.

இப்படியெல்லாம் ஒன்றும் எழுதி வைக்காமலேயே கற்களே மௌனமாக நின்று உணர்த்தும் கதைகள் தாம் எத்தனை. அவைகளில் ஒன்றிரண்டு கதைகளை நான் அறிந்த மட்டிலே கூறுவதுதான நோக்கம், பத்தாம் நூற்றுண்டின் கடைசியிலே அரியணையேறி சோழ நாட்டை ஆண்டவன் அருள்மொழி வர்மன் என்னும் ராஜராஜன். அவன் ஈழம் முதலிய நாடுகளின் பேரிலும் படை கொண்டு சென்று வெற்றிகண்டவன். சளுக்கர்களை எல்லாம் முறியடித்து அவர்கள் நாட்டையும் சோழ சாம்ராஜ்யத்தின் கீழ்க் கொண்டுவந்தவன். அகண்ட தமிழகத்தை உருவாக்க எண்ணி கலைப்பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவன். ஆகவே, தன் தலைநகராகிய தஞ்சையிலே, ஒரு பெரிய கோயிலை எழுப்பித்து அங்கு பெரு உடையாராம் இறைவனையே பிரதிஷ்டை செய்ய விரைகிறான். "உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல்" எனும் வள்ளுவரது கருத்திற்கு இணங்க பெரிய மதில், பெரிய மண்டபம், பெரிய விமானம் என்றே பெருஉடையாருக்கு அமைக்கிறான். வடமேருவுக்குச் சமானமான தக்ஷிண மேரு என்னும் அளவில் கருவறை மேல் 216 அடி உயரம் விமானம் உயர்ந்து கொண்டே போகிறது. கோயில் கட்டி முடித்து குடமுழுக்கிற்கும் ஏற்பாடு செய்து ஒரு பெரும் பணியை நிறைவேற்றி விட்டோம் என்ற மகிழ்ச்சியில் அரண்மனை திரும்பி அம்ஸதூளிகா மஞ்சத்தில் அயர்கிறான், அன்றிரவு அவன் கனவிலே பெரு உடையார் தோன்றி "அன்பனே நீ கட்டிய கோயில் விமானம் எல்லாம் பெரியதுதான் என்றாலும் நாம் வதிவது ஒரு கிழவியின் நிழலில்தான்" என்று கூறி மறைகிறார். இதன் பொருள் என்னவென்று விளங்கவில்லை மன்னர் மன்னனான ராஜராஜனுக்கு. விடிந்ததும் இதன் விவரம் அறிய ஆராய்கிறான். கோயில் கட்டிட வேலை நடக்கும் போது, கட்டிடம் நடக்கும் இடத்திலே ஒரு கிழவி வசித்து வந்திருக்கிறாள். அவள் புட்டு, இடியாப்பம் எல்லாம் சுட்டு, கோயில் கட்டும் சிற்பிகளுக்கு வழங்கியிருக்கிறாள். இடைவேளை நேரத்தில் எல்லாம் சிற்பிகள் அவள் வீட்டு வாயிலிலே கூடி தாம்பூலம் முதலியன தரித்துக் கொள்வதும் உண்டு. விமானம் ஓங்கி வளர்ந்துவரும்போது, விமானத்தின் பேரிலே அமர்த்தும் பிரமரந்திரத்தளக்கல் ஒன்றுவேண்டியிருந்திருக்கிறது. அப்போது கிழவி வீட்டு வாயில்படியில் கிடந்த ஒரு பெரிய கல்லையே சாரத்தில் ஏற்றி விமானத்தின் உச்சிக்குக் கொண்டு போய் அங்கே அதனை வைத்து விமானத்தை கட்டி முடித்திருக்கிறார்கள். இது காரணமாகவே பெருவுடையார், தான் கிழவியின் நிழலிலே



தங்குவதாகப் பெருமிதம் அடைந்திருக்கிறார். கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னும், பெருவுடையார் கோயில் விமானம் இந்தக் கிழவியின் கதையைக் கூறிக் கொண்டு வானளாவ உயர்ந்து நிற்கிறது. கல்வெட்டுக்கள் ஒன்றும் இல்லாமலேயே மௌனமாக இக்கதையைச் சொல்கிறது விமானம்.

இந்த ஒரு கதை போதுமா? இன்னும் ஒரு கதை. தமிழ்நாட்டின் கலைகள் எல்லாம் சமயச்சார்புடையவை என்பதை அறிவோம். கவிதையும் காவியமும், இசையும் நடனமும், சிற்பமும் சித்திரமும் கோயிலைச் சுற்றியே எழுந்திருக்கின்றன. மதுரையில், திருவாலங்காட்டில், பேரூரில்' தென்காசியில் உள்ள மண்டபங்களில் எல்லாம் ஒரு காலை ஊன்றி ஒரு காலை அநாயசமாக மேலே தூக்கி நடமாடிக் கொண்டிருக்கும் நடராஜரைப்பார்க்கிறோம். அந்த மூர்த்தியை ஊர்த்துவ தாண்டவமூர்த்தி என்றும் அழைக்கிறோம். எல்லா இடத்தும் இந்த மூர்த்திக்கு எதிர்த்தூணில் காளியும் ஆடிக்கொண்டிருக்கும் கோலத்தில் இருப்பதைப் பார்க்கிறோம். இந்த இரண்டு சிலை வடிவங்களைச் சுற்றி ஒரு கதை. ஆம் அன்று கைலை மலையில் தேவர் முனிவர் பலரும் காண சிவபெருமான் அவரது ஆனந்த நடனத்தை ஆடிக் காட்டியிருக்கிறார். அந்த நடனத்தைக் காணப் பதஞ்சலி முனிவருக்கும் வியாக்கிர பாதருக்கும் கொடுத்து வைக்கவில்லை. அதனால் ஏமாற்றம் அடைந்த அவர்கள் தங்களுக்காக அந்த நடனத்தைச் சிவபெருமான் திரும்பவும் ஆடிக் காட்ட வேண்டியிருக்கிறார்கள். சிவபெருமானோ இந்த 'ஒன்ஸ் மோரை' அங்கீகரிக்கத் தயாராயில்லை. அதனால் இருவரையும் தில்லை சென்று காத்திருக்கச் சொல்கிறார். அதன் படியே இரண்டு முனிவர்களும் தில்லை வந்து தவங் கிடக்கிறார்கள். வாக்களித்தபடி சிவபிரான் கைலையிலிருந்து தில்லை வரு




மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்

அழகு ஆண்டவனின் அருள்.
மேக்கப் மனிதனின் சாதனை.
பிரபல ஸ்டுடியோக்கள்
நாட்டிய நாடகக் குழுவினர்
தேர்ந்தெடுப்பது,

**கிருஷ்கோ மேக்கப் சாதனங்கள்**

விலை மலிவு — தரம் உயர்வு

கிருஷ்கோ ஷாப்பிங்,

331—333, ராசப்ப செட்டித் தெரு,

சென்னை-3. = போன்: 33960


கிறார். தில்லையில் உள்ள நடன சபையோ தில்லைக் காளியின் ஆதிக்கத்தில் இருக்கிறது. தன்னை நடனத்தில் நாட்டியத்தில் வெல்பவர் ஒருவரும் இல்லை என்ற அகந்தையோடு வாழ்கிறாள். அவளைப் போட்டிக்கு அழைக்கிறார் சிவ பெருமான். போட்டி ஆரம்பித்துவிடுகிறது. இருவரும் மாறி மாறி ஆடுகிறார்கள். வெற்றி தோல்வி யாருக்கென்று தீர்மானிக்க முடியவில்லை. காளி ஆடும் ஆட்டத்தை எல்லாம் பெருமான் ஆடிவிடுகிறார். பெருமான் ஆடும் ஆட்டத்தையுமே ஆடிவிடுகிறாள் காளி. கடைசியில் இவளை வெல்வது அரிது என்று கண்ட சிவபெருமான், ஒரு காலை அநாயாசமாகத் தலைக்குமேல் உயர்த்தி ரஷ்ய 'பாலே' நடனக்காரர்கள் இன்று ஆடும் ஆட்டத்தை அன்று ஆடியிருக்கிறார். அவ்வளவுதான் பெண்ணான காளியால் அந்த நடனத்தை ஆட முடியவில்லை. ஆடுவதற்கு உரிய துணிச்சலை அவள் பெறவில்லை. அதனால் தன் தோல்வியை ஒப்புக்கொள்கிறாள். நடன சபையின் ஆதிக்கத்தை ஐயனிடம் கொடுத்துவிட்டு ஊருக்கு வெளியே சென்று விடுகிறாள். இன்றும் தில்லைக்காளி, ஊருக்கு வெளியே எல்லைக் காளியாகவே நிற்கிறாள். இந்த நடனப் போட்டியைத்தான் கல்லில் வடித்திருக்கிறார்கள் சிற்பிகள். நடனத்தின் உச்சநிலையை தான் வடித்திருக்கிறார்கள் சிற்பவடிவங்களாக. அச்சிலைகள் சொல்லும் கதைதான் இது. 'வானம் மாமணிமுகடாய் நூல்வரையே தூணாக ஆள பெரும் பார் அரங்காக' ஆடிக்கொண்டிருக்கிறான் இறைவன். அவன் ஆடுவது காரணமாகவே அண்டங்கள் ஆடிக்கொண்டிருக்கின்றன. என்றெல்லாம் கற்பனை பண்ணிய கலைஞன், 'தாளொன்றால் பாதாளம் ஊடுருவ, மற்றைத்தாளொன்றால் அண்டம் கடந்துருவி' நிற்கும் நிலையையும் கற்பனை பண்ணியிருக்கிறான். நடனத்துக்கு ஏற்ற உடல்நிலை அமைந்தவர்கள் பெண்கள்தான் என்ற எண்ணத்திற்கு ஒரு மாற்றம் தர நினைத்திருக்கிறான், அதனால் ஊர்த்துவ தாண்டவத்தையும் கற்பனை பண்ணியிருக்கிறான்.

எவ்வளவு தான் நடனத்தில் சிறந்த பெண் என்றாலும், நடனராஜன் முன் நாணித் தலைகுனிய வேண்டியதுதான் என்பதையுமே கண்டிருக்கிறான். அதற்கொரு கதையையும் கற்பனை பண்ணியிருக்கிறான். இந்தக் கதையையே கற்சிலைகளாக நிற்கும் வடிவங்கள் நமக்குக் கூறுகின்றன. அந்தக் கற்சிலைகளில் இரண்டே திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி விசுவநாதர் ஆலயத்தில் நின்று கொண்டிருக்கின்றன. அவற்றையே பார்க்கிறீர்கள் முன் பக்கத்தில் உள்ள படங்களிலே. மோனமாகவே அவை சொல்லும் கதையையுமே கேட்கிறீர்கள்.

கல்சொல்லும் கதைகள் ஒன்றல்ல இரண்டல்ல; இன்னும் எத்தனையோ! அத்தனையையும் இன்றே சொல்லி உங்கள் பொறுமையைச் சோதிக்க விரும்பவில்லை நான். சமயம் கிடைக்கும் போதெல்லாம் கல்சொல்லும் கதைகளை நான் சொல்லத் தவறுவதில்லையே. இதைத் தெரிந்துதானே கவிமணி

"கல்லின் கதைகள் எல்லாம்—இரு
காது குளிரக் கேட்பேன்
புல்லின் பேச்சை அறிவேன் — அதைப்
புராணமாக விரிப்பேன்"

என்று பாடியிருக்கிறார். அவர் செய்த பணியையே நானும் செய்ய விழைகின்றேன்.



## உயிரானாள்...!

சுப. துரை அரசன்

முன்னிருட்டு இரவு ஒன்றின்
கண்ணிருட்டும் வேளையிலே,
மின்மினியாம் ஒளிச் சுடராய்
கண்மணியாய் எதிரில் வந்து
தண்மதியாய் முகம் காட்டித்
தாவிவா எனக் கூறி,
பண்ணிசைத்து நடம் பயின்று
பாவையவள் கோலம் காட்டி,
வண்டசைத்த தேனாய் என்றன்
வாயுதட்டில் தந்தே ஒன்று,
கண்ணிமைத்துத் திறப்ப தற்குள்
விண்ணிருட்டில் மறைந்தோடி
அண்டையிலே உள்ள அந்த
அணிமலர்ச் சோலைதன்னில்
அன்னத்தின் நடை காட்டி
அழகுமயில் திறங்காட்டி,
கன்னத்தில் செம்மை கூட்டி
காரியத்தில் திறமே சேர்த்து,
மின்னல் இடைதுவள அவள்
வந்தென்றன் அருகமர்ந்து
வண்டுநிகர் கண்ணாலே
வழிகாட்டி
வன்புயலாய்மாறி என்தோள்பற்றி
செண்டுநிகர் உடலொத்தாள்;
மாற்றார்
கண்டறியஇயலாஇருட்டிலெந்தன்
வண்ணமலர் மாலையானாள்!
கரும்பாயானாள்!!
கிண்ணமதில் வடித்த
தேறலானாள்!!!
விண்ணதிலே வெள்ளிக்கண்
திறக்குமட்டும்
என்னுடலின் உயிரானாள்!
இன்பமானாள்!




காதலியைப் பிரிந்து பொருள் தேடச் சென்றிருக்கிறான் காதலன். மழைக்காலம் வரும் போது நானும் வந்து விடுவேன் என்று சொல்லிப்போயிருக்கிறான். அவன் போன இடத்தில் பொருள் ஈட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளான். காதலியோ தன் இல்லத்தில் தனிமையாக, ஒரு வேலையும் ஓடாமல், பிரிவினால் உண்டான துன்பத்தில் அமிழ்ந்திக் கிடக்கிறாள். காதலன் இருந்தால்தான் அவளுக்கு வேலை இருக்கும்; அவனுக்கு வேண்டியதைச் செய்து கொடுப்பாள்; உபசரிப்பாள்; அறுசுவை உணவு சமைத்து ஊட்டுவாள்; இன்னும் என்ன என்னவோ செய்வாள். இப்போது அவளுக்கு என்ன வேலை இருக்கிறது? ஏதோ கொஞ்சம் உணவு சமைத்துச் சிறிது உண்ண வேண்டியது. அந்த உணவு தான் இப்போது சுவையாக இருக்கிறதா? உணவு என்ன? ஒன்றுமே சுவைக்கவில்லை. மலரைக் கண்டால் விருப்பம் எழவில்லை. நிலவைக் கண்டால் வெறுப்பாக இருக்கிறது. அவர் இல்லாதபோது இவையெல்லாம்யாருக்கு வேண்டும்?

நாட்கள் போகவே மாட்டோம் என்கின்றன. நத்தை வேகத்தில் ஊர்கின்றன. நாழிகைகளே யுகங்களைப்போல ஆகிவிட்டன என்றால், நாளை என்ன சொல்வது? பகல் நேரத்திலாவது தோழியோடு பொழுதைப் போக்கிப் பல்லைக் கடித்துக் கொண்டு ஒருவாறு இருந்து விடலாம். இரவு வந்து விட்டால்....? இந்தக்கடவுள் எதற்காக இரவைப் படைத்து இப்படிக் கொல்லாமற் கொல்லுகிறார்? ஒன்று காதலர், காதலிமாரைப் பிரியாமலே இருக்க வேண்டும்; அல்லது, இரவு என்பதே இல்லாமல் இருக்க வேண்டும்.

பிரிவை ஆற்றாமல் அவள் எதை எதையோ நினைக்கிறாள். இயற்கையான நிகழ்ச்சிகள் அவளுக்கு மாறுபாடாகத் தோன்றுகின்றன. இந்த உலகத்தில் ஒருவராவது அவளுடைய துயரத்தை ஆற்றுபவராகத் தோன்றவில்லை. இந்தத் துயரச் சூழ் நிலையில் அவளுடைய ஆருயிர்த் தோழி ஒருத்தி தான் ஏதோ சிறிதளவில் அவளுக்கு ஆறுதல் கூறிக் கொண்டிருக்கிறாள்.

காதலிக்கு ஆறுதல் உண்டாகச் செய்வதற்கு அவள் எத்தனையோ விதமான தந்திரங்களைச் செய்கிறாள். அப்போதைக்கு அந்த பெண்மணி சற்றே ஆறுதல் பெற்றவளாகத் தோன்றுகிறாள். ஆனால், அடுத்த நாளே பழையபடி பிரிவுத் துன்பத்தால் வாட்டம் அடைகிறாள்.



தோழி இன்று அவளை ஆறுதல் செய்வதற்கு ஒரு வழியைக் கண்டு பிடித்தாள். காதலன் கார் காலத்தில் வருவதாக உறுதிமொழி தந்துவிட்டுப்போயிருக்கிறான் அல்லவா? "அவர் சொன்ன கார் காலம் வந்து விட்டது. இதோ அவர் வந்து விடுவார்" என்று சொல்லி ஆறுதல் கூற முற்படுகிறாள்.

தோழி:— அச்சத்தைத் தரும் தெய்வங்கள் வாழும்

மலையின் மேற்பரப்புக்குப் போயிருக்கிறாயோ?

**காதலி** :— அங்கே என்ன இருக்கிறது?

**தோழி** :— என்ன அப்படி கேட்கிறாயே! அழகெல்லாம் அங்கே வந்து கிடக்கிறது. அங்கங்கே சுனைகள் இருக்கும். அந்தச் சுனைகளில் நீர் நிரம்பி வழியும்.

**காதலி** :—எப்போதும் அப்படி வழியுமா?

**தோழி** :— இல்லை, இல்லை; கார் காலம் வந்து விட்டது. சுனைகளில் நீர் மல்கும். வரிசை வரிசையாக உள்ள மலைச்சாரலில் சட சட வென்று அருவிகள் வீழ்ந்து பெருகும். மலையின் மேற்பரப்பிலே சுனைகளும் பக்கச் சாரல்களிலே அருவிகளும் மழையினால் நீரை மிகுதியாகப் பெற்று விளங்கும். மலைக்குக் கீழே காடுகள் அடர்ந்து வளர்ந்திருக்கின்றன. சில இடங்களில் ஒரே பரப்பாகக் காட்டைக் காணலாம். சுனை நிரம்பி வழிந்து ஓடி அருவியாகி, அருவி நீர் காட்டுப் பரப்பில் விழுந்து காட்டாறாக ஓடும். சிறிய சிறிய கற்களையெல்லாம் புரட்டிக் கொண்டு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்.

**காதலி** :— நீ ஏதாவது கனவு கண்டாயா, என்ன?

**தோழி** : — உண்மையைத்தான் சொல்லுகிறேன். சற்றுப் பொறுமையாகக் கேள். அந்தக் காட்டாறுகளில் சிலர் தெப்பங்களை விட்டு மூங்கில் கோலால் தள்ளுவார்கள். புது மழை பெய்து பெரு வெள்ளம் வந்து விட்டபடியால் கோல் அண்டாது. தள்ளுவதற்காக நீரில் விட்டால் கோல் முழுவதுமே மறைந்து போகும். அவ்வளவு ஆழம் இருக்கும். காடு முழுவதும் அலைத்துக் கொண்டு பேரிரைச்சலோடு போகும். அந்தக் காட்டாற்றுக் காட்சியே காட்சி!

**காதலி** :—நீ மலை மேல் ஏறிப் போய்ப் பார்த்து வந்தாயா? இன்னும் கார்காலமே வரவில்லை. அதற்குள்ளே நீ உன் கற்பனை உலகத்துச் சுனைகளைப் பொங்க விட்டு அருவிகளை வீழவிட்டு, காட்டாற்றை ஓடவிட்டு விட்டாயே!

**தோழி** :—நான் சொல்வதா கற்பனை? இன்னும் இரண்டு மூன்று நாட்கள் பொறுத்திருந்தால் அதோ தெரிகிறதே, அந்த மலையில் நான் சொன்ன அத்தனையையும் காட்டுகிறேன்.

**காதலி** :—உன் வருணனைதான் மழைபோலப் பொழிகிறதே ஒழிய உண்மையில் ஏதும் இல்லை.

**தோழி** :—அதோ பார்; வானம் மின்னுகிறது தெரியவில்லையா? இடி இடிக்கிறது கூடவா உனக்குக்கேட்கவில்லை? மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை என்று கேட்டதில்லையா? இப்போது இடிக்கிற இடியும் மின்னலும் இனி வரப் போகிற மழையைக் காட்டும் அடையாளங்கள். இந்த இடி சொல்லுகிறது, சுனை நிரம்பி வழியப் போகிறதென்று; இந்த மின்னல் காட்டுகிறது பெருவரை அடுக்கத்து அருவி ஆர்க்குமென்று, இரண்டும் சேர்ந்து, கான் யாற்றின்நீத்தம் காட்டை அலைத்து ஆர்க்கும் என்று காட்டுகின்றன.

**காதலி**:—இது எந்த ஊரில் நடக்கப் போகிறது?

**தோழி** :— அதோ தெரிகிறதே மலையைச் சார்ந்த காடு; அங்கே தான். வெள்ளம் வரப்போகிறது, அன்புடைய காதலருடைய உணர்ச்சி வெள்ளம்போல வரப் போகிறது.

**காதலி** :—இந்தக் காட்டிலா?

**தோழி** :—ஆமாம்; சின்னச் சின்ன இலைகளையுடைய சந்தன மரங்களும், மற்ற மரங்களும் தலையை அசைத்துக் கொண்டு ஆடுகின்ற இந்தப் பெரிய காட்டைத்தான் சொல்கிறேன். மழையை வா வா என்று வரவேற்பது போல அல்லவா மரங்கள் அசைகின்றன?

**காதலி** :—ஏது, நீ பெரிய கவியாகிவிடுவாய் போலிருக்கிறதே.

**தோழி**:– வெண்ணெல்லை உண்ட யானை குளிர்ச்சியான மலைப்பக்கத்துக்காட்டில் சுகமாகத் தூங்குமே, அதைப் பார்த்ததுண்டோ? எங்கும் மலர் மணம் வீசும் தண்ணறும் சிலம்பு அது, பொருளை ஈட்டி வந்த ஆண் மகன் வீட்டில் கவலையற்றுத் துயில்வது போல அந்த யானை தூங்கும். வரிகளையுடைய நெற்றியைப் பெற்ற அது வீரமுடைய ஆடவனை நினைப்பூட்டுகிறது.

**காதலி** :— நீ இப்படிச் சொல்லும்போது எனக்கு அவருடைய நினைவு வந்து துன்புறுத்துகிறது.

**தோழி** : — துன்புறுவானேன்? யானை தூங்கும் இந்தக் காட்டில் மழை பெய்யப் போகிறது, கார் காலம் வந்து விட்டது. இனி அவரும் வரப்போகிறார். நீ அவரை எதிர்பார்த்து வரவேற்கச் சித்தமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தானே இத்தனையும் சொல்கிறேன்.

**காதலி** :— அப்படியானால் அவர் வந்துவிடுவார் என்றா சொல்லுகிறாய், தோழி?

**தோழி** : — கார்காலம் வந்து விட்டது; காதுடையார் கேட்டுத் தெளியும்படி இடி இடிக்கிறது; கண் உள்ளார் தெளியும்படி மின்னல் மின்னுகிறது; அறிவுடையார் தெரிந்து கொள்ளும்படி நான் சொன்ன வெள்ளம் வரப்போகிறது. ஆகவே, அவரும் இதோ வந்து விடுவார். சுனை மேலே நிரம்பி வழிந்து அருவியாகிக் காட்டாற்று வெள்ளமாக ஓடுவது போல, உன் கணவர் போன இடத்தில் பொருள் நிரம்பப் பெற்று வருவார்; இங்கே வந்து பலருக்கும் ஈவார்; அவருடைய ஈகையால் பலரும் பயன் பெற்று இன்புறுவார்கள்.

இந்தக் கருத்தெல்லாம் புதைந்து கிடக்கும் அரிய செய்யுள் ஒன்று **நற்றிணை** என்னும் சங்க நூலிலே ஏழாவது பாடலாக இருக்கிறது. **நல்வெள்ளியார்** என்ற புலவர் பாடியது அது.

சூருடை நனந்தலைச் சுனைநீர் மல்கப்
பெருவரை அடுக்கத்து அருவி ஆர்ப்பக்
கல்அலைத்து இழிதரும் கடுவரல் கான்
யாற்றுக்
கழைமாய் நீத்தம் காடலை ஆர்ப்பத்
தழங்குகுரல் ஏறொடு முழங்கி, வானம்
இன்னே பெய்ய மின்னுமால், தோழி!
வெண்ணெல் அருந்திய வரிநுதல் யா
தண்நறும் சிலம்பில் துஞ்சும் [னை
சிறியிலைச் சந்தின ஆடுபெரும் காட்
[டே.

[தோழி அச்சந்தரும் தெய்வங்களையுடைய மலையின் விசாலமான மேலிடத்தில் உள்ள சுனைகளில்

(தொடர்ச்சி ·தொலைபேசி கட்டுரையின் கடைசிப் பக்கத்தில்)

# உலக மாபெரும் பொருட் காட்சி நிலையங்கள்

Dr. S. T. சத்தியமூர்த்தி
M.A., D.Sc., F.ZS.,
Supt., Govt. Museum, Madras

தமிழாக்கம்: கோ. ந. செயங்கொண்டான், M. A.

ஆதியில் அரிய பொருள்களின் வெறும் காப்புக் கூடங்களாகவும், காட்சிச் சாலைகளாகவும் மட்டும் விளங்கி வந்த பொருட்காட்சி நிலையங்கள், இன்று பாமரர்களுக்குக் கல்வி புகட்டும் கருவூலங்களாகவும், கற்றோருக்கு ஆராய்ச்சிப் பெட்டகங்களாகவும் துலங்கி வருகின்றன. பயனுள்ள இந்நோக்கத்தைத் தம் மகத்தே கொண்டு பல புதிய பொருட்காட்சி நிலையங்கள் தோன்றத் தொடங்கின. மேலும், பல பழம்பெரும் நிலையங்கள் தம் காட்சிப் பொருள்களிலும், அவற்றை அமைக்கும் முறைகளிலும் புதுமைப்பொலிவும் மலர்ச்சியுங் கொண்டு பொதுமக்களின் கல்வி நிலையங்களாக விளங்கி வருகின்றன.

உலகின் மாபெரும் பொருட்காட்சி நிலையங்கள் பல. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலுமே இடம் பெற்றிருந்த போதிலும், அண்மையில் ஆசிய நாடுகளிலுள்ள தேசியப் பொருட்காட்சி நிலையங்களும் நவீன மாற்றம் பெற்று, புதிய முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

உலகப் பொருட்காட்சி நிலையங்களைப் பொதுவாக அவற்றின் காட்சிப் பொருள்கள், அப்பொருள்களின் தன்மை ஆகியவற்றைக் கொண்டு இரண்டு பெரும் பிரிவுகளாக வகைப் படுத்தலாம். அவை, (1) கலைப் பொருட்காட்சி நிலையங்கள். (தொல் பொருட் பிரிவும் அதையொட்டிய துறைகளும்) கலைக்கூடங்கள். (2) விஞ்ஞானப் பொருட்காட்சி நிலையங்கள் என்பனவாம்.

உலகின் சிறந்த கலைப் பொருட்காட்சி நிலையங்களைப் பற்றியும் ஈண்டுக் காண்போம்.


## கலைப் பொருட்காட்சி நிலையங்களும் கலைக் கூடங்களும்

### கிரேட் பிரிட்டன்.

### பிரிட்டிஷ் பொருட்காட்சி நிலையம் (The British Museum)

1678-ல் ரால்ப் - மாண்டேக் என்பவருக்காக ப்ளூம்ஸ்பரியில் கட்டப்பட்ட மான்டேக் மாளிகையை, 1753-ல் அரசாங்கம், பிரிட்டிஷ் பொருட்காட்சி நிலையத்தை அமைப்பதற்காக வாங்கிற்று. சர்ஹேன்ஸ்லோம் காலமானபோது, அவரது 20,000 பவுன்கள் குடும்பத்திற்கு வழங்கி, அவர் விட்டுச் சென்ற மகத்தான காட்சிச் செல்வங்களைப் பிரிட்டிஷ் அரசாங்கம் உடனடியாக வாங்கிக் கொண்டது. அதைத் தொடர்ந்து காட்சி நிலையம் வெவ்வேறு காட்சிப் பொருள்களைப் பெற்று பல்கிப் பெருகத் தொடங்கியது. ஹாமில்டன் தொகுப்புக்கள், பிராகிரோட் அச்சுக்கள்,) புத்தகங்கள் எகிப்திய பண்டைப் பொருள்கள், முதலியன இடம்பெற்றன. 1823ல் நான்காம் ஜார்ஜ் மன்னர் 10,000 புத்தகங்கள் கொண்ட நூலகம் ஒன்றை அமைத்தார்.

லண்டனிலுள்ள தென் கென்சிங்டன் பொருட் காட்சி நிலையம்



இப் பொருட்காட்சி நிலையம் இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டது. (1) நூலகம் (2) பழம் பொருள் ஆராய்ச்சிப் பகுதி. அச்சு நூல்களைக் கொண்ட இதன் நூலகம் உலகிலேயே பெரியதென்று சொல்லலாம். ஏட்டுச் சுவடி நிலையம் பல அரிய கருவூலங்களைத் தன்னகத்தே பெற்றுள்ளது. அவற்றுள் குறிப்பிடத் தக்கவை; விவிலியத்தின் கோடெக்ஸ் அலெக்சாண்டரியனஸ், கி. பி. 7ம் நூற்றுண்டைச் சார்ந்த லிண்டிஸ்ஃபரான் பாடங்கள், 14-ம் நூற்றுண்டின் மேரி மா ராணியின் பிரார்த்தனைக் கீதங்கள், எகிப்தின் பல அரிய ஏடுகள், மத்திய நவீன காலங்களின் வரலாற்றுத் தாள்கள், இலக்கியக் குறிப்புக்கள் முதலியன.

பழம் பொருள் ஆராய்ச்சித் துறைப் பகுதியில் சிறப்பு மிக்க கிரேக்கச் சிற்பங்களும், எகிப்திய கலைச் செல்வங்களும் அடங்கியுள்ளன. மேலும் கி.மு. 4-ம் நூற்றுண்டைச் சேர்ந்த சுமேரியன் கலைப் பொருள்களும் (அண்மையில் கண்டெடுக்கப்பட்டது) இடம் பெற்றுள்ளன.

### விக்டோரியா, ஆல்பர்ட் பொருட்காட்சி நிலையம், லண்டன்

1851-ல் ஹைட் பூங்காவில் நடந்த மாபெரும் கண்காட்சி அளித்த மகத்தான வெற்றியின்பேரில், அழகுக் கலைப் பொருள்களும், பயன்படும் கலைப்பொருள்களும் கொண்ட ஒரு நிரந்தர நிலையம் 1852-ல் மார்ல்பரோ மாளிகையில் அமைக்கப்பட்டது. நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் அரசாங்கம் அளித்த நிதியோடும் கண்காட்சியால் கிடைத்த

வருவாயுடனும் தெற்குக் கென்சிங்டனில் வாங்கப்பட்ட நிலத்தில் மால்பரோ மாளிகையின் கலைப்பொருள்கள் மாற்றப்பட்டன.

சர் ஆஸ்டன் வெப் அவர்களால் நிருமாணிக்கப்பட்டு ஏழாம் எட்வர்ட் அவர்களால் 1909-ல் திறக்கப் பெற்றது இப்போதைய காட்சி நிலையம். 12 ஏக்கரா நிலத்தில் அமைந்துள்ள இக்காட்சி நிலையத்தில் சிற்பம், சிலை, செதுக்கோவியம், பீங்கான் தொழில்கள், நூலகம், நூல் உற்பத்தி, உலோக வேலைப்பாடுகள், வண்ணப்பூச்சு, நெசவு, மரவேலைகள் ஆகிய பல பகுதிகள் இடம் பெற்றுள்ளன.

### தேசியக் கலைக் கூடம், லண்டன்.

1824-ல் அமைக்கப் பெற்ற இக் கலைக்கூடம் தன்னகத்தே கொண்டுள்ள புகழ் மிக்க கலைப் பொருள்களால் மிகச் சிறந்த கலைக்கூடமாக விளங்கி வருகின்றது. 1,750க்கும் மேலான கலைப் பொருள்கள் ஈண்டு இடம் பெற்றுள்ளன. மிகப் பெயர் பெற்ற, மூல ஓவியங்களும் அவற்றின் வண்ணச் சிறப்பும் இந் நிலையத்தின் பெருமையைப் பறை சாற்றுகின்றன.

இத்தாலி, டச்சு, ஃளெமிஷ், ஸ்பானிஷ், ஜெர்மன், பிரெஞ்சு ஆகிய நாடுகளின் பலவகை ஓவியங்கள் இங்கு கொலுவீற்றுள்ளன. ஆங்கில ஓவியங்களும் அவற்றின் நுட்பம், உயர் கலைத் திறம் ஆகியவற்றால் ஒப்புயர்வற்றுத் துலங்குகின்றன. இக்கலைக்கூடத்தில் லியோனர்டோ டாவின்சி, மைக்கேலாஞ்சலோ ரஃபீல் ஆகிய உலகப் புகழ்பெற்ற ஓவியக் கலைஞர்களின் வண்ண ஓவியங்கள் பல இந்நிலையத்தின் தனிப்பெருஞ் செல்வங்களாக ஒளி வீசி வருகின்றன.

## ஐரோப்பா கண்டம்

### பிரான்சு.

### லாவேர் (The Louvre)

புரட்சிக் காலத்தில் அமைக்கப் பெற்ற இந்த நிலையம் பிரெஞ்சு நாட்டிலேயே பெரிய பொருட் காட்சி நிலையமாகும். அழகு மிகு சித்திர வேலைப்பாடுகள் மிகுந்த கட்டிடங்களைக் கொண்ட இந்நிலையம் உலகிலேயே அதிகக் கலைப் பொருள்களைப் பெற்றுள்ள பெருமையையுடையதாகும்.

### இத்தாலி—மியூசியோ (The Museo Nazionale)

நேப்பிள்சில் இடம் பெற்றுள்ள இப்பொருட்காட்சி நிலையம், வரலாற்று முதன்மை வாய்ந்த ஒப்பில்லா ரோமர் கலைப்பொருள்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

## அமெரிக்க ஐக்கிய நாடுகள்

### மெட்ரோபோலிடன் கலைப் பொருட் காட்சி நிலையம் நியூயார்க்.

உலகின் மாபெரும் கலைப்பொருட் காட்சி நிலையங்களுள் ஒன்றான இந் நிலையம் 1870-ல் நிறுவப்பட்டது. இங்குள்ள தொகுப்புக்களில் எகிப்திய பண்டைப் பொருள்கள், வண்ண ஓவியங்கள், சிலைகள், அழகுக் கலைகள் (மரவேலைகள், உலோகவேலைகள், பீங்கான் கண்ணாடி, நெசவுவேலைகள்) இசைக் கருவிகள், போர்க்கருவிகள், படைக் கலப்பொருள்கள் முதலிய பல அரிய பொருள்கள் இந்நிலையத்தில் இடம் பெற்றுள்ளன.

ஐரோப்பிய அழகுக் கலைகளின் புகழ் வாய்ந்த பியர்போண்ட் மார்கன் தொகுப்புக்கள், மெரொவிஞ்சியன் காலமுதல் 19-ம் நூற்றாண்டு வரை காலமுறைப்படி ஒழுங்காக அமைக்கப் பெற்றுள்ளன. இந்நிலையத்தின் பெரும்பகுதி அமெரிக்கக் கலையின் ஆரம்பகால நிலையை விளக்குவதில் ஈடுபட்டுள்ளது.


### லண்டன்

லண்டனில் விஞ்ஞானப் பொருட் காட்சி நிலையங்களில் பல, பெரும்பாலும் தென் கென்சிங்டன் பகுதியில் அமைந்துள்ளன. இவற்றுள் முக்கியமானவை பிரிட்டிஷ் பொருட் காட்சி நிலையம், (இயற்கை வரலாறு) நிலவியல் பொருட் காட்சி நிலையம், விஞ்ஞானம் பொருட் காட்சி நிலையம் என்பன.

### பிரிட்டிஷ் பொருட் காட்சி நிலையம் (இயற்கை வரலாறு)

காட்சி நிலையமான பிரிட்டிஷ் பொருட் காட்சி நிலையமும் லண்டனின் மிகப் பெரிய தென் கென்சிங்டனிலுள்ள இயற்கை வரலாற்றுப் பகுதியும் உலகிலேயே மிகச் சிறந்த விஞ்ஞானக் காட்சிப் பொருள்களைத் தம்மகத்தே கொண்டுள்ளன.

1873-80-ல் பிரிட்டிஷ் பொருட் காட்சி நிலையத்தின் இயற்கை வரலாற்றுப் பகுதியை அமைப்பதற்காக உருவாக்கப்பெற்ற டெர்ரெ-கோட்டா கட்டிடம் இரண்டாம் உலகப் பெரும்போரின் விமானத் தாக்குதல்களால் பெருஞ் சேதமடைந்தது. ஆதலால் அக்கட்டிடத்தின் ஒரு சில பகுதிகளே பொது மக்களின் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டது. இந்த பிரிட்டிஷ் காட்சி நிலையம் உலகிலேயே பெரிய இயற்கை வரலாற்று நிலையமாகவும், ஆராய்ச்சிக்குத் துணைபுரியும் சிறந்த விலங்கியல் தொகுதிகளும் நிரம்பிய காட்சிச் சாலையாகவும் விளக்கப் பெறுகின்றது.



இயற்கை வரலாற்று பிரிட்டிஷ் பொருட் காட்சி நிலையம்


### ஐரோப்பாக் கண்டம்


பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் மாபெரும் தேசியப் பொருட் காட்சி நிலையங்கள் உள்ளன. அவற்றுள் இயற்கை வரலாற்றுக் காட்சிப் பொருள்கள் மிகுந்துள்ளன. ஐரோப்பாவிலேயே சிறப்பும், முதன்மையும் வாய்ந்த விஞ்ஞானப் பொருட்காட்சி நிலையம் ஜெர்மனியிலுள்ள டியூட்ஸ்கெஸ் நிலையமாகும்.

### டியூட்ஸ்கெஸ் பொருட்காட்சி நிலையம், மியூனிக், ஜெர்மனி

இயற்கை விஞ்ஞானம், தொழில் நுணுக்கக்கலை ஆகியவற்றின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் தெளிவுற விளக்குகின்ற பான்மையில் அவற்றின் காட்சிப் பொருள்கள், தேவையான கருவிகள், இயங்

வாஷிங்டனிலுள்ள யுனைடெட் ஸ்டேட்ஸ் தேசிய பொருட் காட்சி நிலையம்





அமெரிக்காவிலுள்ள தேசிய கலைக்கூட பொருட் காட்சி நிலையம்


திரங்கள் ஆகியவற்றுடன் இந்நிலையம் அமைந்துள்ளது.

மாதிரிக் கருவிகளின் மேல் பெயர்ச் சீட்டுக்களும் விளக்கப் படங்களும் இடம்பெற்ற போதிலும், அவ்வத்துறையிலும் தேர்ச்சி பெற்ற அலுவலர் பலர் அவற்றைச் செயல்படுத்திக் காட்டுகின்றனர். அங்கு வருகை தரும் பார்வையாளர்கள் தாங்களே அங்குள்ள கருவிகளை இயக்கி அவற்றின் செயல் முறைகளையும், பயன்களையும் நன்குணர வாய்ப்புக்கள் உள்ளன. 70,000க்கும் மேற்பட்ட காட்சிப் பொருள்களைக் கொண்ட இப் பொருட்காட்சி நிலையம் 9மைல்களுக்கும் அதிகமானநீளமுடையது.

### அமெரிக்க ஐக்கிய நாடுகள்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள விஞ்ஞானப் பொருட்காட்சி நிலையங்கள் தம் பிறப்பிலும், அமைப்பிலும், ஆட்சியிலும், நோக்கத்திலும், பயனிலும் வேறுபாடுடையனவாக விளங்குகின்றன.

நியூயார்க்கிலுள்ள இயற்கை வரலாற்று பொருட் காட்சி நிலையம்



ஐரோப்பியப் பொருட்காட்சி நிலையங்கள் பண்டைய கலைத்துறைகளில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கையில், அமெரிக்கப் பொருட்காட்சி நிலையங்கள் விஞ்ஞானத் துறையில், சிறப்பாக இயற்கை வரலாற்றுத் துறையில் ஆழ்ந்து ஈடுபட்டு மற்றநாட்டுக் காட்சி நிலையங்களை விடச் சீரும் சிறப்பும் பெற்றுக் கல்விப் பயனையும் கேளிக்கை இன்பத்தையும் ஒருங்கே வழங்குபவனய் உள்ளன.

### அமெரிக்க இயற்கை வரலாற்றுப் பொருட்காட்சி நிலையம், நியூயார்க்.

அமெரிக்காவின் மிகப் பெரிய காட்சி நிலையமாகிய இந்நிலையம் 1869-ல் நிறுவப்பட்டது. உலகின் பல்வேறு பகுதியிலுள்ள விலங்கினங்கள் இங்குக் காட்சிக்கினிய முறையில் அழகுற அமைக்கப் பட்டுள்ளன. மேலும் ஈண்டு இயற்கை வரலாறு, மக்கட் சாதி இன வரலாறு ஆகிய துறைத்தொகுப்புக்கள் பல இங்கு இடம் பெற்றுள்ளன.

ஊர்வன, பறப்பன, குட்டி போட்டுப் பால் கொடுப்பன, நீரிலும் நிலத்திலும் ஒருங்கே வாழ்வனவாகிய பல்வேறு விலங்குகளின் உடலங்கள் அவை உயிரோடு இருப்பதைப் போலவே தத்ரூபமான முறையில் அமைக்கப் பட்டுள்ளன. அவற்றின் இயற்கையான சூழ்நிலையை விளக்கும் வண்ணப் படங்களைப் பின்னணியாகவும், செடி கொடிகள், புதர்கள் ஆகியவற்றை முன்னேயும் அமைத்து ஓர் உண்மையான தோற்றம் உருவாக்கப் பட்டுள்ளது.

உயிரோடிருக்கையில் இந்த மிருகங்களில் பல மெல்லிய உடலும், மிக நேர்த்தியான வண்ணமும், ஒளி புகுந்தன்மையும் கொண்டவையாய் துலங்கும். அத்தகைய இயற்கைத் தன்மையை கண்ணுடி, மெழுகு ஆகியவற்றில் அமைத்து, விலங்குகளின் நிறத்தை அவற்றில் ஏற்றி ஒளி புகுந்தன்மையைப் புகுத்திப் பிராணிகளின் உயிர்த் தோற்றத்தை அளிக்கமுயன்றிருப்பது மிக வியப்பதற்குரியதாகும்.

காட்சி நிலையத்தின் வகுப்பறைகளில் விரிவுரைகள் நிகழ்த்துவது, நிழற் படங்கள் காட்டுவது, நிலையத்தின் காட்சிப் பொருள்களைக் கடனுக்கு வழங்குவது போன்ற அரிய கல்விப் பணிகளை நியூயார்க்கு நகரின் பள்ளி மாணவர்களுக்காகப் புரிந்து தன் சாதனைகளை மேலும் உயர்த்திக் கொள்ளுகின்றது இப் பொருட் காட்சி நிலையம்.

### இந்தியா

உலகின் மாபெரும் காட்சி நிலையங்களுடன் ஒருங்கு வைத்து எண்ணமுடியாவிட்டாலும், பொதுவாக உலகின் பொருட் காட்சிநிலைய இயக்கத்தைப் பற்றிப் பேச்சு எழும் போதெல்லாம், இந்தியப் பொருட் காட்சி நிலையங்களைப் பற்றிக் குறிப்பிடாமலிருக்க முடியாது.

### இந்திய பொருட் காட்சி நிலையம், கல்கத்தா.

இந்தியாவின் மாபெரும் பொருட் காட்சி நிலையமாகிய இந்நிலையத்தில் இந்தியக் கடற் பிராணிகளின் தொகுப்புகளும், சிவாலிக் குன்றுகளைச் சார்ந்த முதுகெலும்புள்ள விலங்குகளின் தொகுப்புகளும் ஈண்டுச் சிறந்து விளங்குகின்றன.

தொல்பொருள், மனிதவியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய துறைகளில் இந்திய அரசு நடத்திய ஆராய்ச்சி தொகுப்புகளுக் கெல்லாம் உறைவிடமாகத்திகழும் இந்நிலையம், அவ்வத்துறைகளின் தேசியத் தொகுப்புக் களஞ்சியமாக விளங்கி வருகின்றது.

### வேல்ஸ் இளவரசர் பொருட்காட்சி நிலையம், பம்பாய்.

தனிப்பட்ட அற நிலையத்தாரால் நடத்தப் பெறும் இந்த நிலையம் கலை, தொல்பொருள், இயற்கை வரலாறு ஆகிய துறைத்தொகுப்புகளை மிகுதியாகக் கொண்டுள்ளது.

### அரசாங்கப் பொருட்காட்சி நிலையம், சென்னை.

இந்தியாவின் மாநிலப் பொருட் காட்சி நிலையங்களில் பெரியதும், பழையதுமான இந்நிலையம் 1851-ல் சர்ஜன் ஜெனரல் எட்வர்டு கிரீன் பேல்ஃபர் அவர்களால் நிறுவப்பட்டது. நடைமுறை நிலவியல் துறையின் பொருட்காட்சி நிலையமாகத் துவக்கப்பட்ட இந்நிலையம், இப்போது பெரிதும் வளர்ச்சியுற்று விரிவடைந்துள்ளது.

1951-ம் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய இக்காட்சி நிலையம், ஒரு கலைக்கூடத்தைப் புதிதாகத் தொடங்கியுள்ளது. நிலையத்தின் வளர்ச்சிக்கும் நூதன அமைப்பிற்குமான பல்வேறு விரிவான திட்டங்கள் இப்போது செயல்படும் கட்டத்தில் உள்ளன. தன்னுடைய நிகரில்லாக் கல்வித்துறை ஈடுபாடுகளாலும், ஆராய்ச்சி வெளியீடுகளாலும், இச்சென்னைப் பொருட்காட்சி நிலையம், இந்தியாவின் ஒப்புயர்வற்ற நிலையங்களுள் ஒன்றாக விளங்கி வருகின்றது.

வீட்டினுள் தனியாக 2, 3 கருவிகளுக்கும் சரி, பக்கத்து வீட்டுகளுக்கும் சரி, ஒவ்வொரு கருவிக்கும் இரண்டு வெளிப்புறக் கம்பிகள் தொலை பேசி அலுவலகத்திலிருந்து வரவேண்டும். இந்தப் பற்றுக் குறையினால் தான் தொலை பேசும் கருவி கேட்பவர்களுக்கு உடனுக்குடன் வசதி செய்து கொடுக்கமுடியாமல் இருக்கிறது.

தொலை பேசி வேலை செய்யும் விதம் இரண்டு வகைப்படும்.

(1) மேன்யூல் ஸிஸ்டம் (Manual System):—ஆபரேடர் என்னும் ஒருவருடைய உதவியால் தொலை பேசி சந்தாதாரர்கள் யாருடன் பேச வேண்டும் என்பதை முதலில் கேட்டுத் தெரிந்து கொண்டு அந்த இரண்டு சந்தாதார்களும் பேசும்படி செய்வது.

(2) "ஆட்டமேடிக் ஸிஸ்டம்" (Automatic system):—ஆபரேடர் உதவி இல்லாமல் சந்தாதாரர்கள் தங்களுடைய தொலை பேசி நிலையத்தினுள் கருவிகள் தானாகவே இயங்கி, பேச வேண்டிய சந்தாதாரருடன் பேசும்படியாகச் செய்வது.

ஆபரேடர் மூலமாய் வேலை செய்யும் முதல் விதத்தை விட ஆபரேடர் இல்லாமல் தானாக வேலை செய்யும் இரண்டாவது விதத்தினால் உள்ள சில அனுகூலங்களை இப்போது விவரிப்போம்.

(1) ஆபரேடர் மூலமாய் இயங்கும் விதத்தில், சந்தாதார் தான் பேசவேண்டிய இன்னொரு சந்தாதாரின் நம்பரைத் தெரிவிக்கும் போது ஆபரேடர் சரியாகக் கவனியாமல் வேறு சந்தாதாரரின் நம்பருக்கு இணைத்து விடக்கூடும். இத்தகைய தவறுகளும் ஆபரேடர் இன்னொரு ஆபரேடருக்கு நம்பரைத் தெரிவிக்கும் போது ஏற்படக்கூடிய தவறுகளும் (Phonetic errors) தவிர்க்கப் படுகின்றன,

(2) ஆபரேடர் உதவி யில்லாமல் சந்தாதாரர்கள் ஒருவருக்கொருவர் அவர் அவர்களை கூப்பிட்டு, இரகசியமாய்ப் பேசிக் கொள்ள இயலுகிறது.

(3) பாராபட்சமற்ற ஒரே மாதிரியான சேவையை எல்லாச் சந்தாதார்களும் அடைகிறார்கள்.

(4) உடற்கோளாறு, வேலை நிறுத்தம் முதலியவைகளினால் இந்தச்சேவை பாதிக்கப்படாது.

(5) சந்தாதார்கள் கூப்பிடுவதை கணக்கிடும் முறை தானாக இயங்குவதால் அதற்கென்று கணக்கிட்டுச் சந்தாவைச் செலுத்த அனுப்பப்படும் கட்டணங்கள் நம்பத் தகுந்ததாக இருக்கும்.

(7) "மேன்யூல் ஸிஸ்டத்தை" விட ஒருவருக் கொருவர் பேசும் படி ஏற்படுவதும் பேசியபின் அதை விடுவிப்பதும் வெகு சீக்கிரம்.

சந்தாதார்கள் தொலைபேசி வேலை செய்யும் விதத்தில் உள்ள கோளாறுகளைப் பற்றித்தொலைபேசி நிலையத்திற்குப் புகார் செய்யும் விதங்களைக் கவனிப்போம்:

நமக்கு உடல் நிலை சரியில்லாத போது டாக்டரிடம் போய் எந்த விதமான கோளாறினால் நாம் அவஸ்தைப் படுகிறோம் என்று தெரிவிக்காமல், "டாக்டர் எனக்கு உடம்பு அசௌக்கியம், கவனித்து மருந்து கொடுங்கள்" என்று சொன்னால் எந்த வியாதிக்கென்று எப்படி டாக்டர் மருந்து கொடுத்துக் குணப்படுத்த முடியும்? அதே போலில்லாமல் தொலை பேசி சம்பந்தமான புகார்களைத் தொலை பேசி நிலையத்தாரின் புகார் ஸ்தாபனத்திற்கு விரிவாகப் புகார் செய்ய வேண்டும். "எங்கள் வீட்டில் விளக்கு எரியவில்லை; என் ரேடியோ சரியாகப் பாடுவதில்லை; என்குளிர் சாதனம் சரியாக வேலை செய்வதில்லை; என் கடிகாரம் சரியாக ஓடுவதில்லை.' என்பது போன்ற பொதுக் கோளாறுகளைச் சொல்வது போல் "என் தொலை பேசி சரியாக வேலை செய்வதில்லை" என்று சொன்னால் போதாது; ஏனெனில் தொலை பேசும் கருவி மூன்றுவித சாதனங்களால் இணைக்கப்பட்டு வேலை செய்து வருகிறது.

(1) தொலை பேசும் கருவி வழியாய்;

(2) வெளிப்புற கம்பிகளின் வழியாகவும், பூமிக்குள் போகும் (கேபிள் என்ற) கம்பிகளின் வழியாகவும்;

(3) தொலை பேசி கருவிகளால் இயக்கப்படும் நிலையம் (exchange) வழியாக.

இவைகளில் ஏதாதவது ஒன்றில் கோளாறு ஏற்பட்டாலும் தொலை பேசி சரி வர வேலை செய்யாது. இவைகளை முடியுமானவரை சந்தாதார்களின் புகார் செய்யும் விதத்திலிருந்து கண்டு பிடிக்கலாம். அப்படி அவர்கள் புகார் செய்ய வேண்டிய சில முறைகளைப் பற்றி தொடர்ந்து விவரிப்போம்.

(தொடரும்)

---

## இடியும் மின்னலும்-தொடர்ச்சி

நீர் நிரம்பவும், பெரிய மலையின் தொடரில் சாரலில் அருவிகள் வீழ்ந்து பெரிய ஓசையை உண்டாக்கவும், கற்களைப்புரட்டி ஓடும் வேகமான ஓட்டத்தையுடைய காட்டாற்றில் மூங்கிற்கோல் மறையுமளவுக்கு ஆழமான வெள்ளமானது, காட்டை அலைத்துப் பேரொலி செய்யவும், முழங்கும் குரலையுடைய இடியோடு ஒலித்து, மேகங்கள் இப்போதே பெய்யும் பொருட்டு — வெள்ளை நெல்லை உண்ட கோடுகளையுடைய நெற்றியைப் பெற்ற யானையானது குளிர்ந்த மணம் வீசும் மலைச்சாரலில் தூங்குவதற்கு இடமாகிய சிறிய இலையையுடைய சந்தன மரங்களை உடையனவாய் அசையும் காடுகளில்—மின்னின; இதைப்பார். (ஆதலின் உன் காதலரும் வந்து விடுவார்.)

சூர்-அச்சந்தரும் தெய்வங்கள்; மலையர மகளிர், நீரா மகளிர் முதலியோர், நனந்தலை-விரிந்த இடம். அடுக்கம்-சாரல், அலைத்து-புரட்டி, கடுவரல்-வேகமான ஓட்டம், கான் யாறு-காட்டாறு, கழைமாய் நீத்தம்-கோல் மறைகிற வெள்ளம், அலையார்ப்ப-அலைத்து முழங்க, தழங்கு-ஒலிக்கும், ஏறு-இடி, வானம் - மேகம், வரி - கோடு, சிலம்பு-மலைப்பக்கம், சிறியிலை-சிறிய இலை, சந்து-சந்தனம்.

தோழி, மல்க, ஆர்ப்ப, அலை ஆர்ப்ப, வானம், காட்டில் முழங்கி மின்னுமால் என்று கூட்டுக.]

'கார் காலம் வந்து விட்டது; உன் காதலன் வந்துவிடுவான்; நீ வருந்தல் வேண்டாம்' என்று இதனால் குறிப்பித்தாள் தோழி.



## தழுவும் பூவை

சோழர் படையின் தானைத் தலைவனான கருணாகரத் தொண்டைமானிற்கு 'வாயிற் சிவப்பை விழிவாங்க மலர்க்கண் வெளுப்பை வாய் வாங்க தோயக் கலவி அமுதளிக்கும் இந்த வஞ்சி' சாயலில் மயில்தான் என்றாலும் தழுவும் வேகத்தால்புலி தன்னுடையபிறைபோன்றநெற்றியில் வியர்வைமுத்து அரும்ப, கொங்கைகளில் அணிந்திருந்த முத்து மாலைகள் ஒன்றுடன் ஒன்று சிக்கிக் கொள்ள, காடுபோன்ற தன் கூந்தல் கலைய பூப்போன்ற அவளுடைய உடல் வருந்தியபோதுகூட அவள் தன் காதலனைத் தழுவிய பிடியை மட்டும் விடவில்லையாம்.

-தாரா.




## நாணிய நங்கை

இப்படி இவளும் கருணாகரனும் பால் நிலவில் போக அமளிக் களிமயக்கில் இருந்தபோது அவன் இவளுடைய சூதள வளவெனு இள முலைகளையும், துடியள வள வெனு நுண்ணிடையையும், காதள வளவெனு மதர் விழியையும் பாராட்டி உரைத்ததையும், அவனுக்கு இவள் அதரபான மளித்ததையும் வேறு யாரும் பார்க்கவில்லை என்று தான் எண்ணினாள். ஆனால் மறுநாள் தோழிகள் மத்தியில் இவள் இருக்கையில் "தோகை மயிலே! சொர்ணத்தின் வார்ப்படமே!" என்று முதல் நாள் இரவு கருணாகரன் கூறிய அதே வார்த்தைகளை அவளுடைய ஆசைக் கிளியும் கூறத் துவங்கவே தான், அவளுக்குத் தன்னுடைய தவறுபுரிந்தது. தோழியர் மத்தியில் தன் சொந்த வாழ்க்கை வெளிப்பட்டதால் நாணிய அவள் ஓடிச் சென்று அந்தக் கோலக் கிளியின் வாயைப் புதைத்தாளாம்.



## தேய்ந்த கதவு

இப்படி இன்பம் பொங்கிய இவர்களுடைய வாழ்விலேதான் பின்னர் துன்பமும்
வந்து சேர்ந்தது. இதுவரை அவளுடைய முத்து வடஞ்சேர் முகிழ் மார்பின்
கூர்மையைச் சோதித்துக் கொண்டிருந்த அவன் தற்போது கலிங்கத்துப்
போர் மறவர் தம் வேலின் கூர்மையை ஆராய்வதற்காகப் படை நடத்திச் சென்
றிருந்தான். அவன் போனதில் இருந்து இந்த வஞ்சி மழை நோக்கி வாடும் பயி
ரானாள். இவளுடைய கண்கள் குளமாகி அதில் இருந்து உருண்ட கண்ணீர்
முத்துக்கள் செவ்விளநீர் காய்களை ஒத்த இவளுடைய நகில்களிலே பட்டுச்
சிதறின. வாசலிலே தேர் ஒலிகேட்ட போதெல்லாம் இவளுடைய மாளிகைக்
கதவுகள் "வந்து விட்டாரா அவர்!" என்று திறந்தன. பின் ஏக்கத்தோடு
மூடின. இவ்வாறு இரவு முழுவதும் திறந்து மூடியதால் அந்தக் கதவின் கீல்
கூட தேய்ந்து போயிற்றும்.




## ஒண்டொடி தந்த ஒத்தடம்

இப்படிப்பட்ட கருணுகரன் பின்னர் கலிங்கம் கொண்ட பெருவீரனைத் தன்னுடைய காதலியைக் காணத் திருப்பினன். முதலிலே அவனேடு ஊடித், தன் மாளிகைக் கதவடைத்த அவள் பின்னர் கடை திறந்தாள். சுரிகுழல் அசைவுற அசைவுற துயிலெழும் மயிலென மயிலெனப் பரிபுர வொலியெழ வொலியெழப் பாய்ந்து சென்று, பகைவர் வேல் பாய்ந்தது போதாது என்று தன்னுடைய கண்ணாகிய வேலும் பாய்ந்து புண் செய்த அவனுடைய விரிந்த மார்பில் உள்ள புண்களைத் தன்னுடைய தடமுலை வேது கொண்டு ஒற்றினள். இப்படி ஒத்தடம் கொடுத்தது போதாது என்று தன்னுடைய செங்கனி வாய் மருந்தும் முத்த மழையாக ஊட்டினள்.




# சிற்பக் கலை


'கஜுராஹோ' தேவி ஜெகதாம்பாள் கோயிலிலுள்ள காதல் ஜோடி சிற்பம்



சிற்பச் சிறப்புக்கலைகளிலேயே முதலிடம் வகிப்பது இந்தியாதான் என்றாலும், வடநாடுகளில் உணர்ச்சி மயமான கவர்ச்சிமிக்க சிற்பங்களையேதான் காண முடியும். ஆனால், நம் தமிழகத்திலோ வெனில் தெய்வாம்சம் பொருந்திய அருள் வடிவான சிற்பங்களைக் காணலாம். அதனாலேயே சிற்பக் கலையில் முதலிடத்தையும் வகிக்கிறது நம் தமிழகம்.


ன்னகத்திலுள்ள அலம்பூர் மதில் சுவற்றில் காணப்படும் சிற்பம்.






கஜுராஹோ கோயிலிலுள்ள தழுவும் காதலர்கள் சிற்பம்

கயாரஸ்பூரிலுள்ள விரிச்சகாவின் எழில் சிற்பம்.






கொனாரக்கிலுள்ள சூரிய தேவன் கோயிலிலுள்ள சிலை



கஜுராஹோவில் தேவி ஜெகதாம்பாள் கோயிலில் உள்ள தூங்கும் அழகி சிற்பம்.

கண்டாரியா மகாதேவர் கோயிலில் உள்ள அலங்கரித்துக்கொள்ளும் சூரசுந்தரியின் அற்புதச் சிலை.






கஜுராஹோவிலிலுள்ள கண்டாரியா கோயிலில் இந்த அப்சரஸின் சிலை உள்ளது.


கஜுராஹோ கோயிலிலுள்ள ரதியும் மன்மதனும்.






சிற்ப வல்லுநர் ரோடின் சமைத்த் அற்புத சிற்பத்தைத்தான் நீங்கள் மேலே காண்கின்றீர்கள். அச் சிற்பங்கள் உண்மையிலேயே உள்ளன்புடன் உறவாடி மகிழ்வதாக நாமே உணர்வு கொள்ளுகிறோமல்லவா!


சிற்பக் கலைக்கே உயர்வு பீடமமைத்து தலையாய சிற்பியாக விளங்கி, பற்பல உயிர்த் துடிப்புள்ள சிற்பங்களை உருவாக்கி, உலகின் பெருமைக்கெல்லாம் பாத்திரமாகி, அக் கலை ஆர்வ எழுச்சியின் வளர்ச்சியாலேயே தனக்கு முடிவையும் தேடிக்கொண்ட மாமேதை மைக்கேல் ஆஞ்சலோ தீட்டிய அற்புத சிற்பம்தான் இந்த டேவிட் சிலை.






ஓவிய மன்னனும் மேலை நாட்டு ரவி வர்மாவுமான பவுச்சர் தீட்டிய காதல் தாபம் ததும்பும் காதலர்கள். பவுச்சர் மாதிரிக்காக வைத்திருந்த அழகரசியைத்தான் விருந்துக்கு அழைத்துச் சென்ற 14-ம் லூயி மன்னர், பின்னர் திருப்பி அனுப்பவே இல்லை!











# அழியா ஓவியம்
# அஜந்தா சித்திரங்கள்



### காலம் மாறிப் போச்சு


இந்தியா என்றாலே அதனுடைய இணையற்ற சிற்பங்களும், எழில்மிக்க ஓவியங்களும் தான் உலகத்தின் கண் முன்னே வந்து நிற்கின்றன. அதிலும் அஜந்தா ஓவியங்களுக்கு இணையாக உவமை கூறுவதற்கு உலகை சல்லடை போட்டு சலித்தால்கூட தகுதியான ஓவியங்கள் கிடைப்பது அரிதுதான். ஆனால் அஜந்தா ஓவியங்கள் தான் ஓவியங்கள் மற்றதெல்லாம் ஓவியங்கள் அல்ல என்று ஒற்றைக் காலிலே நிற்பது, இருபதாம் நூற்றாண்டிலே நான் காரிலே போகமாட்டேன், கட்டை

வண்டியிலேதான் போவேன் என்று ஒருவர் பிடிவாதம் பிடித்தால் அது எவ்வளவு பயித்தியக்காரத்தனமானதோ அவ்வளவு பயித்தியக்காரத்தனமானது.

ஏன் என்றால் காலம் மாறிக் கொண்டு வருகிறது. நேற்று இருந்த மனிதனைவிட இன்று இருப்பவன் அறிவில் ஆற்றலில் சிறந்தவனாக இருக்கிறான். இன்று இருப்பவனைவிட நாளை இருப்பவன் நிச்சயம் சிறந்தவனாகத்தான் இருப்பான். இதுதான் உலகத்து இயற்கை.



சிறந்த ஓவியம் சித்தன்னவாசல் சித்திரங்கள்



தரணி புகழ் தஞ்சாவூர் சித்திரங்கள்

அந்த அடிப்படையில் பார்த்தால் அஜந்தா ஓவியர்கள் வாழ்ந்த அந்தக் காலத்தில் திசை முழுதும் இசை பரபபியவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் தீட்டிய பாணி முழுதும் இந்தக் காலத்திற்கு ஒத்துவரும் என்று கூறுவதற்கில்லை.

சித்தன்ன வாசலும், தஞ்சை அரண்மனைச் சிற்பங்களும், கடல் சடந்த நாட்டில இருந்தாலும், நம் நாட்டுப் பாணிக்குச் சற்றும் குறையாது இருக்கும் சிக்கிரியா ஓவியஙகளுக்கும் நாம் சிரம் தாழ்த்துகின்றோம். ஆனால் ஓவியத்தின் வளர்ச்சி சித்தன்ன வாசலோடு நின்றுவிடலாகாது. அது முன்னைப் பழமைக்கு பழமையாக இருப்பதோடு பின்னைப் புதுமைக்கும் புதுமையாக வளர்தல் வேண்டும்.

அப்போதுதான் நம் தாயகத்திற்கும் “கலைவளர்க்கும் திருநாடு” என்ற புகழ் கிடைக்கும். இல்லை என்றால் “ஒரு காலத்தில் “கலை வளர்த்த நாடு” என்ற பெயர்தான் நிலைக்கும்.







ஈழத்தின் இணையற்ற சிக்ரியா சித்திரங்கள்




எங்கள் வணக்கம்


திரை உலகின்
அணையா விளக்கு
பத்மினி


தமிழ்நாடு
தந்த
தமிழ்ச்செல்வி


கன்னடம்
தந்த
கலையரசி


ஆந்திரம்
அளித்த
அழகோவியம்


மலையாளம்
தந்த
மாணிக்கம்

# சந்திரசேகர்


சார்லஸ்டன் பிராக்டிகா


ராக் அண்ட் ரோல்


சம்பா நடை


பால் ரூம் நடனம்


திறந்த வெளி வரை

ராக் அண்ட்

# குமாரி நாஜ்






சயினிஸ் ஆர்க் நடனம்



சாசா நடனம்




ரோல் நடனம்



பறக்கும் வகை



பிரதீப் குமார்



ராஜ்கபூர்



திலீப்குமார்



பாரத் பூஷன்



தேவ் ஆனந்த்

## கார்கோசுரஸும் ஸ்கோலோசுரஸும்

பழங்காலப் பிராணிகளிலேயே பயங்கரமும் கொடுமையும் நிறைந்தது இதுதான். முப்பத்தி இரண்டு அடி நீளமுள்ள இந்த இராட்க்ஷசபிராணி முற்றிலும் மாமிச பட்சிணி. இதற்கு முன்னங் கால்கள் மனிதக் கைகளைப்போல குட்டையானவை. இதனுடைய உருவம் மாமிச மலையாக இருப்பதால் இதனால் விரைவாக ஓடித் தன் இரையைப் பிடிக்க முடியாது. ஆனால் தப்பிததவறி இதனிடம் எதிர்ப்பட்டுவிட்ட இரையை மட்டும் இதனுடைய ரம்பம் போன்ற பற்கள் எப்போதும் தவற விட்டு விடாது.


பொதுவாக இது இதேகாலத்தில்வாழ்ந்த ஸ்கோலோசுரஸ் என்ற பிராணியைத்தான் உணவாக உண்ணும். இந்த ஸ்கோலோசுரஸிற்கு யாராலும் உடைக்க இயலாத கடினமான மேல்தோல், இரும்பு போன்று இருப்பதால் இது அதை தன்னுடைய முன்னங்கால்களால் ஆமைபோன்ற அதைத் தலைகீழாகத் திருப்பி, பஞ்சு போன்ற அதனுடைய அடிவயிற்றைக் கடித்து சதையை மட்டும் தின்றுவிட்டு முதுகு ஓட்டைப் போட்டுவிடும்.

இந்த பயங்கரமான பிராணி கனடாவின் மேற்குப் பகுதியில் வாழ்ந்திருக்க வேண்டும் என்று உயிரின ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

★

## எடபோசுரஸ்


பார்ப்பதற்குமுதலை இனத்தைச்சேர்ந்தது போல காணப்படும் இந்த பழங்காலப் பிராணியை காணுபவர் எப்படிப்பட்ட வீரராக இருந்தாலும சற்று பயந்து பின்வாங்கத்தான் வேண்டும் ஏனெனில்இதனுடைய முதுகில் உள்ள கத்தி போன்ற வளைந்த பகுதியில் இருந்து அப்படிப்பட்ட ஒளி ஒன்று வீசிக்கொண்டிருக்கும் மின்மினிப் பூச்சியைப்போல. விட்டுவிட்டு ஒளிக்கும் இந்த ஒளியில்தான் இது நீரில் இருந்து கரைக்கு வந்து இரை தேடும். கடலிலும், கரையிலும் ஒரே காலத்தில் வசிப்பதற்கு ஏற்ற வகையில் உடல் அமைப்புப் பெற்ற இது வட அமெரிக்காவில் வாழ்ந்த திடுக்கிட வைக்கும் ராட்க்ஷச பிராணிகளில் ஒன்று.





★

★





## மமூத்

(மேலே) இது பார்ப்பதற்கு யானையைப் போன்று இருந்தாலும் இக்கால யானையைவிட உருவத்திலும் வலிமையிலும் பெரியது. பனிமிகுந்த சைபிரியக் காடுகளில் வாழ்ந்த இதற்கு சடை நாய்க்கு இருப்பது போன்ற அடர்த்தியான உரோமமும் மிக நீளமாக வளர்ந்த வலிமையான வளைந்த தந்தங்களும் உண்டு. சாகபட்சிணியாக இருந்தாலும், இது எதிரிகளைக் கண்டால் அது எவ்வளவுதான் வலிமை உடையதாக இருந்தாலும், கொம்புகளால் முட்டித்தள்ளி, கால்களால் நசுக்கிக் கொன்று, துதிக்கையால் தூக்கி எறிந்து விடுமாதலால் இதனிடம் எந்த மாமிச பட்சிணியும் வாலாட்டாது.

## ஆர்சினுய்தீரியம்

(கீழே) 50000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பயங்கரமான வனவிலங்கு இது. இதற்கு தலைப் பகுதிதான் மிகவலிமையானது. இதனுடைய முகத்தில் மூக்கின் மீது வளர்ந்திருக்கும் இந்தக் கொம்புகளின் வலிமைக்கு காட்டு விலங்குகள் அத்தனையுமே அஞ்சி நடுங்கும். பழங்கால எகிப்திலே காணப்பட்ட இது இக்கால காண்டா மிருகங்களைப்போல காணப்பட்டாலும் வலிமையிலும், கொடுமையிலும் அதைவிட நூறு மடங்கு பயங்கரமானது. இதன் 44 பற்களையும் ஆராயும்போது இது சாகபட்சிணி என்றுதான் தெரிகிறது.







## ஸ்டிகோசுரஸ்

(மேலே) இந்தப் பழங்கால பயங்கரப் பிராணிகள் இக்கால டாங்குகளைப் போன்ற பலமான தோலையே கவசமாகக் கொண்டவை. இதனுடைய முதுகில் எதிரிகளிடம் இருந்து தப்பித்துக்கொள்ளுவதற்காக பலமான கேடயம் போன்றவைகள் உண்டு. இதனுடைய உருவம் ஏறத்தாழ 32 அடிகள் நீளமானதாகவும், அகலம் 13 அடியாகவும் இருப்பதால் இதனால் எளிதில் திரும்ப இயலாது. அதனால் பின்புறம்வரும் பகைவர்களைத் தாக்குவதற்காக இதனுடைய வாலிலும் ஈட்டி போன்ற கூர்மையான முட்கள் உண்டு. வட அமெரிக்காவில் உள்ள மேற்கு ஜுராசிக்கில் காணப்பட்ட இப்பயங்கர மிருகம் பார்ப்பதற்குத்தான் பயங்கரமானதே தவிர நடைமுறையில் கோழை உள்ளம் படைத்த பரமசாதுதான்.

## டிரச்சோடனும் டைரனேசுரஸும்

(கீழே) வடஅமெரிக்க காடுகளில் வாழ்ந்த டிரச்சோடன் பழங்காலப் பிராணிகளிலேயேமிக விநோதமான ஒன்று. இதற்கு சின்னத் தலையும் வாத்தின் அலகு போன்ற வாயும் உண்டு. மிகவும் பயந்த சுபாவமுடைய இந்த டிரச்சோடனை மிரட்டக்கூடிய பயங்கரமான மிருகம் டைரனேசுரஸ். இதனுடைய உயரம் 20 அடி இருக்கும். நீளத்தில் இது 50 அடி யாகும். இதனுடைய வாயில் மாமிசப் பிராணிகளுக்கு உரிய கோரமான பற்கள் உண்டு. இதற்கு அதனுடைய பலமான உடலைத்தூக்கக்கூடிய கால்களும், இக்கால மனிதர்களுக்கு இருப்பதுபோல குட்டையான முன்னங் கைகளும் உண்டு. இது ஓடிச்சென்று தன் இரையை கைபோன்ற முன்னங்கால்களால் பிடித்துக்கொண்டு தின்னும். இந்த பயங்கர மிருகத்தின் எலும்புக்கூடு ஒன்று தற்போது நியூயார்க்கில் உள்ள இயற்கை வரலாற்றுப் பொருட் காட்சிசாலையில் இருக்கிறது.






## எலாஸ்மோசுரஸ்

இதுவரை உலகத்தில் தோன்றிய நீளமான கழுத்துள்ள பிராணிகளிலேயே இந்த எலாஸ்மோசுரஸிற்குத்தான் மிக நீளமான கழுத்து உண்டு. இதனுடைய கழுத்து 47 அடி நீளம் இருக்கும் என்றால் அதனுடைய பயங்கரத்தை நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள். இந்த நீண்ட கழுத்து மிகக் குறுகிய உடலில் பொருத்தப்பட, இது நமமுடைய புராணங்களில் வர்ணிக்கப்படும் கடல் பாம்புகளைப் போன்றே இருக்கும். இதற்குக் கொள்ளும் விஷம இல்லை என்றாலும தன்னிடம் சிக்கக் கூடிய எந்தப் பிராணியையும் கடித்துக் கிழித்து விடக்கூடிய கோரமான பற்கள் உண்டு.

## பிரான்டோசுரஸ்

இன்றைக்கு 15000 ஆண்டுகளுக்கு முன் வட அமெரிக்க நீர் நிலைகளின் ஓரங்களிலே உலவிய நடமாடும்மாமிச மலைகள் இவை. இதனுடைய எடை 50.000 பவுண்டுகளையும்விட அதிகமாக இருக்கும் என்றால் அதனுடைய உருவத்தை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள். இத்தனைக்கும் இது மாமிச பட்சிணி அல்ல. இழை தழைகளைத் தின்னும் சாக பட்சிணி தான் இதற்கு உடல் மலைபோன்று இருந்தாலும் எதிரிகளுக்குப் பயந்து இது எப்போதும் தண்ணீரிலேயேதான் கிடக்கும். சுமார் 200 வருடங்கள்கூட உயிர்வாழக் கூடிய இது, சூரிய வெளிச்சத்தில் சிறிது உலாவுவதற்கும், முட்டையிடுவதற்கும்தான் வெளியேவருமாம்



## மீசோசரஸ்

இந்தக் கடல் ராட்சஷன் உருவத்தில் சிறியதுதா என்றாலும், கடல் மீன்களுக்கு இதுதான் எமன் இதனுடைய நீளம் 28 அங்குலம்தான் என்றாலும் இதனுடை- ரம்பப்பற்களுக்கு எப்பேர்ப்பட்ட பெரிய திமிங்கலமாக இரு தாலும் அஞ்சி ஓடவேண்டிய தான். பார்ப்பதற்கு மீன்போல றும் இல்லாது விலங்கு போன்றும் இல்லாது இருக்கும் இ இரண்டும் கெட்டான்தான். நீர்வாழ்வன எப்படி நிலத்தி வாழ்வனவாக மாறியது என்பதற்குத் தகுந்த எடுத்துக்காட்- கும். தென் ஆப்பிரிக்க கடற்கரைப் பகுதியில் காணப்பட். இந்த விநோதப் பிராணி இப்போது உயிருடன் இல்லை என் றாலும் அதனுடைய எலும்புக்கூடு அமெரிக்கப் பொருட்காட் சியில் இருக்கிறது.





## ரகம்போரன்ச்சஸ்

பார்ப்பதற்கு வௌவாலைப் போல் காணப்படும் இந்தப் பழங்காலப்பறவைக்குமுன்னங் கால்களோடு ஒட்டிய பலமான இறக்கைகள் உண்டு. இதனுடைய எலும்புகள் இலேசாக இருப்பதால் இது எளிதாகப் பறக்கின்றது. இதனுடைய அலகில் கூர்மையான ரம்பம்போன்ற பற்கள் உண்டு. அதனுடைய உதவியால் இது மீன்களையும் கடலிலே உள்ள புழுபூச்சிகளையும் பிடித்துத் தின்னும். இதனுடைய வால் மிக விநோதமானது. நுனியில் தட்டையாகவும், வெகு நீளமாகவும் உறுதியானதாகவும் திகழும் அந்த வாலைத் தூக்கிக்கொண்டு அது பறப்பதே ஒரு தனி அழகாக இருக்கும். ஆப்பிரிக்காவில் உள்ள டென்டகார் பகுதியில் வாழ்ந்த இதன் ஒரு இறக்கையே சுமார் 32 அங்குலங்கள் இருக்குமென்றால் அதனுடைய உருவத்தை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

## உங்களுக்குத் தெரியுமா ?


### நிலக்கரி

பூமியில் இருந்து கிடைக்கும் கனிப் பொருள்களிலே நமக்கு மிகவும் பயன் படக்கூடியவைகளில் இதுவும் ஒன்று. ஆரம்பத்தில் நிலக்கரியை எரித்து சூடு உண்டாக்குவதற்குத்தான் மனிதன் கற்றுக்கொண்டிருந்தான். ஆனால் இன்றோ கலர் அச்சுகள், மருந்துகள், பிளாஸ்டிக் ரப்பர், எண்ணெய் போன்ற எண்ணற்ற பொருள்கள் அதில் இருந்து செய்ப்படுகின்றன,

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் பூமியில் புதைபட்ட மரம் செடிகொடிகள் தான் பூமியின் அழுத்தத்தால் இப்படி கருகிப் போயிருக்கின்றன. இதை மனிதன் சுரங்கம் அமைத்து இருண்ட அதில், தலையில் உள்ள மின்சார விளக்கின் உதவியால் நிலக்கரியைத் தோண்டி எடுக்கின்றான்.









### செம்பு

மனிதன் கண்டுபிடித்த முதல் உலோகமே இந்தச் செம்புதான் இந்தச் செம்பு மலைப்பாங்கான இடங்களில் பூமிக்கு அடியிலே புதையுண்டு கிடக்கிறது. பழங்காலத்தில் இந்தச் செம்பைக்கொண்டு நகைகளும் வலிமையான படைக் கருவிகளும் செய்யப்பட்டன. பின்னர் இடைக்காலத்தில் பாத்திரங்கள் செய்யப்பட்டன. ஆனால் இன்றோ அதில் இருந்து மின்சாரக் கம்பிகள் முதல் ஆகாய விமானப் பகுதிகள் வரை செய்யப்படுகின்றன.



### இரும்பு

3000 ஆண்டுகளாக மனிதனுக்கு அறிமுகமான மிக உபயோகமான உலோகம் இது. இரும்பு என்பது கற்களும் மணலும் கலந்த ஒரு கனிப்பொருள். அது முதலில் இரும்பு கலந்த கற்களாகத்தான் கிடைக்கிறது. அதைச் சுத்தம் செய்துதான் இரும்பைப் பிரிக்கவேண்டுமே தவிர சுத்தமான இரும்பு எங்கும் எடுத்த எடுப்பில் கிடைப்பதில்லை. சுத்தமான இரும்பு வெள்ளி கலந்த சாம்பல் நிறமாக இருக்கும். இரும்பு வானத்தில் இருந்து எரிந்து விழுகிறதே அந்த எரி கற்களின் சாம்பலிலும் இருக்கிறது. இது வலிமை மிகுந்ததும் எளிதில் கிடைக்கக் கூடியதுமாக இருப்பதால் உலகத்தில் மண் குடிசை முதல் மாளிகை வரை எங்கும் நிறைந்திருக்கிறது.




## வைரம்

வைரம் எரிமலைகளிலே உருவாகிறது. வைரம் என்று நாம் ஏற்றிப் போற்றுவது வேறு ஒன்றும் அல்ல, எட்டுப் பட்டையாகத் தீட்டப்பட்ட ஒரு கரித்துண்டுதான் அது. உலகத்தின் வைரங்களில் பெரும் பகுதி தென் ஆப்பிரிக்காவில் உள்ள கிம்பர்லியில்தான் கிடைக்கிறது. வைரப் பட்டை தீட்டுவதில் ஹாலந்தில் உள்ள ஆம்ஸ்டர்டாம் நகரம்தான் சிறந்தது. தோண்டி எடுக்கப்படும் வைரங்களிலே ஏறத்தாழ 20 சதவீதம்தான் பட்டை தீட்டுவதற்கு ஏற்றதாக இருக்கும். குல்லினன், ஹோப், கோ-இ-னூர் ஆகிய வைரங்கள் உலகப் புகழ் படைத்தவைகளாகும்.

## தங்கம்

தங்கம் என்பதைத் தெரியாதவர்கள் இருக்க இயலாது. ஆனால் அதனுடைய மென்மைத் தன்மை பலருக்குப் புரியாது. பழங் காலத்திலிருந்தே இந்தப் பொன் நகைகள் பெரிதும் விரும்பிப் போற்றப்படுகின்றன.


இது பெரும்பாலும் நதியின் அடிப்பாகத்திலோ அல்லது பீடபூமியிலோ படிந்து கிடக்கின்றது. இதுவும் கனிப்பொருளாகத்தான் தோண்டி எடுக்கப்படுகிறது. அமெரிக்காவில் மக்கள் இவ்வளவு அதிகமாகக் குடியேறியதற்குக் காரணம் அங்கு விலை மதிப்பற்ற தங்கம் கிடைக்கிறது என்ற பேராசையால்தான்.






## வெள்ளி

தங்கத்திற்கு அடுத்தபடியாக உலக மக்களுடைய உள்ளத்தைக் கவர்ந்த உலோகம் இது. தோண்டி எடுக்கும்போது இது கருமை கலந்ததாகக் காணப்பட்டாலும் சுத்தம் செய்ததும் வானத்து நிலவுபோல வெளுத்துவிடுகிறது. இன்றைக்கு 4500 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே அழிந்துபோன டிராய் நகரின் புதைபொருள்களில் வெள்ளி நகைகளும் சில இருப்பதால் வெள்ளியின் உபயோகம் மனிதனுக்கு அந்தக் காலத்திலேயே நன்கு பழக்கப்பட்டுவிட்டது என்பதை நாம் நன்கு அறியலாம். தங்கத்தைப் போன்றே பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படும் இதுவும் கனடா, செக்கோஸ்லவாகியா, மெக்ஸிகோ, ஆகிய இடங்களில் அதிகமாகக் கிடைக்கிறது.




## மாணிக்கம்

மன்னர்களுடைய மணிமுடிகளை அலங்கரிக்கும் இந்த அபூர்வக் கற்கள் நிறத்தில் சற்று இளஞ்சிவப்பாக இருக்கும். இது வைரத்தைவிட மூன்று மடங்கு விலை அதிகமாக உடையது. இதிலே புருவின் இரத்தத்தைப் போன்ற நிறம் உடையதுதான் மிகச் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. பர்மாவில் இருந்துவரும் மாணிக்கக் கற்கள்தான் உலகிலேயே சிறந்த கற்களாகக் கருதப்படுகின்றன.



## உப்பு

மனிதன் மட்டுமல்லாது மிருகங்களும் உப்பு இல்லாவிட்டால் உயிர்வாழ இயலாது. இது பொருள்களைப் பதப்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. கடலில் இருந்து எடுக்கப்படும் இந்த தாதுப் பொருள்கள் மனிதனுடைய எலும்புகளை வளர்க்கக் கூடியது. 'சாக்கடல்' என்று அழைக்கப்படும் கடலில்தான் உலகத்திலேயே உப்பு அதிகமாகக் கலந்து கொண்டிருக்கிறது.



## ஆஸ்பெஸ்ட்ராஸ்

இது தீயில் எரியவோ அல்லது உருகவோ செய்யாத ஒரு கடினமான கனிப் பொருள் ஆகும். கல்லில் இருந்து நார் உரிக்க இயலாது என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். இந்த ஆஸ்பெஸ்ட்ராஸ் உண்மையில் ஒருவகையான கற்களில் இருந்து நூலாக உரித்து செய்யப்படுகிறது. ஆப்ரிக்காவில் உள்ள ரொடீசியாவில் அதிகமாகக் கிடைக்கின்ற இது நெருப்பிற்கு வளையாததாக இருப்பதால் நெருப்பை எங்கெங்கு தடுக்க வேண்டியிருக்கிறதோ அங்கெல்லாம் இது பயன்படுத்தப்படுகிறது.




## சுண்ணும்புக் கல்

இது இருக்கின்ற கனிப்பொருள்களிலேயே மிக மென்மையானது. வெள்ளை, பச்சை, சாம்பல் ஆகிய நிறங்களில் கிடைக்கின்றது. சீனர்கள் ஆதியில் உருவங்களைச் செதுக்கினர் இதில். பாபிலோனியர்கள் இதில் தங்களுடைய சாசனங்களைப் பொறித்னர், சுத்தமான கற்களில் இருந்து இப்போது முகப் பவுடர் செய்யப்படுகிறது. காகிதம், மை, ரப்பர், சோப் ஆகியவைகள் செய்வதற்கும் இது பயன்படுகிறது. இது ஒரு வகையான மலைப் பாறைகளில் படிந்து கிடக்கிறது.



ராமாயணம்
பட்டாபிஷேகத்துடன்
முடிந்தது.

ராமச்சந்திரனுடன்
பத்மினியின் படத்
தொழிலும் முடிந்தது.

காதல், காதல்
காதல் இன்றேல்
சாதல்.....






'மல்லிகாக்கள் மல்கிய
வால்மீகி கண்ட
வடநாட்டு வனிதை.

நெருப்பென்றால்
வாய் சுடுமோ?
நடிப்பிற்காக இப்படியிருந்தால்
இழிவாதுமோ?




அத்தான்.....என்னைத்
தான்..... அவர்
என்னைத்தான்..






தோட்டத்தில் மலர்
இருக்கும்
மண மிருக்காது.

கலை



மலையாள சகோதரிகளை
குன்றின்மேல்
விளக்து போல்
ஆக்கிய
குருவாயூரப்பனைர்
குரும்புக்காரி ராகினி



ரா பிலிம் இல்லாது
திரைப்படம் இல்லை.

ராதா இல்லாது
திரைப்படம் இல்லை.



# நெருஞ்சி உணர்த்திய உண்மை!

டாக்டர் மு. வரதராசனார்

அன்பால் வளர்வது காதல்; அன்பின் காரணமாக இனிமையே பேசி இனிமையே செய்து காதலை வளர்ப்பவர் காதலர். அத்தகைய காதலரின் வாழ்க்கையிலும் எப்படியோ சிறு மாசு புகுந்து துன்பம் விளைதல் உண்டு. இன்பமே வாழ்க்கையென்று இருந்த காதலரின் அன்பு நெஞ்சில் இந்தத் துன்பம் முள் போல் தைத்து வருத்தும். இது என்றும் உள்ள உலக இயல்பு. ஆயினும், பண்பட்ட காதலர் அந்தத் துன்ப முள்ளால் கலங்காமல் காதலை வெறுக்காமல் அன்பை மேன்மேலும் வளர்த்து வாழ்ந்தால், மீண்டும் துன்பமற்ற இனிய காதல் வாழ்க்கையைப் பெறுதல் முடியும்.

சிறந்த காதல் வாழ்க்கையால் ஒன்றுபட்டு வாழ்ந்தனர் இருவர். அவர்களுள், ஆணின் வாழ்க்கையில் சிறு மாசு புகுந்தது. அவன் சில நாட்களாகத் தன் வீட்டுக்கு ஒழுங்காக வருதல் இல்லை. தன் மனைவியிடம் முன்போல் நெஞ்சு கலந்த பேச்சுப் பேசி மகிழ முடியவில்லை. குற்றம் உள்ள நெஞ்சினன் ஆகையால், கரந்து பழகினான்; உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்றாகப் பழகினான். அவனிடம் குன்றாத அன்பு கொண்டு வாழ்ந்த அவனுடைய மனைவி இதை உணர்ந்து வருந்தினாள். இத்தனை காலமும் சிறந்த காதலன் என்று தன் காதலனைப் பற்றிப் பெருமிதமான எண்ணம் கொண்டிருந்தவள் அவள். தன் காதலனோடு வாழும் வாழ்க்கைபோல் இனியது வேறு எதுவும் உலகில் இல்லை என்று நம்பியவள் அவள். ஆனால் அவ்வளவு இனிய வாழ்க்கைக்குக் காரணமாக இருந்த காதலனே இன்று துன்பம் விளைவதற்குக் காரணமாக இருப்பதை எண்ணி நொந்தாள். இனிது செய்து வந்தவர் இப்போது இவ்வாறு இன்னா செய்கின்றாரே என்று எண்ணி எண்ணி நெஞ்சம் புண்பட்டாள்.

அப்போது அவளுடைய கண்கள் தெரு முற்றத்தைக் கடந்து பார்த்தன. அங்கே சாலையின் ஓரத்தே அழகான பூக்கள் சில தரையில் மலர்ந்து விளங்குவதைக் கண்டாள். அவ்வளவு கவர்ச்சியான அந்தக் காட்சியை உற்று நோக்கினாள். அந்தப் பூக்கள் இன்ன பூக்கள் என்பது அவளுக்கு உடனே நினைவுக்கு வந்தது. அந்தப் பூக்கள் நெருஞ்சிப் பூக்கள். அவற்றைச் சில நாட்களுக்கு முன் மிதித்து வருந்தியவள் அவள். அப்போது அந்த நெருஞ்சியின் முட்கள் அவளுடைய காலில் பட்டு நோகச் செய்தன. அதையும் நினைத்துக் கொண்டாள். "இவ்வளவு அழகாகத் தோன்றுகின்ற இந்த நெருஞ்சிப் பூக்கள் நாளை முட்களாகத் தோன்றிக் காலை வருத்தப் போகின்றன! அழகான பூக்களுக்கு அடியில் நெருஞ்சி முட்களின் வளர்ச்சி கிடக்கிறது. முதலில் இனிய பூக்கள்; பிறகு அதே நெருஞ்சிச் செடியில் இன்னா செய்யும் முட்கள்! இப்படித்தான் காதலரின் அன்பும் உள்ளது. முதலில் இனிய செய்கின்றார்; பிறகு இன்னா செய்கின்றார்! என்னைப் பிரிந்து துன்புறச் செய்கின்றார்! நினைத்தால் என் நெஞ்சம் நோகின்றதே" என்று எண்ணினாள்.

தரையிலே பூத்து மிதிபடும் சிறிய நெருஞ்சியைப் பலரும் காண்கிறார்கள். ஆனால் அள்ளூர் நன்முல்லையார் என்னும் புலவர்க்கு அந்த நெருஞ்சி ஒருபெரிய உண்மையை உணர்த்துகின்றது. மதிப்பற்றுக் கிடக்கும் நெருஞ்சி, மிக உயர்ந்த காதல் வாழ்க்கை பற்றிய உண்மையை உணர்த்தி விடுகின்றது.

"நோம்என் நெஞ்சே! நோம்என் நெஞ்சே!
புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்சின் புதுமலர் முட்பயந் தாஅங்கு
இனிய செய்தநம் காதலர்
இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே!

— குறுந்தொகை 202.

# சங்க காலத்தில் தமிழர் திருமணம்

டாக்டர் மா. இராசமாணிக்கனர்...

## சங்க நூல்கள்

சங்க காலம் என்பது ஏறத்தாழக் கி. மு. 3-ஆம் நூற்றுண்டிலிருந்து கி. பி. 3-ஆம் நூற்றுண்டு வரை என்று கூறலாம். இப்பரந்துபட்ட காலத்தில் பலநூறு புலவர்கள் தமிழகத்தில் வாழ்ந்தனர்; அரசர்களையும், வள்ளல்களையும் பாடினர்; அகம், புறம் பற்றிய பாடல்களைச் செய்தனர். இக்காலத்தில் எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும், திருக்குறளும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் செய்யப்பட்டன. இப்பரந்துபட்ட சங்க காலத்திலேயே தொகை நூற் பாடல்களில் காணப்படும் திருமணச் செய்திகள் சிலவாகவும், சிலப்பதிகாரத்தில் காணப்படும் செய்திகள் பலவாகவும் இருத்தலைக் காணலாம்.

## அகநானூறும், திருமணமும்

அகநானூற்றில் 86-ம் செய்யுளும் 136-ஆம் செய்யுளும் இரண்டு திருமணங்களைக் கூறுவன. அவற்றுள் 86-ஆம் பாடல் பின்வரும் செய்திகளைத் தெரிவிக்கின்றது:

(1) மணத்தில் முதல் நிகழ்ச்சியாக விருந்து நடைபெற்றது; (2) மணப்பந்தலின் கீழ் மணல் பரப்பப் பெற்று விளக்கு வைக்கப்பட்டது. (3) இளங் காலைப் போதில் திங்கள் உரோகிணியுடன் கூடிய நல்லோரையில் முதுபெண்டிர் மணமகளை நீராட்டுதற்குரிய நீரைக் குடங்களில் ஏந்தி வந்தனர். (4) அந்நீர்க் குடங்களில் மலரும், நெல்லும் தூவிப் பிள்ளை பெற்ற வாழ்வரசியர் நால்வர் மணமகளை, "கற்பு நெறியினின்றும் வழுவாமல் பல நலங்களைச் செய்து கணவன் விரும்பத்தக்க மனைவி ஆகுக," என்று வாழ்த்தி, மணநீராட்டினர். இவற்றுடன், "வதுவை நன்மணம் கழிந்தது."

"உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால்நீங்கிய கொடுவெண் திங்கள்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
'கற்பின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடுதயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
'பேரிற் கிழத்தி யாகெ'னத் தமர்தர
ஓரிற் கூடிய உடன்புணர் கங்குல்'

செய்யுள்-136 கீழ்வரும் விவரங்களைத் தருகின்றது; (1) இறைச்சி கலந்து ஆக்கப்பட்ட வெண்சோற்று விருந்து நடைபெற்றது; (2) திங்கள் உரோகிணியைக்கூடிய நல்லோரையில், மணமனை அலங்கரிக்கப்பட்டு இறைவழிபாடு நடைபெற்றது; (3) மணமுழவும் முரசும் முழங்கின; (4) தலைவிக்கு மணநீராட்டு நடைபெற்றது; (5) வாகையிலை அறுகின் கிழங்கிலுள்ள அரும்புகளோடு சேர்த்துக் கட்டப்பெற்ற வெண்ணூல் தலைவிக்குக் காப்பாகச் சூட்டப்பட்டது. (6) தமர் தலைவிக்குத் தூய உடைகளை அணிவித்தனர்; (7) தமர் தலைவிக்குப் பல அணிகளை அணிவித்து அங்ஙனம் அணிவித்ததால் உண்டான வியர்வையை ஆற்றினர். இவ்வளவே மணச் செய்திகளாகக் கூறப்பட்டுள்ளன.

"மைப்பறப் புழுக்கி னெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையோடு புரையோர்ப் பேணிப்
புள்ளுப்புணர்ந் தினிய வாகத் தெள்ளொளி
அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கட்
சகடு மண்டிய துகடீர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்
படுமண முழவொடு பருஉப்பணை யிமிழ
வதுவைமண்ணிய மகளிர் விதுப்புற்றுப்
பூக்கணு மிமையார் நோக்குபு மறைய
மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை
பழங்கன்று கறித்த பயம்பம லறுகைத்
தழங்குகுரல் வானின் றலைப்பெயற் கீன்ற
மண்ணுமணியன்ன மாயிதழ்ப் பாவைத்
தண்ணுறு முகையொடு வெண்ணூல் சூட்டித்
தூவுடைப் பொலிந்து மேவரத் துவன்றி
மழைபட் டன்ன மணன்மலி பந்தர்
இழையணி சிறப்பிற் பெயர்வியர்ப் பாற்றித்
தமர்நமக் கீத்த தலைநாள் இரவின்"

இவ்விரண்டு திருமணச் சடங்குகளிலும் மணமக்கட்கு மணநீராட்டுதலே சிறப்புச் சடங்காக இருத்தல் காணத்தக்கது. பலர் அறிய விருந்து நடத்தி, மணமகளுக்கு நீராட்டிப் புத்தாடை உடுத்து அணிகலன்கள் அணிவித்து, மணமக்கள் இருவரையும் மணப்பந்தலில் உட்கார வைத்துப் பலர் அறியச் செய்தலே திருமண வினையாக அக்காலத்தில் இருந்தது என்பது இவற்றால் அறியலாகும். "இவற்றுள், (1) எரிவளர்த்தல் இல்லை, (2) தீ வலம் வருதல் இல்லை, (3) தட்சிணை பெறப் புரோகிதர் இல்லை. இவை முற்றும் தமிழர்க்கே உரிய திருமணங்களாகும்" என்று காலஞ் சென்ற வரலாற்றுப் பேராசிரியரான திரு. பி. டி. சீநிவாச ஐயங்கார் அவர்கள் தாம் வரைந்த "தமிழர் வரலாறு (பக். 80) என்னும் ஆங்கில ஆராய்ச்சி நூலில் கூறியிருத்தல் ஊன்றி நோக்கத் தக்கது.

## கண்ணகி திருமணம்

கண்ணகி திருமணம் பற்றிக் கூறும் சிலப்பதிகாரமங்கலவாழ்த்துப் பாடலில் கீழ்வரும் திருமணச் செய்திகள் இடம் பெற்றுள்ளன: 1) திருமணப் பந்தலில் (சந்திரனும் உரோகிணியும் கூடிய நல்லோரையில்) மாமுதுபார்ப்பான் மறைவழி காட்டிடக் கோவலன் கண்ணகியுடன் தீவலஞ் செய்தான்; (2) பெண்டிர் பலர் வாசனைப் பொருள்களை ஏந்தி நின்றனர்; சிலர் உரையால் வாழ்த்தினர்; சிலர் பாட்டால் வாழ்த்தினர். சிலர் பலவகைச் சாந்துகளை ஏந்தி நின்றனர்; மற்றுஞ் சிலர் மாலைகளை ஏந்தி நின்றனர்; சிலர் பலவகைச் சுண்ணங்களை ஏந்தி நின்றனர். சிலர் விளக்குகளையும் வேறு சிலர் கலங்களையும் மற்றுஞ்சிலர் முளைப் பாலிகையையும் ஏந்தி நின்றனர். (3) கொடிபோன்ற மகளிர் "இக்கண்ணகி தன் தலைவனைப் பிரியாதவள் ஆகுக; இவள் காதலனும் இவளைத் தழுவிய கை நெகிழாமல் சேர்ந்திருப்பானாகஇருவர் அன்பும் தீதற்று விளங்குக," என்று தம் வழிபடு கடவுளை வணங்கினர்; சிலர் மலர்களைத் தூவினர்.

இத்திருமணத்தில், அகநானூற்றுத் திருமணங்களில் குறிக்கப் படாத மாமுதுபார்ப்பான் மறை வழி காட்டலும், தீவலம் வருதலும் பாலிகை முதலியன மகளிர் ஏந்தி நிற்றலும் புதியனவாக வந்திருத்தல் காண்க. இவற்றுள் சிறப்பாகக் குறிக்கத் தகுந்தது, கோவலன் கண்ணகியின் கையைப்பற்றி (பாணிக் கிரகணம்) தீ வலம் வருதல். இவ்வாறு கோவலன் கண்ணகியின் கையைப் பற்றியிருந்தமையே சிறப்புடையது என்பது "கவவுக் கை ஞெகிழாமல்" என்னும் மங்கல மகளிர் வாழ்த்தால் வலியுறும். இத்திருமணத்தில் கோவலன் கண்ணகியின் கையைப் பற்றிய வண்ணம் 'தீ வலம் செய்ததைக் கண்டவர் நோன்புசெய்தாராயினர்' என்று இளங்கோவடிகள் கூறுதலால், பாணிக்கிரகணமே கண்ணகியின் திருமணத்தில் சிறப்புடையச் சடங்காக இருந்தமை தெளியலாம்.

[சிலப்பதிகார காலத்திற்குப் பின்பு புதிய திருமணச் சடங்குகள் பல காலப்போக்கில் இடம் பெற்றன என்பது பிற்கால நூல்களின் வாயிலாக நன்கு அறியலாம்.]

# கருவிழி உதிர்த்த கண்ணீர்!

கலைஞர் கௌதமன்

## காட்சி 1

காலம்: கி. பி. 1806 (அக்டோபர்)

இடம்: பிரஷ்யாவின் தலைநகர் பெர்லின்–அதன் அரண்மனை.

இருப்பவர்: நெப்போலியன் – பெர்லின் கவர்னரின் மனைவி–இளவரசி ஹேட்ஸ்பெல்ட்

சூழ்நிலை: நெப்போலியனின் வீரத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத பெர்லின் நகர் வீழ்ந்து விட்டது–சரணடைந்து விட்டது. அதனை ஆண்டு கொண்டிருந்த கவர்னர் ஹேட்ஸ்பெல்ட் அந்நகரை நெப்போலியனின் காலடியில் கிடத்தி விட்டான்! ஆனாலும் மறைமுகமாக. பிரஷ்யா தேச முடிமன்னனுக்கு அவன் உளவறிவித்துக் கொண்டிருந்தான்! இந்தப் பாதகச் செயல், கண்டு பிடிக்கப்பட்டு, ஹேட்ஸ்பெல்ட் ராணுவக்கோர்ட்டில் நிறுத்தப்பட்டான், இன்னும் இரண்டு மணி நேரத்தில் அவன் தானிழைத்த குற்றத்திற்காக சுடப்படவேண்டும். இது ராணுவ மன்றத்தின் தீர்ப்பு! இந்நிலையில் தான் ஹேட்ஸ்பெல்டின் மனைவி, பெர்லின் மாளிகையிலே கண்ணைக் குளமாக்கிக் கொண்டிருந்தாள், நெப்போலியனின் வருகைக்காக! கருணை தேடக் கிளம்பிவந்த அந்தக் கருவிழியாளை நெப்போலியன் அரண்மனை வாயிலில் சந்திக்கிறான்! குதிரையினின்றும் இறங்கும் போது இந்தப் பேச்சுத் தொடர்கிறது.

இளவரசி: ''வையம் வாழ்த்தும் பெருவீரா!''

நெப்போ: ''யாரது? கண்ணீரும் கம்பலையுமாக...! '

இளநிரும்பி: ஹேட்ஸ்பெல்ட்!

நெப்: 'வருக!வருக! இளவரசியாரே ஏது வெகுதூரம் வந்துவிட்டீர்கள்..! கணவர் விட்டுச் சென்ற பணியை...!

இளவர: 'தொடர்ந்து செய்ய வந்திருப்பதாகத் தவறாக எண்ணவேண்டாம் மன்னர் மன்னவா! தங்களிடம் வந்திருப்பது ஒரு இளவரசி யல்ல; ஓர் சாதாரண அபலை! திக்கற்றவள்! தூக்குமேடையை வலியச் சென்று தேடிக் கொண்ட ஒரு துர்ப்பாக்கியனின் மனைவி! உளவாளியென்ற பெருங்குற்றத்திற் கிலக்காக்கப்பட்ட கவர்னர் ஹேட்ஸ்பெல்டின் பாசத்தால் கட்டுண்ட பேதைப் பெண்! இதயவொளியைநாடிவந்திருக்கிறேன் எனதருமைக் காதலன்–என் அன்புப் பெட்டகம் – என் வாழ்வின் ஜீவ ஒளி இன்று அழிந்து கொண்டேயிருக்கிறது. சில நிமிஷங்களில் அவரின் நிஜ உருவம் அழிக்கப்பட்டுவிடும்! எனவே தங்களின் உத்திரவு ஒன்று தான் எனக்கு நல்வாழ்வளிக்க வேண்டும்! அவர்பிழைபொறுத்தருளவேண்டும்!''

நெப்: பொறுத்தருளும் அளவினதான குற்றத்தை உமது கணவர் செய்யவில்லையே இளவரசியாரே...!''

இளவ: 'அதையறிந்து தான் உம்மிடம் நானே சரணடைந்திருக்கிறேன் மன்னர் மன்னவா...!"

நெப்: 'உளவறிந்து சொல்பவர்கள், எந்தப் பாசறையை சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு எதிரானவர்களால், அவர்கள் கண்டு பிடிக்கப்பட்டு கைதியாக்கப்பட்டால், அத்தகையவர்களிடம் கருணை காட்டுவதோ – அவர்களை விட்டு விடுவதோ எவ்வளவு பயங்கரமான காரியம்தெரியுமா தங்களுக்கு. ...!'

இளவ: மன்னர் குல திலகமே! பிரான்ஸின் ஏகக்குரலே! தங்களின் குற்றச்சாட்டை மறுத்துப் பேசவில்லையே நான்! இந்த ஏழைக்கு அந்த வழியும் வகையுமில்லையென்பது தாங்களறியாததல்லவே..! முறை தவறி நடந்து கொண்டார் என் கணவர் ஒப்புக்கொள்கிறேன் பெருந்தவறு தானிது!'

நெப்: 'அப்படியானால்செய்தகுற்றத்திற்கு தண்டனை விதிப்பது எப்படித் தவறாகும்...?"'

இளவ: 'தண்டனையைத் தவறு என்று சொல்லவில்லையே மன்னவா நான்! ஆனால் தண்டனைவேறு–கருணை வேறு என்று இறைஞ்சி நிற்கத்தான் நான் வந்திருக்கிறேன்!

நெப்: 'இறைஞ்சி நின்றாலும் பயனுண்டாக வேண்டுமே...?'

இளவ: மாவீரா! புனித உள்ளங்கொண்டவர் தாங்களென்று பலர் சொல்லக்கேட்டிருக்கிறேன்! கருணை ஊற்றுக்களால் பொங்கி வழியும் உமது இதயத்தைக் கொடுமைச்சுவர்கள் மறைத்துக் கிடக்கின்றன என்று தங்கள் வைரிகளே சொன்னாலும் நான் மட்டும் நம்பத்தயாரில்லை! முடிமன்னா! மாளிகை தகர்ந்து வீழ்ந்தால் புதுப்பித்துக் கொள்ளலாம்! மணிமுடி இடறி வீழ்ந்தால் போரிட்டுப் பெற்றுக்கொள்ளலாம்! ஆனால்பாசத்தின் இருப்பிடம் – என் இதயக் கோயிலின் அன்பு தெய்வம் அழிக்கப்பட்டுவிட்டால் அதைஎங்ஙனம் நான் சகித்துக் கொள்வேன்....?'

நெப்: 'அவரைத் தண்டித்தது அரசியல் குற்றம்...?'

இளவ: 'அவரிடம் கருணை காட்டுவதும் அதிலும் ஒரு அபலைக்காக அவளிடம் அன்பு காட்டுவதும் ஒரு 'அரசியற் கண்ணியம்' என்று ஏனரசே தாங்கள் கொள்ளக்கூடாது?'

நெப்: சாமர்த்தியமாகப் பேசுகிறீர்கள்!!'

இளவ: 'சாமர்த்தியம் ஒன்றுமில்லையரசே! இது தான் என் ஜீவ மரணப் போராட்டம்! அவரில்லையேல் நான் வாழ்ந்துதான் என்ன பயன்–? வெண்புறாக்கள் ஜோடி ஜோடியாக இணைந்து பறக்கும்போது தான் வான வீதியே எழிலுறக் காட்சி தரும்! வானவில்லில் வர்ண ஜாலங்களில்லாவிட்டால் அதைக் கண்டு ரசிப்பாரில்லை! ஒற்றைத் தாமரை மலரைவிட இரட்டைக் கமலங்களுக்குத்தான் வனப்பும் கவர்ச்சியுமதிகம்! இரண்டு கால்களில் ஒன்று போனாலும், மனித வாழ்க்கையே எவ்வளவு கசப்புடையதாகி விடுகிறதரசே! என் கணவர் என் இதயத்தின் மூச்சாக உலவுகின்றார். ஆனாலும் இன்று குற்றவாளியாக நிறுத்தப்பட்டுக் கிடக்கிறார். இங்கே தான் மன்னவரே! என் மூச்சு அடைபடுகிறது; தடைபடுகிறது! அவருக்கு மேலும், மேலும் இன்னல்கள் நேரிட்டால் அது நின்றே போய் விடும்! ஆனால் அவர் வதைபட்டு மாண்டு மடிவதைக் காணுமுன் அந்த என் மூச்சு நின்றுவிட்டால் அதொன்றே எனக்குப் போதுமரசே இரண்டிலொன்று என்ற சூழ்நிலையில் தான் நானின்று ஸ்தம்பித்துக் கிடக்கிறேன்...என் சோகக் கருவிழிகள் இரண்டும் சிந்தும் கண்ணீரைக் காணிக்கையாக்கி எனது பெரு மூச்சையும்–இதயத் துடிப்பையும்–இரு வேறு பரிதாப விண்ணப்பங்களாக்கித் தங்களின் புனிதத்தாள் பணிந்து மன்றாடும் நிலையில்—கெஞ்சும் நிலையில்–நானின்று இருக்கின்றேனரசே! எல்லாம் என் அன்புக் கணவருக்காக!!'

'புவியாளப் பிறந்த புகழரசே! சற்றே என்னைப் பாருங்கள்! என் அழகுக்காக அல்ல; அன்புக்காக! ஒரு தங்கையின் புனித அன்பு—ஓர் அண்ணனின் இதயத்தைத் தொட முடிய

வில்லை பயன்றால் உலகில் அண்ணன்-தங்கை முறைதான் இருந்தென்ன பயன்...? தங்கையிடம் பாசமும்—அவள் கண்ணீரைக் கண்டு பரிவும்—அவளின் மனச்சோர்வையும், வேதனையையும்கண்டு இரக்கமும்-அவளின் மனச்சோர்வையும், வேதனையையும் கண்டு கனிவும் — அன்பும் — காட்ட முடியாத ஓர் அண்ணன் இப்பூ உலகிலேயே இருந்ததில்லை யரசே! அரசே! என்பதும் அவ்வளவு பொருத்தமானதாகாது! அன்பு அண்ணா என்றே அழைக்கின்றேன்! அருமை அண்ணா! இதோ என் கருவிழி சிந்திய கண்ணீர்! உமது பாதங்களை அது கழுவட்டும்! அதோடு என் அன்புக் கணவரையும் அது மீட்டுத் தரட்டும்!! குற்றமிழைத்தவரிடத்திலே கருணை காட்டுங்கள்! "கண்ணியத்தாலும்-உயர்ந்தமுடி மன்னர்" —என்று தங்களை இவ்வையம் வாழ்த்தட்டும்! அருமை அண்ணா! 'உடன் பிறக்காமல் உரிமை கொண்டாடுகிறாளே இவள்'-என்ற மௌனமா...? பேசுங்கள் அண்ணா! இந்த அபலையின் கண்ணீர்க் குளத்திலே........!!'

நெப்: 'நான் ஆனந்த நீராட விரும்பவில்லை சகோதரி! எழுந்திருங்கள்! இப்பரந்த உலகத்திலே எத்தகைய வைரியின் தாக்குதலையும் சமாளிக்கும் வலிமை படைத்த எனக்கு, ஒருபெண் மணியின் கண்ணீரை மட்டும் தாங்கிக்கொள்ளும் துணிவும்—வலிவும் இல்லாமற் போனது விந்தையினும் விந்தைதான்! எழுந்திருங்கள் சகோதரி! உங்களின் அன்புப் பேச்சு, சுற்றி வளைத்து என் இருதயத்தையே வெகுவாகக் கவர்ந்துவிட்டது.வாருங்கள் உள்ளே போகலாம்......உமது கணவருக்கு...... !!'

இளவ: 'ஒரு தீங்கும் நேராதல்லவா......?'

நெப்: 'உங்கள் 'கணவர் அன்பே'—அன்பு! உலகின் ஒவ்வொரு அரசியற் குற்றவாளிக்கும், தங்களைப் போன்ற நல்ல உள்ளம் படைத்த மனைவிமார்கள் அதிர்ஷ்டவசமாக இருந்துவிட்டால், உலக வல்லரசுகளின் கதி வேடிக்கையாகத்தானிருக்கும்! வாருங்கள்! உள்ளே போகலாம்!!

## காட்சி 2

இடம்: அரண்மனை.

இருப்பவர்: நெப்போலியன்-பெண் மணி ஹேட்ஸ் பெல்ட்-மற்றும் பலர்

சூழ்நிலை: வெளியிலிருந்து வந்த நெப்போலியன்-தானழைத்து வந்த பெண்மணியுடன் தொடர்ந்து பேசுகிறான்!

நெப்: 'உட்காருங்கள்!'

இளவ: 'பரவாயில்லை யண்ணா!'

நெப்: 'பயப்படாதீர்கள்!!'

[மௌனம்]

நெப்: இதோ இந்தக் கடிதத்திலிருப்பது யாருடைய கையெழுத்து--?'

இளவ: 'என் கணவருடையது!'

நெப்: 'நிச்சயமாகச் சொல்வீரா-?'

இளவ: 'ஆமாம்! நிச்சயமாக இது என் கணவர் எழுதிய கடிதம்தான்!'


நெப்; 'விஷயத்தைப்படித்தீர்களா.?

[மௌனம்]

நெப்; 'இதுதான் உமது கணவரை குற்றவாளியாக்கிய கடிதம்! பகையரசனுக்குத் தகவலனுப்பும்போது வேவுக்காரர்களால் கண்டெடுக்கப்பட்டது! இதோ! இன்று உம் எதிரிலிருக்கிறது-கையிலிருக்கிறது! சற்று முன் தாங்கள் சிந்திய கண்ணீரை இதன் பக்கங்களிலே நீங்கள் சிந்தியிருந்தாலும் இந்த எழுத்தும் பொருளும், சேதியும்-உளவும் நிச்சயம் மாறாது...! அழியவும் அழியாது...! அவ்வளவு வலிமை கொண்டவை களிவைகள்! வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் பலமான பிரச்னையைப் பற்றிய விளக்கம் எதிர்ப் பாசறைக்குப் போய்க் கொண்டிருக்கிறது. இதன் மூலம்...! உமது கணவர் அனுப்புகிறார்...சரணடைந்த பிறகும்!!...எமக்கு உதவுவதாக வாக்களித்தபிறகும்!! இங்கோ நீர்வாதாடுகிறீர்...! கண்ணீர் சொரிகின்றீர்—நான் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு!என் இதயத்தைத்தொடும் அளவுக்கு!!

[மௌனமாக-கண்ணீர் வடிக்கிறாள்!]

நெப்: 'அழாதீர்கள்! மீண்டும் அது வேண்டாம்! அந்தக்கடிதத்தைஇதோ இந்த ஜுவாலையிலிட்டு நீங்களே பொசுக்கிவிடுங்கள்...! அதொன்றுதான் உமது கணவரைக் கொல்லும் சாட்சி! நாம் 'அவரைத் தண்டிக்கப்போதுமான அத்தாட்சியும் கூட அதுதான்! அது எரிந்துபட்டால் உமது கணவருக்கெதிரான வேறு சாட்சியங்களே கிடையாது...! அப்



போது அவர் குற்றவாளியாக மாட்டார்! எனவேதான் கூறுகிறேன்—அதை எரித்து விடுங்கள்...! உமது கணவருக்கு அவரே எடுத்துக் கொண்ட அந்த மரண சாஸனத்தை நீங்களே கொளுத்திவிடுங்கள்! தயங்காதீர்கள்! மனப்பூர்வமாகவே சொல்லுகிறேன்....! அதை நெருப்பில் போடுங்கள்!

[பயம் கலந்த மௌனம்]

நெப்: 'ஏன் பயப்படுகிறீர்கள்! அழாதீர்கள்! மீண்டும் கண்களைக் குளமாக்கிக் கொள்ளாதீர்கள்...!! அந்தக் கடிதத்தை இப்படிக் கொடுங்கள்! உமக்கு அந்தச் சிரமமும் வேண்டாம் நானே போடுகிறேன்.... அது பொசுங்கிப் போவதை அப்போதாகிலும் நீங்கள் பயமின்றிப் பார்த்து மகிழுங்கள்! இதோ! போதுமா....!–?'

[நெருப்பிலிடுகின்றான்!]

இளவ: 'அரசே! அன்பு அண்ணா!!'

நெப்: 'பேசுங்கள் இளவரசியாரே.. பேசுங்கள்!' கடிதம் எரிந்துவிட்டது; உமது கணவரும் குற்றவாளிக் கூண்டுக்கு வெளியே நிற்கிறார்...! அவர் பிழைத்தார்!! இப்போதாகிலும் பேசுங்கள்!!

'இளவ: 'அரசே!'

நெப்: 'பேசுங்கள் இளவரசியாரே.

இளவ: 'நாவே யெழவில்லையரசே! உமது மாண்பை வாழ்த்த! அவ்வளவு மகிழ்ச்சியரசே......இந்த அபலைக்கு!!

குணக்குன்றும்—உங்களின் கண்ணியமும்—அன்புள்ளமும்—உலகில் என்றென்றும் நின்று நிலவட்டுமரசே...! புவியாளப் பிறந்த நீர் புகழையும் ஆள்வீராக! உமது கண்ணியத்தை நமது பகைவரும் வாழ்த்தட்டுமரசே!

நெப்: எமது கண்ணியத்தை அல்ல இளவரசியாரே... உமது நீலக்கருவிழிக்கே...அவை உதிர்த்த கண்ணீரை...! அதைத்தான் நாடும் பாராட்டும். பாராட்ட வேண்டும்'' அந்தச்சோகச்சிறுமணிகளும், அவைகளிலிருந்து கிளம்பிய சிறிய நீரருவியுந்தானே...உமது கணவருக்கு உயிரையும்—நான் கருணையோடும் அன்புள்ளத்தோடும் நடந்து கொள்ள எனக்கு மேலுமொரு வாய்ப்பையும்—தேடித்தந்தது! எனவே...அந்த அன்பு ஊற்றுப் பெருக்கெடுக்கும் சிறுமணிகள்நன்றாகபொலிவு பெறட்டும்! அதனால் பெண்ணுலகம் புனிதமடையட்டும்! பெருமை பெறட்டும்! சென்றுவாருங்கள்! உமது கணவரையும் உடன் அழைத்துப் போங்கள்! அதோ அவர்.

## காட்சி 3

இடம்: அரண்மனை;

இருப்பவர்: நெப்போலியன்—நீலக்கருவிழியாள் ஹோட்ஸ்பெல்ட்—குற்றவாளியான அவள் கணவன். மற்றும் வீரர்கள் !!

சூழ்நிலை: குற்றவாளி ஹோட்ஸ்பெல்ட் விடுவிக்கப்படுகிறான்.

புத்துயிர் பெற்ற கவர்னர் தம்பதிகள் நெப்போலியனை நோக்கி நடந்து வருகின்றனர் !

நெப்போலியன்: [மௌனம்]

தம்பதிகள்: [திடீரென்று நெப்போலியன்கால்களில்விழுகின்றனர்!]

நெப்: என்ன இது...? மீண்டும்...? எழுந்திருங்கள் !!

கவர்னர்: என்னை தயவு செய்து மன்னித்து விடுங்களரசே... !

நெப்: அதுதான் முடிந்துபோன சங்கதியாயிற்றே! அதைப் பற்றி மீண்டும் ஏன் பேசுகிறீர்கள்... எழுந்திருங்கள் !!

கவர்னர்: இன்று முதல் ப்ரான்ஸ் எங்கள் அருமைத் தாயகம்—நாங்கள் உங்களின் அன்படிமை !! எங்களை ஏற்றுக் கொள்ளுங்களரசே !!

நெப்: யாருக்கு யார் அடிமை ? எழுந்திருங்கள் ! நாமெல்லோருமே பிரெஞ்சுத் தாயகத்திற்கு அடிமை...! அதனைக் கட்டிக் காப்பதில்தான் நம் வீரமிருக்கிறது...போய் வாருங்கள் !!

இளவ: போய் வருகின்றோமரசே... இல்லை...இல்லை... எமதன்புக் களஞ்சியமே—அருமை அண்ணா ! சென்று வருகின்றோம்! சோகம் தோய்ந்த இந்த அபலை நெஞ்சத்திற்கு ஜீவ ஒளி தந்த பெருந்திறலே! நீர் வாழ்க! நும் கொற்றம் வாழ்க ! வளர்க நும் புகழ் ! ஓங்குக நும் வீரம் ! வெல்க நமது பிரெஞ்சுத் தாயகம் !!

[வணங்கிப் போகின்றார்கள்]

[முற்றும்]

[நடிக்க ஆசிரியர் அனுமதி தேவை]

போன் நெ: 93, 93 A

தந்தி: ''லோட்டஸ்''

வேல்முருகன்

★

எள் எண்ணை

மேலானது

ரிஜிஸ்டர் நெ: 151252

★

எங்கள் சொந்த செக்கில் தயாராகும்
மணம், குணம், நிறம் நிறைந்த
வேல்முருகன் டிரேட்மார்க் எள் எண்ணையை
வாங்கி உபயோகியுங்கள்.

★

கு. வேலாயுதம் செட்டியார் சன்ஸ்
கோவில்பட்டி.

N. SOUNDARAN

# களத்தில் உருண்ட காதலர் பிணங்கள்


மேகலா

நாம் பிறக்கும் போது இவ்உலகில் இறந்தவர்களின் தொகை ஏராளம்! அதேபோல நாம் இறக்கும்போது இவ்உலகில் பிறக்கப் போகின்றவர்களின் தொகையோ- அதைவிட ஏராளம்! வளரும் உலகிலே வாழும் வாய்ப்பு எவருக்குமே சதமானதல்ல! பிறக்கிறோம் — வாழ்வதற்கு!—பிறகு இறப்பதற்கு!! இறக்கிறோம் — இயற்கை நியதியை நிறைவேற்றுவதற்கு! —பிறகு மண்ணோடு மண்ணாய் மறைவதற்கு!! பிறப்பும்—இறப்பும் இயற்கையின் நியதிகள்! அது நிகழாவிட்டால் மனிதன் காட்டுமிராண்டியாவான்!—மனித ஜென்மமே பேச்சறியா ஜடங்களைவிடக் கேவலமானதாகிவிடும் !!

எனவே பிறப்புக்கும்—இறப்புக்குமிடையே மனிதன் எவ்வளவோ செய்கிறான்! அவன் செய்யும் நல்லதைப் பொறுத்து அவன் இறந்தும் உயிர்வாழ்கிறான்! பிறர்புகழ்ந்து போற்ற மட்டுமல்ல; பிறர் போற்றிப் பின்பற்றவும் மனிதன் வழிகாட்ட வேண்டும்—அவனைத்தான் உலகம் வீரன் என்றும் விவேகி என்றும்; தியாகியென்றும்---மேதை என்றும் போற்றுகிறது! சொத்தையும் சுகத்தையும் பறிகொடுப்பது தியாகம்--! உயிரையும் உணர்வையும் பலியிடுவது வீரம்!!

வீரர்களைப் பெற்றெடுப்பது இந்தியத் தாயகத்தின் பிறப்புரிமை! பிறர்போற்ற வாழ்ந்தவர்கள் நாம்-- பிறர்தூற்ற வாழ்ந்தவர்கள் நம்மை அடிமைப்படுத்தியவர்கள்! நெஞ்சைப் பிளந்து நெய்யிட்டுப் பொறித்தாலும், எவருக்குமே பணிந்திடாத மறவர் கூட்டம் நம்கூட்டம்! அடிமைத்தனம் -என்றாலே--பாதையிலே தைக்கும் முள்--நம்மிதயத்திலே தைத்ததைப்போல் துடித்தெழும் அடலேறுகள் பிறந்த மண்ணிலே பிறந்தவர்கள் நாம்! அதனாலேதான் நம் இந்தியப் புரட்சியால் இங்கிலாந்தே நடுநடுங்கியது! மிரண்டோடியதுகூட!!

1857--இவ்விந்தியத் துணைக்கண்டம் வெள்ளையருக்கு மரண சாஸனம் தயாரித்த புனித ஆண்டு! பொங்கும் வீரத்தால் போர்ப்பரணி பாடி--சோப்பும் சீப்பும் விற்கவந்து இறுதியில் இந்நாட்டின் மீது சொந்தமே கொண்டாடிய வெள்ளையனைக் கண்ட இடத்திலே எல்லாம் வெட்டிக் குவித்துப் பரங்கியர் உலகத்தையே பரலோகத்துக்கனுப்பிக் கொண்டிருந்த ஒரே புரட்சி ஆண்டு--1857 !! அந்த ஆண்டிலேதான் இதுவும் நிகழ்ந்தது!



பிரபாவதி-பாஞ்சால மன்னர் பெற்றெடுத்த பச்சைக்கிளி!--பாவையர் அழகுக்கு அவளே பிரதிநிதி! ராஜாசிங்--அவளை வரிக்கும் வாய்ப்பைப்பெற்றுவிட்ட காதல் மன்னன்!--டெல்லியின் புரட்சிப் படைக்கு அவனே தலைவன்! இளவரசன் என்ற பெருஞ்சிறப்பைக்கூட இதற்காகவே தியாகம் செய்து விட்டவன்! இன்னும் ஓரிருமாதத்திலே பிரபாவதிக்கும் தனக்கும் பாஞ்சாலத்திலே நடக்கவிருந்த திருமணத்தைக் கூட இதற்காக உதறித்தள்ளி ஈட்டி முனைகளால் தன் இதயத்தைத் துளைத்துக்கொள்ள கம்பீரமாக வெளிக்கிளம்பி வந்தவன்!

ஆம்! டெல்லியில் புரட்சிப் புயல் வீசிக்கொண்டிருந்த நேரமது:- வெள்ளையரின் பொன்விலங்குச் சாலைகளெல்லாம் பொடியாகி அவன் கொடியே கிழிந்து- கோட்டை மதில்களெல்லாம் தகர்ந்து இருக்குமிடம் தெரியாமல் அவர்கள் எல்லாம் பொசுங்கிக் கொண்டிருந்த நேரமது! உணர்ச்சியால் துடிதுடித்த புரட்சிப்படைகள் டெல்லியை மீண்டும் கைப்பற்றி கடைசி முகலாய முடிமன்னன் பதூர் ஷாவை மீண்டும் அரியணையிலேற்றிவைத்து அவனையே இந்நாட்டின் ஏகசக்ராதிபதி என்று பிரகடனப்படுத்திவிட்டு மேலும் முன்னேறவேண்டிய வாய்ப்புக்காக பயமற்ற இளம் தலைவன் ராஜாசிங்கைத் தேர்ந்தெடுத்து அவனைப் பாஞ்சால மன்னனின் உதவிகோரி அனுப்பிவைத்தது!

இளவரசன் ராஜ சிங் பாஞ்சால மன்னனின் வருங்கால மருமகனாக வேண்டியவன்! அவன் மகள் பிரபாவதிக்கு அவனே இனிக்கும் தேன் கூடு!! எனவேதான் உதவி கிடைக்குமென்ற நம்பிக்கையால் அவனையே தேர்ந்தெடுத்தனுப்பினார்கள் புரட்சித் தலைவர்கள்!

பாஞ்சால மன்னன் உதவி கிட்டியதும் - அதனைக் கொண்டு டெல்லிக்கு வருகிற அத்தனைப் பாதைகளின் பாலங்களையெல்லாம் அவன் முதலில் உடைத்துத் தள்ளி டெல்லிக்கு வேறு வெள்ளையரின் உதவிப் போர்ப் படைகள் உடனே வந்து சேராமல் தடுத்து நிறுத்த வேண்டும்! இதுதான் அவன் வேலை!! இதற்குள் நாட்டின் புரட்சிப் படைகள் மளமளவென்று ஒன்று சேர்ந்துகொண்டால் புரட்சியின் வேகம் வலுத்துவிடும் என்பதே அவர்கள் நம்பிக்கை! இதற்காகத்தான் உதவி கேட்டான் ராஜாசிங்-லாகூர் வரை களைக்கக் களைக்க ஓடோடியும் வந்து! ஆனால் அந்தப் பாஞ்சாலப் பெருங்கிழவனோ 'இல்லை' யென்றவார்த்தையைத்தான் இறுமாப்பாகச் சொல்லிவிட்டான் - காரணம் கிடைத்த மருமகனை இதற்குள் அனுபவமற்ற புரட்சிக் களத்திலே அவன் இழந்துவிடத்துணியாததால்தான்!

ராஜா சிங் வாதாடினான்-பயனற்றுப்போய் விட்டது அந்த வாதம்! துரோகி என்று பெருங்கிழவனைத் திட்டினான்! கிழவனோ உண்மையிலேயே துரோகியாகத் தன்னைத் தயாரித்துக் கொண்டிருந்தான்- வெள்ளையர் தலைவனுக்கு புரட்சியாளர்களின் செயல்களைத் திரட்டி வேகமாகச் சேதியும் அனுப்பிவிட்டான் கிழவன்!

அந்தப்புரத்து ஆரணங்கு பிரபாவதி எவ்வளவோ கெஞ்சிக் கூத்தாடியும் அவள் தந்தை கேட்கவில்லை! காதலனோ மீண்டும் ஆவேசமாகப் புறப்பட்டான்! பிரபாவதியின் ஒளி வீசும் கண்களிலே அவன் போர்க்களம்தான் கண்டான்! போக விடை கேட்கக்கூட அவனுக்கு நேரமில்லை! ஆரணங்கோ அழவில்லை அந்நிலைகண்டு-சீக்கிரம் போங்கள் சிந்திக்கவே நேரமில்லை என்றுதான் அவனைத் துரிதப்படுத்தி அனுப்பினாள்!

தனி யொருவனாய் வெளி வந்தான் ராஜாசிங்! இந்நிலை கண்ட கிழவனின் சேனைத்தலைவன் இரகசியமாக 50 ஆட்களை அவன் துணைக்காக வழியனுப்பிவைத்தான்! நன்றி செலுத்தக்கூட நேரமில்லாமல் அந்த வீரர்களை உடன் அழைத்துக் கொண்டு டெல்லிப் பாதையின் பாலங்களைத் தகர்த்தெறிய ஓடோடியும்வந்தான் ராஜாசிங்! கிழவனின் இரகசியச் சேதி கேட்ட வெள்ளையர் படைகளும் ராஜாசிங்கின் செயலைத் தடுக்க ஓடோடியும் வந்தன! இரண்டும் சந்தித்தன. இரண்டும் போரிட்டன. வெறும் 50 ஆட்களால் 'மிராபந்த்' என்ற அந்த பெரும் பாலத்தை பலமணி நேரம் ஆக்ரமித்துக் கொண்டிருக்க முடிந்ததென்றால் அந்த போரின் வேகம் எத்தகைய உணர்ச்சிகளால் பொங்கி வழிந்து கொண்டிருக்க வேண்டுமென்று நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள்!

பாதையிலே வழிந்தோடிய இரத்த வெள்ளம் பாலத்தின் வழியாக ஆற்றிலே கலந்தது! அந்த ஆற்று நீரிலே அழகான செங்குருதி ஆழமாகத் தோய்ந்தூறிக் கொண்டிருந்தது! வெள்ளையர்கள் பிணத்தின் மேல் நம் வீரர்களின் பிணமும் சாய்ந்தது! இளைஞன் ராஜாசிங்கும் 'சாவின்' இனிமையில் சங்கமமாகிவிட்டான்! அவனை அணைத்துத் தழுவிக் கொண்டிருந்த வேறொரு சடலத்திற்கும் அந்தஇனிமையிலே பங்கு இருந்தது!

இளவரசி பிரபாவதிக்கும் அந்தச் சாவிலேதான் பரிபூரண திருப்தி! தன் கடமையைச் செய்தோமென்ற நெஞ்சுணர்வால் அந்த நேரிழையாளும் வெள்ளையரின் குண்டுகளைத் தாங்கி சாயாமல் சாய்ந்திருந்தாள் தன் காதலன்மேல்! மன்னன் வாக்கு- அவர்களின் திருமணத்தை நிச்சயித்திருந்தது! ஆனால் சூழ்நிலையின் போக்கோ அவர்களின் தியாகச் சாவைத்தான் நிர்ணயித்துக்காட்டி மகிழ்ந்தது !!

ஆம்! புரட்சிப் புயலுக்கு அந்தப் புதுக் காதலர்கள் பலியாகிவிட்டனர் ! காதலனைக் களத்திற்கு அனுப்பிவிட்டு ஆணுடைதரித்து அவளும் அவள்தன் தோழியும் சாக்காடு நோக்கி ஓடி வந்த சேதியை வெள்ளையரின் வாள் முனைகள் பிணங்களைப் புரட்டிப் பார்த்தபோதுதான் அந்தக் கிழவனுக்கு அறிவித்தது !

கிழவனோ கலங்கினான்! காதலர் பிணங்களோ - 'துரோகியே தூர விலகி நில்' என்றுதான் அவனை எச்சரித்தன ! மரணம் அவர்களை மனமாரத் தழுவிக் கொண்டது- புகழோ அந்தத் தியாகச் சாவின் விளிம்பிலே யிருந்து அப்போதுதான் பிறந்து கொண்டிருந்தது ! அன்று பிறந்த அந்தப் புகழ் இன்றும் மணங்கமழுகிறது-இன்னும் உலகம் அழியும் வரை அந்தப்புகழ் மறையாது - இறக்காது ! அத்தகைய இறவாப் புகழுக்குத்தான் மனிதன் தன்னைத்தயாரித்துக் கொள்ளவேண்டும் !! அதற்குத்தான் தியாகம் - வீரம் என்றெல்லாம் பெயர்!!

# கவிதையால்
## உலகாண்ட
# கவிஞர் கோமான்

Shakespeare was an intellectual ocean, whose waves touched all the shores of thought; within which were all the tides and waves of destiny and will; over which swept all the storms of fate, ambition, and revenge; upon which fell the gloom and darkness of despair and death and all the sunlight of content and love, and within which was the inverted sky lit with the eternal stars-an intellectual ocean-towards which all rivers ran, and from which howthe isles and continents of thought receive their dew and rain.

**Colonel R.G. INGERSOLL.**




எண்ணற்ற இலக்கிய ரசிகர்களின் இதயத்தில் உறையும் ஷேக்ஸ்பியரின் முழு உருவம் இதுதான்



எதையும் பகுத்தாராயும்
சிந்தனையாளரான ராபர்ட் இங்கர்சால்

ஷேக்ஸ்பியர் ஓர் அறிவுப் பெருங்கடல்! அந்த ஞானப் பெருங் கடலின் அறிவுக் கதிர் அலைகள், எண்ணப் பெருங்கரையின், எல்லா எல்லைக் கோடுகளையும் தொட்டு மகிழ்ந்திருக்கின்றன! அந்த ஞானப் பெருங்கடலில் இன்பதுன்பப் பருவச் சூறாவளிகளைக் காணலாம். உள்ள உறுதியின் வேக அலைகளைக் காணலாம். விதி—பழி—பாவம்—பேராசை என்ற புயலின் எதிரொலிகள் அதன்மேல் விளையாடி அலுத்துவிட்ட சோக நிகழ்ச்சிகளைக் காணலாம்! இருள் – அஞ்ஞானம் - மரணம் என்ற இரவின் இருட் கதிர்கள் அந்த ஞானப் பெருங்கடலை ஆக்கிரமித்து மகிழ்ந்ததையும் - காதல் - வீரம் - என்ற கவினுறு ஞாயிற்றொளிகள் அதன்மேல் படர்ந்து படர்ந்து பொலிவுற்றதையும்-அழியாத தாரகையும், அணையாத பொன்னிலவும் அதற்குக் கூரைவேய்ந்த எழில் விசும்பாய் வண்ண ஜாலங்கள் காட்டிச் சிரிப்பதையும் காணலாம்!—அத்தகைய ஞானப் பெருங்கடல்தான் ஷேக்ஸ்பியர்! அந்த ஞானப் பெருங்கடலில் தான் எல்லா இலக்கிய நதிகளும் சங்கமமாகின்றன—அந்த ஞானப் பெருங் கடலிலிருந்துதான் எண்ணத் தீவுகளுக்கும், எழில் சொரியும் காவியக் கற்பனைச் சாம்ராஜ்யங்களுக்கும் மழையும் மாரியும் - பனியும் வாடையும் கிடைக்கின்றன!!

—ராபர்ட் - கிரீன் இங்கர்சால்



உலகக் கவிஞர்கள் அனைவருக்குமே வழிகாட்டியாகத்திகழும் ஷேக்ஸ்பியர் இயற்றிய 'சிம்பலின்' என்ற நாடகத்தில் வரும் திருப்பு முனைக் காட்சி இது.

இவரால் தீட்டப்பட்ட வரலாற்று நாடகமான 'கிங் ஹென்றி' யில் வரும் திகைப்பூட்டும் காட்சி இது.





இந்த எழுத்துலக வேந்தரால் தீட்டப்பட்ட மற்றொரு காவியமான 'ஆஸ் யூ லைக் இட்' என்ற நாடகத்தில் வரும் சுவையான காட்சி இது.

இவரால் தீட்டப்பட்ட "ஏ மிட் சம்மர் நைட்ஸ் டிரீம்" என்ற நாடகத்தில் உள்ள ரசமான காதல் காட்சி இது.





இந்தக் கவிதைக் கோமானல் தீட்டப்பட்ட மற்றொரு வரலாற்று நாடகமான 'ஆண்டனி அண்ட் கிளியோபாத்ரா'வில் ஆண்டனியும் அந்த அழகரசியும் சந்திக்கும காட்சி இது.

'டெம்பெஸ்ட்' என்ற புகழ்படைத்த அவருடைய மற்றொரு நாடகத்தில் வரும், விந்தை மனிதன் தோன்றும் காட்சி இது.





உலகில் உள்ள இளைஞர்கள் அனைவருடைய உள்ளத்திலும் உறையும் இன்பக் காவியமான 'ரோமியோ அண்ட் ஜூலியட்டில்' வரும் சோக முடிவுக் காட்சி இது.


அவருடைய மற்றொரு புகழ்மிக்க நாடகமான 'ஹாம்லட்டில்' ஹாம்லட் தன் தந்தையின் ஆவியை சந்திக்கும் காட்சி இது.





→ இந்தக் கவியரசரின் 'ஒத்தல்லோ' நாடகத்தில் தன்னுடைய அழகு மயிலை சந்தேகத்தால் ஒத்தல்லோ கொல்ல வரும் மறக்கமுடியாத காட்சி இது.

இவருடைய மிகச் சிறப்பான நாடகமான 'ஜூலியஸ் சீஸரில்' சீஸரின் ஆவி வந்து புரூட்டஸை மிரட்டும் காட்சி இது.
←







→ கருமியின் வஞ்சத்தை விளக்குவதற்காக இவர் தீட்டிய 'மார்ச்செண்ட் ஆப் வெனீஸ் நாடகத்தில் வரும திருப்பு முனைக் காட்சி இது.

இவருடைய புகழ் வாய்ந்த 'மாக்பத்' நாடகத்தில் திருமதி மாக்பத் தனியாக இருந்து சிந்திக்கும் காட்சி இது.
←




அழகி நர்கீஸ்
அருமை
குமாரனுடன்






## நிழலின் அருமை வெயிலிலேதான் தெரியும்


இந்தப் படங்களிலே காணப்படும் நடனத் தோற்றங்கள் பாரிஸ் நகரத்திலேயே மிகப் பிரசித்திப் பெற்ற 'ஓபாரா' கலைஞர்களுடையது.

ஆனால் நமக்கோ இது பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும் நடனம்போல் காட்சி அளிக்கவில்லை. ஒரு அழகனும், அழகியும் ஏதோ உடற்பயிற்சி செய்வது போன்றுதான் தெரிகின்றது.









நிழலின் அருமை எப்படி வெயிலிலே தான் தெரியுமோ அதேபோன்று இந்த 'ஓபாராவைக் காணும் போதுதான் பூம்புகார் பொற்கொடியான மாதவி முதல் இன்றைய கமலா வரை நம்முடைய கலையரசிகளின் கால்களிலே தொஞ்சும் பரத நாட்டியத்தின் மகிமை தெரியும். அப்படித் தெரிந்து கொண்டால் தான் உலகிற்கே 'பரதம்' அளித்த தமிழன் என்று நாம் தலை நிமிர்ந்து நிற்க இயலும்.



வடநாட்டு
மயக்கு
மோகினி
சந்தியா ராணி

# வடக்கின் நட்சத்திரங்கள்



கவிதா



பிஸ்கான்வல்



தரலா



பிரதிபாலா



நளினிஜெய்வந்த்



ரத்னா



கல்பனா



ஆஷாபாரேக்



நந்தா



வைஜயந்தி



ரச்னா



கவிதா





சித்ரா



ஜமின் ஜலில்


சந்தியாராணி
ஸயிதாகான்
நூதன்
இந்திரா


எமது
தீபாவளி
வாழ்த்துக்கள்
STANDARD
REGD TRADE MARK
STANDARD herald
ஸ்டாண்டர்ட் ஹெரால்ட்
உறுதியான, எழில்மிகுந்த கார்
விநியோகஸ்தர்கள்:
யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) பிரைவேட் லிமிடெட்
சென்னை - உதகை
FDS/SM



# பல நாட்டுக் குழந்தைகளின் பண்புருவங்கள்...

குழந்தைகள் உலகையே கடவுள் உலகாய்க் கருதும் எனக்கு, அவர்களின் உருவும், உள்ளமும், பொய் கூறாமையும், புறங் கூறாமையுமே என்றும் பேரின்பம் வழங்குபவன. அவர்களை அறிவிலும், அன்பிலும் சிறந்த பண்புடையவர்களாக்கினால் நாட்டுக்கே தலைவர்களாகவும் உலகுக்கே நல்லவர்களாகவும் திகழ்வர்.



கனடா



தென் இந்தியா



ருமேனியா



ஸ்விஸர்லாந்து



ஸ்பெயின்



வட இந்தியா




பர்மா



ஹாலண்ட்



இங்கிலாந்து



எகிப்து



பவேரியா




மெக்ஸிகோ



பிரான்ஸ்



ஜப்பான்



காஷ்மீர்



இத்தாலி



பிரிட்டானி



அயர்லாந்து



அமெரிக்கா



ஆஸ்திரேலியா



கொழும்பு



சைனா



ரஷ்யா




ஸ்காட்லாந்து

# காக்கைக்குத் தன்குஞ்சும் பொன்குஞ்சு



திருவாரூர் கே. ஜெயா




நம்முடைய உடலிலே பல உறுப்புக்கள் இருக்கின்றன. பார்ப்பதற்கு அவை எல்லாம் ஒரே உடலிலேதான் பொருந்தியிருப்பதுபோன்று காணப்பட்டாலும் வலது காலிலே அடிபட்டதற்காக இடது கால் அழுவதில்லை. இடது கையிலே அடிபட்டதற்காக வலது கை அழுவதில்லை. ஆனால் வலது கை அடிபட்டாலும்கண் அழுகிறது. இடது காலிலே அடிபட்டாலும் கண் அழுகிறது.

அதே போன்றுதான் நாம் காணுகின்ற குடும்பத்திலும் எத்தனையோ உறவுகள் இருக்கின்றன. அண்ணனுக்கு உடல்நலமில்லை என்றால் தம்பி உண்மையாக அழுவதில்லை. தம்பிக்கு அடிபட்டால் அது அண்ணனை வருத்துவதில்லை. ஆனால் தம்பிக்குக் காய்ச்சல் என்றால் அன்னையின் அன்புள்ளம் அனல்பட்ட மெழுகுபோல உருகுகிறது. அண்ணனுக்குத் தலைவலி என்றால்கூட அந்தக் கண்கண்ட கடவுளின் கண்கள் குளமாகின்றன.

எனவே தான் இந்த உலகம் தாய்ப் பாசத்தைப் பாசங்களுக்கெல்லாம் தலையான பாசமாக வைத்து எண்ணுகிறது. தூங்கிய தமிழர்களைத் தட்டி எழுப்பவந்த புதுமைப் பாவலர் பாரதியாரும், அன்னமூட்டிய தெய்வ மணிக் கரங்கள் ஆணை காட்டின் அனலை விழுங்குவோம் என்று அன்னையின் பெருமைக்கு கட்டியம் கூறுகின்றார்.

தன்னுடைய பிஞ்சு விரல்களால் குழந்தை உழப்பிய கூழ் தாய்க்கு அமுதத்தினும் சுவைக்கும்—அதனுடைய மழலை குழலினும் இனிக்கும் என்பது பகுத்தறிவு படைத்த மனித சமுதாயத்திற்குமட்டும் உரித்தானதல்ல. உலகத்தில் தோன்றிய எந்த உயிரினமும் தான் பெற்ற குழந்தைகளைக் காப்பதில் மனித இனத்திற்குச் சற்றும் பின் வாங்கியவைகள் அல்ல.

எனவே "தான் எங்கேயும் இருக்க முடியாது என்பதற்காகத்தான் கடவுள் தாயைப் படைத்தான்" என்ற இலத்தீன் பழமொழி தோன்றியது. அதனையே நம்முடைய செந்தமிழ்ப் பழமொழியும் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று முன் நிறுத்தி வணங்குகிறது. தாய்க்கு தன்குழந்தைதான் உலகம் காக்கையாக இருந்தாலும் அதற்கு தன் கருட்புக்குஞ்சும் கண்கவரும் தங்கம்தான்.









காக்கைக்தும் தன்குஞ்சு





பொன் குஞ்சு

442. மங்கள சுந்தரி வாசனை புகையிலை
442. மங்கள சுந்தரி நைஸ் புகையிலை
442. மங்கள சுந்தரி பாழை புகையிலை
442. மங்கள சுந்தரி சோப்பு
442. மங்கள சுந்தரி பீடி
442. மங்கள சுந்தரி ஊதுபத்தி
442. மங்கள சுந்தரி வாசனை தைலம்

அ.ப.அப
442

—தயாரிப்பாளர்—

**அ. ப. அ. மஸ்தான்**
**அன் சன்ஸ்**

442. மங்களசுந்தரி ஸ்டோர்,
கடையநல்லூர்.



## ரேடியோ பயிற்சி

---

**நேரிலும் தபாலிலும் குறைந்த காலத்தில் சிறந்த முறையில் கற்கலாம்.**

தொழிற் கல்லூரி
த. பெ. எண். 190.
35-36, வடக்குச்
சித்திரை வீதி
மதுரை - I.

**M. கான்முகமது, B.A.**
A.M.I.S.E., A.M.V.D.E.
(Germany),
M.I.R.E. (U.S.A.), M.I.C.E.
(Radio Engg.)
முதல்வர்.

1. "நமது ரேடியோ" ரேடியோ நுட்ப நூல் விலை. ரூ. 2-25 (தபால் செலவு 75 காசு.)

2. "ரேடியோ செப்பனிட வழிகாட்டி" விலை ரூ. 3-25 M.O. அனுப்புக. (தபால் செலவு 75 காசு)

டிரான்சிஸ்டர் ரேடியோ செய்யவும் செப்பனிடவும் சிறந்த ஸ்தாபனம்.



**Hearty Greetings to Our Patrons & Well-wishers.**

PAINT SALES PAINTING CONTRACTS




**G. D. SEKAR & CO,**

MADRAS-6. [PHONE 86793] BRANCH: PONDY BAZAAR.

CERTIFIED CONTRACTORS, OF JENSON & NICHOLSON (INDIA) LTD.

# தேர்தலும் மனிதத் தன்மையும்

சீ. ரா.

"பதவி ஆசை என்பது எதையும் துணிந்து செய்யக்கூடிய பயங்கர மானது'' என்றான் மேலை நாட்டு அரசியல் மேதை ஹெரால்ட் லாஸ்கி. அந்தப் பொன்மொழிகளுக்கு ஏற்ப பதவி ஆசையைத் தூண்டும் தேர் தல் வரும் போதெல்லாம் மனிதன் தன் பண்பை மறந்துவிடுகிறான். நேற்றுவரை அவனும் நாமும் ஒரே இலையில்தானே உணவு உண்டோம் என்ற பாசத்தைத் துறந்து விடுகிறான். ஒரே வயிற்றில் உதித்த அண்ணனும் தம்பியுமல்லவா நாம் என்ற உறவையும் முறித்துக் கொள்ளுகிறான். அவனுடைய நோக்கமெல்லாம் தேர்தல் வெற்றி ஒன்றிலேயே குறியாக நிற்கிறது. அதற்கு எதிரே தன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற தாயே தடையாக இருந்தால் கூட அவன் அந்த அன்பு தெய்வத்தைக் கூடத் தகர்த்தெறியத் தயங்குவதில்லை.

அதனால் தான் அமைதியே உருவான தமிழகத்திலே கூட தேர்தல் வருகின்றதென்றால் அரசியல் வாதிகளிடம் ஒருவகை குமுறல் ஏற்படுகிறது. இங்கொன்றும் அங்கொன்றுமாக வன்முறைகள் நிகழ்கின்றன. ஜனநாயகத்தில் இன்னும் வளரும் குழந்தையாகவே இருக்கின்ற நம்முடைய நாட்டில் இப்படிப்பட்ட விபத்துக்கள் நடந்தால் அது எப்படிப்பட்ட விபரீதத்தில் கொண்டு விடும் என்பது நம்முடைய தலைவர்களுக்குத் தெரியாததல்ல. இருந்தும் தேர்தல் வெற்றி ஒன்றே அவர்களுடைய கண் முன் நிற்பதால் மாற்றுக் கட்சிக்காரர்கள் கூறுகின்ற நல்லவைகளைக் கூட அல்லவைகள் என்று அவர்கள் தட்டிக் கழித்து விடுகிறார்கள்.

இன்றைய நிலையில் ஏழை மக்கள் வாழ்கின்ற குடிசைப் பகுதியில் குடிநீர் வசதி செய்து தரவேண்டும் என்ற நியாயமான—மனிதத்தன்மை படைத்த, எவரும் மறுக்க முடியாத ஒரு கோரிக்கையைக் கூறினால் கூட அதைக்கூறுபவர் மாற்றுக் கட்சிக் காரராக இருந்தால் கேட்பவருக்கு ஏதோ கழுதை கத்துவது போலத்தான் கேட்கிறது.

ஒருகட்சிக்காரர் "என் இறுதி மூச்சு உள்ளவரை தமிழிற்கு உழைப்பேன். அதை மாய்க்க வரும் தீயசக்திகளை ஒழிப்பேன்" என்று தமிழர்களாகப்பிறந்த ஒவ்வொருவரும் கட்டாயம் செய்ய வேண்டிய இலட்சிய முழக்கத்தை எழுப்பினால்கூட, கட்சி மாறுபாடு இருக்கிறது என்ற ஒரே காரணத்தால் அந்தப் புனித முழக்கம் கூட புலியின் உறுமலாகக் கேட்கிறது.


பொறுப்பு வாய்ந்த தலைவர்களே கூட மாற்றுக் கட்சிக்காரர்களை குரங்குகளுக்கு ஒப்பிடுகினார்கள். "நீங்கள் என்னதான் கரடியாகக் கத்தினாலும் நாங்கள் அசையப் போவதில்லை'' என்று மனிதனை ஆறறிவு படைத்த உயிரினத்தை கேவலம் குரங்கோடும், கரடியோடும் இன்னும் சொல்லப் போனால் காண்டா மிருகத்தோடும் ஒப்பிடுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்களுக்கு ஒன்றே ஒன்றை மட்டும் நாம் நினைவு படுத்த விரும்புகின்றோம். நடக்கின்ற போட்டி உங்களுடைய கொள்கைக்கும் மாற்றுக் கட்சித் தோழரின் கொள்கைக்கும் நடக்கும போட்டியே தவிர உமக்கும் அவருக்கும நடக்கும் போட்டி அல்ல? எனவே இனியாவது தேர்தல் கூட்டங்களில் மாற்றுக் கட்சிக் காரர்களுடைய கொள்கைகளைப் பகுத்தாராயுங்கள். இன்ன இன்ன இடத்தில் மாற்றுக் கட்சிக் காரர்களின் கொள்கைகளிலே நெளிவிருக்கிறது—வளைவிருக்கிறது என்று அவர்களுடைய கொள்கையைக் குறை கூறுங்கள்.


அப்படிக் கூறும்போதுகூட ஒன்றை எப்பொழுதும நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் வாழ்வது "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்'' என்ற பொது மறை தவழும் தமிழ் நாடு. அப்படிப்பட்ட தமிழகத்திலே பிறந்த நீங்கள் இனியாவது கேவலம் ஐந்தே ஐந்து ஆண்டுகளுக்குக் கிடைக்கக் கூடிய பதவிக்காக - மனிதத்தன்மையையே இழந்துவிடாதீர்கள்.


இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருப்பக் காய்கவர்ந் தற்று''


என்ற பொய்யா மொழியை மறந்துவிடாதீர்கள்.





எதிர்கட்சிக்காரர்களின் தேர்தல் சொற்பொழிவைக் கேட்கும் போது.





மாற்றுக் கட்சிக்காரர்களின் கண்களுக்த இப்படிதான் தோன்றும்






# மனிதன் மாறிவிட்டான்

காசியில் இருக்கும் ஒருவனுக்கு கன்னியாதமரியே தெரியாது இருந்த காலம் ஒன்று இருந்தது. ஆனல் இன்றே காசியில் இருக்கும் ஒருவன் கலிபோர்










னிய அழகி ஒருத்தியை காதலிக்கும் அளவிற்கே பரந்து விரிந்து கிடக்கி இந்தப்பாரை, விஞ்ஞானம் குறுக்கிவிட்டது. எனவே நாட்டுக்கு ஒரு பண்பாடு என்பதை இப்படிப் படங்களிலேதான் பார்க்கலாமே தவிர, உண்மை வாழ்க்கையில் காண முடியாது.



# தோல்வி கண்ட வீரர்கள்

### மயிலை சண்முகசுந்தரம்

முன்னுரை:

வாள் வீரர்களமைக்கும் வனப்பு வாய்ந்த சாம்ராஜ்யங்கள், அவர்களுக்குப் பிறகு அல்ல - அவர்கள் காலத்திலேயே சரிந்து போவதை சரிதம் நமக்கு வேடிக்கையாகப் படம் பிடித்துக் காட்டுகிறது!

அகில உலகமும் தனக்கே சொந்தமென்று ஓர்காலத்தில் ஆர்ப்பரித்தவர்கள் எல்லாம், இறுதியில் எட்டடி மண்ணும் தனக்குச் சொந்தமில்லாமல், எவருக்கோ சொந்தமான மண்ணிலே, நொந்த மனத்துடன் உயிர் விடவேண்டியிருந்த துர்ப்பாக்கிய நிலைமைகளைச் சரித்திரம் நமக்குப் பழுதறத் தொகுத்து வைத்திருக்கிறது; அந்தத் தொகுப்பை - நாமொருமுறை பார்த்துவிட்டு - ஹூம்! நாமேன் பார்க்கவேண்டும்? உலகைத் தாங்களே இன்னும்கூட ஆக்கிரமித்துக் கொண்டு, ஆளவேண்டுமென்று பகற்கனவு கண்டுகொண்டிருக்கின்ற சில சர்வாதிகாரிகள் ஒருமுறை பார்த்துவிட்டு-மீண்டும் தங்களின் பாதையை நோக்கிப் புறப்பட்டால், கொஞ்சநஞ்ச மனிதாபிமான நல்லுணர்வுகளாகிலும் அவர்களுக்கு ஏற்படும்! கிடக்கட்டும்! அத்தகையவர்களின் கோணல் புத்திகளுக்குக் காலமும் சூழ்நிலைகளும் நிச்சயம் புத்திபுகட்டத் தவறாது என்பது மட்டும் திண்ணம்!

## 1. மாவீரன் அலெக்ஸாண்டர்

உலகை வட்டியலரங்கமாகவும், கிரீஸை சூதாட்டக்காயாகவும் கொண்டு கீழ்த் திசை நாடுகளின் எல்லைகளை மளமளவென்று அழித்துவந்தான் வெற்றி வீரன் அலெக்ஸாண்டர்! 33 வயதும் நிரம்பாத முன்பே முழு உலகமும் எனக்கே சொந்தமென்றான் ஆர்ப்பரித்தான்; கூச்சலிட்டான் கொக்கரித்தான்! முடிவும் உடனே தெரிந்துவிட்டது! மாஸிடோனியாவிலிருந்து கொண்டு கிரீஸைத் துளைத்தான்—பாரசீகத்தைத் தரைமட்டமாக்கினான் - எகிப்திலே புதிய வம்சாவளியை உண்டாக்கினான் - ஆப்கானிஸ்தானத்திலே வெற்றிக்கொடியை நாட்டினான் - இந்திய எல்லைகளிலே ஜீவ-மரணப் போராட்டம் நடத்தினான்- போரஸை வென்றான் (கி. மு. 362-ல்) மாளவர்களிடம தோற்றோடும் நிலையில் வெற்றி கண்டான்-இன்னும் கூட கீழ்த்திசை நாடுகளிலே செல்ல நினைத்தான்! பொன்னாசையும் பொருளாசையும், புவியாளும் மண்ணாசையும் அவனை உலகின் கீழ்த் கோடிக்கே இழுத்தது. ஆனால் அவனின் தோழர்களோ அவனை மாஸிடோனியாவின் பக்கமாகவே இழுத்தனர்! மண்டியிட்டான் அலெக்சாண்டர் தன் தோழர்களிடம்-அவர்களோ ஓர் அடியும் எடுத்து வைக்க மறுத்துவிட்டனர்! எனவே திரும்பினான்! வழியில் பாபிலோன் அவனைப் பழிவாங்கிவிட்டது! அவனின் உலகாளும் ஆசையை நொடியில் பறித்து அவனையும் கீழே தள்ளிவிட்டது! அகில உலகையும் ஆளத் திட்டம் தீட்டியவன் இறுதியில் மரண மஞ்சத்தில் தன் உயிரை நிர்ணயிக்கலானான்! கொடிய விஷ ஜுரம் அவன் கழுத்தை நெறித்தது! இறுதியில் மாஸிடோனிய சொந்த மண்ணிற்குக்கூடத் தானிறையாகாமல், வெற்றி கொண்ட பாரசீகத்தின் இதய நகரான பாபிலோனிலேயே அவன் பிணம் கல்லறைக்குச் சென்றது! அவனோடு அவன் எண்ணமும், செயலும்கூடத் தோண்டிப் புதைக்கப்பட்டது! அவன் நாடுகள் சிதறிச் சின்னாபின்னப் பட்டது! அழிந்தான் அலெக்ஸாண்டர்! அவன் உலகாளும் எண்ணம் அழிந்தது! போர்க்களத்திலே அவன் புலி-வெற்றி வேந்தன் - ஆனால் சொந்த வாழ்விலேயும், அரசியல் வாழ்விலேயும். அவன் ஓர் உதிர்ந்துபோன சருகு! பழுத்துப் போன இலை! தோற்றுப்போன வெற்றி வீரன்! அவ்வளவுதான் அவன் வாழ்வின் சரிதம்! இதனை உணர வேண்டும் இன்றைய மமதையாளர்கள்!!

## 2. வெற்றிவீரன் சீஸர்!


அலெக்ஸாண்டரைப் போலவே சீஸரும் வெறிபிடித்தவன் - தன்னை ரோமானியரின் கடவுளென்று சொல்லிக்கொண்டவன் - ஆண்டனியின் சொல்வன்மையிற் தவிர்த்து சரித்திர ரீதியாகக் கொடுமைக்காரன்! அதிகார வெறியன்! போர் வெறியன்! ரோமை உலகின் சிகரத்தில் வைப்பதாகச் சொல்லிக்கொண்டு மக்களவைகளையும் அதன் தலைவர்களையும் நிராகரித்தவன் - தன் சர்வாதிகார வெறித்தனத்தால், ஜனநாயக ரோமில் புதிய அரச பரம்பரையைத் தனக்குப் பின்னால் மலரச் செய்துவிட்டவன்! எண்ணிறந்த நாடுகளின் எல்லைகளை அழித்தவன் - பல லட்ச உயிர்களைப் பலியாக்கியவன்! பல நாட்டு அரண்களையும் - உலகின் மாபெரும் நூல்நிலையங்களையும், கிடைத்தற்கரிய அதன் பெரும் அறிவுச்சுவடிகளையும், பொக்கிஷங்களையும் தீக்கிரையாக்கியவன்! கி. மு. 44-ல் சீஸர் என்றாலே - ரோமில் அனைவருமே அஞ்சி நடுங்கினர், சீசர் கடவுள்! அவனின் எடுபிடிகள் தேவர்களாகக் கருதப்பட்டனர்!! பேச்சுச் சுதந்திரம் மறைமுகமாக மறுக்கப்பட்ட நேரம்! இதன் பிறகுதான சதி உருவாகியது! அதனெதிரொலியால் உலகாளும் சித்தாந்தம் பேசியவன் உருண்டுமாளும் துர்ப்பாக்கிய நிலையேற்பட்டது! சீஸர் அழிந்தான்! வெற்றிக்கொடி நாட்டிய ரோமிலே, தன் ஆட்சிக் கொடியைக் கூட நிறுவ முடியாமல் மறைந்து போனான் சீஸர்! அதுமட்டுமல்ல; அவனாட்சியை மக்களால் ஜீரணிக்க முடியவில்லை! அதிலே கலந்திருந்த அளவு கடந்த சர்வாதிகாரத்தை அவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை! உலகை வெல்லும் வலிமை படைத்த சீஸருக்கு, உலகை ஆளும் வலிமையும், திறனுமில்லாது போனது. துர்ப்பாக்கியமல்ல- இயற்கையின் நியதி அதுதான்!! மக்களைக் கொன்று குவிப்பவனுக்கு, உயிரின் மேன்மையும், குடிச்சிறப்பும் தெரியாது. எனவே ஏதோ ஓர் சாபக்கேட்டிலே அவன் தோல்வியுறுகிறான்! அதுதான் போரின் விளைவு! இதைத்தான் உணரவேண்டும்-டாலரும் ரூபிளும்!!

## 3. மாவீரன் நெப்போலியன்

தனியொருவன் தலைவனாகப் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் தங்களின் சொந்த நலன்களையும், எதிர்காலத்தையும் தியாகம் செய்வதைப் போல், தனியொருவன் சர்வாதிகாரியாக - வெற்றிவீரனாக ஆவதற்குப் பல லட்ச உயிர்களைப் பலி பீடத்திலே சாய்த்தவன் நெப்போலியன்! அவனின் சர்வாதிகார வெறி பல்லாயிரக்கணக்கான வீரர்களின் செந்நீரை ரைன் நதியிலே கலக்கியிருக்கிறது! அதுமட்டுமல்ல; பல லட்ச விதவைகளின் கண்ணீரிலே அவன் ஆனந்த நீராடியிருக்கிறான்! கிடைத்த நாட்டிலெல்லாம் பிரான்ஸின் எல்லைக்கோடுகளைக் கிழித்து முன்னேறியவன்-நெப்போலியன்! போரிட்ட களத்திலெல்லாம் பொன்றாத வீரத்தால் எதிரிகளை திணறடித்தவன்! ஸ்பெயின், பிரான்ஸ் இத்தாலி, ஆல்ப்ஸ், ஈஜிப்டு போன்ற நாடுகளிலெல்லாம் அவனின் வீரத் துருப்புக்கள் வேதனையைத் தூவி விளையாடி இருக்கிறது பலகாலம்! எகிப்தின் முப்பட்டைக் கோபுரங்களிலே அவனின் மூவர்ணக் கொடி பறந்திருக்கிறது கம்பீரமாக! அகில ஐரோப்பியாவிலும், அவனுக்கிணை இனி வந்து பிறந்தால் தான் உண்டு என்று பறையறிவித்துக் கொண்டி

USE ALWAYS OUR DELICIOUS & APPETISING

HEALTH GIVING DRINKS.




Prop: S. V. K. RAJAGOPAL

**H. O. Kovilpatti. B. O. Tirunelvelly & Thiruchendur.**

போன் நம்பர் 9. தந்தி 'OIL MILLS'

எங்கள்

"தேவி கடலை எண்ணை"

மேலானது

வாங்கி உபயோகியுங்கள்

**Trade Mark No.** *186721*

தயாரிப்பாளர்

ஸ்ரீ கணபதி ரைஸ் & ஆயில் மில்ஸ்,

புரோப்: N. T. T. கணபதி செட்டியார்,

கோவில்பட்டி.

சவுந்தரன்.

ருந்தது பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்க காலம் எல்லாம். பிரிட்டானிய நாடு அவன் பீரங்கித்தாக்குதலைச் சமாளிக்க எந்த நேரத்திலும் தன்னை ஆயத்தம் செய்துகொண்டு அஞ்சி நடுநடுங்கிக் கொண்டிருந்தது! ரஷ்ய நாட்டுப் பனிப்பாலை வனங்களிலே அவனின் பெரும் படைகள் செல்வதால் ஏற்பட்ட அதிர்ச்சியால் அந்தப் பனி நிலமெல்லாம் களர் நிலமாகக் காட்சியளித்துக்கொண்டிருந்தது! மாஸ்கோ பொன்னகரில் அவனின் பயங்கர பீரங்கிகளின் சத்தத்தைத் தாங்கிக்கொள்ள முடியாமல் வெளியேறிய மக்களின் தொகை பல நூறு லட்சங்களாகும்! அத்தகைய பயங்கர வெற்றி வீரனாகத் திகழ்ந்தவன்தான் நெப்போலியன் ஐரோப்பிய பிரிட்டானிய — ரஷ்ய நாடுகளுக்கெல்லாம்! ஆனால் அத்தகைய வீரனையும் தோல்வியும் மரணமும் எப்படியோ அணைத்துக்கொண்டதே என்பதை நினைக்கும்போது— உலகத்தை ஆளப் போர்க்கருவிகள் மட்டும் எந்தக் காலத்திலும் துணை செய்ததில்லை துணை செய்யவும் முடியாது என்ற உண்மைதான் நமக்குப் புலப்படுகிறது!

பீரங்கிப் படைகளால் உயர்ந்த நெப்போலியனை பிரிட்டானிய நாடு தன் கப்பற்படைகளால் தடுத்து நிறுத்தியது. அதுமட்டுமல்ல ரஷ்ய நாடுகளைத் துளைத்து முன்னேறியவனை மாஸ்கோ பொன்னகரம் மீண்டும் பனிக்காடுகளிலே மண்டியிட்டோடச் செய்தது. பல லட்ச ஈட்டி முனைகள் அவனிதயத்தை நோக்கிப் பாய்ந்து வரத் தொடங்கின! அவனின் துருப்புக்கள் உதிர்ந்த சருகுகளைப் போல் ஓடிவரத் தொடங்கின! இறுதியில் இரஷ்யாவும் — பிரஷ்யாவும் அவனை 1813-ம் ஆண்டிலே லிப்ஸிக் போர்க்களத்திலே கைதியாக்கி எல்பா தீவுக்குத் துரத்திவிட்டன! எந்தக் கரங்களால் பிரான்ஸ் நாட்டின் ஏக சக்ராதிபதி நான்தான் என்று மார் தட்டிக் காட்டினானோ! எந்தக் கரங்களால் பிரான்சு நாட்டின் மன்னர் பரம்பரையினரின் மணிமுடியைத் தானே தூக்கித் தன் தலையில் வைத்துக்கொண்டானோ அதே கரங்களால் உடைந்த கப்பலின் கரடுமுரடான கைப்பிடிகளைத் தள்ளாடித் தள்ளாடிக் கைப்பற்றி எல்பா தீவுக்குப் போரகதியாக சென்றான் நெப்போலியன்! அகில ஐரோப்பாவும் மகிழ்ந்தது அவனின் வீழ்ச்சியைக் கண்டு. ஆனால் அவனோ கோரச் சிரிப்பு சிரித்துவிட்டு மீண்டும் எப்படியோ தப்பியோடி வந்துவிட்டான் பிரான்ஸ் நாட்டிற்கு. 1815-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 1-ம் தேதி பிரான்ஸ் நெப்போலியனை மீண்டும் வரவேற்றது. மீண்டும் படை திரட்டினான் நெப்போலியன். தன் சர்வாதிகாரத்தை நிலைநாட்ட! ஆனால் எண்ணி நூறு நாட்களுக்குள் அவன் சர்வாதிகார ஆட்சியும் எண்ணமும் மீண்டும் சரிந்தன. வாட்டர்லூ-சண்டையிலே அவன் மீண்டும் போர்க்கைதியாக்கப்பட்டு — 'சென்ட் எலினா' என்ற அட்லாண்டிக் தீவுக்கே நிரந்தரக் கைதியாக இழுத்துச் செல்லப்பட்டான். 6 ஆண்டுகளின் பயங்கர வாழ்க்கைக்குப் பிறகு சமாளிக்க முடியாத சூலை நோயால் அந்தத் தீவிலேயே இறுதியில் 1821-ல் மாண்டே போனான் நெப்போலியன்!

நெப்போலியன் ஐரோப்பாவிற்கே ஓர் பயங்கரச் சகாப்தமாகத் திகழ்ந்தவன்— அவன் போக்கிலேயே அன்று உலகம் சென்றிருந்தால் இன்று உலகிலே ஜனநாயகம் — என்ற சொல்லே இருந்திருக்காது! ஆனால் நெப்போலியனின் நேர்மையற்ற எண்ணங்கள் அன்றே தவிடுபொடியாக்கப்பட்டுவிட்டதால் உலகம் மீண்டும் மீண்டது. நெப்போலியனும் தோல்வியை அணைத்துக்கொண்ட வெற்றி வீரனாக மட்டுமே கல்லறைக்குச் சென்று மறைந்தான். எனவே நெறியற்ற போரினால் மட்டுமே உலகைத் தனதாக்கிக் கொள்ள முடியுமென்ற எண்ணம் உலகில் அன்றுமுதல் இன்று வரை எவருக்குமே வெற்றி தேடித் தந்ததில்லை! இந்த உண்மையை இன்று உலகின் பெரிய பெரிய வல்லரசுகள் உணரவேண்டும்! உணராவிட்டால் இந்த நூற்றாண்டில் இட்லருக்கு நேர்ந்த கதிதான் அவர்களுக்கும் நேரிடும்! இதுதான் சரித்திரம் கூறும் உண்மை!

## 4 மாவீரன் இட்லர்!

அடால்ப் இட்லர் உலகின் சிறந்த இனத்தின் தலைவனென்று தன்னைச் சொல்லிக்கொண்டவன் - தன் இனம் தான் உலகாளப் பிறந்த இனம் என்று துணிந்து சொன்னவன்—அதற்காகத்தான் - தான் உலக நாடுகளை ஆக்கிரமிப்பதாகப் பறையறிவித்தவன்— இளைத்தும் - களைத்தும் போயிருந்த ஜெர்மனிக்குப் புத்துயிரூட்டுவதன் மூலம் மளமளவென்று முன்னேறியவன் - உலக நாடுகளை மதியாமல் ஜனநாயகத்தை உதறித்தள்ளி சர்வாதிகார வெறியால் உலகில் எண்ணற்ற கொடுமைகளை விளைத்தவன்— போர் போரென்று துள்ளியெழுந்து உலக நாடுகளையே திணர அடித்த பயங்கரவாதியாக கடைசி வரையில் உலவியழிந்தவன்! யூத இனத்தின் கொடியவைரியாக அவர்களை நாட்டைவிட்டே துரத்தித் துரத்தியடித்தவன்! இறுதியிலே பேராசை - காரணமாக உலகாளும் கொடு நினைப்பின் காரணமாக தன் இனத்தை அரியணையிலேற்றி வைக்க வேண்டுமென்ற வெறிச் செயல் காரணமாக—உலக வல்லரசுகளையே பகைத்துக்கொண்டு உலக நாடுகளின் மீது போர் துவக்கி 1940-ம் ஆண்டின் முடிவுக்குள் போலந்து டென்மார்க், ஹாலந்து, பெல்ஜியம், லக்ஸம்பர்க் பிரான்ஸ் போன்ற பெரு நாடுகளைத் தன் காலடியிலே போட்டு மிதித்துக் காட்டியவன்! இங்கிலாந்தின் பெருநகரங்களின் மீது இடையறாத குண்டுவீச்சுகளை நிகழ்த்தியவன். இறுதியில்தானே அழிவதற்கு உலகின் பல வெற்றி வீரர்களைப் போல் தானும் ரஷ்யாவின் மீது படை கொண்டு சென்றவன்! 1941 ஆம் ஆண்டு முடிவதற்குள் ஹங்கேரி ருமேனியா — பல்கேரியா — யுகோஸ்லாவியா—கிரீஸ்போன்றநாடுகளையும் அடிமை கொண்டு இறுமாந்தான். ஆனால் இறுதியில் ரஷ்யப்போரிலேதான் அவனும் வீழ்ந்தான்! எந்தப் பனிக்காடு நெப்போலியனை ஓட ஓட விரட்டியடித்ததோ அதே பனிக்காடுதான் இட்லரின் இறுமாப்புக்கும் போர் வெறிக்கும் சமாதி கட்டியது! ஆம்—இட்லரால் இரஷ்யப் பனிக்காடுகளை ஊடுருவிச் செல்ல முடியவில்லை! இதுமுதல்தான் வெற்றி வீரனாக இருந்தவன் தோல்வியின் சின்னமாகக் குறைந்துகொண்டேவந்தான் இறுதியில் 1945க்குள் அமெரிக்கா, ரஷ்யா— பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய பெருநாடுகளின் ஒத்துழைப்பால் உடைத்தெறியப்பட்ட கப்பலைப்போல் எங்கேயோ கண் காணா கடல் வெளியிலோ வான வெளியிலோ தூக்கியெறியப்பட்டான் உருத் தெரியாமல்! இறுதியில் அவன் பிணம் கூட கிடைக்கவில்லை! எந்த உலகத்தைத் தானே ஆள வேண்டுமென்று ஆர்ப்பரித்துக் கிளம்பினானோ அதே உலகம்தான் அவனை இறுதியில் ஓர் அனாதைப் பிணமாக ஆக்கிவிட்டது! காலம் அவனுக்குப்பதில் சொல்லிவிட்டது—மின்னலைப் போல் தோன்றினான்— எரிமலையைப் போல் கனல்கக்கினான் — இறுதியில் வால்வெள்ளியைப்போல் உலகில் எங்கேயோ ஓர் மூலையிலே எரிந்து சாம்பலாகி விட்டான்! இதுதான் தோல்வி கண்ட வெற்றி வீரர்களின் சரித்திரம்!

## பின்னுரை:

உலகத்திலேயே இன்று வரைத் தன்னிகரில்லாத வெற்றியைப் பெற்று பெரிய பூபாகத்தை வென்ற செங்கிஸ்கானும் — தான் பெற்ற வெற்றிக்காக விழாக் கொண்டாட மனித தலைகளை வெட்டி வீழ்த்தி முப்பட்டைக் கோபுரங்களைப் போல் அடுக்கி மகிழ்ந்து அதனடியில் விழாக் கொண்டாடிய தாமர்லேனும் கூட காலத்தின் முன்பு இன்று சருகாக உதிர்ந்து போய் விட்டனர்— எனவே உலகை அன்பால் தவிர ஆயுதத்தால் இனி ஆளவேண்டுமென்று எவராவது கனவுகண்டால் அவர்கள் அழிவுப் பாதைக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று அர்த்தம்! இந்த உண்மையை இன்று உலகப் போர் வெறியர்கள் உணரவேண்டும்! டாலர் ரூபிள்—பவுன் — பிராங் — நாணயங்களால் இன்று உலகைப் பிடிக்க ஒரு சிலர் கிளம்பியிருக்கிறார்கள். உலக நாடுகளின் பெருவாரியான எண்ணங்களைக்கூட மதியாமல் அவர்களின்று பேசும் பேச்சு நமக்கு இட்லரையும் நெப்போலியனையும் சீஸரையும் தான் கவனப் படுத்துகிறது! இதற்கொரு முடிவைக்காண அவர்கள் போர்க்களத்தையே மீண்டும் தேடுவார்களேயானால் உலக அமைப்பிலே அவர்கள் நாட்டின் எல்லைக்கோடுகளை எவருமே காண முடியாது என்பதுமட்டும் திண்ணம்! வாழ்க உலக அமைதி! வளர்க அன்புலகம்!!

# இப்படித்தான் இருந்தனரோ
# இப்படித்தான் இயற்றினரோ!

—ஒட்டக்கூத்தரின் "மூவருலா"

"தோகை தொட மஞ்ஞை சூடுண்டு
தோற்றவன் மேல்
வாகை புனைய வளர் கரும்பு."

சரோஜா தேவி





"உள்ளம் பெருகப் பெருக வுலாக்
கொண்டு
கள்ளம் பெருதம் கருநெடுங் கண்."

சாவித்திரி.

"வீட்டி விளைமுழக்க வெங்காலை
தூதுவர்கள்
கோட்டி யிருக்துங் தவி முலையாள்."
இந்திராணி.





"பச்சை மரகதம் பூணிற் பணை
முலைசூழ்
கச்சை நிலமகள் போற் காட்சியாள்."
எம்.என்.ராஜம்.

"பாராண் முலையாலும் பங்கயத்தா
டோளாலும்
வாரா விருப்பு வருவித்தாள்"

தேவிகா.





"கங்கையி னீர் முகந்தோ காவிரியி
னீர் கொணர்ந்தோ
கொங்கை யிணைநீர்க் குட நிரைத்து"

மாதுரி.

"தக்துத் தகாதாளை யெய்து
தரைப்படுத்தப்
புக்துத் தொடை மடக்கிப் போயினள்."

*வனஜா.*





"கொங்கைப் புதுவரவுந் தோளுங்
குறை நிரம்ப
மங்கைப் பருவத்தை வாங்கினள்."

*வத்ஸலா*

# கனவில் வந்த கொடியவன்

ஓவியர் அ. சீனு

தலைவனைப் பிரிந்து காம நோயால் தவித்துக் கொண்டிருந்த அவளுக்கு காமவேளின் தானைத் தலைவனான நிலவும் வந்துவிடவே பாலும் கசந்தது. பஞ்சணையும் நொந்தது. பார்க்குமிடமெல்லாம் தன் காதலனின் வீரத்திரு உருவாகவே தெரிந்ததால் பித்துப் பிடித்தவளைப்போல இருந்த அவள் பாதி இரவிற்குப் பின்தான் சற்று கண் அயர்ந்தாள். ஆனால் இந்தக் கொடியை வாட விட்டுவிட்டு பகையை நாடி ஓடிய அந்தக் கொடியவனோ அந்தக் கொடியன்னளை அப்போதும் விடவில்லை.


பகலிலே நனவிலே வராத அவன் இரவிலே கனவிலே மட்டும் வந்தான். பட்டுப் போன்ற அவளுடைய பருவ மொட்டுக் குழையும் அளவிற்குத் தொட்டணைத்தான். மேகத்தினோடு ஒரு மேகம் சேர்வதுபோல அவளுடைய தேகத்தினோடு இந்த கனவுச் சேர்க்கை நிகழ்ந்தபோது அவளை அறியாமலேயே மார்புகள் விம்மி எழுந்தன. அதனால் யானையின் முகத்தை மறைக்கும் முகப்படாம் போன்று அவளுடைய பருவத்தை மறைத்து நின்ற மேலாடை சரிந்தது. முகத்திலே இன்னதென்று விவரிக்க இயலாத ஒரு வித இன்பரேகை படர்ந்தது.

ஆனால் இந்த இன்பநிலை ஒரு விநாடிதான் நிலைத்தது. மறு விநாடியே அவள் விழித்தாள். நடந்தது யாவும் கனவு என்று உணர்ந்தாள். ஏற்கனவே துவண்டு போயிருந்த அவளை இந்தக் கனவு வேறு வாட்டி எடுத்து விடவே "நனவிலே வராத இந்தக் கொடியவர் கனவிலே வந்து ஏன் என்னை இப்படிப் பிழிந்து எடுக்கிறார்" என்று கண்ணீர் மல்க கசிந்துருகினாள். வள்ளுவருடைய முப்பாலிலே என்றும் அழியாத சொல்லோவியமாகி யிருக்கும்

"நனவினால் நல்காக் கொடியார் கனவினால்
என்எம்மைப் பீழிப் பது"

என்ற குறள்தான் இங்கு கண்கவரும் மூவண்ண அழகோவியமாகி யிருக்கிறது.





1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

2. கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின்.

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

4. வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.


6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்
மனக்கவலை மாற்றல் அரிது. கல்லால்


8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

9. கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.







திருக்குறள்: தஞ்சாவூர் 'புலவர்'


## 1. முதல அதிகாரம்

தொன்றுதொட்டு உலகத்துப் பலநாடுகளும் சூரியனை வழிபட்டு வந்தனவென்று எல்லா நாட்டு வரலாறுகளும் தெரிவிக்கின்றன. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடியினராகிய தமிழ் நாட்டார், உயிரினங்கள் வாழ்வதற்கு முக்கிய காரணமாக அமைந்த சூரியனை வழிபட்டு வந்ததில் வியப்பொன்றுமில்லை. உயிரினங்கள் வாழ்வதற்குச் சூரியன் இன்றியமையாததுபோல் நல்லறிவு பெறுவதற்குச் சான்றோர்கள் இன்றியமையாதவர்கள். எழுத்துக்களுக்கெல்லாம் 'அ' என்ற எழுத்து முதன்மையாக இருப்பதுபோல் மக்களுக்கெல்லாம் முதன்மையாகப் போற்றப்படுபவர்கள் சான்றோர்களே!

அவர்கள் இயற்கை அறிவும், நூலறிவும், உலகியல் அறிவும் ஒருசேரப் பெற்றவர்கள். உயிர்களின் உணர்ச்சி காரணமாகக் 'கண்', கொலை செய்தல், கொள்ளையடித்தல், சூதாட்டம் முதலியவைகளைப் பார்ப்பதையும், 'காது' கேட்கத்தகாத இழிஒலிகளை (மொழிகளை) கேட்பதையும், 'மூக்கு' அழிவடைந்த பொருள்களின் இழிந்த மணத்தை நுகர்வதையும், 'நாக்கு' மது முதலியவற்றைச் சுவைப்பதையும், 'உடல்' காமக் களியாட்டங்களில் ஈடுபடுவதையும் தீமைகள் என்று சான்றோர்கள் அறிவுரைகள் கூறுவார்கள்.

அத்தகைய தீமைகளில் கண், காது, மூக்கு, நாக்கு, உடல், முதலிய ஐம்பொறிகளும் ஈடுபடாமல் தடுத்து நல்வழிகளிற் செல்லும்படி செய்யும் முறைகளைச் சான்றோர்கள் நன்கு அறிவார்கள்.

தீயவர்களோடு சேர்ந்து தீயவர்களாகி அரசர்களால் தண்டிக்கப்படும் குற்றங்களைச் செய்தவர்களையும் சான்றோர்கள் திருத்தி நல்ல மக்களாகச் செய்வார்கள். சான்றோர்களைச் சேர்ந்தவர்களுக்கு அதுபோன்ற நிலைமைகள் ஏற்படுவதால், மக்கள் சான்றோரைச் சேர்ந்தவர்களையும் நன்கு மதித்து அறிவுரை கேட்கின்றனர். அரசர்களும் அத்தகையோரை வரவேற்றுச் சம இருக்கை கொடுத்து மதிப்பளித்துச் சிறப்பும் செய்கின்றனர். திருவள்ளுவர், புத்தர், காந்தி அடிகள், இயேசு கிறிஸ்து, சாக்ரட்டீஸ் போன்றவர்கள் சான்றோர்கள். அவர்கள் கா[illegible]து [illegible]ன்ற நல்வழிகளைப் பின்பற்றி வாழ வலியுறுத்துவதே திருக்குறள் முதல் அதிகாரத்தின் முக்கிய கருத்தாகும்.







1. வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று.

2. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

3. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

4. ஏரின் உழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

5. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை.

6. விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது.


7. நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்.


8. சிறப்பொடு பூசனை செல்லாது: வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

9. தானந் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

10 நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.







திருக்குறள் ;


## 2. வான் சிறப்பு


இந்த உலகில் மழை பெய்வதினால் எங்கும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றது, நீர் நிலைகள் நிரம்பி வழி கின்றன. தென்னை மரங்கள் செழிக்கின்றன. வாழை மரங்கள் குலைநிறைந்த தார்களைக் கொண்டிருக்கின்றன. மாமரங்கள் காய்த்துக் குலுங்குகின்றன. பலா மரங் களில் பெரும் பழங்கள் தொங்குகின்றன. நீர் நிறைந்த வயலை உழவன் உழுகின்றான். மாடும் ஆடும் மகிழ்வோடு மேய்கின்றன. மாடப் புறாக்கள் கொஞ்சிக் குலவுகின்றன. மான்கள் கவலையின்றிப் படுத்திருக்கின்றன. மயில்கள் ஆடுகின்றன. முயல்கள் துள்ளுகின்றன. அணில்களோ எல்லா மரங்களும் காய்த்திருப்பதால் எந்த மரத்தில் ஏறு வது? என்ற ஆலோசனையில் ஆழ்ந்துவிட்டன.

கடலில் சங்கும் முத்தும் நிறைய உண்டாகின்றன. உயிரினங்கள் எல்லாம் உல்லாசத்தில் இருக்கப் பயிரினங் கள் எல்லாம் பச்சைப் பசேலென்று பளபளக்கின்றன. இவ்வாறு எங்கும் இன்பத்தை உண்டாக்குவது மழை. அந்த மழையில்லை என்றால் பசுந்தரை கருகி வெறுந் தரையாகும். பசுமரங்கள் காய்ந்து பட்ட மரங் களாகும். நீர்நிலை வற்றி நிலம் தெரியும். ஆடும் மாடும் இரையின்றிச் செத்த எலும்புக் கூடுகள் எங்கும் கிடக் கும். ஊற்று நீர் வற்றி, உலர்ந்த கிணற்றைப் பார்த்துப் பார்த்துப் பாவையர் புலம்புவர். கஞ்சி இன்றிக் கவலை மிகுந்த உழவன் வீட்டில் கலப்பைகள் தூங்கும். நன்றாய் வாழ்ந்து என்றும் சுகமாய் உலவிய குடும்பம் தெருவில் அலையும். பச்சைக் குழந்தைகள் பசியால் துடிக்கும். பிச்சைக்காரரைப் பேணுபவர் இல்லை. வந்தவர் யாரை யும் வரவேற்பதற்கு வீட்டில் இருப்பவர் விரைவது இல்லை. நீர்வளம் மிகுந்த நெடுங்கடல்கூட நீர்வளம் குறைந்து வற்றிப்போகும்.

இவ்வாறு மழை பெய்வதால் நன்மையும் பெய்யா விடில் தீமையும் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட மழை யின் சிறப்பைப்பற்றித் திருவள்ளுவர் வான்சிறப்பு என்ற அதிகாரத்தில் விளக்கமாகக் கூறுகின்றார்.







1. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
   வேண்டும் பனுவல் துணிவு.

2. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
   இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

3. இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டார்
   பெருமை பிறங்கிற்று உலகு.

4. உரன்என்னும் தோட்டியான் ஓர்ஐந்தும் காப்பான்
   வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து.

5. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்
   இந்திரனே சாலுங் கரி,

6. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
   செயற்கரிய செய்கலா தார்.

7. சுவைஒளி ஊறுஓசை நாற்றமென் றைந்தின்
   வகை தெரிவான் கட்டே உலகு.

8. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
   மறைமொழி காட்டி விடும்.

9. குணம் என்னும் குன்றேறி நின்றார் வெகுளி
   கணமேயும் காத்தல் அரிது.

10. அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
    செந்தண்மை பூண்டொழுக லான்.








## 3. நீத்தார் பெருமை

இன்பமும் துன்பமும் மனஉணர்வேயாகும். கண், காது, மூக்கு, நாக்கு, உடல் என்ற ஐம்பொறிகளின் உணர்வுகளே மனஉணர்வாக இருக்கின்றன. ஆகவே தீயன காணல், தீயன கேட்டல், தீயன சுவைத்தல், தீயன நுகர்தல், தீய உடலுணர்வு கொள்ளல் என்பவற்றைக் கட்டுப்படுத்துவதன் மூலம் மன உணர்வைக் கட்டுப்படுத்தி அமைதியாக வாழமுடியும். இதை உணர்ந்த சான்றோர்கள் அங்குசத்தால் யானையை அடக்குவது போல் அறிவால் ஐம்பொறிகளையும் தீயவழிகளிற் செல்லாது தடுத்துத் தூய வாழ்க்கை வாழ்ந்தனர். அவ்வாறு அல்லன நீத்தார், நீத்தார் என்றே அழைக்கப் பெற்றனர்.

இவ்வுலகில் முதலில் கல்தோன்றிய பின்னரே மண் தோன்றி நிலம் உண்டாயிற்று என்ற வியப்புக்குரிய விஞ்ஞான உண்மைகளைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சர்வ சாதாரணமாக நூல்களில் எழுதிச் சென்ற அந்த நீத்தார்களின் பெருமைகளை எண்ணுதல் 'இவ்வுலகில் இறந்தாரை எண்ணிக் கொண்டற்று' என்று வள்ளுவப் பெருந்தகையார் வாயாரப் புகழ்கின்றார்.

''நீங்கள் நீத்தாரின் பெருமையைக் காணவேண்டுமென்றால் அரசர்க்காசனை பேரரசனும் அவர்களை வணங்கிச் சரியாசனம் கொடுத்து அமரும் பெருங்காட்சி ஒன்றைப் பாருங்கள், அது ஒன்றே அவர்களின் பெருமைக்குச் சான்றாகும்'' என்று கூறுகின்ற வள்ளுவப் பெருந்தகையார், ''குணம் நிறைந்த அப்பெரியோர்களின் கோபத்தை ஒருகணம்கூடத் தாங்கமுடியாது என்று தெரிந்திருந்தும் இவ்வுலகத்தவரும் உயிரினங்களும் அவர்களைச் சுற்றிக்கொண்டிருப்பது வியப்பா யிருக்கிறதே! ஓகோ! அவர்கள் அறவோர்! எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு நடப்பவர்கள்! அதுதான் காரணமா? என்று வியக்கின்றார்,


அத்தகு பெரியோர்களின் பெருமைகளை எடுத்துச் சொல்வதே நூல்களின் தலையாய கடமையாகும் என்று உரைக்கின்ற வள்ளுவரே தம் நூலின் முதலதிகாரங்களில் சான்றோர்களின் பெருமைகளைக் கூறுதல் சால்புடையதாக இருக்கிறது.







தீபாவளி வெளியீடு!
பிளாஸா
பாரத்
மஹாலட்சுமி
மற்றும்
தென்னாடெங்கும்
தேவர் பிலிம்ஸ்
தாய்சொல்லைத்
தட்டாதே
டைரக்ஷன் M.A. திருமுகம்
கதை-வசனம்: ஆரூர் தாஸ்
பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
சங்கீதம்: K.V. மஹாதேவன்
கேமரா C.V. மூர்த்தி
ஆர்ட் C. ராகவன்
ஸ்டூடியோ
விஜயா & வாஹினி
தயாரிப்பு
சாண்டோ M.M.A. சின்னப்பாதேவர்
Elegant




# சரித்திரம் சொல்லும் சித்திரங்கள்

ஓவியன் அ. பானு (பானுசகோதரர்கள்)

மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கு, அவன் இதுவரை எப்படி எப்படி எல்லாம் வளர்ந்து வந்துள்ளான் என்பதை விளக்கும் வரலாறு இன்றியமையாதது. அந்த வரலாற்றுத் தொகுதிகளிலும் இங்கே ஓவியமாகி இருப்பவை மனித சமுதாயத்தின் வீரத்தையும், மானத்தையும் விளக்க வல்ல மாண்புமிக்கவைகளாகும்.

உலக சரித்திரம் ஒன்று வரையப்பட்டால் அதிலே பொன் எழுத்துக்களிலே பொறித்து வைர மணிகளைக்கொண்டு கோடிட வேண்டிய அளவிற்கு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த சித்திரங்களுக்கு நம்மைப்போல பேசும் வாயில்லை தான். இருந்தும் இவற்றைப் பார்க்கும்போதே பழைய கால எண்ணங்கள் எல்லாம் மீண்டும் நம் நினைவிலே ஒருமுறை மின்னி மறைகின்றன. அந்த வீரக் காவியங்களை நினைக்கும்போது கோழையும் வீரனாகிறான். தான்கொண்ட கொள்கைக்காக எதையும் செய்யத் துடிக்கிறான்.

ஆயிரம் பேச்சாளர்கள் சேர்ந்து சாதிக்க முடியாதவைகளைக்கூட இந்த பேசும் சித்திரங்கள் அரை நொடியில் சாதித்துவிடும். எனவேதான் பண்டைய பெருமையை விளக்கிடும் இந்தப் பண்பாட்டுச் சித்திரங்களை உங்களுடைய கண்களுக்கு விருந்தாக்குகின்றோம்.



## தீயில் குளித்த சித்தூர் ராணிகள்

உலகத்தில் 'வீரன்' என்ற பட்டத்தை எளிதில் பெற்றுவிடலாம். ஆனால் தியாகி என்ற பட்டத்தை எளிதில் பெற இயலாது. ஏன் என்றால் வீரம் என்பது உடல் வலிமையில் இருந்து பிறப்பது. ஆனால் தியாகமோ உள்ள வலிமையில் இருந்து பிறப்பது. அப்படிப்பட்ட தியாகத்திலும் தானே தனக்குத் தீவைத்துக்கொண்டு தாய் நாட்டின் மானத்தைக் காப்பது என்பது சித்தூர் ராணிகளைப் போன்ற கவரிமான் பரம்பரையினருக்கே உரியது.

பகைவர்களுடைய கரங்களில் அடிமைகளாகச் சிக்குவதைவிட அக்கினிக்கு இரையாகிவிடுவதே தம் கற்பைக் காக்கும் சிறந்த வழி என்ற உண்மையை உணர்ந்த அந்த மாதர் திலகங்கள் எப்போது கோட்டை சரிகிறதோ அப்போதெல்லாம் இவ்வாறு கூண்டோடு தீக்குளித்து மாண்டார்கள்.

### கலிங்கம் கொண்டவனைக் காணக் கடிதம் கொண்டுவந்தவர்கள்


‘சோழ வளநாடு சோறுடைத்து’ என்றுதான் புலவர்கள் பாடியிருந்தாலும், அங்கு கங்கையிலேயே தன் கரிகளுக்கு நீராட்டிய கரிகாற் பெருவளத்தானும், யாருக்கும் வளையாத வணங்கா முடியனான கிள்ளிவளவனும் போன்ற, பெரு வீரர்களும் தோன்றாமல் இல்லை. அப்படிப்பட்ட வீரப் பரம்பரைக்கு மேலும் விளக்கேற்றி வைக்க வந்தவன்தான் இந்தக் குலோத்துங்கன். வடக்கே தான் புகழ்க்கொடி நாட்டியது போல தெற்கே புலிக் கொடி நாட்டியிருந்த இந்த மாமன்னனுக்கு ஆறாவது விக்கிரமாதித்தனே தன் தூதுவர்களை அனுப்பி நட்புறவு ஒப்பந்தம் செய்து கொண்டான் என்றால் இவனுடைய மெய்க் கீர்த்திகளைப்பற்றி நாம் வேறு என்ன சொல்லவேண்டும். விக்கிரமாதித்தனுடைய கடிதம் கொண்டு வந்தவர்கள் கலிங்கம் கொண்டவனை குலோத்துங்கனைச் சந்திக்கும் காட்சி இது.



*

### பாரசீகத்துத் தூதுவர்கள்

இடைக்காலத்தில் தக்காணத்தை ஆண்ட அடல் ஏறான இந்த இரண்டாம் புலிகேசியினுடைய தோள் வலியும், படைச் சிறப்பும் பாரசீகம் வரையில் விரிந்து பரந்து பரவிக் கிடந்திருக்கிறது. அதனால்தான் பாரசீகத்தை ஆண்ட இரண்டாம் குஸ்ரூ தன் தூதுவர்களிடம் விலையுயர்ந்த முத்தும் மணியும் அனுப்பி இந்தப் பன்றிக் கொடியோனுடன் நட்புறவு ஒப்பந்தம் செய்துகொண்டான். இந்தியாவில் மட்டுமன்றி ஆசியாமைனர் வரையிலும் புகழ் நிறுத்தி வாழ்ந்த இந்தப் புலிகேசி தன்னாடு தேடி வந்த பர்சிய தூதுவர்களை தன் தலைநகரான பாதாமியில் வரவேற்கும் சரித்திரம் பேசும் காட்சி இது. அழியாத ஓவியமான அஜந்தா குகைகளில் தீட்டப்பட்ட இந்த ஓவியம்தான் இங்கு மீண்டும் புத்துயிர் பெற்று, புழுதி படிந்துபோன சரித்திர ஏடுகளை மீண்டும் ஒருமுறை நம் மனக்கண்களுக்கு முன்னே திருப்பிக் காட்டுகின்றது.





## பீரங்கி நிர்ணயித்த வரலாறு


முகலாய பரம்பரையை இந்தியாவில் தோற்றுவித்த பாபரை டில்லியை ஆண்ட இப்ராஹிம் லோடி எதிர்த்தபோது அவனுடைய யானைக் கடலிலே பாபருடைய சின்னஞ்சிறு படை சிக்கிக்கொண்டு தத்தளிக்கப் போகிறது என்றுதான் எல்லாரும் எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆனால் கருங்கடலே பொங்கி வருவது போன்று வந்த அந்த யானைப் படையை பாபர் தன்னுடைய பீரங்கிகளால் எளிதில் சிதற அடித்துவிட்டார். ஏன் என்றால் அதுவரை பீரங்கிகள் இந்தியர்களுக்குப் பழக்கமில்லாத ஒரு ஆயுதம். இந்தப் புது ஆயுதத்தை பாபர் திறமையாகப் பயன்படுத்தவே, அஞ்சாத நெஞ்சனான புருஷோத்தமன் எப்படி அலெக்ஸாண்டரின் நீண்ட ஈட்டிகளுக்குத் தோற்றுப் போனானோ அதே போன்று பெருவீரனான இப்ராஹிம் லோடியும் பாபரின் பீரங்கித் தாக்குதல்களின் முன் நிலைகுலைந்து போனான். இந்திய வரலாற்றையே மாற்றி அமைத்த முதலாவது பானிப்பட் போர்க்களம் தான் இங்கு இவ்வளவு இயற்கையாக சித்தரிக்கப்பட்டு நம் சிந்தையை சென்றகால நிகழ்ச்சிகளின் மீது திருப்புகிறது.

*

## சிந்து வெளியில் புதிய இனம்

கிருத்து பிறப்பதற்கு 3500 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த இந்தச் செயல் இந்திய வரலாற்றில் மிக மிக இன்றியமையாத ஒரு திருப்பமாகும். மத்திய ஆசியாவில் இருந்துவந்த நல்ல உயரமும், சிவந்த நிறமும், எடுப்பான மூக்கும், எதையும் சாதிக்கும் மூர்க்கமான உடற்கட்டும் படைத்த ஒரு இனத்தார் ஏற்கனவே இங்கு நாடு நகரங்களை அமைத்துக்கொண்டு வாழ்ந்த திராவிடர்களை தம் தோள்வலியால் ஊடுருவிக் கொண்டு நுழைந்தனர். இவ்வாறு நுழைந்தவர்களுக்கும், இங்கு ஏற்கனவே இருந்தவர்களுக்கும் ஏற்பட்ட கலப்புத்தான் இன்றைய இந்தியப் பண்பாடு. தங்களுடைய ஆடு மாடுகளுக்கு மேய்ச்சல் நிலம் தேடித் திரிந்த இவர்கள் சிந்து வெளியிலே முள்ளிலும் புதரிலும் பதுங்கிப் பதுங்கி முன்னேறும் இந்தக் காட்சியைக் காணும்போது கடந்த கால இந்திய சரித்திரம் முழுவதுமே ஒரு கனவு போல நம் மனத்திரையிலே நிழலிட்டு மறைகிறது.





### நமக்கு வரலாறு தந்த சீன யாத்ரீகர்

இந்தியர்கள் ‘அடக்கம் அமரருள் உய்க்கும்’ என்ற தத்துவத்தின் காரணமாக தம் நாட்டின் பொற் காலங்களைக்கூட வரலாற்றில் பொறித்து வைக்கத் தவறிவிட்டனர். இந்தியர்கள் விட்ட இந்தப் பணியை சீனத்தில் இருந்து வந்த பா-ஹீ-யான் செய்து முடித்தார். தான் வழிபடும் புத்தபிரான் பிறந்த புனித நாடான இந்தியாவிற்கு யாத்திரை வந்த இவர் இங்கு தங்கி வாழ்ந்த 15 ஆண்டுகளிலும் தான் கண்டதையும் கேட்டதையும் மிக நுட்பமாக எழுதி வைத்துள்ளார். பழங்கால இந்திய வரலாறு என்ற இருட்குகையில் தடுமாறும் ஆராய்ச்சியாளர்களுக்கு இந்த பா-ஹீ-யானின் குறிப்பேடுகள்தான் கிடைத்தற்கரிய ஒளி விளக்குகளாகத் திகழ்கின்றன. அப்படிப்பட்ட இந்த நல்லறிஞர் மீண்டும் சீனத்திற்கு எண்ணற்ற புத்தமத நூல்களுடனும், புத்தருடைய படிமங்களுடனும் திரும்பியபோது அவருக்கு கொடுக்கப்பட்ட ராஜ வரவேற்புக் காட்சி இது.

*


### புலியையே வென்ற புகழ் மறவன்

புலிகேசி வீரத்தில் புவி முழுதும் தன் புகழ் பரப்பிய திண்தோள் வேந்தனாக இருந்தாலும், தமிழகம்மட்டும் அவனுக்குப் பணிய மறுத்தது. காஞ்சி நகரத்துப் பல்லவர்கள் அவனுக்கு ஓயாத தொல்லை கொடுக்கும் பெரிய தலைவலியாக இருந்து வந்தனர். புலிகேசி வடநாட்டு அடல் ஏறான ஹர்ஷவர்த்தனனையே நர்மதை ஆற்றங்கரையில் புறமுதுகு காட்டி ஓடச் செய்த போரில் தன் பெயருக்கு ஏற்பவே புலியாக இருந்தும், கடல் மல்லைத் துறைமுகத்து கற்களில் எல்லாம் கலை எழிலை வடித்த மகேந்திர வர்மனின் மகனான மாமல்லனுக்கும், அவனுடைய தானைத்தளபதி பரஞ்சோதிக்கும் தோற்றுப் போனான். அதனால் யாராலும் வளைக்க முடியாத வாதாபியும் தீப்பற்றி எரிந்தது. இந்திய வரலாற்றிலே இடம்பெற்ற திருப்புமுனைக் கட்டங்களில் ஒன்றான இந்த வாதாபிப் போர்தான் இங்கு நேரில் காண்பது போன்ற எழிலோடு தீட்டப்பட்டிருக்கிறது.



## கேடயத்தைச் சோதிக்கும் விநோதம்

பண்டைய இரேக்கம் வீரத்தின் பிறப்பிடம். அந்த வீரத்தின் விளைநிலத்திலே பிறந்தவர்கள் பயன்படுத்திய வலிமையான எஃகுக் கேடயங்கள் இவை. பெரும்பாலும் அக்காலப் போர்கள் கோட்டை முற்றுகையாகவே இருந்ததால், பாதி ஆள் உயரத்திற்கு வளர்ந்திருந்த இந்த கேடயத்தில் மறைந்துகொண்டுதான் கோட்டை மதிலில் இருந்து அம்பு எய்யும் பகைவர்களுக்குத் தப்பி கோட்டை மதிலை அடையவேண்டும். எனவேதான் உலகை வெல்லப் புறப்பட்ட அலெக்ஸாண்டர் இந்தக் கேடயத்தை மற்ற எல்லா படைக்கருவிகளிலும் மிக முக்கியமானதாகக் கருதினான். கொல்லன் உலையில் இருந்து வந்த புத்தம் புதிய கேடயங்களை இவ்வாறு அடுக்கி, அதன்மீது வலிமையான போர்க்களத் தேர் ஒன்றை வேகமாக ஏற்றித்தான் அலெக்ஸாண்டரின் தளபதிகள் அதன் வலிமையைச் சோதிப்பார்களாம் பண்டைய கிரேக்கத்தின் வீரத்தையும், மதி நுட்பத்தையும், விளக்கும் சரித்திரக் காட்சி இது.




*

## உடன் பிறந்தவனையே கொன்ற ஜாலக்காரி

பெண்ணைப் பேதை என்பார்கள். ஆனால் இந்தக் கோதையோ பேதையாக இல்லாது ஆண்களுக்குப் போதையாக இருந்திருக்கிறாள். உலகை வெல்லப் புறப்பட்ட 'ஆண்டவனின் அவதாரமான' சீசரில் இருந்து அவளுடைய அழகுக்காக அகிலம் புகழும் தன் ரோமப் பேரரசையே துறந்த ஆண்டனி வரையில் இவள் காலால் இட்ட வேலையை தலையால் செய்து முடிக்கும் காதல் அடிமைகளாகக் கிடந்தனர். சாகசத்திற்கும், சதிகளுக்கும் பெயர்போன இவள் தலையிலே பாம்புபோன்ற முடிதான் இருந்தது. அதற்கு ஏற்ப இவளும் தன் வாழ்நாள் முழுவதும் படம் எடுத்து ஆடும் பாம்பாகவே வாழ்ந்தாள்.

படம் எடுத்து ஆடும் பாம்பு எப்படி அழகாக இருக்கிறதோ அதேபோன்று இவளும் பார்ப்பதற்கு அழகாகத் தான் இருந்தாள். ஆனால் பழகுவதிலோ இவள் பாம்பினும் கொடிய விஷமாக இருந்தாள். இவளுடைய மூச்சுக் காற்று பட்டே அழிந்துபோன பரிதாபத்திற்குரியவர்கள் ஏராளம். ஏராளம் சிறுத்தையை வளர்த்த இந்த சிங்காரி, தனக்கு சிங்காதனம் நிலைப்பதற்காகத் தன் உடன்பிறந்தவனுக்கே விஷம் கொடுத்துக் கொன்ற ஜாலக்காரி, எகிப்திய வரலாற்றில் மிக இன்றியமையாத இக் காட்சிதான் இங்கு பேசாத படமாக நின்று நம் எண்ணத்தைப் பழங்கால உலக வரலாற்றில் மிக வேகமாக திருப்பி விடுகிறது.






## மானம் காத்த மதியூகி

கிருத்து பிறப்பதற்கு 606 ஆண்டுகளுக்கு முன் நயினிவை ஆண்ட சித்திய அரசன் தமிழர்களைப்போலவே மானம் காக்கும் மாவீரனாக இருந்தான். இவன் தன்னை எதிர்த்த சைரகஸை மூன்று ஆண்டுகள் தொடர்ந்து எதிர்த்தும் இறுதியில் தோல்வியே கிட்டியதால், மாற்றார் படை தன் மாளிகையில் புகு முன்னரே தன்னுடைய அன்பு மனைவியர், ஆசைக் கிழத்தியர், எதிர்கால வாரிசுகளான இளம் குமாரர்கள் ஆகிய அத்தனை பேர்களுடனும் தன் சிம்மாசனத்தில் அமர்ந்தவாறே தானே தன் கையால் தீ வைத்துக் கொண்டு எரிந்து போனான். அடிமையாக வாழ்வதை விட சுதந்திரமாகச் சாவதையே பெரிதென எண்ணிய இந்த மதியூகி வரலாற்றிலே பொறித்து விட்டுப் போன அந்த சோக நிகழ்ச்சிதான் இங்கு இவ்வாறு நம் கருத்தைக் கவர்ந்து பழங்கால சித்தியர்களின் உயர்ந்த பணை எண்ணி எண்ணி வியக்கச் செய்கின்றது.

## கணவனைக் கடிந்த காரிகை

எரியும் மாளிகையில் கரத்திலே கட்டாரியுடன் நிற்கிறாளே அந்த மாதர் திலகம்தான் கார்த்தேஜ் நாட்டின் அரசி. ரோமர்கள் படை எடுத்தபோது கார்த்தேஜின் அரசனான ஹாஸ்ருபால் மக்களைக் காக்கவேண்டிய தன் கடமையை மறந்து ரோமானிய தளபதி சிபியோவிடம் உயிர்ப்பிச்சை வேண்டி நின்றான். ஆனால் இதை மாளிகை உப்பரிகையில் இருந்து கண்ட அவனுடைய மனைவியோ "சீ நீயும் ஒரு ஆண் பிள்ளையா? கோழையான உனக்கும் ஒரு மகுடமா? துரோகியான உனக்கும் ஒரு சிம்மாசனமா?' என்று ஏசினாள். பின்னர் தன் கணவன் அடிமையானாலும்தான் மட்டும் சுதந்திரப் பறவையாகவே சாவதற்கு ஏதோ பூம்பொழிலுக்குள் நுழைவது போல தீ சூழ்ந்த அந்த மாளிகைக்குள் நுழைந்தாள். பின்னால் ரோமானியர்களுக்கு அவள் அல்ல அவளுடைய பிணம் கூடக் கிடைக்கவில்லை.



புத்தொளி பூத்துக் குலுங்க

எங்கள்

மனமார்ந்த

# தீபாவளி வாழ்த்துக்கள்



# கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி துணிகள்

சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட், சென்னை-8.

விற்பனை நிலையங்கள் இந்தியா பூராவும் உண்டு

# சித்திரம் பேசுகிறதடி!




காளை வயசு கட்டான சைசு
களங்கமில்லா மனசு......




↑
''கல்லிலே கலைவண்ணம் வடித்தான்''
புகைப்படம் : ஐயங்கார்



↑
''சிலர் அழுவார் சிலர் சிரிப்பார்''



''பஞ்சணையில் காற்றுவரும் தூக்கம் வராது'' →
புகைப்படம் ; ஆனந்தன்




# புது உருப்புகள் வாங்கும் செலவைக் குறையுங்கள். தேய்ந்துபோன உருப்புகளை டிவிஎஸ் புதுப்பிக்கட்டும்



## புதுப்பிக்கும் செலவு புதிய விலையில் மூன்றில் ஒரு பாகத்திலும் குறைவு

ஓயாமல் வேலை செய்வதால், உருப்புகள் தேய்ந்து போகும். தேய்ந்து போன உருப்புகளை டிவிஎஸ் புதுப்பிக்கட்டும். அவை புதிய உருப்புகளைப் போலவே உழைக்கும்.




டிவிஎஸ்ஸில் கீழ்க்காணும் தேய்ந்து போன உருப்புகளை புதுப்பித்துப் புத்துயிர் அளிக்கின்றனர்.

மெயின் ஆக்ஸில் • ஹாங்கர்ஸ் ஸ்டப் ஆக்ஸில் • ஷாக்கிள்ஸ் ஹப் • கிளட்ச் பிரஷர் பிளேட் புரொபெல்லர் ஷாப்ட் - யோக்

JWT/TVS. RC. 1443

டிவிஎஸ் ஸில் புதுப்பித்தால் புதிய உருப்பு வாங்கும் செலவு குறைகிறது. பஸ், லாரி, கார் நிற்காமல் ஓடிக்கொண்டிருக்கும்— வருமானம் பாதிக்கப்படாது



TVS


**டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ்** பிரைவேட் லிமிடெட்


மதுரை — திருச்சி — திருநெல்வேலி — புதுக்கோட்டை — சேலம் — கோயமுத்தூர்


**சுந்தரம் மோட்டார்ஸ்** பிரைவேட் லிமிடெட்

மதரூஸ் — பெங்களூர் — செகந்திராபாத்











## இவர்கள் யார் தெரியுமா ?

1. மன்னன் ஒருவருடைய உடலிலே புகுந்து சிங்கார ரஸம் கற்கும் சங்கரர்.
2. கதராடை சுமந்து விற்கும் பெரியார்—நாகம்மை.
3. ராணுவ உடையில் பண்டித நேரு.
4. சித்தரஞ்சன தாஸ் வீர சிவாஜி விழாவை விமரிசையாக நடத்துதல்.
5. வள்ளலார் கணக்கராக இருந்த இடத்தில் விதவையான ஜமீந்தாரிணி ஒரு நாள் அவரிடம் தகாத முறையில் நடந்துகொள்ளவே, அன்றே அவர் துறவியானர்.
6. இளமையில் ராஜாஜி தன் தந்தையாருக்கு இப்படி சில சமயம் கோச்சு வண்டி ஓட்டுவது உண்டு.
7. சீமைக்குப் போகும் காந்தியாரை அவருடைய தாயார் ஒழுக்கமுடன் திரும்பி வரவேண்டும் என்று எச்சரித்து அனுப்புதல்.
8. 12 வயதிலேயே பாரதியார் புலவர்கள் முன் தன் கவிதையை அரங்கேற்றுதல்.
9. புத்தர் வில்லை ஒடித்து திருமணம் செய்து கொள்ளுதல்.












# இறந்தும் இருப்பவர்




நகையரசரே! நன்றி மறந்த மக்களை மன்னித்து விடுங்கள்! நீங்கள் இன்னும் வாழ்கின்றீர்கள்! ஆனால், இங்கோ இருந்தும் இறந்தவர்களாக இருக்கின்றார்கள். உங்களுடைய நினைவு விழாவிற்குக்கூட ஒருவரும் வராதது நன்றியில்லாத் தன்மையைக் காட்டிவிட்டதல்லவா? இவர்கள் வேண்டுமானால் உங்களை மறந்துவிடலாம். ஆனால், தமிழ்நாடு உங்களை என்றும் மறவாது! இவர்களும் மறையலாம். ஆனால் உங்களுடைய புகழ்மட்டும் மறையவே மறையாது!



நகை அரசர் சந்திரபாபுவும், கவர்ச்சி நங்கை சூரியகலாவும் தோன்றும் கிடைப்பதற்கரிய ஒரு காட்சி.

மேலை நாட்டிலிருந்து திரும்பி வந்தால் ஒருவேளை காதல் மன்னன் ஜெமினியும், நடிப்பரசி சாவித்திரியும் இப்படித் தோன்றலாம்.



# பாண்டியன் பரிசு

★

நம்முடைய தலைமுறையில் தலைசிறந்த காவியங்களாக இரண்டைத்தான் கூறலாம். ஒன்று புதுமைப் பாவலர் பாரதியார் இயற்றிய பாஞ்சாலி சபதம். மற்றொன்று நம்முடைய புரட்சிக் கவிஞர் இயற்றிய இந்தப் பாண்டியன் பரிசு.

பழங்கால இலக்கியங்களுக்குச் சற்றும் குறையாத இந்தத் தமிழ்க் காணிக்கைக்கு சிலம்பைப் போன்றே கற்பவர்நெஞ்சை அள்ளும் திறமிருக்கிறது! ஜெயம் கொண்டாரின் கலிங்கத்துப் பரணி போன்ற எடுப்பான நடை இருக்கிறது. சீவக சிந்தாமணியைப் போல காதலும் வீரமும் பருந்தும் அதன் நிழலுமாக இணைந்து செல்லும் கதைத்திறன் இருக்கிறது எனவேதான்

“சீர்மிகுந்த கதிர்நாட்டின் மேலே அந்தத்
திறல் மிகுந்த வேழநாட்டுப் படைகள்”

என்ற துவக்கம் முதல்


“பணிச்சியரால் உளவறிந்தே தவிரைவில் அன்னம்
பறக்குமுனம் பறந்தின்பம் பகிர்ந்தான்வாழி!”

என்ற முடிவுவரை ஏடு எடுத்த எவரும் இதனைக் கீழேவைத்திட இயலவில்லை.

அந்த அளவிற்கு கவிஞரவர்கள், காட்சிகளை கற்பவர் தம் நெஞ்சத்திலே பதியவைக்கும் செந்தமிழ்ச் சொற்களால் இந்தத் தேனமுதைப் படைத்திருக்கிறார்கள்.

★ ★

கதிரைவேல் மன்னனை கருப்பு உடையில் மூன்புறம் இருந்து கட்டாரி எறிந்து கொன்ற நரிக்கண்ணன் விரைவாக அரண்மனைக்குள் புகுந்து பேழை ஒன்றைத் தேடி எடுத்து ‘இதனைஎன்ற தேரோட்டி இடம் சேர்’ என்று போர் வீரனைப்போல உடை உடுத்து நின்ற திருடர் தலைவனிடம் தந்தான்.



ஒரு நாள் சீர்மிகுந்த கதிர் நாட்டின்மேலே, திறல் மிகுந்த வேழ நாட்டுப் படைகள் போர் தொடுக்கப் பாய்ந்தன கடலைப்போலே. அந்தச் செய்தியை ஒற்றர் சென்று கதிர்நாட்டின் கதிரை வேல்மன்னனுக்குத் தெரிவித்தனர்.



வேழநாட்டுப் படையை நடத்திவருவது தன் உடன் பிறந்த நரிக்கண்ணனே என்றறிந்த அரசி படைவீடு சென்று படைக்கலத்தோடு திரும்பி தேர் ஏறினாள். தன் அண்ணனின் உயிர் குடிக்க சூளுரைத்து ‘‘என் அண்ணன் எங்குள்ளான் அங்கே செல்க’’ என்றாள்.

தானும் கதிரைவேல் மன்னனும் போரிடுகையில் பின் நின்று ஈட்டி எறிந்தது அல்லாமல் தன் உடன் பிறந்த பெண்ணரசியையும் கொன்றான் நரிக்கண்ணன் என்று உணர்ந்து சீறினான் வேழன். அந்தப் பொல்லாத நரியோ உன் ‘‘தோளை இகழ்ந்தாளிவள் என் வாளால் வெட்டித் தொடுகழற்குக் காணிக்கை இட்டேன்’’ என்றான்.









மாற்றுருவில் அரண்மனையில் பேழை பெற்ற வீரப்பன் என்னும் திருடர் தலைவன் தன் தோழர்களிடம் "ஈன்றானின் சொத்தாக அதனை என்றன் எழில் மகனுக்குச் சேர்ப்பேன்" என்றான்.

வேலனின் ஆசிரியரான கணக்காயர் "உன் அன்னை ஆத்தாவைக் காப்பதற்கோ—உடனே போ! இந்தா வாள்! குதிரை தந்தேன்" என்று கூறி அனுப்பினார்.





தன் தாயைக் காணச் சென்ற வேலன் ஆத்தாவின் குடிலைச் சூழ்ந்த பகை மறவரின்மேல் பல் ஆடுகட்குள் வேங்கை போல் பாய்ந்தான். கலங்கினர் வேழவர். பத்துப்பேர் மாண்டார்கள்.

நரிக்கண்ணற்கு முடி சூட்டிய வேழ மன்னனிடம் மாற்றுருவில் சென்ற ஆத்தா அவை நடுவில் "செவ்விதழாள் அன்னத்தை முகிலின் மீண்ட திங்களென மாற்றுருவும் களைந்து காட்டி'னாள்.

அரண்மனையில் பேழைதேடச் சென்ற ஆத்தா அங்கு ஒருவன் ஓடுவது கண்டு கணுக்காலை வெட்டினாள். அவன் இவளது அரிதான இடக்கையை வெட்டினான் பின்னர் தான் ஆத்தாளுக்குத் தான் வெட்டியது தன் அத்தான் வீரப்பன் எனத் தெரிந்தது.

அரண்மனையில் பேழை கிடைக்கவில்லை என்றதும் பேழை கொண்டு வருபவரையே தான் மணப்பேன் என்றாள் அன்னம். வேழ மன்னனும் அதனை ஏற்றுக் கொள்ள கதிர் நாட்டின் வீதியெலாம் யானை மீது கடி முரசு முழங்கப்பட்டது.









நரிக்கண்ணன் தான் கொடுத்த பேழை திருடர்களிடம் தன் சிக்கியிருக்கவேண்டும் என்று அவர் வாழ்ந்த மலையின் மீது வேறு யாரும் தேடாது இருப்பதற்காக 'எட்டி' என்பானை அழைத்து வந்து எரி விழியும் கருமுகமும் நீண்ட பல்லும் தீட்டி' பூதம் ஆக்கி மலைமீது விட்டான்.

தாய் தந்தையரை இழந்து, தனக்கு ஆரியாசன உரிமை நல்கும் பாண்டியனார் பரிசையும் இழந்து தவித்த அன்னத்தை தோழி, ஓடம் ஏறி உலவ அழைத்துச் சென்றாள். நடுவழியில் படகு சுழலில் சிக்கவே நீரில் பாய்ந்த வேலன் துடியிடைக்கும் நீலிக்கும் தோள் கொடுத்துக் கரை சேர்த்தான்.





இந்நிலையில் ஒருநாள் நிலவு எரிக்கும் நடு இரவில் நரிக்கண்ணன் அமைச்சன் மகனான நீலன் என்பான் நீலியின் உதவியால் உளவறிய விரும்பி "மின்ன லிடை கன்னல் மொழி இன்னும் சொன்னால் விரியுலகில் ஒருத்தி நீ அழகின் உச்சி" என்று அந்தப் பேதையின் உள்ளத்தைத் தொட்டான்.

அகல்வானில் விட்டு விட்டு மின்னல்போல ஆங்காங்குச் சென்று பின் மீண்ட அன்னம் சோலை ஒன்றிலே துயில, திருடர் தலைவன் வீரப்பன் துறவிபோல் அங்கு வந்து "பாண்டியன்பரிசு கைக்குவரும் அருங்கிளியே உனக்கான ஆடவன்பால் அதை யுரைப்பேன் இங்கவனை அனுப்பாய்' என்றான்.

"இத்தனைநாள் ஆயிற்றே பேழை எங்கே? இந்நாட்டில் அது இருந்தால் வெளிப்படாதோ?" என்று ஊர் பேச ஆரம்பித்ததும் சோர்ந்துபோன அவர்களை தேடும் முயற்சியில் மீண்டும் தூண்டுவதற்காக ஓடிக்கொண்டேயிருக்கும் குதிரை மீதேறி தேனைக்கொண்டே பொழியும் மழையைப் போலே பாடிக் கொண்டே இருந்தாள் அன்னம் நிலைமைபற்றி.


இரவில் நரிக்கண்ணன் கோட்டை வாயிலில் பூத வேடமிட்டு வந்து 'பூ பூ' என்று தட்டினான். ஆனால் அஞ்சுவதற்கு பதிலாக அவர் மீது பாய்ந்து சென்றாள் அன்னம். "காய் இற்று வீழ்வதுபோல் நரிக்கண்ணன் தன் கருந்தலை வீழ்ந்ததுவே அன்னத்தின் வாளால்!!,







தன்னோடு தோள் அணைத்தும் பின் முகத்தோடு முகமிணைத்தும் இன்பமாக இரவு கழித்திட வந்த நீலியின் மூலம் வேலன் பேழை கொண்டுவரப் போன செய்தி அறிந்த நீலன் தன் ஆட்களை அனுப்பி அவனை வழி மறித்தான். ஆனால் அவனோ பகைக் கூட்டத்தைப் பிணக்காடு செய்து மீண்டான்.



பகைவருக்குத் தப்பி பேழையோடு ஆத்தாவின் குடிசைக்கு வந்த வேலன் அங்கு அன்னத்தைப் பகைவர் கொன்றனர் என்ற செய்தி கேட்டு 'ஐயகோ' என அலறி என்றன் வாழ்வும் அழிந்ததடி அன்னமே என்றிரண்டு கையாலும் தலைமோதிக் கொண்டு நின்றான்.



பின்னர் இடுகாடு சென்ற வேலன் அன்னத்தின் பிணத்தைத் தோண்டி எடுத்து அஃனுடைய கோர நிலை கண்டு'சீ'என தூர எறிந்து விரைந்தெழும்போது அன்னம் உயிரோடு பின்னால் வந்து அவன் முதுகைத் தொட்டாள்.

முடிவில் வேழ மன்னன், அன்னம் வேலன் ஆகியோரை இணைத்து வைத்து '' திருமணம் இது என்றான் கதிர்நாட்டாட்சித் திரு முடியும் இது என்று புனைந்தான் நன்றே. அப்போது தமிழ்க் கவிஞர் வாழ்த்துரைத்தார். அமுத மொழி மங்கைமார் மலர் பொழிந்தே அரசியார் அரசர் நனி வாழ்க என்றார்.



மேலெழுந்த வாரியாகப் பார்ப்பதற்கு இது ஒரு வரலாற்றுக் காவியம் போல் காணப்பட்டாலும் "இருட்டறையில் உள்ளதடா உலகம்! ஜாதி— இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே " என்று நிகழ்காலத்தமிழகமும் இதில்படம் பிடிக்கப்படுகிறது


"இல்லாரும் அங்கில்லை; பிறன் நலத்தை
எனதென்று தனியொருவன் சொல்லான்
அங்கே"

என்று எதிர்காலத் தமிழகத்தையும் கவிஞர் கனவு காண்கிறார். இந்தக் கனவு நனவாக வேண்டுமானால் இந் நாட்டு இளைஞர்கள் எல்லோரும் இக்காவியத் தலைவன் வேலனைப் போல

"எனை ஈன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கு மென்றால்
செத்தொழியும் நாள் எனக்குத் திருநாளாகும்'

என்று சூளுரைத்துக் கொண்டு சுடர் முகம் தூக்கி செயல் புரிதல் வேண்டும்.

—எஸ். ஆர்.



தமிழ்த்தாயின்
தவப்புதல்வர்
நடிகர திலகம்

# அன்னிபெசன்ட் அம்மையார்

### அருண்

வசதியான குடும்பத்தில் பிறந்து, தந்தை அகாலத்தில் இயற்கை எய்தியதால் வறுமையில் மூழ்கி, நெஞ்சுறுதியால் தலைநிமிர்ந்து, தினம் ஒருவேளை பட்டினியுமிருந்து மகளை வளர்த்து, நர்ஸாக, சமையற்காரியாக பணியாற்றி, மேல் படிப்பும் படித்து, சொந்த நாட்டின் திமிர்பிடித்த சிங்கத்தின் பிடரியைக் குலுக்கி, "இந்தியாமீதுள்ள உன் பிடியை விட்டுவிடு!" என்று பிரிட்டனெங்கும் பட்டி தொட்டிகளிலெல்லாம் 85 ஆண்டுகளுக்கு முன் முழங்கிய வீராங்கனையே அன்னிபெஸன்ட் அம்மை. உலகின் உன்னதப் பெண்கள் மூவரில் ஒருவர் இவர் என்பது அறிஞர்கள் மதிப்பீடு. இந்திய தேசிய காங்கிரஸின் ராஷ்டிரபதி பீடத்தில் (1918-ல்) அமர்ந்த முதல் பெண்ணும் இவரே.

பிரிட்டனில் அவர் செய்த சொற்பொழிவுகளின் சுருக்கம் : "ஒவ்வொரு நாடும் சுதந்திரமாக வாழ வேண்டும். ஆனால் நமது அரசாங்கமோ பிறர் விடுதலையைப் பறித்துள்ளது. எங்கும் ஆக்கிரமிப்பு! அயர்லாந்தில், டிரான்ஸ்வாலில், ஆப்கனிஸ்தானில், பர்மாவில், எகிப்தில், நம் அதர்ம ஆட்சி - நிலத் திருட்டு - வழிப்பறிக் கொள்கை ஏன் நீடிக்கவேண்டும்? பீரங்கிகளுக்கு ஆகிற செலவை தேசியக் கல்வியில் போடுங்கள். யுத்தக் கப்பல்களுக்குப் பதிலாக பொது வாசகசாலைகளைக் கட்டுங்கள்." அவர் நல்லபடியாக அப்போது சொன்னதைக் கேட்காத பிரிட்டன் அந்த எல்லா நாடுகளிலிருந்தும் வெளியேற்றப்பட்டு விட்டதைக் கண்டு களிக்கும் பாக்கியம் அன்னிக்கு இல்லாமற் போய்விட்டது!



பதினாறு வயதுப் பருவப் பாவையாக அன்னை அன்னிபெசன்ட்.



இந்த இலட்சியச் சுடரை உலகிற்கு ஈந்த அன்னையும் மகளும்.



*1875* ஆம் ஆண்டில் அன்னியின்
மங்கைப் பருவம் இது.



*1876* ஆம் ஆண்டில் அன்னியின்
தோற்றம் இது.



*1878* ஆம் ஆண்டில் இலட்சிய மெருகேறிய
அன்னி இவர்.



இந்தியாவிற்கு வந்தபோது அந்த
வீராங்கனையின் தோற்றம் இது.



காசியில் வாழ்ந்தபோது அவருடைய
தவக்கோலம் இது.



1920இல் சாரணர் படை மேற்பார்வை
யாளராக இந்தத் தொண்டு உருவம்
தந்த காட்சி இது.



பின்னர் இவர் சாரணர் படைத்
தளபதியாக மாறினபோது இருந்த
தோற்றம் இது.



இந்தியர் அனைவர்க்கும் அன்னையான
அன்னியும் அவரது ஆசைக் குமாரரும்.



1927 ஆம் ஆண்டு பதினெட்டே நாட்களில் இவர் ஐரோப்பாவை சுற்றி வந்தபோது தந்த காட்சி இது.



வெள்ளையராய்ப் பிறந்தாலும் கருப்பர்களுக்காக வாதாடிய இந்த இலட்சியத்தாயின் இறுதி தோற்றம் இது.

---

அன்னி பிறந்தது லண்டனில் 1-10-1847-ல் முக்கால் ஐரிஷ்காரி, கால்வாசி இங்கிலீஷ்காரி. தாய் ஐரிஷ்; தந்தையைப் பெற்ற பாட்டி ஐரிஷ். தந்தை டாக்டர் வுட் இங்கிலீஷ். முன்னோர்களில் ஒருவர் மந்திரியாகவும், மற்றொருவர் லண்டன் மேயராகவும் இருந்திருக்கிறார்கள். அன்னிக்கு கூடப் பிறந்த சகோதரர்களில் ஒருவர் தந்தையுடன் காலமானதும் மிஞ்சியுள்ள ஒரு சகோதரனை படிக்க வைக்க தாய் கஷ்டப்பட்டாள். சில பள்ளிப் பிள்ளைகளுக்குச் சாப்பாடு போட்டு, அதில் கிடைத்ததைக்கொண்டு மகனை படிக்கவைத்தாள். அன்னியின் படிப்பு? நல்ல வேளையாக, அடுத்த வீட்டுப் பெண் ஒருத்தி - பிரபல நாவலாசிரியர் மேரி யட்டின் கால் ஊன சகோதரி - மனமிரங்கி, அன்னிக்கு ஆங்கில, ஜெர்மன், லத்தீன் மொழிகள் கற்றுக்கொடுத்து இதர கல்வியும் போதித்தாள்.

ஏழைகளுக்கு கட்டணமில்லாமல் ஆஜராகிவந்த வக்கீல் ராபர்ட்ஸ், "ஏழைகளே வேலை செய்யும் தேனீக்கள். செல்வத்தை உற்பத்தி செய்கிறவர்கள். நியாயம் கோர அவர்களுக்கு உரிமை உண்டு. தானம் வேண்டியதில்லை'' என்று செய்துவந்த உபதேசம் அன்னியின் மனதில் பதிந்தது. ஏழைகளுக்கு உழைக்கும் வழி பற்றி அவர் சிந்தனை செய்து கொண்டிருந்தபோது பிராங்க் பெஸன்ட் என்ற பாதிரி அவளைக் காதலித்து கைநீட்டவே, பாதிரியின் மனைவியாக இருந்தால் எளியவருக்கு சேவை புரிய நிறைய வாய்ப்பு உண்டு என்று அவரது வாழ்க்கைத் துணைவியானாள். ஆனால் மணவாழ்வில் பெரும் சோதனை காத்திருந்தது! ஒரு மகன் பிறந்தான்; 18 மாதங்களில் ஒரு மகளும் பிறந்தாள். மகள் கக்குவான் இருமலால் துடிதுடித்தாள். மூன்று ஆண்டுகளுக்கு குழந்தையின் அவதி கண்டு அன்னை ரத்தக் கண்ணீர் வடித்தாள். "குழந்தை என்ன பாபம் செய்தது? ஏன் இந்தக் கஷ்டம்? கடவுள் இதைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறாரா? கடவுள் என்று ஒருவர்தான் உண்டா?'' என்று அன்னியின் மனதில் சந்தேக அலைகள் மோதின. இந்த துன்பத்தோடு ஒருநாள் கணவனின் தூஷணையும் சேர்ந்தது. வாழ்க்கையில் வெறுப்பு கொண்ட அன்னி, தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்து, குளோரோபார சீசாவையும் கையில் எடுத்து விட்டாள். ஆனால் அந்தராத்மா இடித்துக் கேட்டது: 'நீ கோழையா? ஏழை மக்களுக்காக தியாகம் செய்யப் போவதாய் சபதம் செய்தாயே, அதன் கதி என்ன?' பதில் கூற முடியாமல் சீசாவை பீரோவுக்குள் வைத்தாள்.

ஆனால் கடவுள் பற்றிய சந்தேகம் மட்டும் நீங்கவில்லை. கிறிஸ்தவ மதத்தில் அவநம்பிக்கையைத் தெரிவிக்கும் புத்தகமொன்றை அவர் எழுதி, தமது பெயர் போடாமல் பிரசுரித்தார். இது அவரது கணவரின் நண்பர்கள் சிலருக்கு எப்படியோ தெரிந்தது! "இவளை இன்னும் நீ மனைவியாகக் கொண்

டிருக்கிறுயா?'' என்று சில மதவெறியர்கள் கேட்க, அது இவர்களது விவாக ரத்தில் முடிவடைந்தது. இரு குழந்தைகளுடனும் வெளியேறிய அன்னி, குடும்பம் நடத்த நகைகளை விற்ருள்: தையல் வேலை செய்தாள்; சமையற்காரியாக, நர்ஸாக இருந்தாள். அப்போது அவள் வயது 26 தான்!

பல புத்தகங்களை அவர் எழுதியும், அடிமை நாடுகளுக்கு சுதந்திரம் வழங்க வேண்டுமென்று பேசியும் வந்த சமயத்தில், பொதுஜன சேவை புரிந்துவந்த பிராட்லாவின் பரிச்சயமேற்பட்டு அவரது 'நேஷனல் ரிபார்மர்' பத்திரிகையில் உதவி ஆசிரியராகவும் இருந்தார். அப்போது பிரம்மஞான சங்கத்தின் தலைவி பிளாவட்ஸ்கி அம்மையின் புத்தகம் ஒன்றை விமர்சிக்கும் வாய்ப்பு அன்னிக்குக் கிடைத்தது. பிறகு இருவரும் சந்தித்ததின் விளைவாக சங்கத்தில் அன்னி சேர்ந்து, தனது வீட்டை ஸ்தாபனத்திற்கு எழுதி வைத்தார். பிளாவட்ஸ்கிக்குப் பிறகு ஆல்காட் தலைவர்: பிறகு அன்னி தலைவி.

1893-ல் அன்னிபெஸன்ட் இந்தியாவுக்கு முதல் முதலாக வந்ததும் "புண்ணிய பூமிக்கு வந்தேன்'' என்ருர். புண்ணிய க்ஷேத்ரங்களுக்கு விஜயம்செய்து, மகான்களுடன் உரையாடினுர். கங்கையில் நீராடி புடவை உடுத்தினுர். "பழைய வேதாந்தத்தையும் மதத்தையும் மீண்டும் இந்தியா மதித்துக் கடைபிடிக்கும்போதுதான் பழைய மகோன்னதத்தை அடையும்'' என்ற தமது நம்பிக்கையை வெளியிட்டார். மேலைநாட்டு மதத்தைவிட கிழ்நாட்டு மதம் சிறந்ததென்பது அவர் திட்டவட்ட கருத்து.

அன்னி ஈடுபட்ட நான்கு பிரிவுகள்: மதம், மதத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வி, சமூக சீர்திருத்தம், அரசியல். 1898-ல் காசியில் இவர் துவக்கிய மத்திய ஹிந்து கல்லூரிக்கு காசி மன்னர் மனை வழங்கினுர். 1904-ல் மத்ய ஹிந்து பெண்கள் பள்ளி துவக்கினுர். அடையாறு உள்பட நாடெங்கும் பல ஊர்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்காக பள்ளிகள் ஆரம்பித்தார். பிரம்மஞானிகள் பின் கண்ட சபதமெடுக்க வேண்டுமென்று அவர் ஒரு விதி செய்தார்:

1. ஜாதி வித்யாசம் பார்க்கமாட்டேன்; 2. பெண்களுக்கு 21 வயதுக்குள் திருமணம் செய்து வைக்கமாட்டேன்; 3. மனைவிக்கும் மகள்களுக்கும் கல்வி போதிப்பேன்; 4. விதவைகள் திருமணத்தை அனுமதிப்பேன்.

இந்தியாவுக்கு பிரிட்டிஷ் காமன்வெல்த்துக்குள் சுயாட்சி வேண்டும் என்ற கிளர்ச்சி நடத்த "ஹோம் ரூல் லீக்''கை அவர் தொடங்கி, தமது ஆங்கிலத் தின ஏடு "நியூ இந்தியா''வில் காரசாரமாக எழுதி வந்தது பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு ஆத்திரத்தை மூட்டியது. இதன் விளைவாக 1917-ல் அன்னிக்கு "உதகைவிட்டு வெளியேறலாகாது'' என்று அதிகாரிகள் தடை உத்தரவு போட்டார்கள். உடனே ஆராய்ச்சி மணி அடித்தார் நீதிபதி மணி அய்யர். "இந்த அநீதியை கண்டிக்க உலகில் யாருமில்லையா?'' அமெரிக்க ஜனுதிபதி வில்ஸனுக்கு எழுதிக் கேட்டார். இது என்ன சமாசாரம்?'' என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரியைக் கேட்க, அந்தப் பிரதம மந்திரி தலைகுனிந்து, அன்னிமீதுள்ள தடை உத்தரவை ரத்துச் செய்யுமாறு பிரிட்டிஷ் பூசாரிகளுக்கு கட்டளை பிறப்பித்தார். அடுத்த ஆண்டில் நடந்த கல்கத்தா காங்கிரசுக்கு அன்னி பெஸன்ட் தலைவி. அவரது புகழ் உச்ச நிலையில் இருந்த ஆண்டு அது.

ஆனுல் காங்கிரஸில் மகாத்மா காந்தியும் ஜவஹர்லாலும் ஒத்துழையாமை திட்டத்தைக் கொண்டு வந்ததும் அன்னியின் செல்வாக்குக் குறைந்தது. மகாஜன சத்யாகிரஹம் கூடாது என்பது அன்னியின் கருத்து. "பரஸ்பரமாக ஒருவரையொருவர் நம்பி வாழவேண்டிய உலகில், பரிபூரண சுதந்திரம் என்பது ஒரு மாயை. கூட்டுறவு, சுதந்திரம் - இவை சரியானவை, நியாயமானவை. ஆனுல் தனித்து வாழ்தல். பரிபூரண சுதந்திரம் எல்லாம் கானல் நீர்'' என்று அவர் சொல்லி, காங்கிரஸிலிருந்து விலகி நின்ருர். அவர் விரும்பியபடியே இன்று காமன் வெல்த்தில் ஒரு நாடாக இந்தியா இருப்பதைக் காண்கிருேம்.

ஐம்பது ஆண்டு சேவைக்குப் பின் 20-9-1933-ல் இயற்கை எய்திய அன்னுர் தீர்க்கதரிசிபோல சொல்லிய பல திட்டங்கள் இன்று அமலில் உள்ளதைக் காண்கிருேம். ஏழைப் பிள்ளைகளுக்கு பள்ளியில் இலவச உணவும் வைத்திய வசதியும் கிடைக்க வேண்டும் என்று அவர் அன்று சொன்னுர்.

கிராமப் பஞ்சாயத்துக்கள் தோன்றி, அவை பள்ளிகள், கிராம தொழிற்சாலைகள், வாசகசாலைகள், பூங்காக்கள், சுகாதாரம், வைத்யசாலை, சிவில், கிரிமினல் துறைகளில் நீதி வழங்கும் அதிகாரம் ஆகியவற்றை நிர்வகிக்க வேண்டுமென்று அவர் அன்று விரும்பினுர்.

கனவு பலித்ததம்மா? அன்னி பெஸன்ட் அம்மை பற்றி பல தலைவர்கள் கூறியுள்ளதை இங்கே நினைப்பூட்டுவது பொருந்தும்:

### மகாத்மா காந்தி:

"1888-க்குப் பிறகும் லண்டனில் நான் படித்துக் கொண்டிருந்தபோது மற்ற பலரைப்போல நானும் பிராட்லாவையும் அன்னிபெஸன்டையும் போற்றிப் புகழ்ந்தேன். பிளவெட்ஸ்கியின் உபதேசத்தால் அன்னி பிரம்மஞானியாகிவிட்டார் என்ற செய்தியை ஒருநாள் பத்திரிகைகளில் பார்த்து பரபரப்படைந்தேன். அப்போது யாவருக்கும் தெரியாத சாதாரணப் பையன் நான். பிளாவட்ஸ்கி, அவரது சிஷ்யை ஆகியோரின் பக்கத்தில் நான் நிற்பதையே பெரும் பாக்யமாக எண்ணியிருப்பேன். அன்னி பெஸன்ட் இந்தியா வந்து நாட்டைக் கவர்ந்ததும், அவருடன் நெருங்கி உரையாடினேன். எங்களுக்குள் அரசியல் வேற்றுமைகள் இருந்தபோதிலும்கூட அவரிடம் எனக்கிருந்த மரியாதை குறைந்ததில்லை.''

### ஜவஹர்லால் நேரு;

நான் அன்னி பெஸன்டை முதலில் சந்தித்த நாள், என் வாழ்க்கையிலேயே முக்கிய தினங்களில் ஒன்ருகும். எனக்கு அப்போது வயது 12. அவரது ஆகர்ஷ சக்தி, அவரது வீரதீர வாழ்க்கையைச் சூழ்ந்துள்ள கதைகள், அவரது நாவன்மை எல்லாம், "என்ன மேதை!'' என்று என்னை பிரமிக்கச் செய்தன. பல ஆண்டுகளுக்குப்பின் அரசியல் துறையில் அவருடன் நெருங்கிப் பழகியபோதும் அவரைப் போற்றி வந்தேன்.

அக்காலத்தில் தலைசிறந்து விளங்கிய பெரியார் அவர். இந்தியா தனது சொந்த ஆத்மாவை தானே அறியும்படிச் செய்ததற்காக அன்னி ஆற்றிய பணிகளுக்காக இந்நாடு அவருக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கும்.''

### ஸர் ஸி. பி.

"அன்னியின் குரலும் உச்சரிப்பும் நாம் அறிந்தவற்றில் மிகச் சிறந்தவை. இடிபோல முழங்கும் குரலில் உள்ளத்தை தொடும் இசையும் இழைந்திருக்கும்; இறக்கை கட்டிப் பறந்த அக்குரலில், சில சமயங்களில் அழிவு சக்தியும், சிலசமயங்களில் ஆக்க சக்தியும் நிறைந்திருக்கும்.''

### கவியரசி சரோஜினி

"மேலை நாட்டிலிருந்துவந்த அந்த 'ஜிலுஜிலு' யாத்ரீகர் ஒளிவீசி நிகழ்த்திய பொன்மயப் பேச்சு, இந்தியாவின் அமரமேதைக்கு மனமகிழ்ச்சியுடன் புகழ்மாலை சூட்ட, பழம்பெரும் கிரேக்க வீராங்கனையின் உயிருள்ள பிம்பம் வந்ததுபோல் விளங்கியது.''

"எண்ணித் துணிக கருமம் ; துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு''

என்ற வள்ளுவர் வாக்குப்படி, எண்ணித் துணிந்து அரிய பெரிய செயல்கள் புரிந்த அன்னிபெஸன்ட் உண்மையில் முழுமைக் கர்மயோகினி.




**V. P. V. தங்க மாளிகை**

- கைராசிக்கும்
- நாணயத்திற்கும்
- நம்பிக்கைக்கும்
- சிறந்த இடம்

TEL : JEWEL Phone 206

Prop :

V. P. வடிவேல் ஆச்சாரி

பெரிய தெரு, கும்பகோணம்.





உங்கள் யாவருக்கும்
எங்கள் மனமுவந்த
தீபாவளி வாழ்த்துக்கள்

**ஸ்ரீ ராம் டெக்ஸ்டைல்ஸ்,**

(ஏர் கண்டிஷன் ஷோ ரூம்)

2, தம்பு செட்டி தெரு, சென்னை - 1.
ஹைகோர்ட் சமீபம் :: போன். 24833.


கிளை : 112-113, நாகை ரோடு,
விஜயபுரம், திருவாரூர்.



தந்தி : 'ரேடியோஸ்' போன் நெ. 210

ஜெர்மன் டெலிபன்கன்
ரேடியோக்கள்

TELEFUNKEN (WEST GERMANY)
(TELERAD) HI-FI RADIOS



தஞ்சை, தென்னாற்காடு ஜில்லாக்களுக்கு
வினியோகிஸ்தர்கள் :

**மூர்த்தி ரேடியோஸ்**


12, பெரிய தெரு :: கும்பகோணம்

N. B : சுலபமான மாத தவணைகளில்
கிடைக்கும்




# நாதம் பிறக்கிறது


டி. பி. எஸ். சுந்தரநாதன்




தென்னாட்டு இசைக் கருவிகளில் பழமையும் சிறப்பும் கொண்டது நாதசுரம். உலகில் எப் பக்கத்திலும் காணப்படாத - எத் திறத்தாராலும் கையாளப்படாத-தனிச் சிறப்புக் கொண்ட நாதசுரம், தமிழகத்தின் அருஞ் சொத்து. ஆலயங்களும், மங்கள விழாக்களும் நாதசுர இசையின்றி இனிமை பெறாதென்பது, வெள்ளிடை. இசையின் எழில் நலன்கள் யாவும் இதனுள் பொதிந்து இன்பம் பொழிவது நாமறிந்த உண்மை. பார்ப்பதற்கு எளிய காட்சி நல்கும் இப் பார்புகழ் நாதசுரம் பாங்குற உருவாகும் நிலையினை ஆய்வோம்.




மரத்தினால் வேயப்படும் இக் கருவி எம் மரத்திலும் செய்யப் படுவதில்லை. "ஆச்சாள்" என்ற மரமே, நாதசுரக் கருவிக்கு ஏற்றதாக அமைகிறது. அதிலும், குறிப்பாக ஆலயத் தேர் அச்சில் உபயோகிக்கப்படும் பழமையான மேற்கண்ட ஆச்சாள் மரமே, இனிமையான நாதத்தினை வெளிப் படுத்தும் திறன் கொண்டதாகிறது. சுமார் 2 அங்குல கனமும், இரண்டரை அடி நீளமும் கொண்ட சிறு கட்டைகளாக வெட்டிக் கொண்டு, பிறகு உருளையில் வைத்து உருண்டையாகச் செதுக்குகிறார்கள். குழாய்போன்ற வடிவினை அடைய, உள்துளை பின்னர் போடப்படுகிறது, இந்த உள்துளையிடப்படும் வேலையே இனிய நாதத்தினை எழுப்பும் வகையினுக்கு உயிராகக் கருதப்படுகிறது ஐந்துவித ரம்பங்களால் உள்துளையிடப் படுகின்றது. இறுதியாக உள்ளமைப்புச் சீரிய நிலையில் அமைக்கப் படுதற்கு "பிரம்மாத்திரம்" போடுதல் எனப் பெயர். பின்னர் இக்குழல் செப்பனிடப் படுகிறது. துளையிடும் கருவியால் சுரத் துளைகள் அமைக்கப் பெறுகின்றன.





மெலிந்து வரும் இனிய இசையினை விரிவாக்கி வெளிக் கொணர, புனல் போன்ற பகுதி குழலின் அடிப் பக்கத்தில் இணைக்கப்படுகின்றது. இதற்கு "அணைசு" என்று பெயர். இப்பகுதியும், மரத் துண்டுகளிலிருந்து உளியால் செதுக்கப் பெற்று, செவ்வையாக உருவாக்கப் படுகின்றது.

இவ்விரு பகுதிகளையும் ஒன்றாக இணைத்த பின்னர், கூர்மையான மேல் பகுதியில், நாணல் கட்டையால் செய்யப் பெற்ற "சீவாளி" என்னும் தக்கை பொருத்தப்படுகின்றது. இம் மூன்றும் ஒன்று சேர்க்கப்பட்டபின்பு, நாதசுரக் கலைஞர்கள் இக் கருவியை இசைக்கத் தொடங்குகின்றனர்.



இந் நாதசுரக் கருவியின் உருவாக்கத்தை விளக்கும் புகைப் படங்கள் சிலவற்றை அருகிலே காணலாம்.




## காளையின் கண்ணி கன்னிக்கு வந்தது

அவள் கொல்லேறு தழுவும் காளைக்கு கிடைத்த கொலையேறு சாடிய புண்ணை முலைவேது கொண்டு ஒற்றி முயங்கும் இடைக்குலப் பெண். முல்லை முகையும் முருந்தும் நிரைத்தன்ன பல்லும், பணைத்தோளும் பேரமர் உண்கண்ணும் படைத்த இந்த அழகியின் அகல்அல்குல், தோள், கண் என மூவழிப் பெருகியும் நுதல், அடி, நுசுப்பு என மூவழிச் சிறுத்தும் இருக்கும் அங்கங்களிலே தன் நெஞ்சைப் பறிகொடுத்து விட்ட அந்தக் காளை கொடிய காளையின் கொம்புகளுக்கு இடையே ஏதோ தன் காதலியின் மார்புகளிலே பாய்வது போன்றே அலட்சியமாகப் பாய்ந்தான். அப்படிப் பாயும்போது காளை தன் கொம்புகளைச் சிலுப்பவே அவன் தலையிலே சூடிய முல்லை மலர் ஒன்று பறந்து வந்து இவளுடைய கூந்தலிலே விழுந்தது. அவ்வளவுதான் அதை அந்தக் கன்னி ஏதோ காணாததைக் கண்டுவிட்டதைப் போன்ற களிப்புடன் எடுத்து கூந்தலில் முடித்தாள். அந்த விநாடி முதலே தான் அவனுக்கு மனைவியாகி விட்டதைப் போலக் களித்தாள்.

—தாரா.

புகழேந்தியின் நளவெண்பா



ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி இருவர் எனும் தோற்றம் இன்றிப் புனலோடு புனல் கலந்தது போல தன பெண்மை நலன் உண்டு கிடந்த நளன். இன்று இருதுபன்ன மன்னனுக்குச் சமையற்காரனுக இருக்கிருன் என்று தோழி மூலம் உணர்ந்த தமயந்தி 'என் கொங்கை அளைந்து குழல்திருத்திக் கோலஞ்செய்த கரங்கள் இன்று அடுபுகையிலா கருகுகின்றன?" என்று கலங்கித் தவித்தாளாம்.

# ஒட்டக்கூத்தரின் மூவருலா



சேரனும் மீனவனுஞ் சேவிப்பச் செம்பியரில் வீரனுமான விக்கிரம சோழன் வீதி உலா வருகின்ருன் எனக்கேட்ட இந்தக் கன்னி இளமாள், துவடுபப எழுச்சி கொண்ட தன் கொங்கைகளுக்குத் தொய்யில் எழுதினுளாம். அவனுடைய 'மணியணிகள் யாவும் தருக' என்று வாங்கித் தரித்துக்கொண்டு மன்னன்மீது தான் செய்யப் போகும் மயக்கும் போருக்குத் தயாராளுளாம்.



## காமப் பயிர்விளைத்த கன்னி

கொல் யானை வேந்தனான நளன் காவி பொரு நெடுங்கண் காதலியான தமயந்தியை மணந்து கொண்டு திரும்புகையில் இடையிலே இளமரக்கா ஒன்றிலே தங்கினான். அங்கு கொங்கை முகங்குழையக் கூந்தல் மழை குலையச் செங்கயற் கண் ஓடிச் செவி தடவ காதல் இன்பம் கண்டு கொண்டிருந்தவன், இடையிலே "சிற்றிடையாய்! தேமொழியாய்!" என்று அவளை அழைத்து "இந்தப் பொழில் என்னுடைய தலைநகரத்தில் நாங்கள் உறையும் பொழிலைப் போலவே இருக்கிறது" என்று கூறினான். இதில் நளன் நாங்கள் என்று குறித்தது தன் நண்பர்களைத்தான். ஆனால் அவளோ நாங்கள் என்பதை வேற்று நங்கையர்கள் என்று எடுத்துக் கொண்டு ஊடினாள். இந்த ஊடலிற்குப் பிறகு நளனுடைய மார்பில் தன் "கொங்கை ஏர் பூட்டிக் குறவியர்நீர் - அங்கசைத்துக் காதல் வரப்பொழுக்கிக் காமப் பயிர்விளைத்தாள்" அக்கன்னி.

# கவி அரங்கம்

கபாடபுரத்தில் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த சான்றோர்களும் - மாமதுரையான கூடல் நகரில் பைந் தமிழ் ஆயக்கூடிய பாவலர் பெருமக்களும் இன்று இல்லை என்றுதான் நாம் எண்ணிக் கொண்டிருந்தோம். ஆனால் அது எத்தனை தவறு என்பதை பாவேந்தர் தலைமையிலே கவிபாட வந்த இந்தத் தமிழ்க் காவலர்கள் உணர்த்தி விட்டனர்.

அதற்கு ஏற்றவகையிலே ஆய்ந்த புலமையும் அஞ்சாத நெஞ்சமும் கொண்ட நிகழ்கால நக்கீரரான புதுவைக் கவிக்குயில் பாரதிதாசனார் அவர்கள் இந்தக் கவிதை அரங்கிற்குத் தலைமை ஏற்று அதனைச் சீரும் சிறப்பும் மிக்கதாக ஆக்கித் தந்திருக்கிறார்கள்.

பைந்தமிழ்க் கவிஞரான பாரதிதாசனார் அவர்கள் இன்றைய உலகின் இணையற்ற கவிஞர் கோமான். இன்று நாம் விழா எடுக்கும் தாகூரைவிட பன்மடங்கு மேலானவர். அமெரிக்க நாட்டிற்கு எப்படி ஒரு வால்ட் விட்மனோ-இரஷ்ய மண்ணிற்கு எப்படி ஒரு புஷ்கினோ அப்படி நமக்குக் கிடைத்த கோ-கி-னூர் வைரம் இவர்.

ஆனால் இப்படிப்பட்ட வைரத்தின் சுடரைக்கூட கட்சி இருள் மறைத்து விட்டது. மாற்றுக் கட்சிக்காரர் என்பதால் இவருடைய மங்காத புகழிற்குக்கூட மாசு கற்பிக்கப்படுகிறது. பகலவனின் கதிர்களை மேகத்தால் சில நேரம்தான் மறைக்க முடியுமே தவிர எப்போதும் மறைத்துவிட முடியாது. அதேபோல இந்தப் பாவலர் தலைவர்மீது சுமத்தப்படும் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு என்ற இருளும் எப்போதும் நிலைத்திருக்க இயலாது. இன்று இல்லாவிட்டாலும் நாளை, நாளை இல்லாவிட்டாலும் நாளை மறுநாள்; அல்லது என்றாவது ஒருநாள் இவருடைய புரட்சிக் கவிதைகள் இந்த புவியை ஆளத்தான் போகின்றன.

நாம் கேட்டதும் கற்பனை வளத்தை வாரி வழங்கிய புலவர் பெருமக்களுக்கு கரி, கொடுப்பதற்கும் பொற்பூ கொடுப்பதற்கும், நூறாயிரங் காணம் கொடுப்பதற்கும் நாம் பண்டைய மன்னர்கள் அல்ல. எனவே இளங்கோவனும் செந்தமிழ்ச் சாத்தனும் வளர்த்த தமிழை இன்று வளர்க்கும் அவர்களுக்கு நாலு கோடி தமிழ் மக்களின் சார்பாக நம்முடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க இவர்கள்! வளர்க தமிழ்!

கலை



# பாவேந்தர் பாரதிதாசன்

## வாழ்த்து

### கவிஞர் வாணிதாசன்

எல்லாரும் நல்லரென் றெண்ணுவார் இன்றமிழ்
வல்ல கவிவாணி தாசனார்—அல்லும்
பகலும் தமிழர்தம் பண்பாடு பற்றிப்
புகலும்பாட் டொவ்வொன்றும் பொன்.

சார்நிகழ் காலத் தமிழகம் பற்றி
யாரும் தெளிய இனிதுரைத்தார்—பாரில்
கலையின் கவியரங்கின் மேன்மையைக் காத்தார்
நிலையுணர்ந்து வாழ்க நிலத்து.

### கவிஞர் சிவனடியான்

சிவனடியார் செந்தமிழ்ச் சீரடியார் ஆனால
எவன்அடியான் எவனாண்டான் நாட்டில்—
எவனும்மொழி
காக்க எழுந்த கருஞ்சிறுத்தை நம்மாசு
நீக்க எழுந்த நெருப்பு.

கவிஞர் சிவனடியார் கண்ணும் கலையின்
கவியரங்கிற் கற்கண்டு தந்து—கவிஞர்
இவர்என்றே எல்லாரும் வாழ்த்துதலை ஏற்றார்
அவர்வாழ்க கீர்த்தி அடைந்து.

## [வெண்பா]

### கவிஞர் மருதகாசி

கவிஞர் மருதநற் காசி கலையின்
கவியரங்கில் நாடகச்சீர் காட்டி—அவியாப்
புகழ்விளக்கை ஏற்றுகின்றார் போந்தென் உளத்தில்
மகிழ்விளக்கை ஏற்றினார் மற்று.

சுமைசுமையாய்த் தங்கம் சுமந்து தரினும்
தமிழர்பண் பாடு தவறார்—தமிழ்க்கவிஞர்
சீர்மருத காசி திறம்வளர்க மேன்மேலும்
பேர்பெறுக வாழ்க பெரிது.

### கவிஞர் கண்ணதாசன்

தமிழ்பாடும் நம்கண்ண தாசனார் வாழ்ந்தால்
தமிழ்வாழும் அந்தத் தமிழாம்—அமிழ்தூறும்
ஊற்றை ஒழிக்கஎண்ணுங் கூட்டம் அதுதூறைக்
காற்றில் கலந்த துரும்பு.

கலையின் கவியரங்கிற் கண்ணதா சர்தாம்
தலையாம் தமிழ்வணக்கந் தந்தார்—நிலையுணர்ந்து
வாழ்ந்தோர்வாழ் கின்றார் இனியுந்தாம் பல்லாண்டு
வாழ்வார் புகழால் மகிழ்ந்து.





# நாடகத்தமிழ்

கவிஞர் மருதகாசி

உள்ளத்து உணர்ச்சிக்குப் பாடலாலும்.
உரையாடல் தன்னாலும் உருவம் தந்து
தள்ளாத கிழவர்முதல் சிறுவர்க்கும்
தனியின்பம் தருவதற் கென்றே பிறந்து
தெள்ளு தமிழ்க் கலைஞர்களால் தினம் வளர்ந்து
சிந்தனைக்கு உணவாகும் நல் விருந்து
கள்ளவிழும் முல்லையென மணம் பரப்பும்
கற்கண்டு என்பேன் நாடகத் தமிழை.

வேறு

அரங்கினிலே தென்றலெனத் தவழ்ந்து விளையாடும்
ஐம்புலனை வசமாக்கும், அழகு நடைபோடும்
உறங்கையிலும் அதன் நினைவு கண்களிலே ஆடும்
உழைப்பாளர் தங்களது உயர்வுதனைப் பாடும்
சுருதியுடன் "தாளம்" அங்கு கைகோத்துக் கூடும்
சுயநலத்தை வஞ்சகத்தை சூதுதனைச் சாடும்
ஒருநாளும் வாடாத பாமாலை சூடும்
உயிர்க்குலங்கள் நலம்பெறவே என்றும் நாடும்,

வேறு

தித்திக்கும் முத்தமிழில் ஒன்று—மக்கள்
சீரோடு வாழ்ந்திடவே செய்திடுது தொண்டு
எத்திக்கும் இதன் ஆட்சி இன்று—வேறு
எதற்குமே இல்லாத சக்தி இதற்குண்டு.
சத்துள்ள இதன் துணையைக் கொண்டு—நம்
தாய்நாட்டின் பெருமைதனைக் கடல்கடந்தும் சென்று
மற்றவர்கள் கண்ணுரக் கண்டு—நன்கு
மதிக்கவே கலைஞர்கள் வளர்த்திடுதல் நன்று.



# வருங்காலத் தமிழகம்

**... கவிஞர் கண்ணதாசன்...**



தலைவர் வணக்கம்

பூவிழும் ஒலியைப் புலனுள் இழுத்துப்
    பொறியுணர் வூடே பூந்தமிழ் கலந்து
காவியம் யாக்கும் காவல! தலைவ!
    பாவலர் கோவே! பாரதி தாச!

ஒன்றே இதயம்! ஒன்றே நிலவு!
    ஒருவன் கவிஞன்! அவனே நீயென
என்றும் கலையா இன்புகழ் கொண்டாய்!
    என்னருங் கவிஞ! இளையவன் வணக்கம்.

தமிழ் வணக்கம்

புதுவைக் கவிஞர் பொன்னடி வணங்கிப்
    போற்றிய பின்னல், பொன்னே! தமிழே!
மதுரைத் தலைவீ! மகன்யான் உனையும்
    வணங்குகி றேன்நான் வாழ நீ வாழ்க!

அச்சம் நாணம் மடமை இழந்தே
    அன்பு பாசம் உறவை மறந்து
மிச்சம் மீதி மென்மையு மிழந்து
    மெல்லிய லார்தம் மேன்மையு மழிவர்.

கைவேல் களிற்றிற் போக்கிய தமிழர்
    கால்வழி வந்த காளையர் வீரம்
தொய்வது நிகழும்; தூய்மை அழியும்
    சோற்றுக் கடனே சுகக்கட னாகும்!

ஆற்றுவோம் என்றே அற்றைநாள் தமிழர்
    ஆக்கிய கடமை அறுபதில் வந்து
நூற்றில் ஒருவர் வாழ்வது நிகழும்
    நோய்கள் மலியும் நுண்மாண் அழியும்.

தன்னை மதியார்; தாயை மதியார்
    பின்னை உலகம் பெற்றது மறியார்
முன்னைப் பெருமை முற்றிலு மறியார்
    மூவர் கோன்முறை முழுதும் அறியார்.

சேவகக் கடனே திருக்கட னாகக்
    காவல் வாழ்வே கலைவாழ் வாகக்
கோவழி வந்தோர் குடிவாழ் விழந்து
    குற்றேவல் வழிக் குறைபசி தீர்ப்பர்.

இலக்கிய மெல்லாம் ஏட்டி லிருக்கும்
    இலங்கும் புகழிற் களங்கம் விளையும்
துலக்கிய உள்ளமும் துணிவை இழக்கும்
    சுற்றமும் பகையாய்ச் சூழ்ந்துயிர் வாங்கும்.

இற்றைத் தமிழர் இன்றைய வழியே
    என்றும் சென்றால் இன்னவை நிகழும்!
வற்றாத் துணிவை வளம்பெறச் செய்தால்
    வருநாள் தமிழகம் வாழ்ந்திடக் கூடும்!



# பழங் காலத் தமிழகம்

பெரி- சிவனடியான்

''கலை''கூட்டும் கவியரங்கத் தலைமை யேற்றுக்
கனிகின்ற தமிழ்கூட்டும் கவிதைச் செல்வா!
மலைகோடிச் சுக்காக வெடித்த போதும்
மனங்குலையாத் தமிழ்மறவா! பாண்டிச் சேரி
அலைகூட்டித் தமிழ்க்கரையில் சேர்த்த முத்தே!
அணிந்துன்னைத் தமிழன்னை அழகு பூண்டாள்.
தலைமுறையின் உயிர்க்கவிஞ! உமது தாளில்
தலைதாழ்த்தி வணங்குகிறேன் வாழ்த்து வாயே!


பழங்காலத் தமிழகத்தின் பெருமை பற்றிப்
பாடிடுவாய் நானூறு பாட லென்றால்
அழகெல்லாம் அடியொற்றி அமைத்தல் கூடும்.
அடியேனை நான்கிற்குள் அடக்கென் றாலோ
விழமாட்டேன், பாடாமல் விடவு மாட்டேன்.
விளக்கொளியில் பளிச்சிடுமவ் விதத்தைப் பாரீர்!
பழஞ்சிறிதே யானாலும் ஔவை யுண்ட
பழம், தமிழர் பண்பாட்டை விளக்கு மன்றோ!

காதலுக்கு மாதவியாள், கடமை காக்கக்
கற்பரசி கண்ணகியாள் உதித்த நாடு
சாதலுக்குப் பெருமைதர மதுரை மன்னன்
சரித்திரத்தின் உரிமைதர இராச ராசன்
மோதல்வரின் முடிபறிக்கச் சேர நாட்டான்
முத்தமிழைப் படியிருந்து காத்தா ரன்றோ!
ஆதலினால் பாடுகிறேன் தமிழர் அந்நாள்
அடித்தளத்தில் தமிழ்மானம் அமைத்து நின்றார்.

காதலிலே களவுண்டு கற்பு முண்டு
களங்கண்ட கன்னியர்கள் பலபே ருண்டு
சாதலிலாத் தமிழ்க்கலைகள் இசையும் கூத்தும்
சரியாத குகைக்கோவிற் சிற்ப முண்டு
மேதினியைக் கடல்வழியே பவனி வந்து
மிளகுஅகில் சந்தனத்தை ஈந்த துண்டு
பாதியிலே இத்தனையும் பறிகொடுத்தோம்
பாடுங்கால் உயிர்பதைத்தேன் முடித்து விட்டேன்.

# நிகழ் காலத் தமிழகம்

வாணிதாசன்



அலைவாழ்த்த எழுங்கதிர்போல் ஆன்றோர் வாழ்த்த
அருந்தமிழர் கலையரங்கில், கவிய ரங்கத்
தலைமையுறு கவியரசே! புரட்சி-வேந்தே!
தமிழருளம் குடிகொண்ட தமிழ மேலோய்!
விலைஇல்லாத் தமிழ்க்கவிதை பாடுகின்ற
மேன்மக்காள்! கலைபயிலும் தமிழ்நாட் டீரே!
தலைதாழ்த்திக் கைகூப்பி உங்கட் கென்றன்
தமிழ் வணக்கம் படைக்கின்றேன்; ஏற்பீர்! ஏற்பீர்!

நிகழ்காலத் தமிழகத்தை நினைத்தேன்; நெஞ்சில்
நீளின்பம் மிகக் கண்டேன்; பண்டு வாழ்ந்தோர்
புகழெல்லாம் பனிபடர்ந்த வானைப் போலப்
பொலிவிழந்து போனதுண்டு மாற்றார் கூற்றால்.
அகழ்ந்தெடுத்தோம் பொதுப்பகையை; அறத்தால் வென்றோம்!
அரசியலை மக்களெலாம் அடைந்தோம்; கண்டோம்
முகமாற்றம்; முழுமாற்றம் கண்டோம் இல்லை!
முயல்கின்றோம்; தமிழ் வாழ்வே முடிவில் வெல்லும்!

பண்டிருந்த தனித்தமிழைத் தமிழர் பண்பைப்
பன்னெடுநாள் மறந்திருந்தோம்; உணர்ந்தோம் இன்று!
தொண்டுசெய்ய முனைந்துவிட்டார் இளைஞர் கூட்டம்!
துறைதோறும் மறுமலர்ச்சி துளிர்க்கக் கண்டோம்!
வண்டலிடு காவிரிபோல் என்றும் வற்றா
வளர்தமிழைக் காப்பதற்குப் புலவர் கூட்டம்!
உண்டென்றும் என்பதற்குத் தலைமை தாங்கும்
கவியரசர் எமதாசான்! ஒருவர் போதும்!

பன்னூலைப் பலமொழியைப் பயின்றே இந்நாள்
பகுத்தறிவைப் பெற்றுவிட்டோம்; பாரோர் மெச்ச
இந்நாளில் வாழ்கின்றோம்! உலகம் போற்றும்
எதிர்காலம், பொற்காலம்! இடைஇடையே
தென்னகத்துத் தாய்மொழியைத் தமிழர் வாழ்வைச்
சிதைப்பதற்கு முனைகின்றார்; முனைந்தோர் எல்லாம்
என்னானார்? இன்று நமக் காக உள்ள
இலக்கியங்கள் பதில்சொல்லும்! தமிழே வெல்லும்!

அன்றிருந்த வீரமின்றும் அழியவில்லை!
அன்னையர்கள் பொதுப் பணியும் குறையவில்லை!
மன்றுபயில் நற்கலைகள் கலப்பில் தோய்ந்தும்
மாத்தமிழின் பண்பை விட்டு விலகவில்லை!
இன்றுள்ள தமிழகத்தில் கருத்து மாற்றம்
இருந்தாலும் தமிழ்மொழிக்கிங் கின்னல் என்றால்
ஒன்றாகும் நிகழ்காலத் தமிழகத்தை
உலகறியச் செய்திடுவோம்! வாழ்த்துவோமே!


நாளொரு மேனியாய்
சருமம எழில் மேம்பாடு
புதிய ரெக்ஸோனு
துணையோடு
ரெக்ஸோனு சோப்பின் மிரு
துவான நுரையில் அடங்கி
யுள்ளது கேடில் எழிலூட்
டும் பற்பல எண்ணெய்கள்
இணைந்த விசேஷத் தைல
மான கேடில் சருமத்தின்
ஊடேசென்று, அதைமென்
மையுடனும், மழமழப்பாக
வும் மிளிரச் செய்து,...உங்
கள் மேனி வனப்பை ஓங்கச்
செய்கிறது. எடுப்பான நறு
மணத்தினுல் உங்களை மணி
க்கணக்கில் புதுமலர்ச்சியுட
னிருக்கச் செய்கிறது. உங்
கள் அன்றாட அழகுசாதனத்
துக்குகந்தது ரெக்ஸோனு.
Rexona
GOOD FOR YOUR SKIN
புதிய மேலுறை,
புதிய வடிவழகு, புதிய
பச்சை வர்ணம் ஆகிய
வற்றோடு கூடிய புதிய
ரெக்ஸோனுவை
நீங்கள் விரும்புவீர்!
புதிய ரெக்ஸோனு–
உங்கள் சருமத்திற்கு அனுகுணமானது
RP. 169-50 TM

# காதல் கீதம்

சிறுகதை மன்னன் எல்லார்வி

"என்ன பாப்பா இது?...வரவர நீ பச்சைக் குழந்தையாகிக் கொண்டு வருகிறாயே!..."

நட்டுவனார் தில்லைநாயகம் செல்லமாகக் கடிந்துகொண்டார். அவர் பாட, அவள் ஆடிக்கொண்டிருந்தாள். உணர்ச்சிகளைப் பளிச்சென்று வெளிக் காட்டுகிற முறையில் மிக நன்றாக அபிநயம் பிடித்துத்தான் ஆடிக்கொண்டிருந்தாள். சோகத்தைப் பிரதிபலிக்கவேண்டிய முக்கியமான கட்டம். மாறாக, அவள் வதனம் முழுமதியாய் மலர்ந்தது. பற்கள் தெரிந்தும் தெரியாமலும் இளமுறுவல் புரிந்தாள். நட்டுவனாரால் அதைப் பொறுக்க முடியுமா?

ஜலஜா கலகலவென்று சிரித்தாள். ''உங்களுக்குத்தான் நான் வாத்தியாராக மாற வேண்டும்போல் இருக்கிறது! 'பாப்பா என்றால் குழந்தைதான்' என்று சொல்லிக் கொடுக்க வேண்டும்போல் இருக்கிறது!''

''சரிசரி, நீ இன்று ஒழுங்காக ஆடமாட்டாய்! உன் அம்மா இல்லாதபோதெல்லாம் நீ இப்படியேதான் செய்கிறாய், நான் வாங்கும் பணம் தெண்டம்தான்!...சரி சரி. நான் வருகிறேன்.''

தில்லைநாயகம் கூடத்தின் எல்லையைக் கடந்தார்; ஜலஜா முன்புற ஹாலுக்கு விரைந்தாள். பலகணி வழியே எதிர் வீட்டு மாடியின் அறையை நோக்கினாள். அங்கே மணவாளன் நின்றிருந்தான். அவனைப் பார்த்ததனாலேதான் அவள் சற்று முன் ஆடலில் பிழை செய்தாள்.

இருவரும் ஆசையோடு பார்த்து முறுவலித்துக் கொண்டார்கள். சின்னக் குழந்தை அம்புலி அழைப்பதுபோல் ஜலஜா அவனைக் கை காட்டி அழைத்தாள். 'அம்மா இல்லை?' என்று அவன் ஜாடையில் கேட்டான். அவள் 'இல்லை' என்று தலையை அசைத்தாள்; மணவாளன் ஓடி வந்தான்.

''எப்பொழுது வந்தீர்கள்''

'இந்தமாதிரி உடையில் உன்னை அருகில் பார்த்து ரசிக்க வேண்டும் என்று எனக்கு நெடுநாளைய ஆசை!...''என்று அவன் அவள் தோள்களில் கை வைத்தான். மகிழ்ச்சியால் பூரித்த அவள் மார்பகம் விம்மிவிம்மித் தணிந்தது. காலோடு தலை அணு அணுவாக அவள் மேனி அழகைப் பருகிக் கொண்டிருந்த அவன் பார்வை அவளது மார்பகத்தில் வந்து நின்றது. ஆர்வம் பொங்கும் அவனுடைய விழிகளையே இமையாது நோக்கிய ஜலஜா மெல்ல அவன் கரங்களைத் தன் தோள்களிலிருந்து விலக்க முயன்றாள். அவன், மேலும் அழுத்தமாகத் தன் கைகளைப் பதித்தான்.

''அதோஅம்மா வருகிறாள்...''

மணவாளன் சட்டென்று அவளிடமிருந்து விலகினான். அச்சம் நிறைந்த கண்களால் தெருப் பக்கம் நோக்கினான். அவள் கலகல வென்று சிரித்தாள்.

''பொய்தானே...? போக்கிரி...!''

''பின்னே என்ன? பத்து நாளாய்ப் பாராமல் இருந்தது என்னவோ செய்தது. பார்க்க வேண்டும் என்று கூப்பிட்டேன் நல்ல பிள்ளையாய் லட்சணமாய்ப் பார்த்துவிட்டு, பேசிவிட்டுப் போகாமல் இதெல்லாம் என்ன அதிகப்படி? முன்பே சொல்லியிருக்கிறேன் – என்னைத் தீண்டாதீர்கள் என்று...''

மணவாளன் நெடுமூச்செறிந்தான். ''உம் இன்னும் எத்தனை நாளைக்கு இந்தக் கொடுந் தண்டனையோ!...''

ஜலஜா கடிகாரத்தை நோக்கினாள், ''போய்வருகிறீர்களா?''

''ஏன் ஜலஜா கோபமா?...''

''அம்மா வருகிற வேளை. எதற்கு வீண் ரகளை என்றுதான்...''

''சரி...'' அவன் குரல் மந்தர ஸ்தாயியில் ஒலித்தது. தலையைத் தொங்க விட்டபடி மெல்ல நடந்தான்.

''பாவம், வருகிறபோது எப்படி வந்தீர்கள்; போகிறபோது எப்படிப் போகிறீர்கள்!...''

அவள் நையாண்டி செய்கிறாளா, அநுதாபம் தெரிவிக்கிறாளா என்பது புரியாத நிலையில் அவன் ஒரு முறை அவளைத் திரும்பிப் பார்த்துவிட்டு நடந்தான். அவள் உள்ளே சென்று உடைகளைக் களைந்தாள்.

விழா ஒன்றை முன்னிட்டு அலுவலகத்தின் சார்பில் வெளியூர் சென்று திரும்புகிறபோது மணவாளன்—ஜலஜா சந்திப்பு ரெயில் மார்க்கத்தில் ஏற்பட்டது. துடுக்கான பேச்சில் தொடங்கி, சொற்போர் கடுமையாகி, அன்பிலே முடிவடைந்தது, அந்தச் சந்திப்பு. கல்யாணியம்மாளின் தீர்க்கமான குறட்டையொலியின் பின்னணியிலே அவர்கள் துணிச்சலோடு அளவளாவினார்கள்.

''சம்பங்கி என்ற பத்திரிகையில் நான் பணிபுரிந்து வருகிறேன். புகைப் படம் பிடிப்பதில் நான் மிகத் தேர்ந்தவன்; வண்ணமாக ஓவியங்களைப் புனைவேன், இவை தவிர வேறு சொத்தோ, சுற்றமோ இல்லை' என்றான் மணவாளன்:

''எனக்கு அப்பா இல்லை. அம்மாவுக்கு நான் உயிர் நிலை. மூன்று ஆசைகள் என் அம்மாவுக்கு: நான் நிறையப் படிக்க வேண்டும்; நடன அரங்கில் இணையற்ற சுடராக ஒளிரவேண்டும்; பெரிய பிரபுவின் மனைவியாக வேண்டும்''—ஜாலங் காட்டிக் குழந்தையைக் கவர்ந்து முடிவில் ஏமாற்றுவதுபோல் இருந்தது, ஜலஜா மூன்றாவதாகக் கூறிய அவள் அம்மாவின் ஆசையைக் கேட்ட மணவாளனுக்கு. 'இந்தக் கனி நம் கைககு எட்டாது' என்று அவன் நெடுமூச்சு விடுகிறபோது கல்யாணியம்மாள் புரண்டு கொடுத்தாள் அதைக் கண்டு மணவாளன் ஆயாசப்படவில்லை. 'இனி இவளோடு என்ன பேச்சு? அதனால் என்ன பயன்?' என்று எண்ணினானே தவிர அவள் மேனியிலே படர்ந்த பார்வையை மீட்க வில்லை; மீட்க முடியவில்லை. அப்படி, தீர்மானமாக சந்தன மரத்தில் செதுக்கிய சிலை போல் இருந்தன அவளது அவயவங்கள்.

''உங்கள் இருப்பிடம் எங்கே?'' அவள் கேட்டாள்.

''எதற்கு?'' அவன் குரலில் நிஷ்டூரம் ஒலித்தது.

''சும்மா கேட்டேன். வேண்டாம்; சொல்ல வேண்டாம்.''

''நான் பரம ஏழை.''

''சரி.'' பட்டுக் கத்தரித்தாற்போல் இப்படிச் சொல்லிவிட்டு அவள் சாளரத்தின் பக்கம் திரும்பிக்கொண்டாள்.

இருள் தவிர எதுவுமே அவன் கண்ணில் படவில்லை, ஆயினும் அவள் வெளிப்புறத்தையே நோக்கிக்கொண்டிருந்தாள். இடையிடையே திருட்டுத்தனமாக, கடைக் கண்ணால் அவனையும் நோக்கினாள்.

அவள் அமர்ந்திருந்த 'போஸ்' மிகப் பிரமாதமாக இருக்கிறதென்று மணவாளனின் கலை உள்ளம் கருதிற்று. சட்டென்று வரையும் சாதனங்களை எடுத்துக் கொண்டான். அவளைப் பார்த்துப் பார்த்துவரைந்தான். படம் முழுமை பெறுவதற்குள் அவள் உள்ளம் பரபரத்தது, அதைப் பார்த்து மகிழ. நிலை கலைந்தால் படம் வீணாகி விடப் போகிறதே என்று பல்லைக் கடித்துப் பொறுமையை மேற்கொண்டாள், மணவாளனுக்கு அதெல்லாம் தெரியாது.

படம் முடிவடைந்தது. அதை இப்படியும் அப்படியும் நேராகவும் ஒருக்களித்தும், கிட்டத்திலும் தூரத்திலுமாகப் பார்த்தானவன். அவளும் கழுத்தை வளைத்தும் நீட்டியும் எட்டி எட்டிப் பார்த்தாள். அவளுக்குத் தெரியவில்லை. பொறுமை இழந்து எழுந்தாள். அவன் அருகே வந்து நின்றான். அவன் மறைத்துக்கொண்டான். அவள் கெஞ்சினாள், கொஞ்சினாள், சிணுங்கினாள்; அவன் மசியவில்லை. கடைசியில் கோபித்துக்கொண்டு உட்கார்ந்தாள். அவன் மனம் இளகி விட்டது. படத்தை அவளிடம் கொடுத்தான். அவள் கண்கள் அகல விரிந்தன; இதழ்கள் அழகாக மலர்ந்தன; புருவங்கள் மேலும் உயர்ந்தன மூக்கில் விரல் வைத்துத் தலை அசைத்தாள்.

"அப்படியே போட்டு விட்டீர்களே!..."

அவன் பெருமிதம் தோன்ற மௌனமாக இருந்தான்,


'சைடு போஸ்' அவளது விலாப் பக்கம் பளிச்சென்று தெரிந்தது. அது மட்டுந்தானா...? பார்த்துக்கொண்டே இருந்தவளின் கன்னங்கள் நாணத்தால் குப்பென்று சிவந்தன. அந்த நேரத்தில் அவனை நேருக்கு நேராகப் பார்க்கக் கூச்சமாக இருந்தது. குனிந்த தலை நிமிராது படத்தை அவனருகில் வைத்தாள்; தாயின் அருகே படுத்தாள்; கண்ணை இறுக மூடினாள்.

'சரியான அஸ்திரம்! பட்டி வாய் பெட்டிப் பாம்பாக அடங்கி விட்டது! பெரிய ... பணக்காரனுக்குப் பெண்ணைக் கொடுக்கத் தாய் எண்ணலாம்; கழுத்தை நீட்டுபவள் பெண்தானே?'

மனோராஜ்யத்தில் ஈடுபட்ட மணவாளன கற்பனை இன்பத்தில் சொக்கிக் கண்ணை மூடினான். தூக்கம் இல்லை, அடிக்கடி கண் திறந்தது அவளைப் பார்த்தான். அவன் பாராத போது அவனைப் பார்த்து அவன் பார்க்கிறபோது கண்ணை மூடிக் கொண்டாள் ஜலஜா. இரண்டு மூன்று முறை திருட்டுத்தனம் வெளியாகி இருவரும் நேருக்கு நேர் பார்த்துக் கொண்ட போது அங்கே புன்னகை மலர்ந்து புது மணம் வீசியது ஐக்கிய பாவம் அரண் கோலியது.

விடிந்தது. ரெயில் எழும்பூர் அடைந்தது வாய்ப் பேச்சில்லை; கண்கள் பேசிக் கொண்டன; காதலர்கள் பிரிந்தார்கள். காவல் திறனில் தனக்கு நிகர் எவரும் இல்லை என்பது தான் கல்யாணி எண்ணம்!

இரண்டு மாதங்களுக்குப் பின் ஒரு நாள் காலையில் தூங்கி எழுந்த ஜலஜா தற்செயலாக எதிர் வீட்டுமாடியை



நோக்கியபோது தன் கண்களையே நம்ப முடியாமல் தடுமாறினாள். அங்கே மணவாளன் நின்று கொண்டிருந்தான். வியப்பும் திகைப்பும் அவளை ஆட்டி வைத்தன; மாலைவரையில் ஒன்றும் புரியாமல் திகைத்த ஜலஜாவுக்கு மாலையில் கடற்கரையில் அனைத்திற்கும் விடை கிடைத்துவிட்டது.

அந்த வீட்டில் கீழ்ப் பகுதியில் ஆந்திரர் ஒருவர் குடியிருந்தார். மேல் பகுதி ஐம்பது ரூபாய். வசதி எதுவும் இல்லை. ஜலஜாவின் இருப்பிடத்தை அறிந்த மணவாளன் தன் ஊதியத்தில் நாலில் ஒரு பங்கை வாடகைக்காகக் கொடுத்துக் கொண்டு அங்கே குடியேறிவிட்டான். அவனே எல்லாம் சொன்னான்.

"தனி நபருக்கு ஐம்பது ரூபாயில் அத்தனை பெரிய இடம்..."

"என்ன செய்வது? பணக்காரனுக்கு மனைவியாகப் போகும் பாக்கியவதியைத் திருமண நாள்வரைக்குமாவது கண் குளிர..."

இப்படிக் கடற்கரையில் அவர்கள் உரையாடினார்கள்.

கல்யாணி யம்மாள் கண்டிப்பு, காயிதா எல்லாம் உடையவள். ஆனால் மகள் கண்ணைக் கசக்கினால் மனம் பொறாதவள். வெகுளி. ஜலஜா அவள் போக்குக்குப் போய்க் கொண்டே அவளைத் தன் வசம் இழுப்பதில் தேர்ந்தவள், ஆடல் பித்து, படிப்புப் பித்து, புகழ்ப் பித்து இப்படி அலைந்த தாயை வலுவிலே மணவாளனிடம் போகும்படி செய்து விட்டாள். கலையைக் காரணமாக்கியே மடக்கினாள். "நல்ல பிள்ளை; பரம சாது. தெரியாத பாடங்களைக் கேட்டுக்கொள். நான் சொல்லித் தரும்படி சொல்லி யிருக்கிறேன்." என்றாள். பல்வேறு நிலைகளில் புகைப்படம் எடுப்பது, பத்திரிகைகளில் பிரசுரம் செய்ய வைப்பது — இப்படியும் காக்காய் பிடித்தான் மணவாளன். 'வெளுத்ததெல்லாம் பால் கருத்ததெல்லாம் நீர்' என்றிருந்தாள் கல்யாணி. அத்தனைக்கத்தனை மணவாளன்—ஜலஜா இடையே காதல் புரையோடிக் கொண்டிருந்தது அதன் இடையே அவர்கள் உள்ளத்தில் ஓர் அச்சம், ஒரு கவலை, ஒரு கலக்கம், ஒரு குழப்பம்.

ஜலஜா அடிக்கடி மணவாளன் அறைக்குப் போவாள். கையில் ஆங்கிலப் பாடப் புத்தகம், கண்களில் காதல் மயக்கம். பேச்சில் சிருங்கார ரசம். நடை நொடி பாவனைகளில் சரசநிலை. அவன் அவளைக் கண்டால் கள் உண்டவனைப்போல் ஆகிவிடுவான். என்ன என்னவோ பிதற்றுவான். அவளை அள்ளி அணைத்திட அவன் உள்ளம் பறக்கும்; கரங்கள் துடிக்கும். அவள் ஏதேதோ மாயம் புரிந்து அவனிடம் இருந்து ஒதுங்கிக் கொள்வாள். தன்னைத் தீண்டமட்டும் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. 'வில் பவ'ருடன் தன்னைக் காத்துக் கொண்டே வந்தாள். காலம் ஓடிக் கொண்டிருந்தது.

''மிஸ்டர்!...நாங்கள் அடுத்த வாரம் ஊருக்குப்—"

''ஊருக்கா...எந்த ஊருக்கு?''

''மதுகிரிக்கு.''

''என்ன விசேஷம்? எப்போது திரும்புவீர்கள்?

''ஒருவாரம்' பத்து நாள் ஆகலாம்.':

''அதுவரை நான் உன்னைப் பிரிந்து..."

''நிரந்தரமாகவே பிரிந்துவிட நேர்ந்தால்?"

''வாயை மூடு ஜலஜா. அவச்சொல் பேசாதே!''

''உண்மை கசக்கத்தான் செய்யும்.''

''நீ என்ன சொல்கிருய் ஜலஜா?"

''எனக்குக் கல்யாணம் நிச்சயிக்கப் போகிருர்கள்.''

'' அதற்கு அங்கெல்லாம் போவானேன்?"

''மணமகன் அங்கேதான் இருக்கிருர்."

''என்ன..."

'ஆம் என் அத்தை பிள்ளை."

மணவாளன் கையில் இருந்த புத்தகம் நழுவிற்று. அவன் உணர்ச்சி வசமானுன் நெஞ்சு வறண்டது. கண்கள் கலங்கின.

'நீ இப்படிக் கல்லைத் தூக்கி என் தலையில் போடுவாய் என்று தெரிந்திருந்தால்..."

''என்ன செய்திருப்பீர்கள்?"

''உன்னை அன்றே மறந்திருப்பேன்.'

''நானு வேண்டாமென்றேன்''

மணவாளன் நெடுமூச் செறிந்தான். ஜலஜா சிரித்தாள்.

''இதோ பாருங்கள்; ஆண்களிடம் பெண்தன்மையும், பெண்களிடம் ஆண்தன்மையும் இருப்பது நகைப்புக்கிடமான நிலை. எதைக் கண்டுவிட்டீர்கள்; இப்படி இடிந்து போய்விட்டீர்கள்?"

''போதும் உன் அறிவுரை!''— அவன் சீறினுன்; அவள் இறங்கிப் போய்விட்டாள்.

சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டாது என்கிற நிலை ஏற்பட்டு விட்டது. அதன் பின்னர் அவர்கள் போக்கில், அவள் சிலமுறை அவனைக் காண வந்தாள். அவன் இருப்பதில்லை; இருந்த வேளைகளில் பேசுவதில்லை. எரிந்து விழுந்து அவளை விரட்டினுன். ஆறுதலாகப் பேச அவள் எடுத்துக் கொண்ட முயற்சி அனைத்தும் வீணுயின. நாலைந்து நாட்களுக்குள் அவன் நாலைந்து மாதம் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் விழுந்து எழுந்த தோற்றத்தைப் பெற்றுவிட்டான். அதைக் கண்டு அவள் மறுகினுள். 'என் பேரில் பிசகு. எதற்கு அவசரப்பட்டு அவரிடம் பொய் மூட்டையை அவிழ்த்தேன்!' என்று நொந்துகொண்டாள்.

வாசலில், 'மாடி குடக்கூலிக்கு விடப்படும்' என்ற அட்டை தொங்கிற்று. யார்யாரோ வந்து பார்த்துப் போனுர்கள். ஜலஜா துயரில் ஆழ்ந்தாள். விவரமாக ஒரு கடிதம் எழுதினுள். அவனிடம் கொண்டுபோய்க் கொடுக்க முயன்றுள். சந்தர்ப்பமே கிட்டவில்லை. முடிவில் அறைக்குள் போட்டுவிட்டு வந்தாள்.

தாயும் பெண்ணும் ஊருக்குக் கிளம்பினுர்கள். அதைக் கண்ட மணவாளன் நெஞ்சத்தில் ரத்தம் கசிந்தது. வண்டி கண்ணுக்கு மறைந்ததும் பொத்தென்று படுக்கையில் விழுந்தான்.

★ ★ ★

அறையை ஒழித்துச் சாமான்களைக் கட்டிக் கொண்டிருந்தான் மணவாளன். காலடி ஓசை கேட்டது; திரும்பிப் பார்த்தான், ஜலஜா வந்து கொண்டிருந்தாள்.

''என் சாமான்களையும் கட்டிக் கொண்டு வந்து விடவா?''

''எதற்கு?'' என்று பல்லைக் கடித்தான் மணவாளன்

''உங்களோடு வருவதற்குத்தான்!''

''நான் உன் அத்தான் இல்லையே!''

''அத்தான் நான்தானடா; நீ அவள் கணவன்!''

ஜலஜாவுக்குப் பின்னுலிருந்து குரல் கேட்கவே மணவாளன் எட்டிப் பார்த்தான். ''அடடே! நீயா! சோமு வா!'' என்றுன்; பரபரப்புடன் எதிர்கொண்டு சென்றுன். ஜலஜா மகிழ்ச்சி முறுவல் சிந்தினுள். எல் மனமுவ உட்கார்ந்து பேசினுர்கள். சோமு சொன்னுன்.

''அடிநாளிலிருந்தே எனக்கு ஜலஜாவிடம் தங்கையின் பாசம்தான் தோன்றி வளர்ந்தது. அத்தை தொந்தரவு செய்கிருளே; என் அம்மாவும் 'உறவு, உறவு' என்று தொல்லைப் படுத்துகிருளே என்பதற்காகப் போகப் போகப் பார்க்கலாம் என்றிருந்தேன். நானும் நீயும் சேர்ந்து படிக்கிறபோது என் படிப்பறிவை நீ அறிவாய். உயர்நிலைப் பள்ளியில் பாதிக் கிணறு தாண்டிய நான் ஜலஜா 'இண்டர்' என்றதுமே மனக் கதவைச் சாத்தலானேன். அவள் ஆடலில் மேம்பட்டு வருகிருள் என்றறிந்ததும் கதவைப் பூட்டினேன். கலை வாசனையே அற்ற நான் அவளை எப்படி ஆள முடியும்? அப்புறம் உருவம், வயது. என்னையும் அவளையும் சேர்த்துப் பார்க்கிற யார்தான் சிரிக்க மாட்டார்கள்? ஜலஜா வந்து உன்னைப் பற்றி அந்தரங்கமாக என்னிடம் சொன்னுள், உன்னை நினைத்துப் பார்த்தேன். எல்லா வகையிலும் அவளுக்கு நீ பொருத்தம் என முடிவு கொண்டேன். அத்தையின் மனசை அடியோடு மாற்றினேன், நீ பெரிய பணக்காரன்; ஆனுல் மிக அடக்கமானவன் என்று சொல்லி வைத்திருக்கிறேன். நானே வந்திருந்து திருமணத்தை நடத்தித் தருகிறேன் என்று வந்திருக்கிறேன்.

மணவாளன் திறந்த வாய் மூடாமல் அமர்ந்திருந்தான். ஜலஜா அவன் கையில் நறுக்கென்று கிள்ளினுள். ''கனவில்லை'' என்றுள்.

''இப்போது மட்டும் என்னை நீ தொடலாமோ?''

''அத்தான் சாட்சியாக! அவர் தெய்வம் இல்லையா? மனித தெய்வம்!''

''சரி சரி. இன்று நல்ல நாள், உடுத்திக்கொண்டு வாடா, தாம்பூலம் பெற!''

சோமுவைத் தொடர்ந்த ஜலஜா மணவாளனைக் கூர்ந்து நோக்கினுள். ''வெற்றி! வெற்றி!'' என்று அவர்கள் உள்ளம் காதல் கீதம் இசைத்தது.


வியர்வை வாடையை போக்கி நறுமணங் கமழுவது.

ஆண்டவர் ஜவ்வாது பவுடர்

TRADE MARK

லவ்லி பேக், அரகஜா, பத்தி & வாசனை திரவியங்கள்.

MFs:– ஆண்டவர் பர்பியூமரி, V.N. & சன்ஸ், திருச்சி-8.

# எனது பதவிகால அநுபவங்கள்

## V. குழந்தைவேலு B.A.

### முன்னாள் போலீஸ் துணை கமிஷனர் சென்னை.

நம்நாட்டிலேயே இப்பொழுது சிறந்த ஓவியர்களாகவும் கலையை வளர்ப்பவர்களாயுமுள்ள "பாலு சகோதரர்"களின் வேண்டுகோளுக்கிணங்கி இக்கட்டுரையை வரையலானேன்.

எனது பதவிக்கால அனுபவங்கள் என்ற தலைப்பில் என்னை எழுதித்தர வேண்டுமென்று எனது அன்பிற்குரிய திரு. பாலுசகோதரர்கள் வேண்டுகோள் விடுத்ததற்கிணங்கி நான் போலீஸ் இலாகாவில் பதவியிலிருந்த காலத்தில் நாட்டில் சட்டதிட்டங்களை நிலைநாட்டும் அதிகாரியாக பணியாற்றியபோது ஏற்பட்ட அனுபவங்கள் நூற்றுக் கணக்கானவைகளாக இருந்தபோதும் ஒரு சிலவற்றை மட்டும் கீழே குறிப்பிடுகின்றேன்.

அந்தக் காலத்திலே நம்நாடு ஆங்கிலேயரின் ஆட்சியிலிருந்தது. 1932-ம் வருடம் நான் சித்தூர் ஜில்லாவில் திருத்தணியில் பணியாற்றியபோது ஒரு பயங்கரக் கொலை நடந்தது. 'பனப்பாக்கம்' என்ற கிராமம்திருத்தணியிலிருந்து 10 மைல் தூரத்திலுள்ளது. அக்கிராமத்தின் கர்ணம் மாணிக்கம் பிள்ளை. தனக்கு நிகர் யாருமில்லை என்ற கர்வமுடையவர். நாளடைவில், அக்கிராமத்திலுள்ள அத்தனை பேர்களையும் தனக்கு விரோதியாக்கிக் கொண்டார். அவர் ஒவ்வொருவரையும் கோர்ட்டு வாசலுக்கு இழுக்க வேண்டுமென்று திட்டமிட்டு, அதன்படி தனக்கு வேண்டாத பலர் மீது பொய் வழக்குகள் போட்டு, தினமும் கோர்ட்டு வாசலுக்குச் சென்று வருவார்.

இவரை எப்படியாவது ஒழித்துக் கட்ட அக்கிராமத்திலுள்ள பெரும்பாலோர் முடிவு கட்டினர். எனவே, அவர்கள் சில ஆட்களைப் பணம் கொடுத்துத் தயார்செய்து வைத்திருந்தார்கள். அந்த ஆட்களின் தலைவன் பெயர் "அம்போதல கிட்டன்" இவன் சக்கிலி இனத்தைச் சேர்ந்தவனாயினும் பார்ப்பதற்கு பராக்கிரமமிக்க 'அசல் யமன்' மாதிரி இருப்பான்—அதாவது சினிமாப் படங்களில் வரும் யமதர்ம ராஜனைப் போலிருப்பான்.

சித்தூர் மாவட்டத்திலே இவனது பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே மக்கள் அஞ்சுவர். இவனைக் கண்டால் பத்து ஆட்கள் பயங்கர ஆயுதங்களுடன் ஒன்று சேர்ந்து வரினும் எதிர்க்க பயப்படுவர்.

ஒருதினம் அக் கர்ணம் "ஆதாவரம் அடுவி" என்ற பயங்கரக் காட்டின் வழியாக ஒரு கிராமத்திற்குச்சென்றுகொண்டிருந்தார். அக்காடு மிகவும் பயங்கரமானதும் அடர்ந்ததும் இருண்டதும், தொடர்ந்து 17 மைல்கள் நீளமுள்ளதுமாயுமிருந்தது.

அந்தக் கர்ணத்தைத் தொடர்ந்து அம்போதல கிட்டனும், அவனது ஆட்களும் பின்சென்று அங்குள்ள ஒரு புதரின் மறைவில் ஒளிந்துகொண்டனர். வழியில் ஒரு பள்ளமான வாய்க்கால். அக்காட்டுப் பாதையின் இருபுறங்களிலும் இருண்ட புதர்கள் உள்ளதால் அந்த பாதாளமான பள்ளத்தில் ஆட்கள் சென்றால், பாதையிலிருந்து பார்ப்பவர்களுக்குக்கூடத் தெரியாது.

கர்ணம் அவர்கள் பாதையின் மறுபக்கத்தைக் கடக்க அப்பள்ளமான வாய்க்காலில் இறங்கியதும் புதரில் மறைந்துள்ள அம்போதலகிட்டனின் ஆட்களிலொருவன் பின்னாலிருந்து அரிவாளால் கர்ணத்தை வெட்ட அவரது தலைவெட்டப்பட்டு 30 அடி தூரத்திற்கப்பாலுள்ள ஒரு இருண்ட புதரில் மாட்டிக் கொண்டது. ஒரே வெட்டில் தலை துண்டாகிப் பறந்திருக்கின்றது.

சில நாட்களில் கர்ணத்தை வெட்டப் பயன்படுத்தப்பட்ட அரிவாள் கிடைத்தது. 'பள பள' வென்று மின்னும் அக்கூர்மையான அரிவாளைப் போல வேறு எந்தப் பயங்கர ஆயுதத்தையும் நான் என் வாழ்வில் கண்டதில்லை.

சில காலமாக இக்கொலையைச் செய்தவர் யார் என்ற தடயம் கிடைக்காமலேயே இருந்தது. கடைசியில் அம்போதல கிட்டனும், அவனது ஆட்களும்தான் இக்கொலையைச் செய்திருக்கிறார்கள் என்ற தடயம் கிடைத்தது. அப்போதிருந்து அவன், அந்த இருண்ட காட்டிலேயே தனது சகாக்களுடன் தலைமறைவாக இருப்பது தெரிந்தது. இக்கொலைகாரர்கள் இக்காட்டில் இருக்கின்றார்களா என்பதைத் தெரிந்துவர, என் கீழ் பணியாற்றிய பலரையும் அனுப்பியும் அவர்கள் 'அவ்விடத்திற்குச் செல்ல அஞ்சி "அக்கூட்டம் அங்கு இல்லை" என்று பொய்க் கதைகள் அளக்கலானார்கள். இருப்பினும் மேலதிகாரிகள் எனக்குக் கட்டளையிட்டதினால் என்னை அறியாமல் ஒரு குருட்டுத் தைரியம் வந்தது.

தொடர்ந்து இரவு பகலாக நான் என் கீழுள்ள 5 போலீசார்களை அழைத்துக்கொண்டு பைத்தியம் பிடித்தவர்கள்போல் ஊணுறக்கமின்றி பன்னாட்கள் சுற்றிக்கொண்டிருந்தோம். ஒருதினம் கடும் இருட்டில் அம்போதலகிட்டனையும், அவரது சகாக்களையும் ஒரே சமயத்தில் நேருக்கு நேர் பார்த்துவிட்டோம். அவர்களை மிரட்டியும் பயனில்லாமல் எங்களுக்கும் அவர்களுக்கும் பெருத்த சண்டை மூண்டது.

என்னை எதிர்பாராதவிதமாக நேரடியாகத் தாக்கவந்த அம்போதல கிட்டனை கைத்துப்பாக்கியால் சுட்டபோது அவன் தன் வலக்கையால் தடுக்கவே அவனது வலது உள்ளங்கையில் தோட்டா அடிபட்டு பொத்துக்கொண்டு போயும்கூட அவனும் அவனது சகாக்களும் வெகுநேரம் ஓடினார்கள், ஓடினார்கள் ஓடிக்கொண்டேயிருந்தார்கள்.

முன்பின் அப்பயங்கரப் பாதைகளையும், இருண்ட புதர்களையும் கண்டறியாத நாங்கள் முட்செடிகள் நிறைந்த ஓர் புதருக்குள் சிக்கி, அதனின்றும் தப்புவது எங்களுக்குப் பெரிய காரியமாகிவிட்டது. எனினும், இயற்கை அன்னையால்படைக்கப்பட்டகொடிய செடிகளையும், மரங்களையும் கடந்து மிகச் சிரமப்பட்டு அவர்களைக் கைது செய்தோம்.

இறுதியாக இவர்களது வழக்கு சித்தூர் செஷன்ஸ் கோர்ட் ல் நடந்தது. அப்போது நீதிபதியாக இருந்த

ஆங்கிலேயர் நியூஷாம் என்பவர் கொலை செய்த மூவருக்கும் தூக்குத் தண்டனை விதித்தார். எல்லோராலும் வெறுக்கப்பட்ட கர்ணம் இறந்தது அனைவருக்கும் சந்தோஷத்தைக் கொடுத்தாலும் அந்தப் பாதக மனிதனைக் கொலைசெய்த மூவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதை அறிந்த அவ்வூர் மக்கள் கவலை கொண்டார்கள்!

(திரு. நியூஷாம் அவர்கள் பிறகு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாகவுமிருந்தார்) இப்பயங்கர நிகழ்ச்சி நேற்று நடந்தது போலிருக்கின்றது. எனது பதவிக்கால அனுபவங்களில் ஏற்பட்ட ஒரு சில பயங்கர நிகழ்ச்சிகளில் இதுவுமொன்று.

1934-ஆம் ஆண்டு நான் மதனப்பள்ளியில் (தற்பொழுது ஆந்திராவைச் சேர்ந்தது) போலீஸ் அதிகாரியாகப் பதவியிலிருந்த காலத்தில் நம் நாட்டில் சகல வசதிகளுடனும் கூடிய யூனியன் மிஷன் ஸானிடோரியம் ஆஸ்பத்திரி **(Union Mission Sanatorium Hospital)** என்பது உலகிலேயே சிறந்த ஆஸ்பத்திரியாகும். காரணம் இந்த ஆஸ்பத்திரி அமைந்துள்ள இடத்தில் எந்நேரமும் தூய காற்று அடித்துக் கொண்டே இருக்கும். இங்கு தனித்தனியாகக் கட்டப்பட்ட சகல வசதிகளுடனும் கூடிய சிறிய குடிசைகள் நிறைய உள்ளன. இதற்கு வாடகை ஒவ்வொன்றுக்கும் ரூ. 250 ஆகும். பொதுவாகப் பெரும் பணக்காரர்களே இங்கு வந்து தங்குவர். ஒவ்வொரு குடிலைச் சுற்றிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கும் தட்டிகளாலான சன்னல்கள் உள்ளன.

தங்குவோர் பாதுகாப்பில்லாத இக்குடிசையிலும் தங்களது விலையுயர்ந்த பேனுக்கள், கடியாரங்கள், ரேடியோக்கள், துணிமணிகள் மற்றும் சகலவித உயர்ந்த பொருட்களையும் வைத்திருப்பார்கள்.

பல மாதங்களாக இத்தகைய பொருள்களை இரா நேரங்களில் திருடிச் சென்று கொண்டிருந்தனர் மூன்றுபேர்கள் அடங்கிய கொள்ளைக் கூட்டத்தினர். மதனப்பள்ளியில் எனக்கு முன்னிருந்த போலீஸ் அதிகாரிகள் இந்த ஆஸ்பத்திரியில் வேலை செய்கின்ற ஆட்களே திருடி வருகிறார்கள் என்று தப்பாக நம்பி வந்தார்கள். ஆஸ்பத்திரி டாக்டர்களும், மற்றும் பணக்கார நோயாளிகளும் அதையே நம்பினார்கள். ஆனால் அவர்கள்மீது ஒரு வழக்குக்கூடப் போட முடியவில்லை.

அப்போது சித்தூர் டி. எஸ். பீ. ஆக இருந்த திரு. வீ. சுப்பராயன் அவர்கள் இந்தத் திருட்டுக் கூட்டத்தினரைப்பிடித்துத்தரும்பொறுப்பை எனக்குக் கொடுத்தார்,

இதே வேலையாக, இரவு பகலென்றும் பாராமல் தொடர்ந்து பல நாட்கள், இரு போலீஸ்காரர்களுடன் முழு மூச்சுடன் இறங்கினேன். இந்த ஆஸ்பத்திரியின் குடிசைகளிலேயே நோயாளிகள் போன்று நானும் எனது சகாக்களும் மாறுவேடங்களில் படுத்திருந்தோம். உறங்காது ஊக்கமுடன் இப்படி இருந்து வந்தும் ஒன்றும் தடயம் கிடைக்கவில்லை. ஏன் என்று என்னால் தீர்மானிக்கவும் முடியவில்லை. என்றாலும் விடாமுயற்சியுடன் இதே வேலைகளில் இறங்கினோம்.

மதனப்பள்ளியிலிருந்து 6-வது மைலிலுள்ள ஒரு கிராமத்தில் விலையுயர்ந்த கால்சட்டை **(Full pant)** ஒன்று விற்கப்படுவதாக கேள்விப்பட்டேன் அதையே ஆதரமாக வைத்துக்கொண்டு அங்கு சென்று விசாரித்ததில் "போலுகாடு" என்ற ஒருவன் தனது சகாக்களுடன் அங்கு அந்த கால் சட்டையை விற்றதாகத் தெரிந்தது.

பல கொள்ளையடி வழக்குகளின் காரணமாக "போலுகாடு"வும், அவனது சகாக்களும் என்னால் தேடப்பட்டு வந்தவர்கள்.

மதனப்பள்ளியிலிருந்து 10-வது மைலிலுள்ள ஒரு கிராமத்தில் தனது அபிமான நாயகி ஒருத்தியின் வீட்டிற்கு 'போலுகாடு' அடிக்கடி சென்று வருவதாகத் தெரிந்து ஒரு நாள் இரவு அவன் உள்ளே இருந்த சமயம் நானும், நம்பர் 210 "பாலேடி" என்ற போலீஸ்காரரும் (தற்போது அவர் சித்தூர் மாவட்டத்தில் எச். சி. யாகப் பணியாற்றி வருகிறார்) இரவு 2 மணிக்கு உள்ளே புகுந்து 'போலுகாடு'வைக் கைது செய்யாமல், உடனே சுமார் 4 மைல்கள் அவனை நடக்கவைத்து விடியும் தருவாயில் ஒரு பரந்த வெளியை அடைந்தோம்

அவனை கீழே உட்காரச் சொல்லி, அவன் சற்றும் எதிர்பாராத வகையில், எங்கோ பார்த்துக்கொண்டிருந்த சமயம் அவனது முதுகில் நான்கைந்து உதைகள் கொடுத்தேன். உண்மையை கூறாவிடில் அந்த இடத்திலேயே குழி தோண்டி உயிரோடு புதைத்து விடுவதாக மிரட்டினேன். நடுங்கிய அவன் எங்களை பல கிராமங்களின் வழியாக அழைத்துச் சென்று, இறுதியாக வற்றிப்போன பெரிய ஏரியின் பள்ளத்திற்கு அழைத்துச் சென்று தண்ணீர் செல்லும் ஒரு மதகுக் கடியில் குழி தோண்டி, நன்றாக மூடப்பட்ட நான்கு பெரிய பானைகளை தோண்டி எடுத்தான் அப்போது மிக நன்றாக விடிந்துவிட்டது. அந்தப் பானைகளை ஒவ்வொன்றாகத் திறந்து பார்த்தபோது, உள்ளே கடிகாரங்கள், பேனுக்கள், துணிமணிகள், மற்றும் பல விலையுயர்ந்த சாமான்கள் இருந்தன.



பிறகு பக்கத்துக் கிராமத்திற்கு அவன் எங்களை அழைத்துச் சென்றான். நல்ல சோளம் விளையும் பூமிக்கடியில் தோண்டி நிறைய பானைகளை எடுத்தான். இப்படியே பல இடங்கள் தோண்டப்பட்டு பானைகளை வெளியேற்றினோம்.

மூன்று இரட்டை மாட்டு வண்டிகளில், இந்தப் பானைகளை ஏற்றி வழி நெடுக தண்டோரா அடித்துக்கொண்டு மதனப்பள்ளி வந்தடைந்தோம்.

அடுத்தாற்போல், 'போலிகாடு'வின் உதவியால் அவனது இரு சகாக்களையும் கைது செய்தேன். இந்த நிகழ்ச்சியைப் பற்றி இந்த ஆஸ்பத்திரியிலுள்ள அனைவரும் கதை கதையாகப் பேசிவந்தார்கள்.

இந்த ஒரே காரணத்திற்காக என்னை சென்னைக்கு 1936-ம் ஆண்டு "ரகசிய போலீஸ் அதிகாரியாக" ஸி.ஐ.டி. மாற்றினார்கள் ஆங்கிலேய அரசினர். அப்போது ஆங்கி

லேயரது ஆட்சியாகையால் சாதாரண ஆட்களை ரகசிய போலீஸ் இலாக்காவிற்கு எடுப்பதில்லை, இந்த இலாக்காவிற்கு ஆங்கிலேயரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நான் இந்தக் காலத்தில் தான் எண்ணற்ற கட்சித் தலைவர்களையும் தொழிலாளர்களின் தலைவர்களையும் மற்றும் முக்கியஸ்தர்களையும் சந்தித்துப் பழகவேண்டிய நிலை ஏற்பட்டது.

அக்காலத்தில் காங்கிரஸ்காரர்கள் தான் ஆங்கிலேயர்களின் ''மூதல்'' எதிரிகள்; காங்கிரஸ் தலைவர்களின் தீவிர நடவடிக்கைகளையும், போராட்டங்களையும், பலகாலம் மாறுவேடத்தில் இருந்தே கவனிக்க வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது.

நான் போலீஸ் அதிகாரி என்ற முறையில் யாரிடமும் பழகுவதுகிடையாது. எவரையும் கண்டமாத்திரத்தில் களிப்பூட்டி வேடிக்கையாகப் பேசி, ஆனால் கடமையையே கருத்தில் ஊன்றி, காலத்திற்கு ஏற்றாற்போல் எதையும் சமாளித்து சாதிப்பேன். இதனால் பல கட்சித் தலைவர்களும் எனக்கு நண்பர்களாயினர். அவர்களது தீவிர திட்டங்களையும், நடவடிக்கைகளையும் என்னிடம் முன்கூட்டியே கூறிவிடுவார்கள். உடனே நானும் அவைகளை எனது மேலதிகாரிகளுக்குத் தெரிவித்து, நாட்டில் தகாதவை ஏற்படுவதிலிருந்து தடுத்திருக்கிறேன் பல சமயங்களில்!

இதன் காரணமாக அந்தக் காலத்தில் கவர்னர் - ஜெனரலாக இருந்த லார்டு வேவல் அவர்கள், தன் பெயர் பொறிக்கப்பட்ட ஒரு பரிசைக்கொடுத்தார். இதுவன்றி பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் எனக்கு 1946ம் வருடம் (Indian Police Medal) என்னும் தங்கப் பதக்கம் ஒன்றையும் கொடுத்து, உத்தியோக உயர்வும் அளித்தனர்.

1946ம் ஆண்டு நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருவாரூரில் போலீஸ் அதிகாரியாக பணியாற்றியபோது, அவ்வூர் முனிசிபல் கௌன்சிலர் ஒருவர் (பெயரை குறிப்பிட விரும்பவில்லை) தனது சகோதரியின் நகைகளைதானே எடுத்து வைத்துக்கொண்டு, வேறு யாரோ அந்த நகைகளை திருடிக்கொண்டு போய் விட்டதாக பொய் வழக்கு கொடுத்திருந்தார். ஆரம்பத்தில், இந்த கௌன்சிலர் செல்வந்தராதலால், இவரது ''பிராதை'' நம்பி விசாரிக்கின்ற சமயத்தில், இவரே அந்த நகைகளை எல்லாம் ஒளித்து வைத்திருக்கிறார் என்று எனக்கு தகவல்கிடைத்தது கௌன்சிலரை இதுபற்றி நான் நேரில் அவரது வீட்டில் சந்தித்து கேட்டபோது என்னை மரியாதைக் குறைவாகத் திட்டிவிட்டார். பொறுமைசாலியான என்னால் அவரது வார்த்தைகளை கேட்ட பிறகுபொறுத்திருக்கமுடியவில்லை. பலத்தை எல்லாம் ஒன்று திரட்டி அவரை நொறுக்கினேன். அப்போது நான் 30 வருடங்களாக கட்டி வந்த தங்கச் சங்கிலியுடன்கூடிய தங்க (Keep sake) கைக் கடிகாரம் பொடியாகி விட்டது.

நான் அடித்துவிட்டதாக திரு. கௌன்சிலர் நாகை A. F. C. M. கோர்ட்டில் வழக்குத் தொடர அது தள்ளுபடியானது. மேற்கொண்டு தஞ்சாவூர் செஷன்ஸ் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். அங்கும் அந்த கேசு தள்ளுபடியானது. கடைசியாக ரிவிஷனுக்கு (Revision) சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

அப்போது நான் சென்னையிலேயே உதவி போலீஸ் கமிஷனராக பணியாற்றி வந்தேன். அந்த வழக்கு நீதிபதி திரு. கோவிந்தமேனன் அவர்கள் முன்னிலையில் நடந்தது. நீதிபதி அவர்கள் என்னைப்பற்றி நன்கு தெரிந்தவராதலால், நான் எல்லோரிடமும் அன்பாக நடந்து கொள்பவன்' என்று வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு நான் புதிய மனிதனாகி ''காந்திஜி''யைப்போல அஹிம்சா கொள்கையைக் கடைப்பிடித்து பணியாற்றி வருவதில் பெயரெடுத்தேன்.

அதன் பிறகும் நான் சென்னையில் உதவிபோலீஸ் கமிஷனராக Asst. Police Commissioner) ஆக பல ஆண்டுகள் அதாவது (1948-1953) ஆறு வருடங்கள் தொடர்ந்து பணியாற்றினேன். அப்போது நான் ஓய்வு ஒழிவின்றி பணியாற்றியதால் இச் சென்னை மாகாணத்திலுள்ள அத்துணை முக்கியஸ்தர்களையும், கட்சித் தலைவர்களையும் நேரில் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

எனது சேவைகளை உணர்ந்து என்னை மீண்டும் அதே உத்தியோகத்தில் பணியாற்றும்படி போட்டார்கள் போலீஸ் இலாக்காவின் சரித்திரத்திலேயே இதே உத்தியோகத்தில் தொடர்ந்து இருமுறை பணியாற்றியவன் நான் ஒருவன்தான்.

இந்த ஆறு வருடங்களும், தொடர்ந்து, நான் பிலிம் சென்சார் போர்டுக்குத் தலைவரான போலீஸ்கமிஷனருக்குசெயலாளராக பணியாற்றினேன். செயலாளர் என்ற முறையில் நூற்றுக்கணக்கான தமிழ், தெலுங்குப் படங்களைப் பார்த்து, ''பொதுமக்களுக்குக் காட்டலாம்'' என்ற நற்சாட்சி பத்திரங்கள் வழங்கியிருக்கிறோம். இச் சமயத்தில்தான் சென்னை, ஆந்திர மாகாணங்களிலுள்ள எல்லாப் படத் தயாரிப்பாளர்களும், நடிக நடிகையரும் எனக்குப் பழக்கமானார்கள்.

அப்போது தெலுங்குப் படத் தயாரிப்பாளர்களில் இருவர் ஒரு கதையை போட்டியிட்டுக்கொண்டு படமாக்கிக் கொண்டிருந்தனர். ஒன்று ''லக்ஷ்மம்மா கதா'' என்பது மற்றொன்று ''லக்ஷ்மம்மா'' என்பது இவைகளில் ஒருபடம் எடுக்கப்பட்டு முடிவடைந்ததும், வெளியிட சென்ஸார் போர்டில் போட்டு காட்டினார்கள். அந்தப் படத்தில் படுக்கை அறை காட்சிகள் இயற்கையாகவும், ஆபாசமாகவும் எடுக்கப்பட்டிருந்தன. உடனே அப்பகுதியை வெட்டி எடுத்தெறிந்து, பொதுமக்களுக்குக் காட்டும்படி அனுமதி கொடுத்தோம். படம்வெளிவந்த ஒருமாதத்திற்கு பின்னர் நெல்லூர், குண்டூர், அனந்தப்பூர், பெல்லாரி மாவட்டங்களிலும், அதைச் சேர்ந்த பிரதேசங்களிலும் வெட்டப்பட்ட படுக்கை அறை காட்சிகளும் காட்டப்பட்டு வருவதாக வதந்திகள் உலாவின.

அரசாங்கம் இதைக் கண்டு பிடிக்குமாறு எனக்கு கட்டளையிட்டிருந்தது. நான் யாரிடமும் சொல்லாமல் என் காரை எடுத்துக்கொண்டு, நெல்லூரைச்சேர்ந்த கூடூரில்டிரங்ரோடில் அமைந்துள்ள தியேட்டரில்இப்படத்தைப் பார்த்தேன். நான் இப்பகுதிகளில் முன்னமேயே பணியாற்றி வந்திருந்ததால், காரை வெகு தூரத்தில் உள்ள ஒரு மரத்தடியில் நிறுத்தி விட்டு, எப்போதும் ஆந்திரர்கள் போட்டுக்கொள்ளும் உடைகளை அணிந்துகொண்டு, மாறுவேடத்தில் சென்று டிக்கட் வாங்கி படத்தைப் பார்த்தபோது வெட்டப்பட்ட படுக்கையறைகாட்சிகள்காட்டப்பட்டன. அப்போதுதான் புதிதாக உத்தியோகத்திற்கு வந்திருந்த திரு. வி. கார்த்திகேயன் சப்-கலெக்டர் (தற்போது சென்னை மாகாண விவசாயத்துறை டைரக்டராக பணியாற்றி வருகிறார்) அவர்களைச் சந்தித்துப் பேசி, அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் செய்தேன். உடனே அரசாங்கம் இந்தச் சினிமாப் படத்திற்கு தடை உத்திரவும், இனி காட்டவும் கூடாது என்று உத்திரவுகளும் போட்டது. இதனால் இந்தப் படத் தயாரிப்பாளருக்கு பல லட்ச ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டன. இந்த அதிர்ச்சியினால் இந்தப்படத்தயாரிப்பாளர் மாரடைப்பால் மாண்டுபோனார்.

திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் அப்போது முதன் மந்திரியாக இருந்த சமயம். மூதன் முதலாக சினிமாத் துறைக்கு அறிமுகமாக என் நண்பர் திரு. சிவாஜி கணேசன் அவர்கள் நடித்த, ''பராசக்தி'' என்ற படம், ஒருசிலரின் மனதைப் புண்படுத்துவதாக ஆக்கப்பட்டிருக்கிறது என்ற காரணம் காட்டி இப்படத்தைக் காட்டக் கூடாது என்று பலத்த எதிர்ப்பு இருந்தது. எல்லா முக்கிய

தலைவர்களும், பெரும் அதிகாரிகளும் இந்தப் படத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

திரு. மு. கருணாநிதி அவர்கள் எழுதிய இக்கதை ஒரு இனத்தைத் தாக்குகிறது என்றும் எதிர்த்தார்கள். ஆறு தடவைகள் இந்தப் படம் சென்சார் போர்டில் பல முக்கியஸ்தர்கள் முன்னிலையில் போட்டுக் காண்பிக்கப்பட்டது. நான் போராடி இறுதியில் ஒரு பகுதிகூட வெட்டப்படாமல், ''படம் முழுதும் காட்டலாம்'' என்று அனுமதி வாங்கிக் கொடுத்தேன். அப்போது தமிழ்நாட்டில் இப்படத்தைக் காண்பிக்கக் கூடாது என்று முடிவாகிவிட்டது என்று வீண் புரளிகள் கிளம்பியதாலும், இச்செய்தி எல்லா பத்திரிக்கைகளிலும் வெளியானதாலும் மக்கள் பெரு ஆர்வத்துடன் இந்தப்படத்தைப் பார்த்தனர். இந்தப் படத்தின் மூலம்தான் திரு. சிவாஜிகணேசன் தமிழ்ப்பட உலகிற்கு அறிமுகமாகிப் புகழ்பெற்றார்.

மற்றொன்று முதன் மந்திரியாக இருந்த திரு. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ''சட்டசபை அங்கத்தினர்கள் யாரும் அதிகாரிகளை அணுகி எந்தக் காரியத்தையும் சாதிக்க முயலக் கூடாது' என்று அறிக்கைவிட்டிருந்தார். அந்த அறிக்கைகள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்தன. இதனால் போலீஸ் இலாக்காவில் புரட்சிகரமாக பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. போலீஸ் அதிகாரிகளும், தைரியமாகவும், ஊக்கமாகவும், நேர்மையாகவும் தம் தம்கடமைகளை கண்ணியமாகசெய்ய வாய்ப்பு ஏற்பட்டது.

ஈ. வே. ரா. பெரியார் அவர்கள் 1936ம் ஆண்டு தொடக்கத்திலிருந்து எனக்கு நெருங்கிய பழக்கமானவர்; எனது நண்பரும்கூட. அப்போதிருந்த நான் சி. ஐ. டி, போலீஸ் அதிகாரியாக இருந்த சமயம் முதற்கொண்டு அவர் தன் திட்டங்களை முன்கூட்டியே சொல்லிவிடுவார். அவைகளை நானும் உடனுக்குடன் அரசாங்கத்திற்கும், எனது மேலதிகாரிகளுக்கும் தெரிவித்துவிடுவேன். இதனால் பெரியாரின் கிளர்ச்சிகள் பல நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்படாதபடி பாதுகாக்க ஏதுவாக இருந்தது.

9-7-1949-ம் தேதி ஈ. வெ. ராமசாமிப் பெரியார் அவர்கள் திருமதி மணியம்மையைப் பதிவுத் திருமணம் செய்து கொள்வது பற்றி முன்கூட்டியே தெரிந்து கொண்ட ஒரு சிலரில் நானும் ஒருவன்.

1950ம் ஆண்டு திடீரென்று அவரது கிளர்ச்சிகள் காரணமாகஅவரை ரகசியமாகக்கைது செய்ய வேண்டும் என்றுஉத்திரவு வந்தது. பெரியார் அவர்களை அன்புடன் அழைத்துக் கொண்டு என் ஆபீஸ் பக்கத்து அறையில் உட்கார வைத்து அவரது திட்டங்களைப் பற்றியும், மற்றும் கிளர்ச்சிகள் பற்றியும் அவரோடு பேசிக் கொண்டிருந்தேன்.

இந்தச் செய்தி எப்படியோ பத்திரிகை நிருபர்களுக்கு எட்டிவிட்டது. எனது ஆபீஸ் அறை ஜன்னல்கள் வழியாக பெரியாரைப் பார்த்த அவர்கள், நான் ஆபீசை விட்டு வெளியே வந்தபோது ''ஏன் பெரியாரைக் கைது செய்திருக்கிறீர்கள்" என்று கேட்டார்கள். பெரியார் கைது ஆக்கப்பட்டதே ரகசியமாதலால் அவர்களிடத்தில் உண்மையை மறைக்க வேண்டியதாயிற்று.

சென்னை சென்ட்ரல் ரயில்வே போலீஸ் இன்ஸ்பெக்டராக பணியாற்றி ஓய்வுபெற்ற — நாராயணசாமி நாயுடு என்பவர் பெரியாரைப் போலவே அசல் உருவம் கொண்டவர். (சேலமாவட்டத்தைச் சேர்ந்த செங்ககிரி இவரது சொந்த ஊர் இவர் 1960-ல் காலம் சென்றார்) அவரது நினைவு எனக்கு வரவே, ''நாராயணசாமி நாயுடு'' என்பவர் என்னிடம் பேசிக்கொண்டிருக்கிறார் ''பெரி


வாடிக்கைக்காரர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எங்கள் இதயம் நிறைந்த தீபாவளி வாழ்த்துக்கள் ○ உங்களுடைய தேவைகளுக்கு ஏற்ற

**களிங்கா**

தண்ணீர் குழாய்கள், (கல்வனைஸ்ட்டும் கருப்பும்)

விவரங்களுக்கு : விநியோகஸ்தர்கள்

சென்னை, விசால ஆந்திரா, கர்நாடகம், (மைசூர்) கேரளா, பாண்டிச்சேரி ஆகிய ராஜ்யங்களுக்கு

**ஸவுத் இந்தியா கார்பொரேஷன்**

(ஏஜன்சீஸ்) பிரைவேட் லிமிடெட்

6, அரண்மனைக்காரன் தெரு, தபால்பெட்டி எண். 113. சென்னை-1.

தொலைபேசி 22641 (4 லைன்கள்) தந்தி: குட்வில்.

பம்புகள் விற்பனை நிலையம்: வாணியர் தெரு, சென்னை 1.

கிளைகள் : 60-பி, ஹஸ்மான் கான்ரோட், பங்களூர் - 2. தொலை பேசி 3524 (கிடைக்கும்)

4-2, ரேஸ் கோர்ஸ் ரோட், கோயம்புத்தூர்-1. தொலை பேசி 3552

42, கிருஷ்ணாராவ் டாங்க் தெரு, மதுரை-1. தொலை பேசி 699 (கிடைக்கும்)

2, ராஷ்டிரபதி ரோட் - செகந்திராபாத் - 3 தொலை பேசி 74591

சி. வி. ரெட்டி தர்மசாலைக் கட்டிடம், 13-90, பதி தெரு, விஜபவாடா - 1. தொலைபேசி : 1251

யார் அல்ல'' என்று சொன்னேன்! அதை நம்பி, அதை அப்படியே போட-பத்திரிகைகளிலும் செய்திகள் வெளி வந்தன,

பிறகு பெரியார் என்னால் கைது செய்யப்பட்டார் என்ற சேதிகள் அறிந்து, பத்திரிகை நிருபர்கள், ''நான் அரசாங்கத்திற்காக கடமை தவறாது பணியாற்றி வருகிறேன்'' என்று என்னைப் புகழ்ந்து சென்றார்கள்.

17-9-1961 ந் தேதி சென்னை ''ஆபட்ஸ்பரி''யில் பெரியார் பிறந்த தின விழாவில், அவர் என்னைப் பற்றி குறிப்பிட்டுப் பேசுகையில், அவர் சுமார் 18 தடவைகள் கைது செய்யப்பட்டார் என்றும், அவைகளில் பெரும்பாலும் நான்தான் பலமுறை கைது செய்திருக்கிறேன் என்றும், கடைசியாகவும் தன்னை, நான்தான் கைது செய்து ஜெயிலுக்கு அனுப்பி இருக்கிறேன் என்றும் பேசினார்

அவர் பேசியது முற்றிலும் உண்மையே. பெரியார் அவர்கள் என்னதான் திட்டங்களை வெகு ரகசியமாக உருவாக்கி வந்தாலும், என்னைக் கண்டதும், தன்னையே மறந்து, உள்ளபடியே தன் திட்டங்களை முன் கூட்டியே கூறிவிடுவார்.

அவரைக் கைது செய்த போதெல்லாம் நான் அவரிடம் அளவிலா அன்பு கொண்டு, மரியாதையாகவும் எனது தந்தையைப்போலவும் பழகிப் பாதுகாப்பேன். அதனால் அவரும் என்னிடத்தில் தனி அன்பு காட்டுவார்.

என் அனுபவத்திலேயே நான் கண்டு பழகிய பல தலைவர்களைக் காட்டிலும், அவரிடத்தில் உயர்ந்த ஒரு வசீகர சக்தி இருந்து வருவதை உணர்ந்தவன். மேலும் அவர் ஆரம்ப முதல் ஒரு கட்சியை உருவாக்கி, அதே கட்சிக்கு தொடர்ந்து பல வருடங்களாக அவரே தலைவராக இருந்து வருவது உலகத்திலேயே எப்போதும் இல்லாத ஒரு விந்தையாகும். உலகத்திலே உள்ள எந்த கட்சித் தலைவருக்கும் இல்லாத பெரும்புகழும், அந்தஸ்தும் அவருக்கு இருந்து வருவதை யாரும் மறுக்க முடியாது.

நான் எல்லா கட்சித் தலைவர்களிடமும் அன்புகொண்டு, சமமாகப் பழகுவதால், என்னை எல்லோருக்கும் பிடிக்கும். ஆகவேதான் அவர்களும் அவர்களது திட்டங்களைப் பற்றி என்னிடம் முன்கூட்டியே சொல்லிவிடுவார்கள். தி. மு. க. வில் உள்ள, படித்துப் பட்டம் பெற்ற பலரிடம் நான் நெருங்கிப் பழகியதால் நான் தி. மு. க.வை ஆதரிப்பவன் என்று கூட சிலர் வதந்திகள் கிளப்பினார்கள். ஆனால் அது உண்மையல்ல. என் நண்பர்கள் எல்லாம் சகல கட்சிகளிலும் இருக்கிறார்கள். ஆகவே நண்பர்களிடத்திலே அன்பாகவும், நெருங்கியும் பழகும் வாய்ப்புக் கிடைத்தது.

குறிப்பாகக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களிலே திரு. பி. ராமமூர்த்தி M. P., திரு. பி. ஜீவானந்தம், திரு. எம். ஆர். வெங்கடராமன், கிசான் தலைவர் மணலி கந்தசாமி ஆகியோர் எனது நண்பர்கள்.

திரு. மணலி கந்தசாமி அவர்கள் இரகசியமாக திட்டங்கள் வகுத்து கிளர்ச்சிகள் செய்வதிலே தனித் திறமை படைத்தவர். அரசாங்கத்திற்கே அவரைப் பற்றி திகில் இருந்து வந்தது. அவர் ஒன்பது ஆண்டுகளுக்கு முன் வெகுகாலம் தலைமறைவாக இருந்து மாறுவேடங்களில் மக்களிடையே உலாவி வந்தார். அவரைக் கைது செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தினர் ஆணைவிடுத்திருந்தார்கள். எனக்கும் தனியே உத்திரவு வந்திருந்தது. அவர் எனக்கு வெகுகாலமாக நண்பர் ஆதலால், அவரே ஒருநாள் திடீரென்று என் முன் ஆஜரானார். அவரிடம் மிகவும் அன்புடன் நடந்து கொண்டேன். அவருக்கு என் மீது தனி அன்பு உண்டு.

நான் 1958–59 ஆண்டுகளில் தஞ்சை மாவட்ட போலீஸ் சூப்ரண்டாக இருந்தபோது, தஞ்சை மாவட்டம் எப்போதுமே கிஸான் தொந்திரவுகள் உள்ள இடம்.—திரு. மணலி கந்தசாமி அவர்கள். நட்பின் காரணமாக எந்தவித கிஸான் தொந்திரவுகளும் இல்லாமல் நடந்து கொண்டு தனி அக்கறை காட்டினார். நான் இருந்த இச் சமயத்தில் கிஸான்கள் கிளர்ச்சிகள் இல்லை என்பது அரசாங்கத்திற்கே ஆச்சரியத்தை உண்டாக்கி இருந்தது.


1959-61 ஆகிய ஆண்டுகளில் சென்னை துணைபோலீஸ் கமிஷனராக நான் இறுதியாக இருந்தபோது உலகப் பிரமுகர்கள் பலர் சென்னைக்கு விஜயம் செய்திருந்தார்கள்.

ரஷ்யஜனாதிபதி (President) பிரிட்டனின் ராணி எலிசபெத் மற்றும் உலக பெரிய தலைவர்களும் வந்திருந்தார்கள். அப்போதெல்லாம் சென்னையில் எந்தவித தகராறுகளும் ஏற்பட்டுவிடாதபடி நானும் எனது சகாக்களும் பாதுகாத்து வந்திருக்கிறோம். நமது நாட்டின் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்கள் என் சேவையை பாராட்டி இருமுறை எனக்கு பரிசுகள் வழங்கி இருக்கிறார்.

நான் இப்போது ஓய்வுபெற்றுக் கொண்டாலும் எனது சகல நண்பர்களும் என்னைச் சந்தித்த வண்ணமாக இருக்கிறார்கள். பழக்கமும் அன்பும் என்றும் அப்படியே என்னிடத்தில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனால் இப்போது எனக்கு எண்ணற்ற அலுவல்கள் இருந்த வண்ணமாக இருக்கின்றன. நான் உத்தியோகத்திலிருந்த காலத்தில் எனக்கு ஒரு சில நிமிடங்கள் ஓய்வு கிடைத்துக்கொண்டிருக்கும். இப்போது அதுகூட கிடைப்பதில்லை, ஏன் என்றால் நான் என் உத்தியோகத்தைக் கடனே என்று கருதிச் செய்பவில்லை. அதைக் கடமையாகவே கருதிச் செய்தேன். அதனால் தான் பலருக்கு கசக்கும் பதவிக்கால அனுபவங்கள் எனக்கு மட்டும் திகட்டாத தேனாக இனிக்கிறது. நினைத்துப் பார்க்கும்போதெல்லாம் நீங்காத இன்பத்தைத் தருகிறது.

தந்தி : குருக்யூர்ஸ். த. பெ. 22. போன் : 248.

குரு மருந்துகள் அபூர்வ சஞ்சீவி
60 வருஷ பேரும் புகழும் பெற்றது




ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை

டாக்டர் ஏ. மதுரம் சன்ஸ்,

குரு மருந்துசாலை – திருச்சிராப்பள்ளி-1.

# கொள்கை இல்லாத நெஞ்சு

**ராதா**

இந்தப் பாவைக்குத் தேவர் அமிழ்தமே தேனூறும் இதழ்களாக இருந்தன. காதளவு நீண்ட விழிகள் காலனின் தூதுவர்கள்போல காணுகின்ற இளைஞர்கள் அத்தனைபேரையும் வாட்டி வதைத்தன. பாண்டிய மன்னனுடைய படை வரிசையில் உள்ள பட்டத்து யானையின் கோடுகளைப்போன்றே கூரிய இவளது இளமைகள் இரண்டும் குத்த வரும் ஈட்டி களாக இருந்தன.

இப்படிப்பட்ட இந்தக் காமவேளின் படைக் கருவி, ஒருநாள் பொய்கைக் கரைக்குச் சென்றபோது அங்கு தனக்கு ஏற்ற இளைஞன் ஒருவனைக் கண்டாள். பொய்கையில் பூத்த தாமரைமொட்டு ஒன்றை இந்தப் பூக்காத மொட்டு பறிக்க முயல, அந்தக் காளை தானே கயத்தில் மூழ்கி அந்தக் கன்னியின் விருப்பத்தை நிறைவேற்றினான். பூப் பறித்துத் தரு வதிலே துவங்கிய இந்த உறவு பிறகு அவளுடைய பூப்போன்ற கொங்கைகளிலே தொய்யில் எழுதும் அளவிற்கு வளர்ந்தது.

ஆனால் இது பழங்கதை. இன்றோ அவள் தனியள். ஒரு காலத்தில் அவளுடைய குவடுபட எழுந்த மார்பகத் தில் முகம் புதைத்துக் கிடந்த அவன் இன்று வேறு ஒருத்தியின் இளமை நலன் உண்ணச் சென்றிருந்தான்.

முதல் நாள் அந்தப் பன் மாயக் கள்வனைக் கண்ட அதே பொய்கைக் கரையில் இன்று குடத்துடன் இருந்த அவள் பழைய நிகழ்ச்சிகளை எல்லாம். தானே தன் காதலனிற்கு மலர்ப்படுக்கையான அந்தப் பழங் கதையை எல்லாம் ஒருமுறை எண்ணிப் பார்த்தாள். எனவே அந்தச் சோகத்திலும் அவளுடைய முகத்தில் ஒரு சோபை படர்ந்தது. கண்கள் கள்ளுண டவளைப்போல உணர்ச்சி அலைகளால் சிறுத்து, எழில் மார்புகள் மட்டும் விம்மி விம்மித் தாழ்ந்தன.

ஆனால் அடுத்த விநாடியே அழகிய அல்குலை உடைய கொடிபோன்ற பரத்தையின் மார்பிலே தன்னுடைய மார் பிலே பூசிய சந்தனம் அழியும்படி பண்பற்றுப் புதைந்து கிடக்கும் அக்கொடியவன் அவளுடைய மனக்கண்களிலே தோன்றி விடவே "வரட்டும்! வரட்டும்! வந்தால் ஒரு கை பார்த்து விடுகிறேன்" என்று சீறினாள். ஆனால் அந்தச் சீற்றம் முடி வதற்குள்ளேயே அவளுடைய நெஞ்சு அந்தக் கள்வனோடு கூடுவதற்குத் தவித்தது. உடனே "இந்தக் கொள்கை அற்ற நெஞ்சு ஏன் இப்படிக் கிடந்து தவிக்கிறது!" என்று அக் கன்னியின் சீற்றம் அவளுடைய பேதை நெஞ்சின் மீதே திரும்பி யது. இதனையே காதல் சுவைமிக்க கலி,

"கோடுஎழில் அகல்அல்குல் கொடியன்னார் முலைமூழ்கிப்
பாடுஅழி சாந்தினன் பண்பின்றி வரின்,எல்லா!
ஊடுவேன் என்பேன்மன்? அந்நிலையே அவற்காணின்
கூடுவென் என்னும்இக் கொள்கைஇல் நெஞ்சே"

என்ற அழகிய சொல்லோவிய மாக்கியுள்ளது. அதனையே நாம் இங்கு மூவண்ண இலக்கிய ஓவியமாக்கியுள்ளோம்.




‘இப்படியாப்பட்ட புள்ளேயோட ஈடு குடுக்கறதுன்னு... கைகொள்ளாத வேலே தான் போங்க. பயலேப் பளிச்சுன்னு சுத்தமா வெச்சுக்கணும்னு, எப்பப்பாருங்க, துணி தொவக்கற வேலேதான்...

‘நல்ல வேளே, ஸன்லேட்தான் தெனம் காப்பாத்துது: வளப்பமா நுரை... துப்புரவாத் துணி வெளுக்குது தொல்லேயில்லாம. சுத்தமான சோப்புக்கு அடையாளமே அதானே!’

புது டில்லிவாசியான ஸ்ரீமதி கமலா வாத்வானி கூறுகிருர்: ‘ஸன்லேட்டுக்கு எந்த சோப்பும் ஈடாகவே ஆகாது!’

# ஸன்லேட்





# அழகி அமீதா

பேட்டி

பம்பாய் கலை நிருபர்

எஸ். நரசிம்மன்

[குமாரி அமீதா – பம்பாய் படவுலகத்தில் பெரும் புகழுடன் பிரதான பாகத்தில் நடித்துவரும் நடிகை. இவர் எப்பொழுதும் சிரித்த முகத்துடனும் நல்ல சுபாவமுடனும் இருப்பவர். 'கலை' தீபாவளி மலரின் மூலம் வாசகர்களை சந்திக்க வேண்டுமென்று அமீதாவிடம் கூறினேன். மறுபேச்சுக் கூறாமல் வேண்டுகோளை இன்ப முகமுடன் ஏற்றுக்கொண்டார். கீழே வரும் உரையாடல் எனக்கும் அமீதாவுக்குமிடையே நிகழ்ந்தது.]

நரசிம்மன் ; நமஸ்காரம்!

அமீதா : வாருங்கள் நரசிம்மன்! பேட்டியை ஆரம்பிக்கலாமே!

நர : திரையுலக வாழ்க்கையை உங்களைப் பொறுத்தவரையில் கூறுங்கள்.

பதில்: நான் கல்கத்தாவில் ஏப்ரல் 11-ந் தேதி 1941-ம் வருடம் பிறந்தேன். உண்மைப் பெயர் கௌமார் சுல்தானா. பிறகு ஜய்ஜய்வந்தியாகி அமீதாவாக உருமாறியது. எனது தாயார் அக்காலத்திலேயே நாடக உலகில் சிறந்த அனுபவமுள்ளவர். சீனியர் கேம்பிரிட்ஜ் பரீட்சை பாஸ் செய்துவிட்டு பம்பாய் வந்தேன். நான் நடித்த முதல் படம் தோக்கர், பிறகு, சைதன்ய மகா பிரபு, தும்சா நகி தேகா, அபிமான், குன்ஜ் உடி ஷஹனாய், சோடே நவாப் ஆகிய படங்களில் நடித்தேன். தற்சமயம், பியார் மீலன் கி ஆஸ், மம்மி தாதி, பியார்கி தாஸ்தான், மிரோ மிகபூப், பாசமலர் (இந்தி) போன்ற படங்களிலும் மேலும், பெயரிடப்படாத 4 படங்களிலும் நடிக்கிறேன்.

கேள்வி : எந்தமாதிரி பாகத்தில் நடிக்க ஆவல்?

பதில்: கதையில் முக்கியத்துவம் உள்ள எம்மாதிரியான பாகங்களிலும் நடிக்க விரும்புகிறேன்.

கேள்வி; வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள் இரண்டு கூறுங்கள்!

பதில்: நகைச் சுவையோடு இருக்கும். நான் சிறுவயதில் போர்டிங் ஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தேன். வெளியே செல்ல அனுமதி கிடையாது. அப்பா அம்மா 7 மையிலுக்கு அப்பால் இருந்தார்கள் அவர்களைப் பார்க்க ஆவலாக இருந்தது; கையிலும் பணமில்லை! எப்படியோ ஒருவருக்கும் தெரியாமல் நடக்கத் துவங்கினேன் என் எதிரே இரண்டு பாதிரி உபாத்தியாயினிகள் வந்தனர்; எனக்குத் திக் என்றது! "நீ கௌமார் சுல்தானா?" என்று கேட்டனர். "இல்லை! வேறு யாரையோ தேடுகிறீர்கள் போலிருக்கிறது என்று சொல்லி வேகமாக நடக்கவாரம்பித்தேன். ஏமாற்றிய குற்றத்திற்காக மறுநாள் என்னை வகுப்பை விட்டு வெளியில் நிறுத்திவிட்டார்கள்,

மற்றொரு தடவை!

என் தாயார் மிக கண்டிப்பு உடையவர், தனியாக வெளியே அனுப்ப மாட்டாள்! ஒரு சமயம் பம்பாயில் அவர்களையும் ஏமாற்றிவிட்டுக் கடற்கரைக்குச் சென்றேன்! கடலை வாங்கித் தின்று கொண்டிருந்த என்னை ரசிகர்கள் சூழ்ந்து கொண்டனர். அவர்களுக்கும் கடலை வாங்கிக் கொடுத்தேன். திடீரென்று அம்மா ஞாபகம் வந்தது! கடலைக்காரனுக்குப் பணங் கொடுத்துவிட்டுப் போகலாம் என்றெண்ணிப் பையைப் பார்த்தேன். "பக்" என்றது அம்மாவை ஏமாற்றிவிட்டு வெளிவந்த அவசரத்தில் பர்ஸ் எடுத்துக்கொண்டுவர மறந்துவிட்டேன். நல்லவேளை ஒரு ரசிகர் பணம் கொடுத்து உதவினார், இந்த நிகழ்ச்சி இரண்டும் மறக்க முடியாதவையாகும்!

கேள்வி : உங்கள் பொழுதுபோக்கு என்ன?

பதில்: புத்தகம் படிப்பது.

கேள்வி: சென்னைக்கு வந்தது உண்டா?

பதில்: ஒரே ஒரு தடவை கிரிக்கட் டெஸ்ட் மேட்ச் நடந்தபொழுது சென்றிருக்கிறேன், ஹிந்தி 'பாசமலர்' படப்பிடிப்பின் போதுதான் சுற்றிப் பார்க்கலாம் என நினைத்திருக்கிறேன்.


கேள்வி : ரஸிகர்களின் கடிதங்களுக்குப் பதில் எழுதுவதுண்டா?

பதில்: உங்கள் வாசகர்களைக் கூட – அமீதா "பதம்" (முதல் மாடி) பெட்டார் ரோட். பம்பாய் என்ற முகவரிக்கு. எனக்கு ஆங்கிலத்தில் கடிதமெழுதச் சொல்லுங்கள் கூடுமானவரை பதில் எழுதுவேன்!

கேள்வி: 'கலை' பற்றிய தங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்: நன்றாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது! புகைப் படங்கள் நன்றாயிருக்கின்றன! சின்னதாக இருப்பதால் பையில் போட்டுக் கொள்ளலாம்! 'கலை' ஆர்வம் உள்ளவர்கள் தமிழ் நாட்டில்

இவர்தான் நமது பம்பாய் கலை நிருபர்





போதுமா கவர்ச்சி...? என்று நம்மைப் பார்த்துக் கேட்கும் நிகழ்கால மேனகை அமீதா.

மட்டுமின்றி அயல் நாடுகளிலும் கலையைப் பரப்புகிருர்கள்; போற்றத் தக்கது.

நர: நேரத்தை வீணடித்துவிட்டேன்......!

அமீதா: அப்படியெல்லாம் ஒன்றுமில்லை; 'கலை' ஆசிரியருக்கும் வாசகர்க்கும் என் தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவியுங்கள்...வாழ்க கலைத் தொண்டு!

வணக்கம்.

★

தன் கருவிழிகளிலேயே காதல் கவிதைகள் கூறும் வடநாட்டு திரையழகி அமீதா.




முக்கிய ஔஷதங்கள்

**சித்த மகரத்துவஜா செந்தூரம்.**

அசல் தங்கத்தினுல் பிரமாத சக்தி வாய்ந்ததாக உயர்ந்ததரக உண்மையான முறையில் நன்கு செய்யப்பட்டு தங்கம் முழுவதும் செந்தூரம் ஆனது. இது தங்கம், ரசம், கந்தகம், கஸ்தூரி, கோரோஜனை சேர்ந்தது. அநேக வியாதிகளைத் தீர்க்கும். சுவாசகாசம், எலும்புருக்கி, சுக்ரதோஷம், மூத்திர தோஷம் இவைகளை தீர்க்கும். இந்த தங்க செந்தூரம் நன்கு ஜீரணமாகி வெகு சீக்கிரத்தில் சரீரத்தில் பரவி சரீரத்திற்கு நல்ல இரத்த விருத்தியும், ஜீவசக்தியும் கொடுக்கும்.

40 நாள் 80 வேளை தங்க செந்தூரம் ரூ. 40 20 நாள் 40 வேளை தங்க செஞ்தூரம் ரூ. 20

**யூனனி சாலாமிசரி ஹல்வா.**

(தேகத் தளர்ச்சியும் பலக் குறைவும் வெகு சீக்கிரத்தில் நீக்கும்)

1 சேர் பாட்டில் 1-க்கு ரூ. 10—0—0 அரை சேர் பாட்டில் 1-க்கு ரூ. 5—0—0

**ஜீவ சக்தி மாத்திரை**

(வீரிய விருத்திக்கு சிறந்தது)

மாத்திரை 50-க்கு ரூ. 10—0—0 மாத்திரை 25-க்கு ரூ. 5—0—0

விபரங்களுக்கு:

கே. ராமநாதன்,
(குழந்தைவேலுப்பிள்ளை வைத்தியசாலை)
பேட்டை வடக்குத் தெரு, கும்பகோணம்.

# ஓவியக்கலைஞர்கள் பார்புகழும் பாக்ததாபுலஸ்

பானு சகோதரர்கள்.

ஓவியர்கள் உலகைச் சுற்றினால் கிடைக்கும் இயற்கைக் காட்சிகளைமட்டும் தீட்டிமுடிக்க அவர்கள் வாழ்நாள் பூராவையும் அர்ப்பணித்தாலும் கூட போதாது! அதிலும் ஓவியப் பேராசை பிடித்த 'பாக்ததாபுலஸ்'ஸைப் போன்றவர்களுக்கு இத்தகைய காட்சிகளைத் தீட்டிமுடிக்க இடையறாத நூற்றாண்டுகள் இரண்டு தந்தாலும், உண்மையிலேயே துளியும் போதாது என்றுதான் சொல்ல வேண்டும்!! ஏனெனில் பாக்ததாபுலஸ் ஓவியத்தாயின் அடிமை! ஓவியத்திற்காகவே தன் சொந்த நலன்களையும் இனிக்கும் வாழ்வையும் அர்ப்பணித்துவிட்டு ஐரோப்பிய - ஆசிய நாடுகளிலே அலைந்து திரிந்தவன்! தனது பனிரெண்டாவது வயதுமுதலே ஓவியக் கலையின் ஒப்பற்றத் தூதுவனாகக்காட்சியளித்தவன் பாக்ததாபுலஸ்! எனவேதான் அவனது கலைப்பணியை போற்றாத ஓவியர் உலகமே கிடையாது என்னலாம்!


பாக்ததாபுலஸ் கிரேக்கத் தீவுக் கூட்டத்தில் ஒன்றான ஐயோனியத் தீவில் ஐண்டி என்ற சிறு நகரில் பிறந்தவன் - ஆனால் அவனை வளர்த்ததோ ஹாலந்து நாடு! அவன் தந்தை ஓர் பழ வியாபாரி - ஐரோப்பிய நாடுகளோடு வியாபாரம் செய்தவர் - எனவே சிறுவயதில் ஹாலந்தே அவன் தாயகமாக விளங்கியது. பாக்ததாபுலஸ்ஸின் கலையார்வம் அவனை வெகு இளமையிலேயே கலைப் பள்ளிக்கனுப்பியது. பனிரெண்டாவது வயதிலேயே ஹாலந்தின் கலைப் பள்ளிகளில் அவன் சேர்க்கப்பட்டான். அவன் தீட்டிய முதல் ஓவிய விளக்கம் அனைவருக்குமே வியப்பையூட்டியது! தன் பதினான்காம் வயதுவரை அந்த ஓவியப் பள்ளியின் இளம் மாணவனாகக் காட்சியளித்தான் பாக்ததாபுலஸ்; அதற்கு பிறகே அவனது உலக யாத்திரை தொடங்கிற்று.

பாக்ததாபுலஸ்ஸின் கலையார்வம் அவனை உலகைச் சுற்றவைத்தது - தன் தந்தையின் செல்வாக்கைப் பயன்படுத்தி கப்பல் மாலுமிகளின் துணைகொண்டு உலகின் மத்திய கிழக்கு நாடுகளிலே அவன் சுற்றுப் பிரயாணம் செய்தான். சொந்த நலத்தைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படாமல் ஒரு பையிலே தனக்கு வேண்டிய துணிமணிகளையல்ல - தூரிகைகளையும், வண்ணக் கலவைகளையும் எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டான் பாக்ததாபுலஸ்! எகிப்திலே கொஞ்சநாள் - பாலஸ்தீனத்திலே கொஞ்சநாள் - கான்ஸ்ஸாண்டிநோபிள் என்ற கடல் துறைப் பெருநகரிலேகொஞ்சநாள் - ஏதென்ஸின் கலைக் கூடத்திலே ஓராண்டு - என்று உலகின்மத்தியகிழக்கு நாடுகளைப் பலகாலம் சுற்றித் திரிந்தான் பாக்ததாபுலஸ் - அவனின் கலையார்வம் அவனுக்குப் புதிய பலத்தைத் தானாகவே அளித்தது! திறந்தவெளியரங்கில் பளிங்குபோலத் திகழ்ந்த அத்தனை இயற்கைக் காட்சிகளையும் - மக்களின் தெய்வ வழிபாட்டு நிலையங்களையும் - கலைக்கூடங்களையும் - அழியாது நிலைபெற்ற பலநாட்டு நினைவுச் சின்னங்களையும் - ஆங்காங்கே போய் நேரிலேயே கண்டு, மகிழ்ந்து, பல நாட்களின் கடின உழைப்பைச் செலவிட்டு மெருகு குலையாத அழகுடன் அவைகளைப் படமாக்கிக் கொண்டு வந்தவன் பாக்ததாபுலஸ்! தன்னைப் பற்றியோ - தன் சொந்த நலன்களைப் பற்றியோ தனக்குக் கிடைத்த வசதிகளைப் பற்றியோ அவன் எப்போதுமே கவலைப்பட்டதில்லை! மலையோரத்திலே தூங்கினாலும், சாலையோரத்திலே வெய்யிலிலே படம் வரைந்து கொண்டு உட்கார்ந்திருந்தாலும், ஒட்டல்களின் பஞ்சணைகளில் தூங்கினாலும் எல்லாமே அவனுக்கு ஒன்



ருகத்தான் திகழ்ந்தன. அவனுக்கிருந்த ஆர்வமெல்லாம் தானொரு இயற்கை ஓவியனாகப் போற்றப்படவேண்டுமென்பதுதான். அதற்காகவே அவன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டான்! வெற்றியும் கண்டான்!

தன் முதல் உலக சுற்றுப் பிரயாணங்களை முடித்துக்கொண்டு அவன் லண்டன் மாநகரிலே தங்கியிருந்தபோது அவனுக்கு இந்தியச் சுற்றுப் பிரயாணத்திற்கான மற்றொரு வாய்ப்பும் தானாகவே தேடியளிக்கப்பட்டது. 1924-ல் இந்த பாக்கியம் அவனைத் தேடி வந்தது! அப்போது இலண்டன் வட்டாரங்களிலே மிகவும் புகழ்பெற்று விளங்கிய 'டைம்ஸ் ஆப் இந்தியா'வின் சார்பிலே பாக்ததாபுலஸ்ஸுக்கு இந்த மாபெரும் வாய்ப்பும் அதற்கான வசதிகளும் செய்து தரப்பட்டன. எனவே பாக்ததாபுலஸ் தன் இந்தியச் சுற்றுப் பிரயாணங்களுக்காக 1924-லின் மாரி காலங்களிலே (அக்டோபர்) லண்டனிலிருந்து புறப்பட்டான்! அது முதல் 1926-ன் ஏப்ரல் திங்கள் வரை சுமார் 18 மாதங்கள் இந்தியாவின் பெருநகரங்களில் ஓவியப் பசியால் அலைந்து திரிந்தான் பாக்ததாபுலஸ்!



சமரச சன்மார்க்கராகத் திகழ்ந்த அக்பர் மதவெறி கூடாது என்பதற்காகத் தன்னுடைய நாட்டில் உள்ள எல்லா மதத்தினரையும் அழைத்து வைத்துக்கொண்டு அவற்றிற்கு உள்ள ஒற்றுமையை ஆராயும் ஒப்பற்ற பாக்ததாபுலஸ் ஓவியம் இது.

வடக்கே காஷ்மீர்-டார்ஜிலிங்கு முதல்-தெற்கே சென்னை வரை-கிழக்கே கல்கத்தா முதல்-மேற்கே பம்பாய் வரை எல்லா பெருநகரங்களையும் அவன் வெகுவாகப் பார்வையிட்டுவிட்டான்! இந்த நாட்களிலே அவன் தீட்டிக் குவித்து வைத்த ஓவியப் பொக்கிஷங்கள் தரத்தாலும்-கலை நுணுக்கத்தாலும் மிகவும் உயர்ந்தவையாகும். மலையோரங்களிலும்—சாலையின் கொடும் வெய்யிலிலும், வீதியோரங்களிலும் விநோத கட்டிடங்களின் பக்கங்களிலும் - ஆலயங்களின் எதிரிலும் - அழகான நினைவுச் சின்னங்களைச் சுற்றிச் சுற்றியும் அவன் அமைத்த 'ஓவிய முகாம்கள்' ஒன்றிரண்டல்ல! இந்தியாவிலே சுற்றுப்பிரயாணம் செய்த ஒரு சில குறிப்பிடத்தக்க ஓவியர்களிலே பாக்ததாபுலஸ்ஸே மிகக் குறைந்த வசதிகளுடன் சுற்றுப்பிரயாணம்செய்தவன் சென்னையிலே அவன் தங்கியிருந்தபோது அவன் தீட்டிய பல அழகோவியங்களிலே கண்களுக்கு மிகவும் இனிமை தருவதாக அமைந்திருப்பது சென்னைத் திருவல்லிக்கேணியின் பார்த்தசாரதி கோயில்தான்! இதைப்போலவே டெல்லியிலும் ஆக்ராவிலும், அவன் காட்டிய ஆர்வம் பல நூறு முகலாயச் சின்னங்களைத் தொகுத்துத் தீட்டி வைத்த பெருமையாளனாக அவனை ஆக்கி வைத்தது! ஆக்ராவின் ஜும்மா மசூதி-முத்து மசூதி-தாஜ்மகால் - டெல்லியின் செங்கோட்டை போன்ற இடங்களை



மேலை நாட்டுக் கலைஞராக இருந்தும் நம்முடைய நாட்டுப் புராணங்கள் வர்ணிப்பதுபோன்றே தத்ரூபாக வரையப்பட்ட பாற்கடலில் பள்ளிகொண்டுள்ள மகாவிஷ்ணு இவர், இந்தப் படத்தை வர்ணத்தில் பார்த்தால் அதன் அழகிலே மயங்காதவர்கள் இருக்க இயலாது. அதனால்தான் இந்திய ஓவியர்கள் இந்த ஓவிய மேதையை தெய்வமாக-வாழ்க்கைவழி காட்டும் வித்தகராகக் கருதுகிறார்கள்.

அவன் ஓவியங்களாக்கித் தந்த காட்சி மக்களின் ஓவியக்கண்களுக்குப் பெரு விருந்தாகும்! இன்னும் அவற்றை நாம் காணும்போது நம்மையே மறந்தவர்களாகி விடுகிறோம்!

இங்ஙனம் அவன் தீட்டிக் கொண்டுபோன அத்தனை ஓவியக் காட்சிகளும் இன்று லண்டனில் கலைக்கூடங்களிலே பெருமிதத்தோடு இடம் பெற்றிருக்கின்றன என்பதை எண்ணும்போதுதான் பாக்ததாபுலஸ்ஸின் பெருமை நமக்குத் தெரிகிறது!




## ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை

### 1 மண்டலம் (48 நாள்) பூஜை செய்தது

ஆயுள் பூராவும் பலன் தரும் வெள்ளி ரக்ஷை ரூ. 43·75

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள் தங்கள் நியாயமான கோரிக்கைகளை எழுதி ரூ. 10-75 மணியார்டர் செய்யவும். மேற்படி தொகை வெள்ளி, விளம்பரம் தபால் செலவிற்குமாகத் தேவை. மீதி ரூ. 33-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

குறிப்பு:— 1. ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். 2. வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். 3. வி. பி. பி. கிடையாது. 4, அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.



ஜோஸ்யர்
ஸ்ரீ ஜெயராம ஐயர்

கோட்டமருதூர்

**மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்**

அரகண்டநல்லூர் போஸ்ட் (தென் ஆற்காடு ஜில்லா)

# நகச் சொல்லி நட்பாடல்



முத்தமிழ்க்காவலர் தமிழ்ச்செல்வம்
கி.ஆ.பெ.விசுவநாதம்.

"பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்"

என்பது திருக்குறளில் ஒரு குறள். இது "புறங்கூறாமை" என்ற தலைப்பில் வந்த ஒன்று.

வெஃகாமையைப் பற்றிக் கூறியதன் பின்னும், பயனில சொல்லாமையைப் பற்றிக் கூறுவதன் முன்னும் வள்ளுவர் புறங்கூறாமையைப் பற்றிக் கூறியிருப்பது பெரிதும் நயமுடையதாகும். பிறர் பொருளை அடைய ஆசைப்படுதல் புறங்கூறுதலில் வந்து முடியும் என்பதும், புறங்கூறுகின்ற ஒருவன் பயனற்ற சொற்களைச் சொல்ல நேரிட்டுவிடும் என்பதும் இதனால் பெறப்படும்.

"புறங்கூறுவது தவறு. அது சுற்றத்தார்களைப் பிரித்துவிடும். இனியவைகளைக் கூறிப் பிறரை நட்புக்கொள்ள அறியாதவரே புறங்கூறுவர்" என்பது இதன் பொருள்.

பொய்கூறல், புறங்கூறல், கடுஞ்சொற்கூறல், பயனிலகூறல் ஆகிய நான்கும் மக்கள் "நா"வினால் செய்யும் தவறுகள். இதிற் புறங்கூறுதல் பொய்யை அடுத்து நின்று "துணைத் தலைமைப் பதவியை" வகித்து நிற்கிறது. புறங்கூறலைக் கோள்மூட்டல், தீ மூட்டல் எனவுங் கூறுவதுண்டு.

புறம் என்பது "ஒன்றிலிருந்து வேறானது" என்றாகும். கூறப்படுபவனும், புறம் கூறுபவனும், புறம் கேட்பவனும், புறம் இடமும், புறம் செய்தியும், புறம் ஆகும். ஆதலின், இதுபற்றிக் கூறுதல் "புறங்கூறல்" என வந்தது போலும்.

"பக" என்பது இரண்டெழுத்துள்ள ஒரு சொல். இச்சொல்லைப் பகு - அ. என பிரித்துப் பகுக்க, பிரிக்க, நீங்குமாற்றால் என சுற்றிவளைத்துப் பொருள் காண்பதைவிட "வெறுக்க" எனப் பொருள் காண்பது நல்லது எனத்தோன்றுகிறது. அவ்வாறாயின் வெறுக்கக் கூறுதல் என்பதே புறங்கூறல் என்றும், புறங்கூறுதல் என்பதே வெறுக்கக் கூறுதல் என்றும் அமையும்.

புறங்கூறுதலை புறஞ் சென்று கூறுதல் என்பர். அதுவும் தன்னுடையதைல்ல; பிறருடையதை. அதிலும் நல்லவைகளையல்ல; தீயவைகளை. அதையும் அவரிடமல்ல; பிறரிடம் என்பர். இதனால், புறங்கூறுதல் என்பது ஒருவரைப் பற்றித் தவறான கருத்துக்களை அவரில்லாதபோது பிறரிடம் கூறிக்கொண்டிருப்பதேதான என நன்கு விளங்குகிறது. இது வெறுக்கத் தக்கது என்பது வள்ளுவரது கருத்து. இதனை இக்குறளிலுள்ள "பகச்சொல்லி" என்பது நமக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறது.

புறங்கூறும் செயலானது தொடக்கத்தில் புறங்கூறப்படுபவனை வெறுக்கச் செய்யும். அடுத்து கேட்பவனை வெறுக்கச் செய்யும். இறுதியில் புறங்கூறுபவனையும் வெறுக்கச் செய்துவிடும். எனவே, புறஞ்சொல்லல் என்பதே வெறுக்கச் சொல்லல் என்கிறது. இதனையே "பகச்சொல்லல்" என்பதும் சொல்லுகிறது போலும்.

பகச்சொல்லும் கொடுமை பண்பற்றவரது செயல். அது மக்கட் சமுதாயத்திற்கே வேண்டாத ஒன்று. அது தன்னையுடையவனை ஒரு இழிந்த மகனாகக் காட்டி சுற்றத்தினரையும் வெறுக்குமாறு செய்துவிடும். ஆகவே, புறங்கூறும் பழக்கமுடைய ஒருவன் சுற்றத்தார்களிடையே வாழத் தகுதியற்றவன் என்பது இக்குறளின் கருத்து. இவ்வுண்மையை இக் குறளிலுள்ள "பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்" என்ற சொற்றொடரால் நன்கறியலாம்.

கேளிர்ப் பிரிப்பர் என்பது கேளிரைப் பிரிப்பர் என்றாகும், இதனால், சுற்றத்தார்களைப் பிரிந்து வாழும் வாழ்வு எவ்வளவு உயர்ந்ததாக இருப்பினும் அது ஒரு சிறந்த வாழ்வாக இராது என்பதையும், அத்தகைய ஒரு சிறந்த வாழ்வை புறங்கூறும் ஒருவன் அடையவே முடியாது என்பதையும் இக் குறள் நம்மை எச்சரிக்கை செய்வதாகவும் எண்ண வேண்டியிருக்கிறது.

கேளிர்ப் பிரிப்பர் என்பது கேளிரையும் பிரிப்பர் என்றுமாகும். இதனால், புறங்கூறும் கொடுஞ் செயலானது தன்மீது பற்றுக் கொண்டுள்ள உற்றார், உறவினரையும் பிரித்து வைத்துவிடும் என்றாகிறது. "சுற்றத்தார்களையும் பிரித்துவைத்து விடும்" என்பதனால், பிறரை என்னென்ன செய்யும் என்பதையும் இக் குறள் கூறாமற் கூறியிருப்பதாகக் கொள்ள வேண்டியிருக்கிறது.

உற்றார், உறவினர்களிடமிருந்து பிரிவதால், தமக்கு ஒரு கேடுமில்லை என எவரும் எண்ணிவிட முடியாது. ஏனெனில், சுற்றத்தார்கடளிமிருந்து ஒருவன் எவ்வளவு தூரம் பிரிந்து செல்லுகிறானோ அந்த அளவிற்கு அவன் பகைவர்களை நெருங்கிவிடுகிறான், எனவே, 'சுற்றத்தார்களிடமிருந்து பிரியாமலிருக்க வேண்டும் என்பதற்காகவாவது புறம் கூறும்திரு' என புறங்கூறும் மக்களின் நலன்களைக் கருதியும் இக் குறள் அறங்

கூறும் தன்மையில் அமைந்திருப்பதுவியக்கக் கூடியதாகும்.

ஒத்த பண்பும் நட்பும் உடைய சுற்றத்தார் இருவருக்கிடையில் ஒருவன் சென்று புறங்கூறுவானுயின் அது அவர்களில் ஒருவரை ஒருவர் பகைக்கச் செய்து அவர்களிருவரையும் பிரித்து வைத்து விடும். ஆதலின், கேளிர்ப் பிரிப்பர் என்பதை "கேளிரிற் பிரிப்பர்" என்றும் கொள்ளலாம் போலும்.

வீரமற்றோர், ஈரமற்றோர், பொய்யர், வஞ்சகர், பொறாமை கொண்டோர் ஆகியவரே புறங்கூறித் திரிவர் ஆதலின், அத்தகைய மக்களை அவர்களது சுற்றத்தார் தங்களில் ஒருவராக ஏற்க அஞ்சி வெறுத்தொதுக்கிப் பிரிந்தே விடுவர். இதனால், புறங்கூறுவோரைக் "கேளிரும் பிரிப்பர்" எனக் கொள்ள வேண்டியிருக்கிறது.

புறங் கூறுகின்ற ஒருவனை அவனது சுற்றத்தாரும் பிரித்துவிடுவர் என்பதிலிருந்து புறங் கூறுவார்க்குத் துணையாவார் இவ்வுலகில் எவரும் இல்லை என இக்குறள் அறுதியிட்டுக் கூறுவதாகவும் தெரிய வருகிறது.

உறவினர்களுடைய குற்றங்களைக் கூறுவதே இத்தகைய விளைவுகளை உண்டாக்கி விடுமானால், பகைவர்களுடைய குற்றங்களைக் கூறுவது என்னென்ன விளைவுகளை உண்டாக்கும் என்பதையும் இக்குறள் நம்மை சிந்தித்துப் பார்க்கும்படித் தூண்டிக் கொண்டிருக்கிறது.

உள்ள குறைகளைப்பற்றிக் கூறுவதனாலேயே புறங்கூறும் ஒருவனுக்கு இத்தகைய தீமைகள் விளையுமானால், இல்லாத குற்றங்களை ஒருவர்மீது ஏற்றிக் கூறுவதன் மூலம் என்னென்ன விளைவுகள் உண்டாகும் என்பதையும் இக்குறள் நம்மை எண்ணிப்பார்க்கும்படிச் செய்கிறது.

புறங்கூறும் மக்களை வள்ளுவர் நமக்கு அறிமுகம் செய்துவைக்கும் சொல்லே ஒரு தனிச்சொல். அது கொடியர், தீயர், பொய்யர், வஞ்சகர், பொறாமையாளர் என்பதல்ல; அது "அறியாதவர்" என்பதே. இதனை இக்குறள் ஈற்றிலுள்ள "தேற்றாதவர்" என்ற சொல்லால் அறியலாம். இது அவரது பண்பட்ட உள்ளத்தையே நமக்குப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்திருக்கிறது.

அறியாதவரைக் காட்டுவதிலும் "நகச் சொல்லி" நட்பாடலை அறியாதவர் என ஒரு விளக்கத்தோடும் காட்டுகிறார். நட்பாடல் என்பது நட்புக்கொள்ளும் என்றும், நகச் சொல்லுதல் என்பது பிறர் மகிழும்படிச் சொல்லுதல் என்றும் ஆகும். எனவே, புறங்கூறும் கொடுமையானது பிறரை நட்புக் கொள்ளத் தெரியாதவரின் செயல் என இக்குறள் கூறுவது ஒரு பெரிய உண்மையை வெளியிடுவதாகவும் இருக்கிறது.

"தேற்றாதவர்" என்ற சொல்லின் பொருள் ஒன்றுமே தெரியாதவர், எதையுமே அறியாதவர் என்பதல்ல, "தெரிந்தும் தெளிந்து செய்ய அறியாதவர்" என்றே ஆகும்.

பிறர் மகிழும்படி இனிய சொற்களைச் சொல்லி நட்புக்கொள்ளத் தெளியாதவர்களே பிறர் வெறுக்கும்படி புறங்கூறி சுற்றத்தார்களையும் பகைத்துக் கொள்வர் என்பதே இக்குறள் முழுவதும் பரவி நிற்கும் கருத்தாகும்.

பகச்சொல்வது கேளிரையும் பிரிக்கும் என்று இக்குறள் கூறுவதால், நகச் சொல்வது பகைவரையும் நட்பாக்கும் என்பது கூறாமலே அமையும்.

நகச் சொல்லும் பண்புடையாளர் பகச் சொல்லத் தெரியாதவர். பகச் சொல்லும் பழக்கம் உடையவர் நகச் சொல்லத் தெளியாதவர். ஆகவே, இக்குறள் இந்த தெரியாதவரையும், தெளியாதவரையும் அவரது சொல்லோடும், செயலோடும், நினைவோடும் நமக்கு அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறது.

நல்லபாம்பு கக்கத் தொடங்கினால், சிலபொழுது நாகரத்தினத்தையும் கக்கும். புறங் கூறுவோரைக் கக்கவிட்டால் அத்தனையும் நஞ்சாகவே இருக்கும்.

புறத்தில் தூற்றுவர் என்பதால் "நேரிற் புகழ்வர்" என்றாகிறது. இதனை வள்ளுவர் மற்றொரு குறளில் "புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தல்" என்கின்றார். இத்தகைய மக்கள் வாழ்வதைவிட மடிவது நல்லது என்பதும் அவரது கருத்து.

புறங் கூறுதல் என்பது மக்கட்கு வேண்டாத ஒன்று. புறங்கூறி வாழ்கின்ற வாழ்வு நல்வாழ்வு ஆகாது. அதன் விளைவு மிகக் கொடியது. அதனைச் செய்பவர் தெளிவற்றவர். அதிலும், நல்லவைகளைக் கூறி நட்புக்கொள்ளத் தெளியாதவர்" என்பதே இக்குறளின் முடிவு.

படியுங்கள் குறளை மறுபடியும்.

"பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்

நகச்சொல்லி

நட்பாடல் தேற்றாதவர்"

எப்படி இக்குறள்? இந்த ஒரு குறளே நமக்கு இவ்வளவு அறிவுரைகளை வழங்குமானால், மற்ற ஆயிரத்தி முன்னூற்றி இருபத்தொன்பது குறள்களும் எவ்வளவு அறிவுரைகளை வழங்கும்? என்பதை எண்ணிப் பாருங்கள்,

எடுங்கள் குறளை! படியுங்கள் நன்றாக! திருக்குறளைப் படிப்பதும் கட்டுரைகளை எழுத, சொற்பொழிவுகள் நிகழ்த்த, நூல்களை வெளியிட புலவன் ஆக, பொருள் திரட்ட, மேற்கோள்கள் காட்ட என எண்ணிப் படிப்பது பயனற்றதாகும். படித்து அறிந்து அதன்படி நடந்து ஒழுக வேண்டும் என எண்ணிப் படிப்பதே பயனுள்ளதாகும்.

புறங்கூறுதல் என்பது ஒரு கொடிய நோய். அதை எளிதிற் போக்க இயலாது. அதை ஒழிக்கும் மருந்து மருத்துவ நூல்கள் எதிலுமேயில்லை. திருக்குறள் ஒன்றே அதனை ஒழிக்கும் ஒரே மருந்தைக் கூறுகிறது. அது எது தெரியுமா? "எவரிடமும் இனியவை கூறு" என்பதே. செய்வீர்களா?

வாழட்டும் தமிழ்மொழி!

வளரட்டும் குறள் நெறி!



# ஓசூர் கசவர்

## மானிட இயல் அறிஞர் பினோ இருதயநாத்

இந்தியாவிலேயே மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள ஆதிவாசிகள் எங்கே வாழ்கிறார்கள்? என்பதைத் தெரிந்து கொள்ளப் பலரிடம் கேட்டேன்.

''கசவர்கள்'' என்ற செய்தி மட்டும் கிடைத்தது. ஆனால் அவர்கள் இப் பரந்த இந்தியாவில் எக்கோடியில் வாழ்கிறார்களோ யாருக்குத் தெரியும்? கடைசியில் ஒருவகையாகக் கண்டு பிடித்து, மைசூரிலிருந்து குண்டல் பேட்டை வழியாக மைசூர் ரஸ்தாவில் சுமார் அறுபது மைல்களும், மசினிகுடி காட்டு மார்க்கத்தில் சுமார் பதினைந்து மைல்களும், பஸ்ஸில் பிரயாணம் செய்து கசவரின் குடிசையில் சென்று உட்கார்ந்து கொண்டேன்.

கசவர்கள் தங்கள் குடிசைகளை ஒன்றற்கொன்று அடர்ந்த காட்டின் மத்தியில் கட்டி இருக்கின்றனர். 'கசவர்' என்ற பெயருக்கு, 'உழைப்பாளிகள்' என்பது பொருள் என்று கூறுகிறார்கள். பயங்கரமான யானைக் காட்டில் இவர்கள் தைரியமாக வாழ்வதைக் கண்டால், நமக்கே அச்சமாக இருக்கிறது. இவர்கள் மைசூரிலிருந்து இங்குக் குடி புகுந்தவர்களாம். பண்டைக் காலத்தில் மைசூரில் ஏற்பட்ட போர்களுக்குப் பயந்து கொண்டு இவர்கள் பல இடங்களில் சிதறுண்டு போனதாகக் கூறப்படுகின்றது.

இவர்களில் பலர்கூடி ஒற்றுமையாக, ''அஞ்சுபுல்லு'' என்று கூறப்படும் ஒரு வகைக் காட்டுப் புற்களால் தங்கள் குடிசைகளைக் கட்டிக்கொள்கிறார்கள். தூரப் பார்வைக்கு அது குடிசையாகத் தெரிந்தாலும், குடிசைக்குள் பல அறைகளை அமைத்து இடச் சிக்கனத்துடன் கட்டி இருக்கின்றனர். குடிசையின் முன்னால் ஆடுமாடு கட்ட இடமும், அதற்குப் பின்னால் சமையல் செய்ய இடமும் படுக்குமிடமும் இருக்கின்றன. தரை சற்று ஒதமாகத்தான் இருக்கிறது. அகையால் காட்டுப் புல்லைத் தரையில் பரப்பி அதன் மேல் ஈச்சம் பாயை

கசவப் பெண் தன் குழந்தைக்கு காற்றுக் கூட போக இயலாது இப்படி மூட்டை போல கட்டித்தூக்கிச் சென்றாலும் அந்தமூட்டைக் குழந்தைகள் பிழைத்துக் கொள்ளுகின்றன.

விரித்து எனக்குப் படுப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுத்தார்கள். குடிசைக்கு முன்னாலிருக்கும் திண்ணையிலும், பலர் படுப்பது உண்டு. அத் திண்ணையின் அடியில் தான் கோழிகளை அடைத்து வைக்கின்றனர். ஒவ்வொரு விஷயத்திலும் கசவர்கள் இடத்தைச் சிக்கனமாகக் கையாளுவதைக் கண்டு ஆச்சரியமடைந்தேன்.

இவர்களுடைய குடிசைகளில் நான்கு பக்கங்களிலும் மண் சுவர்களே கிடையாது. நான்கு பக்கங்களிலும் திறந்த மூங்கிற் சுவர்கள் இருக்கின்றன. ''ஏன் இப்படி நான்கு பக்கங்களிலும் திறந்த மூங்கிற் சுவர்கள் இருக்கின்றன?'' என்று கேட்டதற்கு, ''இராக் காலங்களில் சில சமயங்களில் யானைகள் திடீரென்று கூட்டமாக ஓடிவரும். அங்ஙனம் ஓடிவரும் பொழுது எப்பக்கமாக ஓடிவருகின்றன வென்று தெரிந்துகொண்டு ஓடுவதற்கு வசதியாக இருக்கும் அல்லவா?'' என்று கூறினார்கள். இவர்கள் காலையில் வெயிலைக் கண்ட பின்னரே குடிசையைவிட்டு வெளியில் வந்து உட்கார்ந்து கொண்டிருப்பதைக் கண்டால், இயற்கைக்கும், காட்டு விலங்குகளுக்கும் பயந்தவர்களைப் போல் தோன்றும். அதைப் புகைப் படத்தில் காணலாம்.

மேலும், இவர்கள் கிராமத்தின் அருகில் வேலை செய்தாலும் கிராமத்தை விட்டுச் சுமார் ஆறு மைலாவது தாண்டிச் சென்று காட்டினுள்ளோ அல்லது சோலைகளிலோ தான், தங்கள் குடிசைகளைத் தனித்தனியாகக் கூப்பிடு குரல் தூரத்தில் கட்டிக் கொண்டு வாழவிரும்புகிறார்கள்.


சமீபகாலம் வரையில் கூட இவர்கள் இலைகளையும், தோல்களையும், மட்டைகளையும்தான் தங்கள் மானத்தை மறைக்க உபயோகப்படுத்தினார்களாம். இவர்களை நகர மக்கள் பார்க்கவே முடியாது என்று கூறுகிறார்கள்.

உடற்கட்டுடன் நல்ல பலசாலிகளாக, ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள். கருத்த மேனியை உடையவர்கள். சிலருடைய பார்வை மரத்திலிருந்து குரங்குகள் கூர்ந்து கவனிப்பதைப் போல், அவ்வளவு கூர்மையாக இருக்கும். இவர்களுக்கும் இருளர்களுக்கும் தொடர்பு உண்டு என்று சில கசவர்களே கூறுகிறார்கள். ஆண்களின் முகச்சாயலைக் கண்டால், வட்டமாகவும், மூக்கு டைமன் போலவும், நெற்றி அகன்றுமிருக்கின்றன. உடற் பயிற்சி செய்து முண்டாக்களை வளர்த்தவர்களைப் போல் காணப்படுவார்கள்.
பெண்களோ மூக்கு உருண்டையாகவும் அழகாகவும், கருத்துமிருக்கிறார்கள். மங்கையர்களும் நன்றாக வேலை செய்து தங்கள் உடலை அழகாக வைத்திருக்கின்றனர். அவர்கள் உடலைத் தொட்டுப் பார்த்தால், தோல் முரடாக இருப்பதைக் காணலாம். இவர்களுடைய தலைமயிர் ஆப்பிரிக்க நாட்டினருடைய தலைமயிர்களைப் போல் சுருண்டு இருக்கின்றன. சில பெண்கள் மட்டும் கழுத்திலும் கைகளிலும் சில வெள்ளி நகைகளையும், மணிகளையும் அணிந்திருக்கின்றனர். சிலர் சிற்சில பித்தளை நகைகளையும் அணிந்திருக்கின்றனர்.

ஆண்கள் குல்லாய் அணிவதைப் போல், தலைப்பாகையைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். குழந்தை மூச்சு விடக்கூட முடியாத அளவுக்கு மூட்டை வடிவத்தில் கட்டப்படுகிறது. ஆண்களும் பெண்களும் சேர்ந்துதான் நன்மைக்கும், தீமைக்கும் நடனமாடுகிறார்கள்.

குழந்தை பிறந்தால் துன்பத்துடனும், இறந்தால் இன்பத்துடனும் நடனமாடுகிறார்கள். இவர்கள் ஆடும் நடனங்களைக் கூர்ந்து கவனித்தால், ஒவ்வோர் அங்கமும் ஒவ்வொரு காரணத்திற்காக அசைக்கப்படுகிறது என்றும், ஒவ்வொன்றுக்கும் தனித் தனிக் கருத்து உளது என்றும் தெரிந்து கொள்ளலாம். சில பருவங்களுக்குத் தனித்தனி நடனங்களும் உண்டு. நடனமாடுவதில் பெண்களைவிட ஆண்கள்தான் சமர்த்தர்கள். கொஞ்சம் அதிக நகை அணிந்திருக்கும் மூப்பனின் மனைவியைக் கையில் அணிந்திருக்கும் பெரிய காப்புடனும், மூட்டையாகக் கட்டிய குழந்தையுடனும் புகைப்படம் பிடித்தேன்.

ருதுவான பெண்களைத் தனிக் குடிசை கட்டி அதில் இருக்கும்படி செய்கின்றனர். அந்தக் குடிசையில் பேய் பிசாசு வராமல் இருக்க இரும்பு தோல் முதலியவைகளைக் குடிசையின் வாசற்படியில் கட்டி வைக்கின்றனர். ருதுவான பெண்ணும் தரையின் மேல் வைக்கோலை விரித்துப் படுத்துறங்க வேண்டும். இராக் காலங்களில் அவளுக்குத் துணையாக யாராவது கிழவிகளைப் படுக்க வைப்பார்கள்.



இரவு முழுதும் காட்டு விலங்குகளுக்கு அஞ்சிக்கொண்டு, தங்கள் குடிசை களிலே அடங்கிக் கிடந்த கசவர்கள் வெயில் வந்ததும் இப்படி வெளியில் வந்து சூரிய ஒளியில் குளிக்கிறார்கள்.

---

தினம் அவள் காலையில் குளித்த பின் நல்ல ஆகாரம் கொடுக்கப்படு கிறது. அவள் பன்னிரண்டாம் நாள் குளித்து பாடியிலிருக்கும் பெரியவர் களை எல்லாம் கும்பிட்டபின் (வணக் கம்) பெரிய விருந்து நடைபெறும். அவள் இருந்த குடிசையை சாம்ப லாக்கி விடுவார்கள். என்ன விருந்து என்று நினைத்துக் கொண்டீர்கள் !

அரிசிக் கஞ்சி காய்ச்சி எல்லோரும் குடிப்பார்கள். கஞ்சியைக் குடித்து விட்டு வாத்தியங்கள் வாசிக்க நடன மும் நடக்கும். பண்டைக் காலத்தில் இவ்விதமான சடங்குகளுக்கெல்லாம் தீப் பெட்டியை உபயோகப்படுத்துவ தில்லை. "செல்ல மரம்" என்ற மரத் தின் கட்டையை ஒன்றோடு ஒன்றை இழைத்துத் தீ உண்டாக்கிக்கொண் டார்களாம். மேலும் இவர்கள் இர வில் விளக்கு வைத்தால் தங்கள் குல தெய்வத்திற்குப் பிடிக்காது என்கின் றனர். காட்டில் வாழ்ந்தாலும் நெற்றி யில் விதவைகள் உட்பட எல்லா மங்கையர்களும் அடுப்புக்கரிச் சாந் துப் பொட்டு வைத்துக்கொள்கின் றனர்.

திருமணச் சடங்கு என்பது ஒரு தனிச் சடங்கில்லை. மங்கையர்களுக் குத் திருப்தியாக ஆண்களிடம் பல மிருந்தால் அந்த ஆண்களைப் பெண் கள், விவாகரத்து செய்யமாட்டார் களாம். மேலும் அவளே காடுகளுக் குச் சென்று தன் கணவனுக்கு வேண் டிய தேன், மற்ற ஆகாரப் பொருள் களைச் சேகரித்துக்கொண்டு வரு கிறாள். அவளுக்குப் பிடித்த ஆண் கள் வேலை செய்யாவிட்டாலும் சோம் பேறி ஈக்களைப் போலிருந்தால் போதும் என்று கருதுகிறார்கள் மங்கையர்கள்.

திருமணத்தன்று ஆடு, கோழி வெட்டி விருந்து வைக்கின்றனர். அன்றும் இன்றும் கசவர்களுக்குள் பால்ய விவாகம் உண்டு. பெண்கள் திருமணத்திற்கு முன், நெறிதவறிப் போனால், பெண்ணுக்கு ரூபாய் மூன் றும், பையனுக்கு ரூபாய் மூன்றும் பஞ்சாயத்தாரின் மூலம் அபராதம் விதித்து அவர்களுக்கே திருமணம் செய்து வைத்துவிடுவார்கள். விதவா விவாகம் கசவர்களுக்குள் நடக்கின் றது. எக்காரணம் முன்னிட்டும் பையன் வீட்டில்தான் திருமணம் நடைபெறும். மணமகன் துணிகள் வாங்கிக் கொடுக்கும் பொழுது அசில் ரூ. பதினைந்தேகால்வைக்கவேண்டும்.

வியாதி வந்தால் வீட்டு மருந்து கள் கொடுத்து, மாரிஅம்மனுக்கு பலி கொடுக்கின்றனர். பிரசவமும் வீட் டில்தான் பார்த்துக்கொள்ளுகிறார் கள். கசவர்கள் சாதாரணமாக வியாதி யினால் மரணம் அடைவதில்லையாம். பெண்களுக்குப் பிரசவத்தாலும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் காட்டு விலங்குகளாலும்தான் மர ணம் ஏற்படுமாம். இறந்தவர்களைப் பாடையில் சப்பாணியாகக் காலை மடக்கி உட்கார வைத்து, மயானத் தில் புதைப்பார்கள். மேலும், கசவர் இனத்தில் ஒருவன் இறந்தால், அரு கில் வாழும், குறும்பரில் ஒருவன் மொட்டை அடித்துக்கொள்ளுவான். மேலும் பிணமிருக்கும் பொழுதே ஆண்களும், பெண்களும் சேர்ந்து நடனமாடுகிறார்கள்.

கசவர்களுக்குள் தலைவர் 'மூப்பன்' இருக்கிறார். பாடியில் குற்றங்குறை கள் செய்தால் அவர்களுக்குச் சிறிய தொகையை அபராதமாக விதிக்கின் றனர். அபராதம் கொடுக்கச் சக்தி இல்லாதவர்களைக் காட்டில் ஒற்றை யடிப்பாதை வெட்டிச் சீர்படுத்தவோ அல்லது பொதுக்காரியமான வேலை களை இரண்டு மூன்று நாட்களுக்குச் செய்யவோ ஏற்பாடுகள் செய்வார் கள். மற்றவர்களைக் கலந்து ஆலோ சனை செய்யாமல் ஒரு காரியமும் செய் வதில்லை. தனிப்பட்ட ஒவ்வொருவர் செய்யும் காரியமும், எல்லோருக்கும் நன்மை பயப்பதாகத்தான் இருக்கும்.

ஒரு நாள் முழுவதும் காட்டில் யானைகளின் மலத்தைச் சேகரித்து எருவுக்காக லாரியில் ஏற்றுகிறார்கள். சிலர் பண்ணையார்களின் மாடுகளை மேய்ப்பதுமுண்டு. இவ்விதமான கடுமையான வேலைகளைச் செய்யும் பொழுது யானைகளாலும் விலங்கு களாலும் அபாயம் உண்டாகலாம் அல்லவா ? ஆகையால், இவ்வித மான வேலை செய்யக்கூடியவர்கள், ஒரு மூங்கிற் குழாயில், தங்களைப் பற்றியும் தாங்கள் யாருடைய மாடு களை மேய்க்கின்றனர் என்பதைப் பற்றியும் எழுதி, அக்குழாய்க்குள் போட்டு அதைக் கழுத்தில் அணிந்து கொண்டிருப்பார்கள். "ஆளைக் காணோம்" என்று கேள்விப்பட்ட தும், உடனே இந்தக் குழாயைத் தான் தேடிக்கொண்டு போவார் களாம்.

சில இடங்களில் வாழும் கசவர்கள் காடுகளை அழித்துக் கிழங்குகளைப் பயிர் செய்கின்றனர். மேலும், காட்டு யானைகளைப் பிடிப்பதிலும் வேட்டை யாடுவதிலும் மிகவும் கெட்டிக்காரர் கள். குறிதவறாதபடி அம்பு எய்யக் கூடியவர்கள்.

இலவசமாகக் காட்டில் கிடைத்தா லும், தங்களுக்கு வேண்டிய பொருளை மட்டும் அளவாகக் கொண்டுவருகிறார் கள். கொண்டுவந்த பொருளைப் பாடி யிலுள்ளவர்களுக்குப் பங்கிட்டுச் சாப் பிடும் வழக்கமுடையவர்கள். இதைக் கண்டு கண் கலங்கினேன்.


இவர்கள் எருமைக் கறியை உண்ண மாட்டார்கள். ஆனால், ஆடு, வயல் எலி, பறவைகள், கரடி, பன்றி, முயல் காட்டுக் கோழி, அணிற்பிள்ளை, மான் முதலியவைகளைச் சாப்பிடுவார்கள். வயல் எலிகளைக் காய்கறியுடன் சேர்த் துச் சமைப்பார்கள். 'ஈசல்' என்ற ஒருவகை எறும்புகளை அந்தப் பருவத் தில் இறக்கை நீக்கி, தீயில் வைத்த சட்டியில் வறுத்து உண்பார்கள்.

இவர்கள் குழந்தைகளுக்குக் கல் விக்கு வழியே கிடையாது. காரணம் இவர்கள் "கிர்ஜீஸ்" மக்களைப்போல் நாடோடிகளாகத் தங்கள் கால்நடை களுக்குப் புல் வேண்டி மேய்ச்சல் நிலத்தைத் தேடியும், காட்டுப் பன்றி களின் உபத்திரவத்திற்காகவும் தாங்கள் பயிர் செய்திருக்கும் நிலங் களிலேயே தங்களுடைய குடிசைகளை அடிக்கடி மாற்றிக்கொண்டு நிரந்தர மற்ற வாழ்க்கையை நடத்துகிறார்கள். தங்களுடைய காட்டு அனுபவங்களை யும், பழக்க வழக்கங்களையும் தங்கள் குழந்தைகளுக்குச் சிறுவயது முதலே கற்றுக்கொடுக்கின்றனர்.

சாதாரணமாய்ப் பத்து வயதுப் பையனுக்கு இருக்கும் காட்டு அனு பவம், நகரங்களில் வாழும் பலருக்குக் கிடையாது. ஆனால் அந்தப் பத்து

---

கசவர்கள் தொழுது பணியும் "மசினி குடி" என்ற அவர்களது கன்னிக் கோயில்,



வயதுப் பையன் நகரங்களில் வந்தால் ஆபத்தில்லாமல் மிகவும் சமத்தாக நடந்துகொள்வதைக் கவனித்தேன். இவர்கள் தமிழின் சிதைவாகிய மொழியைத்தான் பேசுகிறுர்கள், காடர்களிடம் அதிகமாகப் பழகும் நான், இந்தியாவில் எக்கோடிக்குச் சென்ருலும் சரி, அவர்களின் குடிசையில் சில நாட்கள்ளாவது இருந்து, அவர்களிடம் தட்டுத்தடு மாறிப் பேசுவேன். அவர்கள் மொழி தெரிந்த, வழிகாட்டியின் உதவியால் அந்த வார்த்தைகளைத் துருவித்துருவி ஆராய்ந்து பொருள் கண்டறிந்தால் இந்தியா முழுவதும், பேசும் காடர்களின் மொழியில், ''தமிழ்'ச் சொற்கள் பல ஆங்காங்கே எட்டிப் பார்ப்பதைக் காணலாம். சுமார் இருபதாண்டுகளாக இந்தியாவில் வாழும் ஆதிவாசிகளின் மொழிகளையும் வாழ்க்கை முறைகளையும் ஆராய்ச்சி செய்யும் எனக்கு, தமிழ் நான்கு மொழிகளுக்கு மட்டுமே கடன் கொடுக்கவில்லை என்பது புலனுகின்றது. ஆரியம் வருவதற்கு முன்னும் பின்னும் இந்தியா முழுவதிலும் பேசப்பட்டது தமிழ் மொழியே. ஆனுல்எக்காரணத்தைமுன்னிட்டோ கால மாறுபாட்டில் பிறமொழிகள் பலவிதமாகப் பரவிவிட்டன. பல அரசர்களின் படைபெடுப்பும் இம்மொழி மாறுபாட்டுக்கு ஒரு காரணமாகும்.

இமயம் முதல் குமரி வரையில் ஆதி காலத்தில் தமிழ் மொழியே பரவி இருந்தது என்பதனை,

''சதுர் மறை ஆரியம் வருமுன்
சக முழுதும் நினதாஞல்
முதுமொழி நீ அனுதி யென
மொழி குவதும் வியப்பாமே''

என்று மனேன்மணியம் ஆய்ந்து கூறுகிறது:

மேலும், காட்டிலும், மலைகளிலும் உள்ள ஆதிவாசிகள் இந்தியாவின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் சரி, காதில் அணியும் கம்மலைத் ''தோடு'' என்றே கூறுகிறுர்கள். ''தோடு'' என்ற சொல் வெகு காலத்திற்கு முன்பே உண்டானது என்று கூறலாம்.

''தோடுடைய சிவன்'' என்று கூறப்படுகிறதன்ருே! சங்ககால நூல்களை ஆராய்ச்சி செய்தால் தொல்காப்பியத்தில்

''தோடே மடலே ஓலை என்று
ஏடே இதழே பாளை யென்று
ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச்
சொல்லினர்.
புலவர்'
(தொல்: மரபியல். சூத்: 88)

தொல்காப்பியரே தன்னுடைய செய்யுளில் தனக்கு முன்னல் யாரோ சொல்லியதாகக் கூறும்பொழுது அக்காலம் எக்காலமோ? யாரே அறிவார்!

கசவர்களும், இருளர்களும், வில்லியர்களும், குறும்பர்களும், தமிழ் நாட்டில் கோவை, செங்கல்பட்டு, தென்—வட ஆற்காடு மாவட்டங்களிலும். கேரளத்திலும் இருக்கும் காடுகளிலும், சோலைகளிலும் வசிக்கின்றனர்.

இவர்கள் சோழ பரம்பரையினர்கள் என்று சரித்திர ஆராய்ச்சியாளர்களும் கூறுகிறுர்கள். இவர்கள் மொழியையும் பழக்க வழக்கங்களையும், சடங்கு முறைகளையும் ஆராய்ச்சி செய்யும் நான், இவர்கள் அன்று தமிழ் நாட்டை ஆண்ட மன்னர்கள் என்றும், பிற்காலத்தில் அன்னிய மன்னர்களுக்குப் பயந்து, தங்கள் இனத்தையும் பழக்கவழக்கங்களையும் மொழிகளையும் மாற்றிக்கொண்டும், தங்களை மறைத்துக் கொண்டும் காட்டிலும், மலையிலும் வாழ்கின்றனர் என்றும் கருதுவதில் தவறு ஒன்றுமிராதல்லவா?

இவர்களைப் பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டுமாஞல், இம்மக்களுக்கு எல்லா வசதிகளும், அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும். சில நகரவாசிகளுக்கு, ''இவர்கள் உலகில் இருக்கிறுர்களா?'' என்றே தெரியாமலிருந்தால், இவர்கள் நாகரிகமடைவது என்ருே!

..........


தீபாவளி?...... சுங்காஸ்நானம்!

காகிதம்... ... ... ...??

கங்கா பேப்பர் ஸ்டோர்ஸ் பிரைவேட் லிமிடெட்

(எல்லா ரக காகிதங்கள்--மொத்த விற்பனையாளர் )

20, பேக்கர் தெரு,

சென்னை - I.

த. பெட்டி: 1371. போன்: 24575.

எமது தீபாவளி வாழ்த்துகள்

நவீனம், நாகரிகம், அழகு, உறுதி, இவை யாவும் கூடிய கெட்டி ஸ்டைன்லஸ் ஸ்டீல் சாமான்கள் என்ருல் அவை ''பயோனீர் - ஹம்ஸாபிராண்ட் சாமான்களே'' உங்களது தேவைகளுக்கு உங்கள் ஊர் கடைகளில் கேட்டு பெறலாம்.

''ஹம்ஸா''

PIONEER INDUSTRIES,


P. B. No. 33,

Tiruchirapalli-I.

# உலக மாபெரும் நூலகங்கள்

கௌண்டின்யன்....

உலகில் உள்ள தலைசிறந்த நூலகங்களுள், அமெரிக்காவின் தலைநகரில் நிறுவப்பட்ட காங்கிரஸ் நூலகம் அந்நாட்டுக் கலாசார முன்னேற்றத்தின் அறிகுறியாக ஒரு திலகமென விளங்குகிறது, இந்நூலகம் 1800-ம் ஆண்டில் நிறுவப்பட்டு நாட்டு சட்டசபையுடன் இணைக்கப்பட்டிருந்தது. துர்அதிருஷ்டவசமாக 1814-ம் ஆண்டில் தீக்கிரையாகி மீண்டும் இந்த நூலகம் 1815-ல் புதிதாக உருவாக்கப்பட்டது. ஆண்டுதோறும், மேலும் மேலும் இது அபிவிருத்தியடைந்து சென்ற 145 வருடங்களாக திகைப்பூட்டும் அளவுக்கு வளர்ச்சிபெற்றிருக்கிறது. தற்காலத்தில் இவ்வறிவுக்களஞ்சியத்தில் மொத்தம் 35 331.657 புத்தகங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அவைகளுள் மூன்றில் ஒரு பங்கு அச்சுப் பிரதிகள் என்றும், 150,000,000 கையெழுத்துப் பிரதிகள் என்றும் 2,600.000 புகைப் படங்கள் என்றும், 2 300.000 தேசப் படங்கள் என்றும், 2,000.000 சங்கீத நூல்கள் என்றும். 464,000 கிராம போன் பிளேட்டுகள் என்றும், இவைகள் தவிர கல்வி சம்பந்தப்பட்ட எண்ணற்ற சினிமா பிலிம்களும் உள்ளன என்றும் சொல்லப்படுகிறது. இந்நூலகம் 1800-ம் ஆண்டு அமெரிக்கப் பெரியார் தாமஸ் ஜெஃப்பர்ஸன் என்



மாஸ்கோவில் உள்ள உலகிலேயே மிகப் பெரிய லெனின் தேசீய நூல் நிலையம்.

பவர் நன்கொடையளித்த 6,487 பிரதிகளிலிருந்து ஒன்றரை நூற்றுண்டுகளுக்குள் பிரமிக்கச் செய்யும் அளவுக்கு வளர்ந்து காட்சியளிப்பது அந்நாட்டுப்பண்பாட்டுக்கு ஒருசிறந்த எடுத்துக் காட்டு.

1870-ம் ஆண்டிலிருந்து சட்டப்படி நாட்டில் பிரசுரிக்கப்பட்ட ஒவ்வொரு நூலும் இந்நூலகத்திற்கு இலவசமாக வழங்கப்பட்டதன் காரணத்தால் இந்நூலகம் இச்சிறிய கால அளவில் இவ்வளவு பெரியதாக வளர வாய்ப்புக் கிடடியிருக்கிறது. இந்நூலகத்தின் பொக்கஷங்கள் தற்காலத்தில் இரண்டு பெரிய கட்டடங்களில் வியாபித்திருக்கின்றன. இக்கட்டங்களுள் 21 பெரிய வாசக அறைகளிருக்கின்றன வென்றும், வரிசை வரிசையாக அலங்காரமாக நூல்கள் அடுக்கப்பட்டிருக்கும் அலமாரிகளை ஒன்றன் பக்கத்தில் ஒன்ருக நிறுத்திவைத்தால் அவைகள் 250 மைல்கள் தூரம் நிறுத்தப்படலாம் என்றும் கூறப்படுகிறது. இந்நூலகத்தில் 2,520 பணியாளர்கள் எண்ணற்ற வாசகர்களுக்கு சேவை புரிகிருர்கள். சுமார் ஏழரை லட்சம ஆராயச்சியாளர்கள் 1955-ம் வருடத்தில் இந்நூலகத்திலிருந்து தங்களுக்குத் தேவையான கருத்துக்களை திரட்டிச் சென்றிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இந்நூலகம் நிர்வாக இயலிலும், போதிய அளவு நூல்களைப் பெற்றிருப்பதால இத்துறைகளில் இதற்கு நிகர் இதுவே. இந்நூலகத்தில் கையாளப்படும் பாகுபாடு திட்டம் உலகில் அங்கீகாரம் பெற்றளட்டு பாகுபாடு திட்டங்களுள் ஒன்று.


இந்நூலகத்திற்காகவே பிரத்தியேகமாக இது உருவாக்கப்பட்டது. இந்நூலகத்தில் உள்ள ஒவ்வொரு நூலின் பெயரும், ஆசிரியரின் பெயரும், அதன் பிரசுரகர்த்தாவின் பெயரும, பிரசுரிக்கப்பட்ட ஆண்டும் பொறிக்கப்பட்ட அச்சிட்ட கார்டுகள் அடங்கிய பெட்டி மிகவும் பிரமிக்கத்தக்கது. இந்நூலகத்திலிருந்து ஆயிரக் கணக்கான இதர நூல் நிலையங்கள் தங்களுக்கு வேணடிய நூல்களுக்குப் பொருத்தமான கார்டுகளைப் பெற இங்கு வசதிகள் அளிக்கப்படுகின்றன.

## பல்கலைக் கழக நூலகங்கள்

உலகிலே, பெரிய பல்கலைக் கழக நூலகம் அமெரிக்காவிலுள்ள ஹார்வார்டு பல்கலைக்கழக நூலகம். இது 1638-ம் ஆண்டில் உருவாயிற்று. இந் நூலகத்தில் சுமார் 6,000,000 நூல்கள் சேமிக்கப்பட்டிருக்கின்றன. இந்நாட்டு மற்ருெரு பல்கலைக் கழக நூலகம் யேல் பல்கலைக் கழகத்திலுள்ளது; 1701-ம் ஆண்டு இது நிறுவப்பட்டு, தற்காலம் 45,000 நூல்களைப் பெற்றிருக்கிறது. கொலம்பியா பல்கலைக் கழகத்தில் 3,000,000 நூல்களும், கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தில் சற்றேறக் குறைய 4,000,000 நூல்களுமிருக்கின்றன. கானடா தேசத்திலுள்ள சிறந்த பல்கலைக் கழகங்களான மக்கில் பல்கலைக் கழகம், டொரோன்டோ பல்கலைக் கழகம், இவ்வொவ்வொன்றிலும 32,500,00 நூல்கள் இருக்கின்றன என்று கணககிடப்பட்டிருக்கிறது.

## பிரிட்டிஷ் - பொருட் காட்சி சாலை நூலகம்

பிரிட்டனில் பிரத்தியேகமான ஒரு ஸ்தாபனத்தில் சேமிக்கப்பட்ட நூல்கள பிரிட்டிஷ் பொருட் காட்சி சாலை நூலகம் ஒன்றில்தான் ஏராளமாக இருக்கின்றன என்று கூறின் அது மிகைபடக் கூறியதலல. இந்நூலகம் 1753-ம் ஆண்டில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பிரேரேபித்த சட்டத்தை அனுசரித்து உருவாக்கப்பட்டது. ஸர் ஹான்ஸ் ஸ்லோன் என்பவருடைய சேமிப்பு நூல்களும், காட்டன், ஹார்லீன் என்பவர்களுடைய கையெழுத்துப் பிரதி நூல்களும் இந்நூலகத்தின் ஆதாரம். இரண்டாம் ஜார்ஜ் மன்னர் 1757-ல் அரசாங்க நூலகத்தை இத்துடன் இணைத்தார். அதன்பின் சட்டப்படி நாட்டில் பிரசுரமாகும் நூல்களின் பிரதி ஒவ்வொன்றும் இந்நூலகத்திற்கு வழங்கப்பட வேண்டும் என்று நிபந்தனை வெளி வந்ததால் இந்நூலகம் நாளடைவில் பருத்து வளர்ந்தது. 1823-ம் ஆண்டில் நான்காம் ஜார்ஜ் மன்னர் அளித்த நன்கொடையின் பயனால் இந்நூலகம் மேலும் வளர்ச்சிபெற வாய்ப்புக் கிட்டியது. இதுவரை பிக்கேடலி என்னுமிடத்திலிருந்து சேவை புரிந்த இந்நூலகம் புளும்ஸ்



பரி என்னுமிடத்திற்கு அகற்றப்பட்டது. அக்காலத்தில் இந்நூலகத்தின் செயலாளர்களாகிய இயக்குநர், தலைமை நூலகர் முதலிய பதவியாளர்கள் மன்னர் ஆக்ஞையால் தான் நியமிக்கப்பட வேண்டும்.

இந்நூலகத்தில் மூன்று பகுதிகளிருக்கின்றன. அவைகளாவன (1) அச்சிட்டப் பிரதிகள், (2) கையெழுத்துப் பிரதிகள், (3) கீழ்க்கலை நூல்கள், (அச்சிட்டவைகளும் கையெழுத்துப் பிரதிகளும்) இந்நூலகத்திலுள்ள நூல்களின் மொத்த எண்ணிக்கை 6,000,000, அச்சிட்டப் பிரதிகள் 60,000, கையெழுத்துப் பிரதிகள் 100,000, சாஸனங்களும், சுருள்களும், ஆயிரக்கணக்கான கிரீக், லத்தீன் மொழிகளிலியற்றிய நூல்கள், எகிப்து தேசத்தைப் பற்றிய நூல்கள் முதலியன. இந்நூலகத்தின் புத்தகப்பட்டியல், (புத்தக வடிவங் கொண்டவைகள்) 1250 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் 5 அல்லது 6 வருடங்களில் புகைப்பட சாதனங்களை கையாண்டு புத்தகப் பட்டியல் புத்தகங்களின் கணக்கை 1250 லிருந்து 300 ஆக ஆக்கப்படும் என்று தெரிகிறது.

## பிரிட்டனில் பல்கலைக் கழக நூல் நிலையங்கள்

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக நூலகம் 13-வது நூற்றாண்டிலிருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறது, இந்நூலகத்தின் நூலடக்கம் 20 லட்சம். ஆனால் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திலுள்ள பெயர்பெற்ற போடிலேன் நூலகம் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக நூலகத்திலுள்ள நூல்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகம். இவ்விரு நூலகங்களும் நூல் நிலைய சட்டப்படி நாட்டில் பிரசுரிக்கப்படும் நூல்களின் பிரதிகள் ஒவ்வொன்றையும் பெறுகின்றன. இப்பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள சில கல்லூரிகளானவைகள், அதாவது, கிரைஸ்ட் சர்ச்சு, டிரினிடி, மாடலீன் கார்பஸ் என்ற

அமெரிககாவில் உள்ள உலகிலேயே இரண்டாவது நூல் நிலையமான அமெரிக்க காங்கிரஸ் நூல் நிலையம்.


பெயர் கொண்ட கல்லூரிகளில் சேமிககப் பட்டிருக்கும் நூல்களின் தரம் பிரமிக்கக் கூடியது.

பிரிட்டனில் பெயர் பெற்ற சாமுவேல் பெபிஸ் என்பவரது பிரத்யேக நூலகமானது மாடலீன் கல்லூரிநூலகத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. சாமுவேல் பெபிஸ் என்பவர் (1633-1703) தினக்குறிப்பு எழுதுவதில் நிகரற்றவர். இவர் எழுதி வைத்த குறிப்புகள் ஒரு நூலாக்கப்பட்டு இத்துறையில் ஒரு சிறந்த இலக்கியமாக அது திகழ்வது அறிந்ததே.

லண்டன் பல்கலைக் கழக நூலகம், நூலக சட்டப்படி சலுகைகள் ஒன்றும் பெறவில்லை என்றிருந்த போதிலும், இந்நூலத்தில் 6 50,000 நூல்கள் சேமிப்பிலிருக்கின்றன. இப்பல்கலைக் கழகத்தை யொட்டிய கல்லூரியும் இவ்வளவுக்கு நூல்களைப் பெற்றிருக்கிறது.

பிரிட்டிஷ் அரசியல், பொருளியல் துறை நூலகத்தில் உள்ள நூல்களும், துண்டு பிரசுரங்களும் ஏழரை லட்சம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஸ்காட்லண்டு தேசத்திலுள்ள பெரிய நூலகங்கள், தெற்கே இங்கிலாந்திலுள்ள நூலகங்களின் சேமிப்புக்



இந்தியாவில் உள்ள மிகப்பெரிய நூல் நிலையமான கல்கத்தா தேசீய நூல் நிலையம்.

குப் பின்வாங்கவில்லை. கிளாஸ்கோ பல்கலைக் கழக நூலகத்தில் அடங்கிய நூல்களின் எண்ணிக்கை,4,00,000. அபர்டீன், செயிண்டு, ஆண்டிரியூஸ் பல்கலைக் கழக நூலகங்களின் சேமிப்பு கிளாஸ்கோவுக்கு அடுத்தபடியாக சொல்லலாம். இவைகள் இரண்டும் முதன் முதலில் அச்சிட்டப் புத்தங்களை பெற்றிருக்கின்றன. எடின்பரோ பல்கலைக் கழக நூலகத்திலும் சுமார் 5 லட்சம் புத்தகங்கள் இருக்கின்றன. இந்நூலகத்தில் மதிப்பிடக் கூட முடியாத கையெழுத்துப் பிரதி பொக்கஷங்களும் இருக்கின்றன.

இங்கிலாந்தில் சிலமாகாணங்களிலுள்ள, பல்கலைக்கழக நூலகங்கள் ஸகாட்லாண்டு நூலகங்களுக்குப் பின் தோன்றியவைகள். ஆயினும், மான்செஸ்டர் நூலகத்தில், 6,50,000 நூல்கள் சேமிக்கப்பட்டிருக்கின்றன. பிரசித்தி பெற்ற ஜான் ரைலாண்ட்ஸ், சேதாம், லீடஸ், லிவர்பூல் முதலிய நூலகங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் 4,00,000 நூல்கள் இருக்கின்றன.

## பிரான்ஸ்

பிப்ளியா தெக்நேஷனல் என்ற பெயர் கொண்ட பிரான்ஸ் தேசத்து நூலகம் உலகிலேயே மிக நேர்த்தியான நூலகம். இது ஜான் மன்னர் காலத்தில் உருவானது. இதன் முதல் நூலகரின் பெயர் க்ளாட் மாலே. 1380, 1411, 1424 இவ்வாண்டுகளிலே தயார் செய்த இந்நூலகத்தின் பட்டியல்கள் இன்றைக்கும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்நூலகத்தை இங்கிலாந்தில் பெட்போர்டு பிரபு விலைக்கு வாங்கினர். 1435-ம் ஆண்டில் இங்கிலாந்தில் இது சிதைந்து போய் விட்டது.

பதினோருவது லூயி மன்னர் பிரான்ஸ் தேசத்தில் அரசாட்சி செய்த பொழுது அவர் வேறொரு நூலகத்தை நிறுவி லாரன்ட் பால்மியர் என்பவரை நூலகராக நியமித்தார். எட்டாவது சார்லஸ் மன்னர் அதை, விலைக்கு வாங்கிய நூல்களைக் கொண்டும், கொள்ளை அடித்த நூல்

களைக் கொண்டும் வளர்த்தார். அச்சமயம், இந்நூலகம் ஒரு அபூர்வமான நிலையை அடைந்தது. பதினைன்காவது லூயி மன்னரது ஆட்சியின் இறுதி காலத்தில் இந்நூலகத்தில் 70,000 நூல்கள் சேமிக்கப்பட்டிருந்தன. பின்னர் சேமிப்பு, 3,00,000 எண்ணிக்கையைத்தொட்டது. 1735-ம் ஆண்டில் துவங்கி 1739-ம் ஆண்டு முடிவில் இந்நூலகத்தின் பட்டியல் 11 புத்தகங்களாக வெளிவந்தன. நெப்போலிய மன்னன் காலத்தில் இந்நூலகம் மேலும் அபிவிருத்தியடைந்தது. அவரது ஆக்ஞையில், இதற்கு வருடாந்தர மான்யத் தொகை அதிகரிக்கப்பட்டது. நூலக சட்டத்தின் கீழ் பிரதிகளும் இதற்குக் கிடைக்கலாயிற்று: இதன் காரணத்தால் நாளடைவில் நாட்டிற்கே ஓர் சிறந்த நூலகமாக இது உருவாயிற்று.

## ருஷ்யா

1956-ம் வருட முடிவில் ருஷ்யாவில் 4,00,000 நூலகங்கள் இருந்தன வென்றும் அவைகளின் மொத்த நூலடக்கம் 1500,000,000 என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. மாஸ்கோவிலுள்ள லெனின் நூலகம் 200,000,000 புத்தகங்களும், சஞ்சிகைகளும் கொண்டுள்ளது. இது உலகிலேயே உள்ள பெரிய நூலகங்களுள் ஒன்று. இந்நூலகத்தின் பணியாளர்களின் தொகை 2000. இவர்களுள் பெண்பாலர்களின் எண்ணிக்கை 75 சதவிதம் என்று சொல்லப்படுகிறது. நூலகம் காலை 9 மணியிலிருந்து மாலை 11 மணி வரை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. பணியாளர்கள் இரண்டு பிரிவாக வந்து பணியாற்றுகிறார்கள். இந்நூலகம் 1862-ம் வருடத்தில் மாஸ்கோவில் முதலில் பொதுமக்கள் நூலகமாக உருவாயிற்று அப்பொழுது அதன் நூலடக்கம் 1,00,000. இதன் பெயர் லெனின் நூலகம் என்று 1925-ல் மாற்றப்பட்டது. தற்காலத்தில் இந்நூலகத்திலிருந்து 3000 கிளை நூலகங்கள் நூல்களைப் பெறுகின்றன. இந்நூலகத்தின் பட்டியல் அச்சிட்ட கார்டுகள் வடிவத்தில் இருக்கின்றன. அவைகளின் எண்ணிக்கை 70 லட்சம். வாசக சாலையில் ஒரே சமயத்தில் 500 வாசர்களுக்கு ஆசனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேற்கூறிய 200 லட்சம் நூல்களுள் புத்தகங்களின் எண்ணிக்கை 90 லட்சம், சஞ்சிகைகளின் எண்ணிக்கை 70 லட்சம், தினசரிகளின் எண்ணிக்கை 2,90,000, கையெழுத்துப் பிரதிகள் 2,63,000 தேசப்படங்கள், 1,42,000, பிலிம்கள் 1,04,000. இப்புள்ளி விவரங்களைக் கொண்டு இந்நூலகத்தின் பரிமாணம் அங்கு செல்லாமலேயே தெரிந்து கொள்ள இயலும்.

ருஷ்யாவிலுள்ள யு. எஸ். எஸ். ஆர். விஞ்ஞான அகாடாமியிலுள்ள நூல்களின் மொத்த எண்ணிக்கை 180 லட்சம். லெனின் கிராட் பொது நூலகத்தில் உள்ள நூல்களின் எண்ணிக்கை 110 லட்சம். திப்ளிஸியிலுள்ள கார்ல்மார்க்ஸ் நூலகத்தில் உள்ள நூல்களின் எண்ணிக்கை 20 லட்சம்.

## ஆஸ்திரேலியா

1902-ல் மெல்போர்ன் நகரில் முதல் முதலில் நிர்வாகம் பெற்ற நூலகம். 1927-ம் ஆண்டில் புது நகராகிய கான்பிராவுக்கு மாற்றப்பட்டது. இது அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் நிறுவியிருக்கும் காங்கிரஸ் நூலகத்தைப் போல் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்நூலகம் காமன் வெல்த்து பார்லிமெண்டு நூலகமாகவும், பொது மக்கள் நூலகமாகவும் சேவை புரிகிறது. இது 4,00,000 புத்தகங்களையும், 50, 000 தேசப் படங்களையும் 25 லட்சம் அடி நீளம் பிலிம்களையும், 1,00,000 கன அடி தஸ்தாவேஜுகளையும் பெற்றிருக்கிறது, ஸிட்னி பல்கலைக் கழக நூலகத்தில் 4,00,000 மும், மெல்போர்ன் பல்கலைக்கழக நூலகத்தில் 25,00,000 மும் நூல்கள் இருக்கின்றன.

நம் நாட்டு நூலகங்கள் மேலே குறிப்பிட்ட நூலகங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், ஒரு தவழ்ந்து நகரும் குழந்தைக்குச் சமானமாகக் காட்சியளிக்கிறது. இக்குறையை அரசாங்கம் மூன்றும் ஐந்தாண்டு திட்ட முடிவிற்குள் தீர்க்கவழி தேடும் என்று உறுதியாக நம்பப்படுகிறது,

## இந்தியா

நூற்று இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, கல்கத்தாவில் உருவாகிய இந்திய தேசிய நூலகம் தற்காலத்தில் இந்தியாவிலேயே ஒரு சிறந்த நூலகமாகத் திகழ்கிறது. இது ஸ்டாக்கிலர் என்ற பெயர் கொண்ட ஒரு ஆங்கிலேயரின் முயற்சியால் ஆரம்பத்தில் 4,700 பிரதிகளுடன் பணியாற்றத் துவங்கியது. அப்பொழுது இதற்கு "கல்கத்தா பொது மக்கள் நூலகம்" என்று பெயர். 1903-ம் வருடத்தில் கர்ஸன் பிரபு அரசாங்க நிர்வாக அலுவலகத்திலிருந்த நூலகம் ஒன்றை இத்துடன் பிணைத்து இதற்கு "சாம்ராஜ்ய நூலகம்" என்று பெயர் கொடுத்தார் 1948-ம் வருடத்தில் இப்பெயரைத் துறந்து இது இந்திய தேசிய நூலகம் என்ற பெயரைப் பெற்றது. பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு 350,000 நூல்கள் இந்நூலகத்திலிருந்தன. தற்காலத்தில் இதன் அடக்கம் 10,00,000. சுமார் 7000 சஞ்சிகைகள் இங்கே வருகின்றன. வருடந்தோறும் 300,000 வாசகர்கள் இங்கு வந்து படித்துப் பயன் பெறுகிறார்கள். நூலகத்துப் பணியாளர்களின் தொகை மொத்தம் 450. நூலகர், திரு. பி. எஸ். கேசவன் அவர்களது திறமையாலும் முயற்சியாலும் வங்காள மாகாண கவர்னர்கள் வசித்து வந்த "பெல்விடேர்" என்ற பெயர் கொண்ட மாளிகைக்கு பழய கட்டடமாகிய "மெட்காப்ஹா' விலிருந்து இந்நூலகம் மாற்றப்பட்டது. 1953-ம் வருடத்தில் காலம் சென்ற மௌலானா அபுல்கலாம் ஆஸாத் இந்நூலகத்தை "பெல்விடேர்" மாளிகையில் திறந்து வைத்தார்.

இப்பொழுது இந்தியாவிலுள்ள நான்கு தேசிய நூலகங்களுள் இந்நூலகமும் ஒன்று. 1954-ம் ஆண்டில் அமுலுக்கு வந்த நூலக சட்டத்தின் விதிப்படி நாட்டில் வெளிவரும், நூல்கள், சஞ்சிகைகள், தினசரிப் பத்திரிகைகள் முதலியவைகளின் பிரதி ஒவ்வொன்றும் இந்நூலகத்திற்கு வழங்கப்படுகிறது. சட்டம் அமுலுக்கு வந்த முதல் வருடத்தில் இந்நூலகத்தில் 17,000 நூல்கள் வந்து குவிந்தன. சட்டத்தின் கீழ் இலவசமாகப் பெறுவது தவிர வருடா வருடம், இந்நூலகம் 7000 புத்தகங்களையும் விலைக்கு வாங்குகிறது. இந்நூலகத்தின் வருடாந்திரச் செலவு ரூ. 12 லட்சம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்நூலகத்திற்கு சில பெரிய பிரத்தியேக நூலகங்களின் சேமிப்பும் நன்கொடை அளிக்கப்பட்டிருக்கிறது. அவைகளுள், குறிப்பிடத்தக்கவைகள், ஸர் அஸுடோஷ் முகர்ஜியின் 75,000 சொந்த சேமிப்பு நூல்கள், சரித்திரப் பேராசிரியர் ஸர் ஜாடுநாத் ஸர்கார் அவர்களின் சேமிப்பு; சட்ட இயல் வல்லுநர் ஸர்டேஜ் பகதூர் ஸாப்ரு அவர்களின் சேமிப்பு; சென்னை பல்கலைக் கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர் காலஞ்சென்ற திரு. வையாபுரிப் பிள்ளை அவர்களின் சேமிப்பு, சரித்திரப் பேராசிரியரும் டில்லி பல்கலைக்கழகத் துணை வேந்தராகப் பணியாற்றிய டாக்டர் ஸென் அவர்களின் சேமிப்பு.

சென்ற இரண்டு ஆண்டுகளாக இந்நூலகம் "இந்திய தேசிய வெளியீடு நூல் பட்டியல்" களை அவ்வப்பொழுது பிரசுரிக்கின்றது. இப்பட்டியலில் ஒவ்வொரு மொழியிலும் இந்தியாவில் பிரசுரமாகும் நூல்களின் பெயர்கள், அவைகளை ஆக்கியோர்களின் பெயர்கள், பதிப்பகங்களின் பெயர்கள், நூல்களின் விலைகள் முதலிய விவரங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

# சோளீசுவரம்

புஷ்பத்துறை சுப்ரமண்யம்

"உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர் உத்தரா பதத்தில் பூபதியாரை ஜெயித்தருளி உத்தோத்ஸவ விபவத்தால் கங்கா பரிக்ரகம் பண்ணியருள கங்கை கொண்ட சோழ ரென்னும் திரு நாமத்தால் இத்திரு முற்றத்தில் வைத்தருளின உத்தமாக்ரம் கங்கை கொண்ட சோழ நில். . ."

இதுபோன்ற எத்தனையோ சாஸனங்கள் செப்பேடுகள், தந்தை ராஜராஜ சோழனின் ஆற்றலிலும், ஆர்வத்திலும் பெருமையிலும் புகழிலும் எள்ளளவும் குறையா அருமை மகன் ராஜேந்திர சோழனின் வெற்றிகளையும் சாதனைகளையும் பற்றி பெற்றவன் ராஜேசுவரம் கோயிலைத் தோற்றுவித்து நாட்டிற்கும் தனக்கும் பெருமை கொண்டான் என்றால் பிள்ளை சிற்பக் கலையிலே தலைசிறந்த 'சோளீசுவரம்' கோயிலை எழுப்பி தமிழ் நாட்டின் பெருமையை நிலை நாட்டினன் என்றும் அழியாத நிலையில், மேலும் சோளீசுவரம், மன்னனுக்கு உள்ள பக்திக்கும் கலை உணர்வுக்கும் மட்டும் ஓர் உயர்ந்த எடுத்துக்காட்டாக நிற்கவில்லை; வட நாட்டிலுள்ள கங்கை நதிவரை உள்ள நாட்டை வென்று வெற்றிக்கொடி நாட்டி வந்ததின் சின்னமாக-ஒப்பற்ற ஞாபகார்த்தமாக - அமைந்து விட்டது.

அதனாலேயே அவ்வூர்க்கு கங்கை கொண்ட சோழபுரம் என்கிற காரண - புகழ்படைத்த - பெயரும் சூட்டப்பட்டது. தெற்கே இலங்கையும் வடக்கே கங்கை நதியும் எல்லைகளாக நின்றதாதலால் "கங்கையும் கடாரமும் கொண்டவன்" ஆனன் ராஜேந்திர சோழன்.

திருச்சிராப்பள்ளியிலிருந்து 60 மைலில் உள்ளது கங்கைகொண்ட சோழபுரம். அரியலூர் ஜயங்கொண்டம் வழியாக பஸ்ஸில் செல்லவேண்டும். கிழக்கே இவ்வூருக்கும் சிதம்பரத்திற்கும் இருபதே மைல்கள் தான்.

ராஜேந்திர சோழன் காலத்தில் சோழ சாம்ராஜ்யத்தின் புகழும் கீர்த்தியும் உச்ச நிலையை அடைந்திருந்தன. கி. பி. 1012 ஆண்டு முதல் 1044 வரை—முப்பத்திரண்டு ஆண்டுவரை அவன் மன்னனாக விளங்கியது அறியக் கிடக்கின்றது. தஞ்சையிலே தந்தை கட்டிய கோயில் அவனை மிகவும் கவர்ந்திருந்தது. தந்தையைப் போன்ற வீரமும் பராக்கிரமும் கொண்ட அவன் கங்கை முதல் கடாரம்வரை வென்று தன்னாட்சியின் கீழ் கொண்டுவந்ததோடு நில்லாமல், தன் வெற்றியை தக்க முறையில் அழியாவண்ணம் கொண்டாட ஆசை கொண்டான். ஒரே காடாக மண்டிக் கிடந்த சோளீசுவரம் உள்ள இடம் அவன் மனதிலும் பார்வையிலும் விழுந்தது. காட்டை அழித்தான் அசுர வேகத்தில் - நிலத்தைப் பண்படுத்தினன். பார் புகழும் ஊராக்கினன் கங்கை கொண்ட சோழபுரமாக. ஊருக்கு ஓர் அணிகலனாக கலைப் பொக்கிஷமான சிவன் கோயிலை நிர்மாணித்து நாடு செழிப்புற "ஜலமயமான ஜயஸ்தம்பம்" என்று புகழ்பெற்ற "சோழ கங்கம்" எனும் ஏரியையும் வெட்டி மக்கள் நல்வாழ்விற்கு அடிகோலினன்.

வெற்றியின் சின்னமாக எழுந்த கோயிலிலே குடிகொண்டுள்ள இறைவனுக்கு அபிஷேகம் செய்ய வடநாட்டிலே வெற்றி பெற்று அடிமைப்படுத்திய அரசர்களின் தலையிலே கங்கை நீரை குடங்களிலே சுமந்து கொண்டுவரச் செய்தான் ராஜேந்திரன் என்று சரித்திரம் கூறுகிறது.

அமைப்பிலும் சிற்பத் திறமையிலும் ராஜேஸ்வரத்தை மிஞ்சிவிடும் நிலையாகி விட்டது சோளீசுவரம். சோளீஸ்வரம் ராஜேஸ்வரத்தைக் காட்டிலும் உருவத்திலே - நிலப்பரப்பிலே - சிறிதென்பது உண்மைதான். கலையம்சத்திலே - வேலைப்பாட்டிலே - சோளீசுவரம் தலையானதென்பதை துணிந்து கூறலாம்.

கோயிலின் அமைப்பைக் கவனியுங்கள். கர்ப்பக்கிரகம் மட்டும் 241 அடி உயரம்; மேலே உள்ள விமானம் 174 அடி. சரியான அஸ்திவாரமிட்டு நிலத்தை மேடாக்கி அதன்மீது கோயிலைக் கட்டி கோபுரத்தை எழுப்பியுள்ளார்கள். எல்லாம் கருங்கல்லால் ஆனவை. தரையிலிருந்து இருபது அடி எழுப்பப்பட்ட அடிப்பீடம் சமசதுரமாகவும் மேலே செல்லச் செல்ல கோபுரம் குவிந்து ஒரு நிலைக்கு வருகிறது. அவ்விடத்தில் வட்டமான ஒரு பெருங்கல்லை வைத்திருக்கிறார்கள். இத்தனை பெரிய கல்லை எப்படி அத்தனை



இமயப் பொற்பில் உலவும் இளமென் பிடியான உமையும், திரிபுரம் எரித்த வீரி உடைக் கடவுளும் கரம் தொட்டுப் பயிலும் காதல் காட்சி இது.

உயரத்தில் ஏற்றி அமைத்தார்கள் என்பது ஒரு பெரிய கதை. ஒரு மைல் தூரத்திலிருந்து கோபுரம் வரை கோயிலைச் சுற்றி மண்ணைக் கொட்டி மேடாக்கி, சாரக்கட்டைகளை அதன் மீது பரப்பி தூக்க முடியாத அந்த வட்டக்கல்லை அடியிலிருந்து அதிலே உருட்டி உயரக் கொண்டு வந்தார்கள் என்பது நிச்சயம். இதற்கு எத்தனை துணிவும் விடா முயற்சியும் டற்றும் வேண்டும்!

கர்ப்பக் கிரகத்தின் மீது ஒன்பது மாடங்களும், கீழே உள்ளது போல் மேலே இரு கர்ப்பக்கிரகம் போன்ற கட்டிடங்கள் - சன்னிதிகள் உள. இதுபோன்ற அற்புத அமைப்பு - மூன்று சன்னிதிகள் ஒன்றின்மேல் மற்றொன்ருக இருப்பது வேறெங்குமில்லை. மூன்ருவது உச்சி கட்டிடத்தில் நடுவே உள்ள ஒரு ஓட்டையிலிருந்து பார்த்தால் அடித்தளத்தில் உள்ள இலிங்கம் நன்ருகத் தெரிகிறது. பகைவர்களின் படையெடுப்பிலிருந்து மக்களைக் காப்பாற்ற ஊர் மக்கள் எல்லோரும் தங்கவே இம்மாதிரி பெரிய படைப்பு ஏற்பட்டிருக்க வேண்டுமென அறிஞர்கள் கருதுகிருர்கள். மூன்று மாடங்களிலும் உட்புற அமைப்புச்சுற்றி பிராகாரங்கள் அமைந்திருப்பது ஓர் விந்தையே. முப்பத்தி நான்கு அடி [illegible]ளவு கொண்ட - விமானத்திலுள்ள வட்ட வடிவமான கல் தாமரை இதழ்கள் போல



கலைகளுக்கு மட்டும் அல்லாது
அழகிகளுக்கும் அரசியாகத் திகழும்
கலைமகள் சிலை இது.


செதுக்கிய அடிப்படையில் அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு நோக்கியிருக்கும் கோயிலிற்குள் நுழைந்ததும் நம்மை வரவேற்கக் காத்திருப்பவர்கள் எட்டடி உயரத்தில் சிறந்த சிற்பங்களாக நிற்கும் வாயில் காப்போரும் இருபது அடி உயரமாக வீற்றிருக்கும் நந்தியும்தான். நந்தி சுதை-செங்கல் சுண்ணும்பால் செய்யப்பட்டது. இருப்பினும் பார்ப்பவர் மனதை விட்டு அகலாத ஒரு அரிய கலைப்பொருளாக இந் நந்தியை எண்ண வேண்டும். "பெரிய நாயகர்" குடி கொண்டுள்ள கர்ப்பக்கிரஹத்தைக் கண்டால், பெயருக்கேற்ப பெரிய அளவில் - குறுக்களவு மூன்று அடி - சுற்றளவு ஐம்பது முழம் - இலிங்க உருவில் காட்சி தருகிருர் அந்தக் கடவுள். தஞ்சை பிருகதீஸ்வரரைப் போலவே, உள்ளே ஏணி ஒன்று அமைத்து ஆண்டவனுக்கு அபிஷேகம் முதலியன செய்கிருர்கள்.

சுவாமி சன்னிதிக்கு இடது வலது புறமுள்ள வாயில்களுக்கு அருகே பெரிய ஆள் உயரத்தில் எழுப்பப்பட்டு வீற்றிருக்கும் 'கலைமகள்' 'இலக்குமி' 'சண்டேசுவரர்' முதலிய சிற்பங்களைப் பார்த்தால் அவ்வளவும் அற்புதப் படைப்பு.

அணிந்துள்ள அணிகலன்களின் வேலைப்பாட்டை கவனியுங்கள். காலிலே - உடையிலே - கைகளிலே - கழுத்திலே காதிலே - கலைக்கிரீடத்திலே — இவற்றிலே அனுவசிய அதிகமான அறிவுக்குப் புறம்பான நகைகள் கிடையாது. மேலேகுறிப்பிட்டசிற்பங்கள் போக ஜெகந்நாயகி, பராசக்தி உமா, மகேசன் முதலியவை பார் பாராட்டப்பட வேண்டியவை.

மற்ற தமிழ்நாட்டு கோயில்களில் இல்லாத ஒரு அதிசயம். அற்புத கலைப்படைப்பு - நிறைந்த ஓர் கலைவிருந்து இந்தக் கோயிலில் உளது. நாலடி சதுரங்கொண்ட ஒரே கல். அதன் நடுவே தாமரை இதழ்கள் கொண்ட சக்கர வடிவிலே - ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் சூரியன் வீற்று சவாரி



தஞ்சைப் பெரிய கோயில் நந்தியையும்
கலைத்திறத்தில் விஞ்சக்கூடிய
சோளீசுவர நந்தி

செய்ய, மற்ற எட்டு கிரகங்களும் எட்டு திக்குகளை நோக்கிப் பறக்க ஓர் சிறந்த சிருஷ்டியாக - கலையின் மாபெரும் வெற்றியாகப் படைத்து விட்டார்கள்.

வடக்குப் பிரகாரத்தின் கிழக்கே உள்ள 'சிங்க முகக்' கிணறு பிற்காலத்தில் ஏற்பட்டது.

கோட்டையும் கோபுரங்களுமாக கண் நிறைந்த காட்சிதந்த கங்கை கொண்ட சோழபுரக் கோயிலின் பிரகாரம் இன்று 584 அடி நீளம் 372 அடி அகலம். முன்னர் எத்தனை பிரும்மாண்டமாக இருந்திருக்குமென்பதை நாமே தெரிந்து கொள்ளலாம். ஆங்கில ஆட்சியில் இவ்வூருக்கு அருகே ஐந்து மைலில் ஓர் அணைகட்ட இக்கோயிலுள்ள மதிற்சுவர் — கோபுரக் கற்களை பயன்படுத்தினர்களாம். அப்போது நம் மக்கள் இதை அனுமதித்து அந்தப் 'பணியிலே' ஈடுபட்டு அடிமைகளாக இருந்தது வெட்கப்பட வேண்டிய ஒன்ருகும்.

கங்கை கொண்ட சோழபுரத்தை ஏற்ற முறையில் - தக்க வசதிகளுடன்-ஒரு யாத்ரீக ஸ்தலமாக்க வேண்டியது அரசியலாரின் மிக முக்கியமான கடமையாகும்.

தந்தி : 'ORTEX' போன் : 30

# ஒரிஸ்ஸா டெக்ஸ்டைல் மில்ஸ் லிமிடெட்

(ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்)

சௌத்வார் P. O. : : கட்டாக் (ஒரிஸ்ஸா)

நண்பர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் எமது மனமார்ந்த

## தீபாவளி வாழ்த்துக்கள்

○ எந்த நேரத்திலும் ○ எந்த இடத்திலும் ○ எந்த சந்தர்ப்பங்களிலும்,
நீங்கள் எழில் மேம்பட விளங்க,

## "ஆர்டெக்ஸ்"

உயர் தர ஆடைகள் உதவுகின்றன

தறிகள் : 864 கதிர்கள் : 48,000

★ ஹாட் ஏர் ஸ்டெர்ன்டர் !
★ மர்ஸிரைஸிங் பிளாண்ட்!!
....முதலிய
நவீன இயந்திரங்களால்
திறமை - அனுபவம் மிக்க
தொழில் நிபுணர்களைக்
கொண்டு தயாரிக்கப்பட்ட

● டாபி ஷர்ட்டிங்
● கோட்டிங்
● பாப்ளின்
● லாங்-கிளாத்
● மல்
● வாயில்
........மற்றும்

தயாராகும் நூல்கள் 6s முதல் 36s வரை
ஏற்றுமதிகளும் மேற்கொள்ளப்படும்

தென்னிந்திய ஏஜண்ட்: **மெஸர்ஸ் p. சூரியநாராயண & சன்ஸ்**
**75, கிடங்குத் தெரு சென்னை-1**

தலைமைக் காரியாலயம் :
33, சித்தரஞ்சன் அவன்யூ, கல்கத்தா-12

தந்தி: 'TEXORISA'
போன்: 23-3456-58

K. K. ஐயங்கார்,
(ஜெனரல் மானேஜர்)



# பஞ்சசீலம்

ராதா

முதல் இரவு அன்று பூரண இளமைப் பொலிவுடனும் கையிலே பால் செம்புடனும் பள்ளிஅறையை நோக்கி தளர் நடையிடும் பருவப்பாவையைப் போல பால் நிலவு காய்ந்து கொண்டிருந்தது. சோழன் நலங்கிள்ளியின் தலை நகரான உறையூரின் அழகிய மேன்மாடம் ஒன்றிலே அரண்மனைத் தலைமை நாட்டியக்காரியான அமுதவல்லி மல்லிகை மலர் பெய்து மென்மை செய்யப்பட்டிருந்த பஞ்சணையிலே தூக்கம் பிடிக்காது புரண்டு கொண்டிருந்தாள்.

கொல்லன் உலையிலே இருக்கும் துருத்திபோன்று அவள் அடிக்கடி எதையோ நினைத்துக்கொண்டு பெருமூச்சு விட்டதால் அப்போதுதான் மலர்ந்த தாமரை மொட்டுக்களைப் போன்ற அவளுடைய மார்புகள் இரண்டும் மேலும்கீழுமாக அசைந்து கொண்டிருந்தன. இரவு நேரமானதால் அவள் வழக்கமாக அணியும் மேலாடைகூட சற்று தூர விலகிக் கிடந்தது. அடிமை வாழ்வை விரும்பாத விடுதலை வீரனைப்போல அவளுடைய கச்சையும் மீறிக் கொண்டு இளமைப் பொலிவுகள் இரண்டும் வெளி உலகத்தை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன. காது வரையில் நீண்டு காண்பவர்களுக்கு காதல் தாபத்தை உண்டாக்கும்வகையிலே அமைந்திருந்த அவளுடைய மான் விழிகளிலே இன்று ஏனோ விவரிக்க இயலாத சோகம் குடி கொண்டிருந்தது அந்த மானின் விழிகளில் இருந்து இரண்டு கண்ணீர் முத்துக்கள் வெளிக்கிளம்பி அவளுடைய கண்ணாடிக் கன்னங்களிலே உருண்டோடிக் கொண்டிருந்தன. எப்போதும் பின்னி முடிக்கப்பட்டிருக்கும் கூந்தல்கூட இன்று ஏனோகாடுபோல் அவிழ்ந்து கிடந்தது.

ஏதோ யோசனையில் ஆழ்ந்தபடியே பஞ்சணையில் அம்புபட்ட மயில்போல துடித்துக்கொண்டிருந்த அமுதவல்லி விடிவதற்கு இன்னும் சில நாழிகைகள் இருக்கும்போது ஏதோ ஒரு முடிவிற்கு வந்தவளைப்போல எழுந்தாள். எதிரே இருந்த மதுக்கோப்பையில் தன்னுடைய மோதிரத்தில் இருந்த விஷத்தைக் கலந்தாள். அதனை எடுத்து தன் பவள இதழ் அருகிலும் கொண்டுசென்று விட்டாள்.

இன்னும் ஒரு விநாடி தாமதித்திருந்தால்கூட அந்த கொடிய விஷம் அந்த பூங்கொடியை பிணமாக்கி இருக்கும்.

ஆனால் அதற்குள் மாளிகைக்கு கீழே இருந்து

“புத்தம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி”

என்று ஒலித்த கம்பீரமான வெண்கலக் குரல் ஒன்று அவளைத் தடுத்து நிறுத்தியது. உடனே தோகைவிரித்த மயில்போல தன் கூந்தல் பரப்பி எழுந்த அவள் காலிலே அணிந்த சிலம்புகொஞ்ச, சாளரத்தை நெருங்கி கீழே எட்டிப் பார்த்தாள். அங்கே பால் வடியும் முகமும், புத்த பகவானைப் போன்ற தேஜஸும் உடைய புத்தமித்திரர் நின்று கொண்டிருந்தார்.

உறையூர் பௌத்த விகாரையின் எதிர்காலத் தலைவரும், நளந்தா பல்கலைக் கழகத்தில் மீமாம்ச வேதாந்தங்களைக் கற்றுத்தேர்ந்த தர்க்கவாதியும், உறையூர் பௌத்த விகாரையின் தலைவரான புத்ததத்ததேரரின் அன்பிற்கும், சோழன் நலங்கிள்ளியின் மதிப்பிற்கும் உரியவரான அவரைக் கண்டதும் தன் துன்பங்களுக்கெல்லாம் ஒரு முடிவுகாலம் நெருங்கி விட்டது என்று கருதிய அமுதவல்லி.

சுவாமி!
சுவாமி!

என்று அலறிக்கொண்டு ஓடிவந்து அவருடைய கால்களைத் தன் கண்ணீரால் கழுவினாள்,

புத்தமித்திரர் வைராக்கியம் மிகுந்த பிரம்மச்சாரி. இதுவரை அவர்மீது பருவப் பெண்களின் நிழல்கூட படிந்ததில்லை. ஆனால் இன்றோ பஞ்சணையில் இருந்து நேரே ஓடி வந்ததால் குறைந்த ஆடையோடு, குலைந்த ஆடையுமாக அமுதவல்லி அவருடைய கால்களைக் கட்டிக்கொண்டிருந்தாள். இளமையின் பூரண ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த அவளுடைய தங்க நிற அங்கங்கள் ஒவ்வொன்றும் அவருடைய கடுமையான தசசீலத்திற்கு சவால் விடுவது போல இருந்தன.

இருந்தாலும் ஒரே விநாடியில் தன்னைச் சமாளித்துக்கொண்ட இருபத்திஐந்தே வயது நிரம்பிய அந்த இளம் துறவி இருபதே வயது நிரம்பிய அந்த அழகியை,

“குழந்தாய்! எழுந்திரு!” என்றார்.

அதற்கு அவளோ,



''சுவாமி! இந்த அபலையைக் காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் சுவாமி!'' என்று அறுந்த வீணை போல அவலக்குரல் எழுப்பினாள்.


''கிள்ளிவளவன் ஆட்சியில் அபலைகள் ஏது பெண்ணே! உனக்குத் துன்பம் செய்பவர்கள் யார் என்று கூறு. நாளையே மன்னனிடம் கூறி அந்தக் கொடியவர்களிடம் இருந்து உன்னைக் காப்பாற்றுகிறேன்''

என்று கூறிக் கொண்டிருந்த பௌத்தத் துறவியை நோக்கி,

''சுவாமி! வேலியே பயிரை மேயும் போது அதனிடமே முறையிடுவதால் பயன் உண்டா? என்று இடைமறித்தாள் அமுதவல்லி!

''என்ன பிற உயிரைத் தன் உயிராக மதிக்கும் கிள்ளிவளவனா உனக்குத் தீங்கு செய்தான்? என்னால் நம்ப முடியவில்லையே!''

நம்ப முடியாததுதான் சுவாமி! ஆனால் என் வாழ்க்கையில் எது நடக்கக்கூடாது என்று நான் கருதினேனோ அது நடந்துவிட்டது அரண்மனை நாட்டியக்காரியான அங்கயற் கண்ணிக்கு நான் மகளாகப் பிறந்துவிட்டேனே தவிர இளமையில் இருந்தே நான் கணிகையர் தொழிலை வெறுத்தேன். விவரம் தெரிந்தபோது சிலப்பதிகாரத்தைப் படித்ததில் இருந்து மாதவி மகள் மணிமேகலையைப் போலவே வாழத் துடித்தேன். ஆனால் என் இரத்தத்தில் ஊறிப்போன கலை உணர்வும், இந்த சோழ மண்டலத்திலேயே வேறு எவருக்கும் இல்லாத அழகும் என்னை அரண்மனை தலைமை நாட்டியக்காரியாகவே ஆக்கி வைத்திருந்தது மணிமேகலை போன்று வாழ முடியவில்லை என்றாலும் மாதவி போன்று ஒருவனையே மணந்து அவன் உள்ளம் நிறைந்து வாழ விரும்பினேன். அதற்கும் தடையாக இந்தப் பேதையின் கற்பிற்கே கொடுவாளாக அமைந்துவிட்டார் சோழ மன்னர்.''



''என்ன சோழன் உன் கற்போடு விளையாடினானா?''

''இன்னும் விளையாடவில்லை ஆனால் விளையாட முயற்சி செய்கிறார். இந்தப் பாவியின் அழகு அந்த நல்லவரைக் கூட இப்படி கெடுத்து விட்டது''.

என்று தன் நிலவு முகத்தில் காந்தள் விரல்களால் அறைந்து கொண்டாள். அப்படி அறைந்துகொண்ட போது அவளுடைய சங்கு வளையல்கள் அவளுடைய பிறை நெற்றியில் குத்திக் கிழித்ததால் இரத்தம் பீறிட்டது. மறுகணமே அவளுடைய தளிர் உடல் மடங்கிச் சாய்ந்தது.

பதறிப்போன புத்த மித்திரர் தன்னுடைய விரதத்தையும் மறந்து பாய்ந்து சென்று அவளைத் தன் கரங்களிலே தாங்கிக் கொண்டார். மறு விநாடி தன் காவி உடையில் ஒரு பகுதியைக் கிழித்து இரத்தக் கறையை துடைத்து தலையில் ஒரு கட்டும் கட்டினார்.

நளந்தாவில் மருத்துவமும் பயின்றவரானதால் அரை விநாடியில் அமுதவல்லியின் மயக்கத்தைத் தெளிவித்த புத்தமித்திரர்.

''உன்னை மணிமேகலையாக்கி விடுகிறேன். வா! என்னுடன்'' என்று நடந்தார்.

மந்திரத்திற்கு கட்டுப்பட்ட மதயானைபோல அவள் அவர் பின்னே நடந்தாள். இளம் பிக்ஷுவும் அரண்மனை நாட்டியக்காரியும் இப்படி நெருங்கி நடப்பதை பார்த்தவர்கள் ஒரு மாதிரியாகப் பார்த்தனர். ஆனால் புத்தமித்திரரும் அமுதவல்லியும் இதை சிறிதும் இலட்சியம்செய்யாது பெரிய விகாரத்தை நோக்கி நடந்தனர்.

இவர்கள் தூரத்தில் வருவதைக் கண்டதுமே பௌத்த விகாரையின் தலைவரான புத்த தத்ததேரருக்கு முகத்திலே எள்ளும் கொள்ளும வெடித்தது, யாரைத் தனக்குப் பிறகு மடத்தின் தலைவராக்க வேண்டும் என்று அவர் எண்ணியிருந்தாரோ! யாருடைய தர்கத்திறமையால் பௌத்தமதம் தமிழ்நாடு முழுவதும் பரவும் என்று அவர் கனவு கண்டுகொண்டிருந்தாரோ அப்படிப்பட்ட புத்தமித்திரனே இந்தப் பூவையின் எழிலிலே மயங்கி விட்டானே! என்று கருதிய புத்த தத்ததேரர் பெண்களை முன்னினும் வேம்பாக வெறுத்தார்.

எனவே விகாரையின் கதவுகளை இழுத்துப் பூட்டச் செய்த அவர் அந்த மாயையை விகாரைக்குள் அனுமதிக்கவே மறுத்துவிட்டார்.

''குருதேவா! புத்தபிரான் பிக்ஷுக்களோடு பிக்ஷுணிகளையும் தோற்றுவிக்கவில்லையா! தமிழகத்திலே அறவண அடிகள் மணிமேகலைக்கு போதி தர்மம் போதிக்கவில்லையா?''

''புத்தமித்திரா! மணிமேகலையைப் போன்ற திண்மையான உள்ளம் எல்லோருக்கும் வந்து விடுவதில்லை

நெருப்பை பஞ்சு இருக்கும் இடத்தில் வைப்பது பைத்தியக்காரத்தனம். இவளைப் போன்ற பேரழகிகளுக்கு இங்கு இடம் தந்தால் நீயும் நானும் வேண்டுமென்றால் தசசீலம் கடைப்பிடிக்கலாம். ஆனால் மற்றவர்கள் இந்த மோகனாஸ்திரத்தைத் தாங்குவது அரிது''

குருவும் சீடரும் இவ்வாறு உரையாடிக் கொண்டிருக்கையில்,

''அடிகளே! நொந்துபோன உள்ளத்தோடு வந்திருக்கிறேன். இவர் இன்னும் சிறிது நேரம் தாமதித்து வந்திருந்தால்கூட நான் கொடிய விஷத்திற்கு இரையாகி இருப்பேன், இந்தப் பேதையின்மீது கருணை காட்டுங்கள். சுவாமி!'' என்று இடைமறித்தாள் அமுதவல்லி.

''ஆம் குருதேவா! கணிகையாகப் பிறந்த குற்றத்திற்காக கிள்ளிவளவனே இவளுடைய கற்பைச் சூறையாட நினைக்கிறான். அப்படிப்பட்ட அபலைக்கு அபயமளிப்பது முதல் தரமான தர்மம் அல்லவா?''

''தர்மத்தைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. அதிலும் நமக்கு இந்தத் தமிழ் மண்ணில் விகாரை கட்டிக் கொள்ளும் அளவிற்கு உரிமை அளித்துள்ள மன்னனை எதிர்த்துக் கொள்ளவும் எனக்கு விருப்பமில்லை,''

குருதேவரின் பிடிவாதத்தை நன்கு உணர்ந்து கொண்டிருந்த புத்தமித்திரர் அவரை அவர் போக்கிலே விட்டுத்தான் திருப்ப வேண்டும் என்று முடிவுசெய்து கொண்டு அமுதவல்லியை மாளிகைக்கு திருப்பி அனுப்பிவிட்டு தான் மட்டும் விகாரைக்குள் கூம்பிய மனத்தோடு புகுந்தார்.

மறுநாள் காலை புத்தமித்திரர் நீராடச் சென்றிருந்தபோது தூரத்தில் ஏதோ சேலை ஒன்று மிதப்பது தெரியவே நீரிலே மூழ்கிச் சென்று அதைத் தூக்கினார். மறுவினாடி அவரையும் அறியாமலேயே ஆ என்று அலறினார்.

அங்கு அமுதவல்லியே நீரிலே மிதந்து வந்து கொண்டிருந்தாள். கொடிபோன்ற அவளுடைய உடலிலே சுற்றியிருந்த பூப்போன்ற வெண்மை நிறமான ஆடை நீரிலே நன்றாக நனைந்துவிட்டதால் அவளுடைய வாளிப்பான உடலமைப்பின் வளைவு நெளிவுகள் எல்லாம் கண்ணாடியில் தெரிவது போன்றே மிக நன்றாகத் தெரிந்தன. அப்போதுதான் மலர்ந்த தாமரை மலர்போல இருந்த அவளுடைய முகத்திலே அந்த மயக்கத்திலேகூட ஒருவித சோபை இருந்தது.

அதைக் கண்டதுமே புத்தமித்திரரின் வைராக்கியம் எல்லாம் எங்கோ ஓடி மறைந்தது. அவளை அப்படியே அள்ளி அணைத்துக்கொள்ள வேண்டும் என்ற உத்வேகம் தோன்றியது. உடனே அவளைத் தன் மார்போடு அணைத்துக்கொண்ட அவர் கரையை நோக்கி நடந்தார். அப்படி நடக்கும்போது கூரிய அம்புபோன்ற அவள் மார்புகள் அவருடைய வைர உடம்பிலே பட்டு விவரிக்க இயலாத ஒருவித இன்பலாகிரியை தோற்றுவித்துக் கொண்டிருந்தன.

அவர் கரைக்கு தன் கையில் உள்ள கட்டழகியுடன் வருவதற்கும் எதிரே எமனைப்போல புத்ததத்ததேரர் எரிவிழி விழித்துக் கொண்டிருப்பதற்கும் சரியாக இருந்தது.

ஆனால் அவருடைய ஆத்திரத்தைக் கண்டு சிறிதுகூட அமைதியை இழக்காத புத்தமித்திரர் 'குருதேவா! இந்தப் பேதைக்கு அபயம் அளிப்பதற்காக இன்று முதல் பௌத்த பிக்ஷுக்களுக்கே உரிய தசசீலத்தைத் துறந்து விட்டேன். இனி இல்லறத்திலே இருந்துகொண்டே பஞ்சசீலத்தைத்தான் கடைப்பிடிக்கப் போகின்றேன்" என்று கூறிவிட்டு அவருடைய மறுமொழிக்குக்கூட காத்திராது நடந்தார். அப்போது இதுவரை மூடியிருந்த அமுதவல்லியின் விழிகளும் ஒருமுறை திறந்து புத்தமித்திரரைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தன.

---

# உள்ளம்

'தமிழன்பன்'

எண்ண எண்ண மனம் இனிக்கும் மாலையிலே—அவர்
என்னுடனே சேர்ந்திருந்தார் சோலையிலே

கண்ணிரண்டும் பேசும்—ஒரு
காதல் போதையில்—அவர்
கையிரண்டும் மேல் தவழும்
ஆசைப் பாதையில்
அன்புடனே காதினிக்கப
பேசும் போதிலே—என்
ஆசை மனம் போனதடி
வான மீதிலே

இன்ப துன்பம் அறியா—என்
பேதை நெஞ்சிலே—அவர்
இன்பமென்னும் தீயை வைத்தார்
மோகப் பஞ்சிலே
இன்று என்னைப் பிரிந்துசென்ற
தன்மை ஒன்றிலே—பெருந்
துன்பமென்ற வேல் பதித்தார்
என்றன் நெஞ்சிலே

எண்ண எண்ண மனம் இனிக்கும் மாலையிலே—அவர்
என்னுடனே சேர்ந்திருந்தார் சோலையிலே

# நினைவும் துணிவும்!

பட்டுக்கோட்டை—இல. இராசேந்திரன்

அந்திமங்கும் நேரத்திலே
ஆற்றங்கரை ஓரத்திலே
வந்தவன் என் மேலேகண்ணைப் போட்டான்-உன்
வெல்லஇதழ் தாஎனவும் கேட்டான்!

போதுமென நான்எட்டிப்
போய்நின்றேன் கைகொட்டி
ஏதிது புதுப்பழக்கம் என்றான்—ஒரே
எட்டினில்என் பக்கம்வந்து நின்றான்!


நீயில்லையேல் மகிழ்வில்லை
நம்இணைப்பில் துயரில்லை
தீஇணையே உன்பிரிவு மானே—இதழ்த்
தேன்சுவைக்கக் காத்திருந்தேன் நானே!

என்முகத்தில் முத்தம்விதை
எண்ணிலவாய் நற்கவிதை
இந்நொடியே நான்புனைவேன் கண்ணே—அட!
இன்னுமென்ன நாணமடி பெண்ணே!

என்றுசொன்னான்; அப்படியா
எங்கேபார்ப்போம் இப்படிவா
என்றணைத்து முத்தம்சில தந்தேன்—அவன்
இருகைக்குள் புழுங்கிஉடல் வெந்தேன்!

இறகெடுத்தான் ஏடெடுத்தான்
என்நெஞ்சைப் பாட்டாலே
சிறையெடுத்தான் சொக்கிவிட்டேன் பாட்டில்
—மனச்
சோர்வெல்லாம் பறந்ததடி காட்டில்!

அவனேதான் என்தேவை!
அவன்தேவை இப்பாவை
எவர்என்ன சொன்னாலும் ஏடி—அச்சம்
இனியில்லை என் தோழி போடி!



## மேலும் தொடரும்..!

(தமிழ்த்துளி)

ஒருநாள் பகலில்
குளக்கரையில்-மிக
உயர்ந்த கிளையின்
இலை மறைவில்

இருந்தோன் ஒருவன்
எனைப் பிடித்தான்-
சுவை

இருந்தும் இதழில்
மது குடித்தான்

என்மனக் கோயில்
விளக்காக-என்
இதயங் கவர்ந்த
நிலைக்காக

மென்மலர் ஆனேன்
அவன் தோளில்-
கதை

மேலும் தொடரும்
மறு நாளில்...!

புனித ஸ்நானம் செய்து
புத்தாடை உடுத்தி இருக்கும்
இந்நன்னுளில் எமது

## தீபாவளி
## வாழ்த்துக்கள்!



- காமதேனு வனஸ்பதி
- மேட்டூர் சந்தன சோப்
- காவேரி பார் சோப்
- காவேரி சூபர் சோப்

தயாரிப்பாளர்கள் -
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R.S. சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ் :
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

---

# A. மார்க் சீவல்

25 வருஷமாக அன்பர்களின் நம்பிக்கையை பெற்று உயர்ந்த கொட்டைப் பாக்கில கைச்சீவல் அண்டு மீஷின் சீவல் விற்பனை செய்து வருகிறோம்.

வாசனை சீவல், பலரக பாக்குகளும் எம்மிடம் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

Prop :
பொ. அப்பாசாமி செட்டியார்

தியாகராஜா சீவல் ஸ்டோர்
கும்பகோணம்.

---

எல்லோருக்கும் எங்கள் இதயபூர்வமான
தீபாவளி வாழ்த்துக்கள்

# பாலஸ் தியேட்டர்

மதுரை ரோடு, திருச்சி டவுன்
(Latest Philips Double Projectors)
&

# சரோஜா டாக்கீஸ்

அரியமங்கலம்
(திருச்சி)

Managing Proprietor :
S. ராஜா பெரியசாமி

K & P

**announcing...**

*The Only Air-conditioned Photographic Show Room*

**(in the South)**

* Sells you fresh COLD-STORED films
* Develops your films TEMP-CONTROLLED AT 69° F
* Prints and enlarges your negatives EXPERTLY
* Takes your photos in modern AIR-CONDITIONED STUDIO.
* Sends EXPERTS for outdoor and industrial photography

*Specialists in*

**BLOCKS**

**LINE**

•

**HALF TONE**

•

**COLOUR**

**PHOTOS**

Agfacolor

GEVACOLOR

**Processing, Printing & Enlarging**

**EKTACHROME**

**Processing**

* **MULTI-MASKED colour blocks from transparencies**
* **VERA-MASKED colour blocks from originals**
* **MASKED colour enlargements from colour negatives and colour transparencies**

K & P

*for quality jobs & courteous service*

*Klein & Peyerl*

**30, MOUNT ROAD, MADRAS-2.**

Phone: 83811 : 83312 : 83313

**Air-conditioned Studio & Showroom. Temperature - controlled Developing**

*Coming !*

NEW PANCHRATAN PICTURES *presents*

# BACHPAN



MENKA IRANI • SALIM
JEEVAN • DAVID
MANORAMA • ANWAR
DAISI IRANI .
HELEN

*Produced by:* MRS. IRANI
*Lyrics by:* HASARAT JAIPURI
*Music by:* SARDHAR MALIK
*Directed by:* NAZAR

BOMBAY :
Messrs GANDHI & CHOKSHI,
2nd Floor, Nazz Cinema Buildings, BOMBAY
For other Territories Contact
Messrs. PANCHARATNA PICTURES
"Roopkala", 16th Rd KHAR, BOMBAY


# இருதய மாரடைப்பு

## (CORONARY THROMBOSIS)

டாக்டர் இரத்தினவேல் சுப்பிரமணியம் B.Sc., M.D., M.R.C.P. (LONDON)

மனிதனுக்குப் பலவிதமான வியாதிகள் ஏற்படக்கூடும். அவற்றில் தொத்து வியாதிகள் இப்போது புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மருந்துகளினால் சீக்கிரத்தில் குணமடைந்து விடுகின்றன. ஆதலால் தொத்து வியாதிகளினால் மரணம் ஏற்படுவது குறைந்து விட்டது. அதோடு அவைகளை வராமலேயே தடுப்பதற்கும் உபாயங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. தொத்து நோய்கள் வராமலிருப்பதற்கு வசதியான வீடுகளும், நல்ல காற்றும், நல்ல தண்ணீரும் அவசியம். நகராட்சி அலுவலகங்கள் ஆங்காங்கே எடுத்துக் கொள்ளும் சிரத்தையினால் நாளுக்கு நாள் தொத்து நோய் குறைந்து கொண்டே வருகிறது. ஆனாலும் வயது முதிர்வதினால் ஏற்படக்கூடிய வியாதியைத் தடுக்கப் போதுமான வசதி இன்னும் ஏற்படவில்லை. நம் நாட்டில் மட்டுமல்ல; உலகத்திலேயே இந்தக் குறை அதிகமாக காணப்படுகிறது. உதாரணமாக, இருதய நோய், புத்து நோய், இரத்தக் கொதிப்பு இவைகளெல்லாம் சுமார் இருபது, முப்பது வருடங்களுக்கு முன்பாக இருந்ததைவிட இப்போது மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றன. ஏனென்றால், இருபது வருடங்களுக்கு முன்பாக தொத்து நோய் மூலமாகப் பல பேர் இறந்திருக்கிறார்கள். இப்போது தொத்து நோய்கள் மூலம் ஏற்படுகிற மரணம் தவிர்க்கப்படுவதனால், விருத்தாப்பிய வயது வரை இருக்க ஏதுவாகிறது. அதனால் வயது முதிர்ந்து ஏற்படக் கூடிய வியாதிகள் காணப்படுகின்றன. உதாரணமாக, மோட்டார் வண்டியை எடுத்துக் கொண்டால், அவ்வண்டி பல விதமான காரணங்களினால் வேலை செய்யாமல் இருக்கலாம். முதலிலே டயர் கெட்டுப் போகிறது. கடைசியாக பல வருடங்கள் கழிந்த பின்னர், அந்த மோட்டார் வண்டியில் பல பாகங்கள் தேய்ந்து போவதால், அது உபயோகமற்றதாகப் போய் விடுகிறது. அம்மாதிரியாக வயது முதிர முதிர இந்த வயதான காரணத்தினாலேயே மனித சரீரம் உபயோகமற்றதாகப் போகிறது. அப்படி ஏற்படக்கூடிய வியாதிகளில் ஒன்று, இருதய இரத்தக் குழாய் அடைப்பு. அதாவது, இருதயத்திற்கும் இரத்தம் வேண்டியிருக்கிறது. அதைக் கொடுப்பதற்காக ஏற்பட்டிருக்கும் இரத்தக் குழாய்கள் அடைபட்டு விடுகின்றன.

இது சாதாரணமாக வயது முதிர்ந்தவர்களிடத்திலேயே காணப்படும். ஆனாலும் பல்வேறு காரணங்களினால் சிறு வயதிலேயும் காணப்படுகிறது. நம் நாட்டில் முக்கியமாக சிகரெட் அல்லது பீடி அதிகமாக பிடிப்பவர்களிடத்தில் காணப்படுகிறது. நாள் ஒன்றுக்கு எட்டு அல்லது பத்துக்கு மேற்பட்டால் அவர்களிடத்தில் இந்த வியாதி அதிகமாகக் காணப்படுகிறது. அதன் பிறகு இரத்தக் கொதிப்பு அதிகமாக இருப்பவர்களிடத்திலும், சிறுநீரில் சர்க்கரை இருப்பவர்களிடத்திலும், அதிகப்படி மிருக சம்பந்தப்பட்ட கொழுப்பை உட்கொள்ளுபவர்களிடத்திலும் காணப்படுகிறது. நம் நாட்டில் தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய் அல்லது கடலை எண்ணெயை முறித்து விற்கப்படும் வனஸ்பதி போன்ற இவைகளை உபயோகிப்பவர்களிடத்திலும் இது அதிகமாகக் காணப்படுகிறது. நல்ல எண்ணெய் உபயோகிப்பவர்களிடத்தில் இந்த வியாதி இவ்வளவு அதிகமாகக் காணப்படுவதில்லை. தேகத்தை உபயோகிப்பவர்களிடமும் இது காணப்படுவதில்லை. ஆபீஸ் உத்யோகத்திலே அல்லது உட்கார்ந்த இடத்தில் வேலை செய்பவர்களிடமும், பண வசதி அதிகமாக இருந்து, உடம்புக்கு சிரமம் கொடுக்காமல் உண்பதும் உறங்குவதுமாக இருப்பவர்களிடத்திலும் அதிகமாகக் காணப்படும். இம்மாதிரி கொழுப்பை சாப்பிடுகிறவர்களிடத்திலும் இரத்தத்தில் இரத்த கொலஸ்டிரால் (Cholesterol) என்ற வஸ்து அதிகமாகக் காணப்படுகிறது. இது அதிகமாக இருக்கும்போது, சிறிய இரத்தக் குழாயின் துவாரம் குறுகி, இரத்த ஓட்டம் கெட்டு விடுவதற்கு ஏதுவாகிறது. இந்த வியாதி பெரும்பாலும் ஆண்களிடமே காணப்படுகிறது. பெண்களிடம் மாதவிடாய் ஆகிக்கொண்டிருக்கும் வரையில் இது அதிகமாகக் காணப்படுவதில்லை, பெண்களில் ஓவரி (ovary) என்று சொல்லக்கூடிய அவயவத்தில் ஈஸ்ட்ரோஜன் என்ற சத்து உற்பத்தியாகிறது. இந்த ஈஸ்ட்ரோஜன் சுமார் நாற்பத்தைந்து அல்லது ஐம்பது வயது வரையிலேயே ஏற்படுகிறது. பிறகு நின்று விடுகிறது. இந்த ஈஸ்ட்ரோஜன் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் வரையில் கொலஸ்டிரால் குறைந்த அளவிலேயே இருந்து கொண்டிருக்கிறது. ஆண்களுக்கு இந்த ஈஸ்ட்ரோஜனை கொடுக்கலாம் என்றாலோ, இதை ஆண்கள் எடுத்துக் கொண்டால் ஆண்மை சக்தி குறைந்து விடுகிறது. அவர்களுக்கு ஸ்தனங்களும் உண்டாகின்றன. அதனால் இதைப்



போதுமான அளவுக்கு ஆண்களுக்குக் கொடுக்க இயலாது.

சாதாரணமாக இந்த வியாதி நாற்பது வயதிற்கு மேல் ஏற்படுகிறது. மேற்கூறிய சில கெட்ட வழக்கங்கள் இருந்தால் சிறு வயதிலேயே ஏற்படலாம். பெரும்பாலும் திடீரென்று மார்பில் பொறுக்கக்கூடாத அளவில் வலி ஏற்படுகிறது. இந்த வலி சாதாரணமாக இருதயத்திற்கு முன் பக்கமே காணப்படலாம். சில சமயங்களில் வலது பக்கத்திலும், சில சமயத்தில் முதுகிலும், மற்றும் சில சமயங்களில் வயிற்றிலும், கழுத்தின் பக்கங்களிலும் காணப்படலாம். வலி உண்டாவதோடு அதிகமாக வியர்வையும் உண்டாகிறது. ஒரு சிறிது நேரமும்கூட அமைதியாக படுத்திருக்க முடியாமல் வியாதியஸ்தர் படுக்கையிலேயே எண்ணெயிலே போட்ட பணியாரம்போல் தத்தளிப்பார். வெகு சீக்கிரத்தில் இரத்தக் கொதிப்பும் குறைந்துகொண்டே வரும். இரத்தக் கொதிப்பு அதிகப்படி குறையாமல் சிகிச்சை செய்வது அவசியம். 24 மணி நேரம் அல்லது 36 மணி நேரத்தில் இலேசாக ஜுரம் ஏற்படலாம் (100 அல்லது 101 டிகிரி). இந்த ஜுரம் ஏற்படும்போது வியாதியஸ்தரை பரிசோதனை செய்தால் இடது பக்கம் சிறிது கோழை கட்டியிருக்கும். வலியின் கொடுமையினால் பிரக்ஞை இல்லாமல் போகலாம். ஷாக் அல்லது திடீர் அதிர்ச்சி ஏற்படலாம். இம்மாதிரி அதிர்ச்சி இருக்கும்போது, இரத்தக் கொதிப்பு மிகவும் குறைவாக இருக்கும். அதிர்ச்சி அதிகமாக இருப்பதாலும், இரத்த ஓட்டம் குறைவாக இருப்பதாலும் வலி தெரியாது. ஆனால் அதிர்ச்சி ஏற்படுவது நல்லதல்ல.

இந்த வியாதியை சரியாக கண்டுபிடிப்பதற்கு எலக்டிரோ கார்டியோகிராப் (Electro Cardiograph) என்ற கருவி இருக்கிறது. அதோடு இரத்தத்திலேயும் கொலஸ்டிராலை சோதித்துப் பார்க்கலாம். வேறு சில வியாதிகளிலும் இம்மாதிரியான தோற்றம் ஏற்படலாம். அதற்காகவே மார்பு வலி ஏற்பட்ட உடனேயே டாக்டரிடம் காண்பிப்பது நல்லது.

## வைத்திய முறை

வியாதி வந்தவுடன் காப்பதை விட, வராமல் தடுப்பதே தான் விசேஷம். வியாதியைத் தடுப்பதற்கு முக்கியமாக பீடி, சிகரெட் முதலான புகையிலை வஸ்துக்களை அறவே ஒழிக்க வேண்டும், மிருக சம்பந்தமான கொழுப்பு - மாமிசம் மட்டுமல்ல - வெண்ணெய், நெய் முதலான கொழுப்புப் பொருள்களையும் நீக்கவேண்டும். நாற்பது அல்லது நாற்பத்தைந்து வயதான பின்னர் மிருக சம்பந்தமான கொழுப்பை எவ்வளவுக் கெவ்வளவு தள்ளுகின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு நல்லது. முக்கியமாக, வனஸ்பதி போன்ற வஸ்துக்களை அறவே ஒழிக்க வேண்டும். அதிகப்படி காப்பி, தேநீரும் உபயோகப்படுத்தக் கூடாது. ஒன்று அல்லது இரண்டு கோப்பை உபயோகப்படுத்தினால் ஒன்றும் கெடுதல் இல்லை. அதையே ஆகாரமாகக் கொண்டு பத்து, பதினைந்து கோப்பைகள் சாப்பிடுவது நல்லதல்ல. இரத்தக் கொதிப்பு வந்தால், அதையும் தகுந்த முறையில் அடக்க வேண்டும். நீர் வியாதி இருந்தாலும் கண்டித்துக் கொள்ள வேண்டும்.

அதோடு தினப்படி வயதிற்குத் தகுந்த முறையில் தேகாப்பியாசம் செய்யவேண்டும். கூடியவரையில் காலையிலோ அல்லது மாலையிலோ எவ்வளவு வேகமாக நம்மால் நடக்க முடியுமோ அவ்வளவு வேகமாக, வியர்வை விடும்படி ஒரு மைல் தூரமாவது நடத்தல் அல்லது ஓடுவதன் மூலம் இந்த வியாதியைப் பெரும்பாலும் தடுத்துக் கொள்ளலாம்.

## வைத்திய முறை

இந்த வியாதி கண்டால், தகுந்த முறையில் வலி அதிகப்படாமல் தடுத்துக்கொள்ள வேண்டும். ஆகாரத்தைக் குறைத்து, ஆரஞ்சு பழச்சாறு அல்லது எலுமிச்சைப் பழச்சாறு சாப்பிட்டு, பட்டினியாக ஒருநாள் அல்லது இரண்டு நாட்கள் இருந்தால், சீக்கிரத்தில் வியாதி சவுகரியமாகும். இருதய நோயாக இருந்தாலும், இந்த நோய் கண்டதினால் உடனே மரணம் ஏற்பட வேண்டுமென்பது அவசியமில்லை. ஜாக்கிரதையாக உடலைக் கவனித்து வந்தால் வியாதி கண்ட பின்னரும் பல ஆண்டுகள் ஜீவிக்கலாம். பிறருக்கும் நமக்கும் உபயோகப்படும் முறையில் ஜீவிக்கலாம்.

# உப்பும் உதடுகளும்

## வரலாற்றுக்கதை மன்னன் சாண்டில்யன்

அந்தி வேளை நெருங்க நாலைந்து நாழிகைகளே இருந்த போதிலும் பாலைவனத்தின் அந்தப் பிராந்தியம் நடுப்பகல் போலவே நெருப்பை அள்ளிக் கொட்டிக் கொண்டிருந்ததாலும், அதற்குத் துணைசெய்த சுழற் காற்றும் சுற்றிலும் குவிந்து கிடந்த மேடுகளிலிருந்து மணலை அள்ளிச் சுளீர் சுளீரென வீசியதாலும் கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் மருந்துக்குக் கூட சோலையோ குடியிருப்புகளோ தெரியாததாலும், சேவாஜி சற்றே தன் புரவியை நிறுத்தி ஆகாயத்தையும் பாலைவனப் பிரதேசத்தையும் கண்களால் அளந்து பார்த்தான். பிறகு குதிரையில் உட்கார்ந்தபடியே திரும்பி பின்னால் குதிரைகளில் சோர்ந்துபோய் உட்கார்ந்திருந்த தனது நூறு வீரர்களைக் கவனித்தான். எத்தனையோ போர்களையும் துக்கங்களையும் தன்னுடன் அனுபவித்திருக்கும் அந்த வீரர்களின் தைரியங்கூட பாலைவனத்தின் கொடுமையால் மெள்ள மெள்ளத் தளருவதை அவர்கள் முக பாவத்திலிருந்து கண்ட சேவாஜி பக்கத்திலிருந்த சாயித்ராமை நோக்கி "தம்பி! நமது வீரர்களைப் பார்த்தாயா?" என்று கேட்டான்.

பின்னாலிருந்த நூறு வீரர்களைப் போலவே தாகத்தாலும் பாலைவனக் கனலாலும் சோர்வடைந்திருந்த சாயித்ராம் மெள்ளத் தன் கண்களை உயர்த்தி சேவாஜியைக் கவனித்தான். பாலைவனச் சீற்றத்தால் கருமை தட்டி வியர்வை கன்னத்தில் கோடாக வழிந்தோடிய அந்தத் தருணத்திலும் சேவாஜியின் வீர விழிகளில் சிறிதும் சோர்வு தெரியாததைக் கண்ட சாயித்ராம் சொன்னான்: "அண்ணா! உன்னைப் போல் சகிப்புத்தன்மை எங்களுக்கில்லை. பாலைவனத்தின் கொடுமை, வெய்யிலின் உக்கிரம். தாங்க முடியவில்லை" என்று.

சேவாஜியின் இதழ்கள் இகழ்ச்சியால் மடிந்தன. அந்த வீர வாலிபனின் முகத்திலும் அந்த இகழ்ச்சிக் குறி படர்ந்தது. "தம்பீ! ராதோர் வம்ச ராஜபுத்ரர்களுக்கு பாலைவனமும் புதிதல்ல, வெய்யிலும் புதிதல்லவே' என்றான் சேவாஜி.

"யமுனைக் கரையில் பாலைவனம் ஏது அண்ணா? அங்கு வெய்யிலும் இத்தனை கடுமை கிடையாதே" என்று சாயித்ராம் தலையைக் குனிந்து கொண்டே பதில் சொன்னான்.

"ஷாபுடீன் கோரி நமது பாட்டன் காலத்திலேயே யமுனைக் கரையை பாலைவனமாக அடித்துவிட்டானே தம்பி! ராதோர் வம்சத்தின் இரு தலைமுறை வாழ்க்கையும் பாலைவனமாகத் தானே இருந்திருக்கிறது. ராதோர் ரத்தத்தைத் தகிக்கும் தோல்வியைவிட இந்த வெய்யில் அவ்வளவு உக்கிரமானதென்று நினைக்கிறாயா?" என்று கேட்ட சேவாஜி சோகத்தால் பெருமூச்செறிந்தான்.

கன்னோசி மன்னன் ஜெயசந்திரன் ஆட்சியில் ஷாபுடீன்கோரியால் சின்னா பின்னப் படுத்தப்பட்ட ராதோர் வம்சம் இரண்டு தலைமுறைகளுக்குத் தலையெடுக்க முடியவில்லை. ஜெயசந்திரனின் பொறாமை விஷம் ராதோர்களை மட்டுமென்ன ராஜபுதனத்தையே பொசுக்கி சின்னஞ்சிறு அரசுகளாகப் பிரித்திருந்தது. அதே வம்சத்தில் ஜெயசந்திரன் பேரனாகப் பிறந்த சேவாஜியின் மனம் மட்டும் அரசு இழந்த ராதோர்களுக்கு வேறு நிலத்தைக் கண்டு அரசை ஸ்தாபிக்கத் துடித்துக் கொண்டிருந்ததால் அந்த எண்ணத்துடன் சிதறிக்கிடந்த நூறு ராதோர் வீரர்களைத் திரட்டி ஒரு சிறு படையை நிறுவினான். அவ்வப்பொழுது ஏற்பட்ட சிறு போர்களில் அவற்றை நடத்திச் சென்று பெரும் புகழைத் திரட்டினான். புகழைத் திரட்டியவன் சிறிது நிலத்தையும் திரட்ட எண்ணி தனது குலதெய்வமான கிருஷ்ணனைத் தரிசிக்கப் படையுடன் துவாரகைக்குச் செல்ல மேற்கு நோக்கிப் பாலைவனத்துக்குள் நுழைந்தான். அந்த வாலிப வயதுக்குள் எத்தனையோ சோதனைகளைப் பார்த்திருக்கிறான் சேவாஜி. ஆனால் இத்தகைய பாலைவனச் சோதனையை அவன் அனுபவித்ததேயில்லை. ஆகவே மீண்டும் குலதெய்வத்தை நினைத்து மேற்கு நோக்கி "கிருஷ்ணா! உன் கருணை இதயமும் பாலைவனமாக மாறிவிட்டதா?'! என்று தெய்வத்தையும் உள்ளூரக் கடிந்துகொண்டான். அந்த சமயத்தில் தெய்வம் அனுப்பிய தூதனைப்போல் ஒரு குதிரைவீரன் கனவேகமாக அந்தப் பாலைவன மணலில் அவர்களை நோக்கி வந்தான்.

வந்த வீரன் ஆஜானுபாகுவாயிருந்ததையும் பாலைவனத்தின் அந்த வெய்யிலைக்கூட அவன் லட்சியம் செய்யவில்லையென்பதையும் கண்ட சேவாஜி அவன் விழிகளிலிருந்த கபடத்தையும் கொடுமையையும் விநாடி நேரத்தில் கண்டு கொண்டானாலும் அதை வெளிக்குக் காட்டாமல் புன்சிரிப்புடனேயே அவனை நோக்கினான். தன்னைக் கண்டு அந்த இளைஞன் புன்சிரிப்புக் கொண்டதைக் கண்ட அந்த வீரன் கேட்டான்: "இளைஞனே! நீ இந்தப் பகுதிக்குப் புதிதா?" என்று.

"ஆம், புதிதுதான்" என்று பதில் சொன்னான் சேவாஜி.

"தெரிகிறது. தெரிகிறது" என்று சொல்லி நகைத்தான் அந்த வீரன்.

"என்ன தெரிகிறது?'

"நீயும் உன் வீரர்களும் இந்தப் பகுதிக்குப் புதிது என்பது."

"அதில் விந்தையென்ன இருக்கிறது?"

"இது லக்காபுலானன் ஆட்சி செய்யுமிடம்"

"இந்தப் பாலைவனமா?"

"ஆம்"

"இதில் ஆட்சிசெய்ய என்ன இருக்கிறது?"

"இதில் இல்லை. சுற்றிலுமிருக்கிறது"

"என்ன இருக்கிறது?"

"ராஜபுத்திர சிற்றரசுகள்"

"அவற்றுக்கெல்லாம் லக்காபுலானன் தலைவனா?"

"அப்படியும் வைத்துக் கொள்ளலாம். லக்காபுலானன் தனக்கு வேண்டியதை அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்வான்"

"அப்படியானால் அவன் கொள்ளைக்காரனா?"

"வீரர்களுக்குக் கோழைகள் அப்படியும் ஒரு பெயரைக் கொடுப்பது உண்டு"

"அவன் இருப்பிடம் எங்கே?"

"அதோ அந்த மணல் மலைகளைத் தாண்டிச் செல்லவேண்டும்"

"மணல் மலைகளுக்கு நடுவே அவன் எப்படி வசிக்கிறான்?"

"கோட்டை இருக்கிறது."

"அதற்கு வழி காட்டுகிறாயா?"

"எதற்கு?"

"அவன் வீரம் எத்தன்மையது என்று பார்க்கிறேன்"

பதிலுக்கு அந்தப் பெரும் வீரன் குலுங்கக் குலுங்க நகைத்தான். பிறகு சிரிப்பை அடக்கிக்கொண்டு சொன்னான். "இளைஞனே! உன் வீரர்கள் சோர்வடைந்திருக்கிறார்கள். மாலைக்குள் உங்களுக்கு நீர் கிடைக்காவிட்டால் உங்கள் அனைவர் பிராணனும் போய்விடும். லக்காபுலானன் இந்தப் பாலைவனத்தை நடுவெய்யிலில் சுற்றக்கூடிய ஆற்றல் படைத்தவன். அவனுடன் போர் செய்ய உங்கள் உடம்பில் உப்பு ஊறட்டும்" என்று.

அவன் பேசியது பெரும் விசித்திரமாயிருந்தது சேவாஜிக்கு. அந்த சம

யத்தில் சேவாஜி கோபம் கொள்ளும் ரசனையை இழந்திருந்தாலும் விஷமத்தை மாத்திரம் இழக்காததால் "உப்பு எங்கு கிடைக்கும்?" என்று வினவினன்.

அந்த வீரன் சற்று மேற்கே கண்ணை ஓட்டிவிட்டு "அதோ தெரிகிறதே மணல்மேடு" என்று கையால் சுட்டிக் காட்டினன்.

"புரிகிறது" என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் சேவாஜி. "அதைத் தாண்டிச் சென்ருல் லவணீ நதியிருக்கிறது" என்று மேலும் கூறினன் அந்த வீரன்.

"சரி சொல்லுங்கள்" என்ருன் சேவாஜி.

"அதுவே உப்புதான், லவணம் என்ருல் உப்பல்லவா? ஆகவே அந்த நதிக்கு உப்பனுறு அல்லது லவணீ நதி என்று பெயர். போ. அதன் நீரை நிரம்பக் குடி. உப்பு உடம்பில் ஊறியதும் லக்காபுலானன் கோட்டைக்குப் போகலாம்" என்று கூறிய அந்த வீரன் மீண்டும் நகைத்துவிட்டுக் குதிரையைத் திருப்பிக் கொண்டு வெகு வேகமாக மணற் குன்றுகளில் மறைந்தான்.

அவன் கண்ணுக்கு மறையுமட்டும் அவனையும் அவன் குதிரை செல்லும் வேகத்தையும் கவனித்துக் கொண்டிருந்த சேவாஜி தன் குதிரையையும் நடத்திக்கொண்டு அந்த விசித்திர வீரன் காட்டிய மணல் மேட்டை நோக்கிச் சென்ருன். சுரணை இழந்த மற்ற நூறு புரவிகளும் தங்கள் முதுகிலிருந்த மனிதச் சுமைகளைச் தாங்கிக்கொண்டு நடந்தன.

● ● ●

வீரன் காட்டிய மணல் மேட்டை மூன்று நாழிகைப் பயணத்துக்குப் பின் தாண்டிய சேவாஜி கண்ணுக்கெதிரே எழுந்த காட்சியைக் கண்டு பிரமிப்படைந்து "பாலைவனத்தில் இப்படியொரு பசுஞ்சோலையும் உண்டா?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். அந்தச் சோலையில் பசுமை இளி கொஞ்சியது. பெரும் தென்னை மரங்களைத் தவிர கனிமரங்களும் மலர் மரங்களுங்கூட இருந்தன. எதிரே தெள்ளிய நீருடன் ஓடிய லவணீ நதிகூட சேவாஜியின் கண்ணைப் பறித்தது. கதிரவனும் அந்த சமயத்தில் தன் கொடுமையை அடக்கிக்கொண்டு பாலைவன மணலை பொன் மணலாக அடிக்கத் துவங்கினன். லவணீயின் தெள்ளிய நீர்கூட உருக்கிய தங்கம்போல் பளபளத்தது. சேவாஜி அந்த இயற்கைக் காட்சியை மேலும் பருக எண்ணி சாயித்ராமை நோக்கி "தம்பி! நீ ஊருக்குள் செல். அங்குள்ள தலைவனிடம் இரவில் உண்ண உணவும் தங்க இடமும் கேள். நான் இந்த சோலையைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்ருன்.

அண்ணன் பேச்சு சாயித்ராமுக்கு பெரும் விந்தையாயிருந்தது. பாலைவனத்தின் கொடுமையை அனுபவித்தும் சீக்கிரம் இளைப்பாற விரும்பாமல் அவன் சோலையைச் சுற்றிப் பார்க்க விரும்பியதை எண்ணி வியப்பெய்தினுலும் அதைப்பற்றி ஏதும் பேசாமல் வீரர்களை அழைத்துக் கொண்டு சோலைக்குள் பிரவேசித்தான். சேவாஜி மட்டும் குதிரையிலிருந்து இறங்கி லவணீ நதிக்கரையோரமாகவே நடந்து சென்ருன்.

● ● ●

லூனி என்று இப்பொழுது அழைக்கப்படும் லவணீ நதி ஊரை ஊடுருவிச் சென்றுகொண்டிருந்ததானுலும் அதன் கரையைவிட்டுத் தள்ளியே செடிகொடிகள் வளர்ந்திருந்ததைக் கண்ட சேவாஜி பாலைவன வீரன் சொல்லியதுபோல் அது உப்பனுருகத்தானிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தான். பிறகு அந்த உப்பனுற்றின் கரையில் உட்கார்ந்து காலை ஜலத்தில் அலையவிட்டான். லவணீயின் ஸ்பரிசத்தால் கால் மட்டுமென்ன அவன் உடலில்கூட உயிரணுக்கள் சக்திபெற்று ஊடுருவிச் சென்றன. அதன் ஜலம் எப்படியிருக்கும், உண்மையாக உப்புதானு என்பதை அறிய தனது தலைப்பாகையைக் கழற்றி வைத்துவிட்டு, குனிந்து இரு கரங்களாலும் நீரை எடுத்துப் பருகியவன் அதன் உப்பு தாங்கமாட்டாமல் சரேலென்று அதை உமிழ்ந்து முகத்தைப் பெரும் விகாரப்படுத்திக் கொண்டு "சீச்சி" என்று வெறுத்தும் கூவினன். அந்தக் கூச்சலை வெட்டிய சிரிப்பொலி ஒன்றைக் கேட்டு கோபத்துடன் தலையையும் திருப்பினன். பார்த்தவன் பிரமித்தான். சிலையாகவும் ஆனுன். "பாலைவனத்தில் கானல்நீர் உண்டு. கானல் மோகினி இருப்பதாகக் கேள்விப்பட்டதில்லையே" என்று மெள்ள தனக்குத்தானே சொல்லியும் கொண்டான்.

லவணீயின் சில்லென்ற நீரில் படுத்துத் துளைந்து விளையாடிய அந்த மோகினிக்கு வயது பதினெட்டுக்கு மேலிருக்காதென்பதை சமீபத்தில் மலர்ந்த புஷ்பம் போலிருந்த அவள் உடல் செழுமையிலிருந்தே ஊகித்துக் கொண்ட சேவாஜி அவள் சிரிப்பைக் கண்டிக்கச் சக்தியற்றவனுனன். நன்ருக உடுத்தப் பட்டிருந்தாலும் குளிக்க உடுத்திய ஆடையின் அளவின் குறைவாலும், லவணீயின் நீர் அந்த ஆடையையும் நனைத்து அவள் அழகு பிம்பங்களின்மீது ஆசையுடன் ஒட்டிக்கொண்டதாலும் ஏற்பட்ட எழிலின் பிரமையாலும் திகைத்த சேவாஜி பெரிதும் சங்கடத்துக்குள்ளானன் ஆனுல் மாலைக் கதிரவன் பொன்னிறக் கிரணங்களால் தங்க நீரைப்போல் ஓடிய லவணீயின் பிரகாசத்தில் தங்கப் பதுமை போலவே காட்சியளித்த அந்த பருவ மங்கை சேவாஜியை சிறிதும் லட்சியம் செய்யாமல் தன் கருவிழிகளை அவன்மீது ஒருமுறை ஓட்டிவிட்டு மீண்டும் அந்த உப்பனுற்றின் நீரை வாயில் உறிஞ்சி மல்லாந்து படுத்து ஆகாசத்தில் வாணம்போல் உமிழ்ந்தாள்.



சில விநாடிகள் இப்படித் துளைந்த அவள் மிக நிதானமாக எழுந்து மரத்தின் மறைவுக்குச் சென்று வேறு ஆடை உடுத்திக்கொண்டு சேவாஜியை நோக்கி வந்தாள்.

அவள் நடந்துவந்த அழகில் மனத்தைப் பறி கொடுத்தானாலும் சேவாஜியின் மனத்தில், அவள் தன்னை அலட்சியம் செய்து சிரித்ததையும், நதியிலிருந்து எழுந்திருக்காமல் நீராடியதையும் நினைத்துக் கோபமும் தாண்டவமாடவே அவள் அருகில் வந்ததும் கேட்டான்:

'பெண்ணே! நீ யார்?' என்று.


அவள் தன் செவ்விய இதழ்களைக் குவித்து மலர் விழிகளைத் திறந்து அவனை நோக்கினாள். ''அந்தக் கேள்வியை நானல்லவா கேட்கவேண்டும்'' என்றும் சொன்னாள்.

''என் வாளைப் பார்த்தாலே தெரியவில்லையா? நான் ஒரு வீரன்'' என்றான் சேவாஜி.

''வாள் கட்டிக்கொண்டு வருகிறவர்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் வீரத்துக்கும் அதுக்கும் சம்பந்தம் இடையாது''

''ஏன் கிடையாது?''

''அது தெரியாது. நான் பார்த்த வரையில் இந்தப் பிராந்தியத்தில் வீரனும் கிடையாது. புருஷனும் கிடையாது. ஆகையால்தான் நான் பகிரங்கமாக லவணியில் குளிக்



கிறேன். இல்லாவிட்டால் சோலங்கி ராஜபுத்ர குலமகள் பகிரங்கமாக நீராடுவாளா?',

''அப்படியானால் நான்...?''

''நீங்கள் மட்டுமென்ன? இங்குள்ளவர்களுக்கு விலக்கா?''

''பெண்ணே! உன் உதடுகளி விருந்து இனிப்பான சொல் வரவில்லை''

''அப்படியா?

''ஆமாம் சொற்கள் கரிக்கின்றன உப்பு நீரைக் கொப்பளித்துக் கொப்பளித்து உன் உதடுகளும் நாக்கும் உப்பாகிவிட்டன''

''பேடிகளுக்கு அப்படித்தான் தோன்றும்.''

''யார் பேடி?''

'நீதான்'

''எல்லோருந்தான். லக்கா புலானன் ஒருவனைத் தவிர. அவனைக் கண்டால் ராஜ புதனமே நடுங்குகிறது. இதோ நீங்கள் நிற்கும் இந்த நிலத்தை ஆளும் சோலங்கி ராஜபுத்திரனும் நடுங்குகிறான். எல்லோருக்குமே என் பேச்சு கரிக்கத்தான் கரிக்கும். உப்பு உடலில் ஊறினால்தானே சுரணை ஊரும். பௌருஷமும் வரும்' என்று சொல்லி கோபச் சிரிப்பு சிரித்துவிட்டு சோலைக்குள் ஓடிமறைந்தாள் அந்த மோகினி.

அவள் அழகிலும் பேச்சிலும் இதயத்தைப் பறிகொடுத்து விட்டதால் அவள் பெயரைக்கூட கேட்க மறந்து விட்டதை நினைத்து மெள்ளச் சிரித்துக்கொண்டான் சேவாஜி சோலங்கி ராஜபுத்ரர்கள் சிதறிக்கிடந்த அந்த நாளிலும் ஒரு வீரமகள் ராஜபுதனத்திலிருந்ததை நினைத்து ''ராஜபுதனத்தின் ஜீவன் இன்னும் நசிக்கவில்லை'' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். அத்துடன் ''எல்லோரையும் நடுங்கவைக்கும் லக்கா புலானன் எப்படியிருப்பான்?'' என்றும் கேட்டுக்கொண்டான். அந்தக் கேள்விக்கு அவனுக்கு மறு நாளே விடை கிடைத்தது. ராதோர் வம்சத்தாருக்கு அன்று இரவு தங்க இடம் கொடுத்த சோலங்கி ராஜபுத்ரன் சேவாஜியைத் தன் மாளிகை வாசலிலேயே நின்று வரவேற்றான், ''கன்னோசி ராஜ குடும்பத்துக்கு சோலங்கி வம்சம் என்றும் தலை தாழ்த்தும்'' என்று உபசரணைச் சொற்களும் புகன்றான். சேவாஜியின் நூறு வீரர்களுக்கு ஊருக்குள்ளிருந்த வீடுகளிலேயே தங்க ஏற்பாடு செய்யப்பட்டது. சேவாஜியும் சாயித்ராமும் மட்டும் சோலங்கி ராஜபுத்ரனுடன் தங்கினார்கள்.

சோலங்கி மரபீடம் ராஜபுத்ரர்கள் பழக்கம் பெரிதும் மாறுபட்டு விட்டதை சேவாஜி கவனித்தான். ராஜபுத்ர வீரர் கூட்டம் வந்தால் அவர்களுக்கு விருந்து வைக்கும் பழக்கத்தைக்கூடத் துறந்த சோலங்கி ராஜபுத்ரன் வீட்டில் உண்பது கூட வெட்கக்கேடு என்று நினைத்தான். நினைத்ததோடு நில்லாமல் உண்ண உட்கார்ந்ததும் வாய்விட்டும் சொன்னான், ''விருந்தினருக்கு விருந்து மறைந்து எத்தனை நாளாகிறது இங்கே?'' என்று கேட்டான் சேவாஜி.

''எத்தனை நாளாகிறது என்று கேட்பதைவிட எத்தனை வருஷங்களாகின்றன என்று கேட்பது பொருந்தும்'' என்றான் சோலங்கி ராஜபுத்ரன்.

''வருஷங்களா' வியப்பினால் வாயைப் பிளந்தான் சேவாஜி.

'ஆம்'

'ஏன்?'

'லக்கா புலானன் விருந்துகளை அனுமதிப்பதில்லை'.

'அவனுக்கும் விருந்துக்கும் என்ன சம்பந்தம்?'

'மிகவும் சம்பந்தம் உண்டு. விருந்து வைத்தால் நதிக்கரையில் வைக்க வேண்டும். விளக்குகளும் பந்தங்களும் எரியும்...'

'எரிந்தால் ?'

'லக்கா புலானன் ஒற்றர்கள் அவனுக்குத் தெரிவிப்பார்கள். இரண்டு நாழிகைகளுக்குள் அவன் வீரர்கள் விருந்துக்கு வருவார்கள்.'

"வந்தால் ?"

'சண்டையிடுவார்கள்'.

சேவாஜீ சற்று நேரம் யோசித்தான். 'அப்படியானால் நாளைக்கு விருந்து நடக்கட்டும். லவணீ தீரத்தில் விளக்குகளும் பந்தங்களும் எரியட்டும்' என்றான்.

சோலங்கி ராஜபுத்ரன் கோபத்துடன் உணவருந்தாமலே எழுந்தான், 'ஒருக்காலும் முடியாது. சோலங்கி மரபினர் பெரும்பாலர் முன்பே மாண்டுவிட்டார்கள். இனியும் பலி கொடுத்தால் மரபே அழிந்துவிடும்' என்றும் உதடுகள் துடிக்கக் கூறினான்.

சேவாஜீயும் கையை உதறிக் கொண்டு உணவருந்தாமல் எழுந்தான். 'இன்றிரவு சோலையில் என் வீரர்கள் தங்குவார்கள். நானும் தம்பியும் கனிவகைகளை உண்போம். நாளை விருந்துக்கு என் கையொப்பத்தில் லக்கா புலானனுக்கு அழைப்பும் போகும்' என்று சொல்லிவிட்டு எழுந்து வெளியே நடக்க முயன்றான். சோலங்கி ராஜபுத்ரன் கோபத்தால் துடித்தான். ஏதோ சொல்ல வாயெடுத்தான். அந்த சமயத்தில் பக்கத்திலிருந்த திரை விலகியது. லவணீயில் நீராடிய அந்த எழில் மோகினி வெளியே வந்தாள்.

'நீ எங்கு வந்தாய் லாவணீ?' என்று சீறினான் சோலங்கி ராஜபுத்ரன்.

'ஏதோ ஒரு புருஷக்குரல் கேட்டது வந்தேன் அண்ணா!' என்றாள் அவள்.

'போ உள்ளே! இல்லையேல், நீ என் தங்கை என்பதை மறந்துவிடுவேன்' என்றான் சோலங்கி ராஜபுத்ரன்.

'ஆனால் லக்கா புலானன் மறக்க முடியாதே;' என்று கூறிய அவள் சேவாஜியை நோக்கி 'விருந்து நடக்கட்டும் வீரரே! விருந்துக்கு நானும் வருகிறேன்' என்றாள்.

★ ★

விருந்துக்கு சேவாஜீயே சகல ஏற்பாடுகளையும் செய்தான். தன் வீரர்களையும் தம்பியையும் கன்னோசியின் முறைப்படி உயர்ந்த உடைகளை அணியச் சொன்னான். பந்தங்களும் விளக்குகளும் எரிய லவணீ நதிக்கரையில் விருந்துக்கு சகலமும் தயாராயிற்று. விருந்து வேளைக்குச் சரியாக லக்கா புலானனும் இருநூறு வீரர்களுடன் வந்து சேர்ந்தான்.

விருந்து இலைகள் போடப்பட்டிருந்தஇடத்தை அணுகியதும் குதிரையிலிருந்து இறங்காமலே லக்கா புலானன் உத்தரவிட்டான், 'இலைகளை அகற்றுங்கள்' என்று. அவனைக் கண்டதுமே இலைகளை அகற்றச் சென்ற பணியாட்களைக் கையமர்த்தி நிறுத்திய சேவாஜீ லக்காபுலானனை அணுகி அவனை ஏறெடுத்துப் பார்த்தான். பாலைவனத்தில் தனக்கு வழி சொன்ன விசித்திர வீரனே லக்கா புலானன் என்பதை உணர்ந்த சேவாஜீ அவன் தீரத்தையும், எதிரிகள் சுற்றிலுமிருக்கப் பாலைவனத்தில் தன்னந்தனியே திரியும் துணிவையும் நினைத்து வியந்தான். அந்த வியப்பை வெளிக்குக் காட்டாமலே 'இதோ ராதோர் வம்ச ராஜபுத்திரர்கள் அளிக்கும் விருந்து. அதில் கலந்து கொள்ள உனக்கும் அழைப்பு அனுப்பியிருக்கிறேன்' என்றான்.

'விருந்து நடத்த அனுமதியில்லை.'

"யார் அதிமதி ?"

'என் அனுமதி".

'உன் அனுமதி எதற்கு ?'

'என் அடிமைகளுக்குத் தேவை. இந்தப் பகுதியில் இருப்பவர்கள் அனைவரும் எனது அடிமைகள்'

இதைக் கேட்டதும் ராதோர் குலச் சிங்கம் வெகுண்டு போவான் என்று எதிர்பார்த்த சோலங்கி ராஜபுத்ரன் கூட சேவாஜீயின் அமைதியைக் கண்டு வியந்தான். சேவாஜீ யார் நினைப்பையும் லட்சியம் செய்யாமல் தூரத்தே நின்றிருந்த, லாவணீயை நோக்கி 'ராஜபுத்ரி! இப்படி வா' என்றான், அவன் போக்கை புரிந்துகொள்ள முடியாத லாவணி மெள்ள நடந்து வந்தாள், 'உனக்கு ஏன் லாவணீ என்று பெயர் ?' என்று வினவினான் சேவாஜீ.

'லவணீ நதியில் குளிக்கிறேன், அந்த நீரைக் குடிக்கிறேன், உடம்பில் சுரணை ஏறட்டும் என்று. அதனால் பொதுமக்கள் வைத்த பெயர்' என்றாள் லாவணீ.

'அந்த நீரில் எனக்கும் கொஞ்சம் கொடு" என்றான் சேவாஜீ.

லாவணி ஏதும் புரியாமல் நதிக்குள் இறங்கி ஒரு பொன் பாத்திரத்தில் நீரைக் கொண்டு வந்தாள். அதைக் வாங்கிக்கொண்டு லக்கா புலானன் புரவியருகில் நெருங்கிய சேவாஜீ 'புலானா! இதைக் குடி' என்றான்.

புலானன் கோபவிழி விழித்தான் "உனக்குத்தான் தேவை அது. என் உடம்பில் சுரணை இருக்கிறது" என்றான் அவன்.

"குடி, உம்" அதட்டலாக எழுந்தது சேவாஜீயின் கட்டளை.

அதைக் கேட்ட புலானன் ஒரு கணம் திகைத்தான். யாரும் இப்படி பேசி அவன் கேட்டதேயில்லை. ஆகவே அடுத்த கணம் வாளின் மேல் கையை வைத்தான். அடுத்த நிகழ்ச்சிகள் மின்னல் வேகத்தில் ஏற்பட்டன. சேவாஜீயின் இரும்புக் கரம் லக்கா புலானை இழுத்துக் கீழே தள்ளியது. அவன் தம்பியும் நூறு வீரர்களும் வாட்களை உருவிக்கொண்டு வந்தவர்கள் மீது பாய்ந்துவிட்டார்கள். விருந்து அன்றிரவு நடக்கத்தான் நடந்தது. வாட்கள் விருந்துண்டன. சதைகளும் குருதியும் ஆகாரமாயின. சேவாஜீயின் நூறு வீரர்கள் முன்பு நிற்க முடியாமல் புலானன் படை சிதறி ஓடியது. வாளை உருவி கடும் போரிட்ட லக்கா புலானனும் சேவாஜீயின் வாள் வீச்சுக்கு எதிரே நிற்க முடியாமல் வாளை இழந்து நிராயுதபாணியாக நின்றான். அவனை வெட்ட நெருங்கிய வீரர்களைத் தடுத்த சேவாஜீ எதிரியைப் பார்த்து "புலானா! நான் உப்பு நீரைக் குடித்துவிட்டேன். நீயும் குடித்துத் தயாராயிரு. நாளை வருகிறேன் உன்கோட்டைக்கு" என்று சொல்லி அவனைப் போகவிடுத்தான்.

சேவாஜீ அடுத்த இரண்டு நாட்களில் தன் வீரர்களுடன் சோலங்கிகளையும் சேர்த்துக்கொண்டு லக்கா புலானன் கோட்டையைப் பிடித்து அவனை விரட்டினான். இறுதியில் கொன்றும் திரும்பினான். சோலங்கி மக்கள் விடுதலை பெற்றார்கள். அந்த விடுதலைப் பரிசாகத் தன் தங்கை லாவணீயை சேவாஜீக்கு திருமணம் செய்து கொடுத்தான் சோலங்கி ராஜபுத்ரன்.

★ ★ ★

திருமண தினத்தன்று இரவில் சயன அறையில் பஞ்சணையில் உட்கார்ந்திருந்த சேவாஜீயை வெட்கத்

Grams: "COOLTEX"

GOLDEN Textiles

375, ESPLANADE

Opp: High Court

MADRAS-1.

நவநாகரீக ஆடவர், பெண்டீர், குழந்தைகளுக்கேற்ற நவீன கைத்தறி, மில், நூல் பட்டுத் துணி வகைகள் எப்போதும் புத்தம் புதியதாய் மிகக் குறைவான ஒரே விலையில் கிடைக்கும். ஒருமுறை மேற்கண்ட எமது ஸ்தாபனத்திற்கு விஜயம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

துடன் அணுகிய லாவணி கையிலி ருந்த பாலை நீட்டினாள் அவனிடம்.

"வேண்டாம் லாவணி'" என்றான் சேவாஜி.

"பால்..." என்று இழுத்தாள் லாவணி.

"தெரியும்"'

"சர்க்கரை போட்டிருக்கிறது"'

"வேண்டாம்"

"வேறென்ன வேண்டும்?" முணு முணுத்தாள் அவள் தரையைப் பார்த்துக்கொண்டே.

பால் கிண்ணத்தை வாங்கி அப்புறம் வைத்த சேவாஜி அவளை அருகி லிழுத்துப் பஞ்சணையில் உட்கார வைத்து "இதோ! என்னைப் பார்" என்றான்.

விழிகள் கலந்தன. அவள் உதடுகளை நோக்கி நெருங்கினான் சேவாஜி. "ஊஹூம் வேண்டாம்" என்றாள் லாவணி.

"ஏன் லாவணி?"

"என் உதடுகள் உப்பு நீரைக் கொப்பளிப்பவை. கரிக்கும். நீங்களே முதல் நாள் சொன்னீர்களே"

"கரிக்கட்டும். நான் புருஷனாக வேண்டாமா?"

'அதுதான் நிரூபித்துவிட்டீர்களே'

"இன்னும் நிரூபிக்கிறேன். வா, இப்படி" என்று அவள் கையைப் பிடித்து அருகில் இழுத்தான். வெட்கத்தால் அவள் பக்கத்திலிருந்த விளக்கை உதடுகளால் ஊதினாள். விளக்கு அணையவில்லை. இரண்டாம் முறை ஊத முயன்றாள். முடியவில்லை. உதடுகள் விடுதலை இழந்தன,

[கர்னல்டாட் எழுதிய 'ஆன்னல்ஸ் ஆப் மார்வார்" என்ற பகுதியி லுள்ள சரித்திரக் குறிப்பை தழுவிய சம்பவம் இது.]



---



## கலைஞர் கௌதமன்

தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான இவர் கலைக் குடும்பத்திற்கு மிகவும் நெருக்கமானவர். எழுத்தைத் தொழிலாகவே கொண்டிருக்கும் பலருக்கு இடையில் எழுத்தைப் பொழுது போக்காகக் கொண்டிருக்கும் இந்த பிறவி எழுத்தாளரும், பல மீன்களுக்கு இடையே ஒரே ஒரு நிலவுபோல சுடர்விட்டு வருகிறார்.

**STANDARD**
**PENCILS**
**GIVE YOU SUPREME SATISFACTION**

also makers of
'MONALISA'
Deluxe Pencils

Available in
Black Lead
Drawing
Colours
Copying
Colour Copying
Glass Marking and
Eyebrow Pencils

•

*Manufactured by :*

**STANDARD PENCIL FACTORY**

S-6, Industrial Estate,
GUINDY, MADRAS-32



சி. எஸ். சீல் உத்திரவாதம்

பவுன் ஆபரணங்களும்
கவரிங் நகைகளும்,
வெள்ளிப் பாத்திரங்களும்,
ரெடிமேடிலும்,
ஆர்டர் பேரிலும் கிடைக்கும்.



எஸ். வி. ரி. சிவக்கொழுந்து செட்டியார்,
காசுக்கடை:
பெரியகடை தெரு, கும்பகோணம்.





ஆடுதௌகீர்த்தனும்பரத்திலே சோம்பலாசுரன் சோம்பலாசுரன் என்று ஒரு அசுரன் இருந்தான். அவனால், தேவர்கள் இந்திரன், சந்திரன், பூலோகவாசிகள் யாவரும் அவரவர் வேலையை செய்ய முடியாமல் கஷ்டப்பட்டார்கள். என்ன செய்தும் விரட்ட முடியவில்லை.

கடைசியிலே, பரமசிவனை நோக்கி ஒரு யாகம் செய்தார்கள். பெரும் புகை மண்டலம் கிளம்பியது! பிரத்தியட்சமாகத் தோன்றிய சிவன் அந்தப் புகைகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து ஒரு இலையாகச் செய்தார்.

பிரும்மா, அந்த புகை—இலைக்கு ஸ்வஸ்திக் புகையிலை என்று நாமகரணம் சூட்டினர். அந்த புகையிலையை எப்படியோ சோம்பலாசுரனுக்குக் கொடுத்தார்கள். அவன் சுறு சுறுப்பு தேவதையாக மாறினான்.

பக்தகோடிகளே! நீங்களும், ஸ்வஸ்திக் புகையிலையை சுவைத்து சுவைத்து சுறு சுறுப்பு தேவதையின் கடாட்சம் பெறுவீர்களாக!

மங்களம், சுபமங்களம், ஸ்வஸ்திக் புகையிலைக்கும் சுபமங்களம்.

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்
ஸ்வஸ்திக் புகையிலை தொழிற்சாலை—வேதாரணியம்



## அகத்தின் அழகு முகத்தில் தெரியும்!

(திருக்குறள்)

← கெடுவல்யான் என்பது
அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல
செயின்.

T. 12733




படைகொண்டார் நெஞ்சம்போல்
நன்றுக்காது ஒன்றன்
உடல்சுவை கொண்டார்
மனம். →



↑
புகழ்பட வாழாதார்
தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது
எவன்.



← என்பி லதனை
வெயில்போலக் காயுமே
அன்பி லதனை
அறம்.



நன்றாங்கால் நல்லவாக்
காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ
தெவன். →



↑
மயிர்நீப்பின் வாழாக்
கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம்
வரின்.



← இடுக்கண் வருங்கால்
நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்ப
தில்.



அற்றேமென்று அல்லற்
படுபவோ பெற்றேமென்
றோம்புதல் தேற்றா
தவர். →




ஏந்திய கொள்கையார்
சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து
கெடும். →



← ஊழையும் உப்பக்கம்
காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று
பவர்.



அன்புற்று அமர்ந்த
வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும்
சிறப்பு. →



பெயக்கண்டும் நஞ்சுண்டு
அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு
பவர். →

← திறனல்ல தற்பிறர்
செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை
நன்று.



← குழலினிது யாழினிது
என்ப தம்மக்கள்
மழலைச்சொல் கேளா
தவர்.



தீயவை தீய
பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப்
படும். →




← இன்றும் வருவது
கொல்லோ நெருநலும்
கொன்றது போலும்
நிரப்பு.



← ஏதிலார் குற்றம்போல்
தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும்
உயிர்க்கு.



பொள்ளென ஆங்கே
புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி
யவர். →





# உள்ளம் பேசினால்

உள்ளம் பேசினால் உலகையே ஆளலாம் என்பார்கள். ஆனால், அதைத்தான் எவருமே பேசவிடுவதில்லை! மாறாக உலகைக் குறைகூறத்தான் தற்காலத்தில் உள்ளத்தைப் பயன்படுத்துகிறார்கள். புகழ்பெற்ற இருவேறு நாடுகளைத் தனித்தனியாகப் பிரித்து ஒன்றன் மீது ஒன்றை மோத விடுவது முதல் - புகழ் பெற்ற இருவேறு சாதாரண நடிகர்களான எங்களைப் போன்றவர்களைத் தனித்தனியாகப் பிரித்து ஒருவர் மீது ஒருவரை மோத விடுவது வரை உள்ள எல்லா உலக விவகாரங்களுக்கும், தங்களின் பயங்கர உள்ளத்தைத்தான் பயன் படுத்துகிறார்கள் பெரும்பாலோர்! இதனால் அவர்களுக்கு என்னத்தான் இலாபமோ நமக்குத் தெரியாது!!

நாங்களிருவருமே சாதாரண நடிகர்கள் - தமிழகத்தின் தங்கத் தொட்டிலிலே இன்றுவரை புகழாக வளர்ந்தவர்கள்! - வளர்க்கப்பட்டவர்கள்!! ஆனால், எங்களைத்தான் மருள் காட்டி - கட்சி இருள் காட்டி - பொருளின் பலம் காட்டிப் பிரிக்கிறார்கள்! ஆனால், நாங்களோ பிறக்கும் போதே கலையோடும், கட்சியோடும், பொருளோடும், புகழோடும் பிறக்கவில்லை. அது விஷயத்தில் நாங்கள் மிகச் சாதாரணர்கள்! அன்னையின் மடியிலே நாங்கள் அன்று தவழ்ந்தது முதல், இன்று அன்னையின் ஆணைக்குக் கட்டுப்பட்டு காத்திருப்பது வரை எங்களுக்கு வழிக்காட்டியாக இருப்பதெல்லாம் எங்கள் உள்ளம்தான்!

நாங்கள் தூய்மையான உள்ளத்துடன் பயபக்தியுடனிருக்கிறோம்! எங்களைப் பிரிப்பவருக்கோ அது தெரிவதில்லை! எங்களை இருவேறு துருவங்களாகக் கொண்டு-ஏதேதோ பேசுகிறார்கள்! ஆனால், ஒரு உள்ளமும், இரு உருவமுமாக இருக்கும் நாங்களோ இது கண்டு நகைக்கத் தான் செய்கிறோம்! பொறுமையுள்ள மக்களுக்கும், 'ஆமாம்-ஆமாம்' சாமிகளுக்கும், எங்களைப் பிரிப்பதால் எவ்வளவோ மகிழ்ச்சியும், தனிப்பபட்ட முறையில் இலாபமுமிருக்கிறதென்று பார்ப்பதால்தான் 'ஏதோ தொலைந்து போகிறார்கள்!' என்று நாங்களும் சும்மா இருந்து விடுகின்றோம்—ஆனால், அந்தக் கருணையைத்தான் சிலர் பலவீனம் என்று கருதுகிறார்கள்! மிகமிகத் தவறு இது!!

தமிழ்ப் பெருமக்கள் எங்களுக்கு அள்ளிக் கொடுக்கும் பணத்தைக் கடமையுணர்ச்சியில் நாங்கள் அவர்களுக்கே செலவிடுவதில்கூட எவ்வளவோ வியாக்கியானங்கள் செய்யப்படுகின்றன! அத்தனையையும் நாங்கள் புன் சிரிப்புடன் பொறுத்துக் கொள்ளுகிறோம்! காரணம் அது எங்கள் அன்னையின் ஆணை! நாங்களிருவமே எங்கள் அன்னைக்குக் கட்டுப்பட்டவர்கள்! அவர்கள் அன்பால் பூரிப்படைகிறவர்கள்! அத்தகைய நாங்களா வேற்றுமையை வளர்ப்போம்?

ஓரேமொழியில் பேசிநடிப்பவர்கள் நாங்கள் - ஒரே நாட்டை உயர்த்தப் பாடுபடுபவர்கள் நாங்கள் - ஒரே மக்களின் இதயத்தில் இடம் பெற்று விட்டவர்கள் நாங்கள்! இந்தத் தலைமுறையில் மட்டுமல்ல; வேறெந்தத்தலை முறையிலும், நாங்களும் எங்கள் பரம்பரையினரும் இந்தத் தமிழ் மண்ணுக்கே இறையாகப் போகிறவர்கள்! அத்தகைய எங்களை பிரிக்க மட்டும் தயவுசெய்து எண்ணாதீர்கள்! அரிக்கும் உள்ளத்தினருக்கும், ஆமாம் சாமிகளுக்குமே - அந்தப்பணியை விட்டுவிடுங்கள் - ஆனால், பொதுமக்களாகிய உங்களுக்கு மட்டும் அந்தப்பணி வேண்டாம்! காலம் ஒரு நாள் மாறும்! 'நிச்சயம் மாறும்!! அதைத்தான் நாங்களிருவருமே நம்பியிருக்கிறோம்! அதைத்தான் நாங்களிருவமே இன்று உள்ளந் திறந்து தனிமையில் கூட பேசிக் கொண்டிருக்கிறோம்! வாழ்க கலைஞர்கள் ஒற்றுமை! வளர்க நடிகர்கள் உள்ளம்!!

இங்ஙனம்,


**உங்கள் அன்படிமைகள்** (கற்பனை)

# நவீன முறையில் பழமையான கைத்தொழில்கள்

## எல்லோருக்கும் ஏற்ற பலவகை தினுசுகள்

தோல் கைப்பைகள்
பொம்மைகள்
பனை ஓலைப் பொருள்கள்
விளையாட்டு சாமான்கள்
பனைமரம் பர்னிச்சர்
பிரம்பு சாமான்கள்
சணல்நார் & கம்பளிப் பொருள்கள்
விரிப்புகள், ஜமுக்காளங்கள்
அழகிய கோரைப்பாய்கள்

ஜரிகை & பூ வேலைப் பாடமைந்த சாமான்கள்
நெட்டி சாமான்கள்
வெண்கல விக்ரஹங்கள்
வெண்கலம் மற்றும் பித்தளை சாமான்கள்
தஞ்சாவூர் சித்திரத் தட்டுகள் & கிண்ணங்கள்
இசைக் கருவிகள்
மண்பாண்டங்கள்
பீங்கான் சாமான்கள்




★

## தொழில் இலாகா விற்பனை நிலையம்

(சென்னை மாநில கைத் தொழில் பொருள்களின் நிலைக்களம்)

166-A, மவுண்டு ரோடு,
சென்னை-2.

மாதர் பகுதி.

# குழந்தைச் செல்வங்கள் வேண்டுமா?

எஸ். மீனாட்சி

[இந்தப் பகுதியை வயது வந்த பெண்கள் மட்டுமே வாசித்தல் வேண்டும்....! இல்லையேல் எங்களை வீணே நிந்தித்தல் கூடாது!]

**வ**ன விலங்குகள் வாரம், மரங்கள் நடும் விழா, குழந்தைகள் சேமநல விடுதிகள், உணவு உற்பத்தி இப்படிப்பட்ட பல துறைகளில் முக்கியமாய் பெரும் பங்கேற்று அதிக அக்கறையுடன் மாகாண அரசியல்களும், மத்திய அரசும் இரவு பகலாக திட்டங்களைத் தொகுத்து அதை செயலாக்க முற்பட்டிருக்கும் இன்றைய தினத்திலேயே—குழந்தைக் கட்டுப்பாடுகளையும், தடைகளையும் கணவன், மனைவி ஆகியவர்களுக்கு ஆலோசனைகளையும் கூறும் முறையும் அதிதீவிரமாய் பிரச்சாரப் படுத்தப்பட்டு வருவதை நாம் நன்கு அறிவோம். மக்கள் தொகை பெருக்கத்தால் நாட்டில் உணவு பற்றாக் குறை ஏற்படுவதும் நமக்குத் தெரிந்ததே. இத்தகைய இக்கட்டான நிலையிலே நான் மிகவும் துணிந்து 'குழந்தைச் செல்வங்கள் வேண்டுமா ?' என்றொரு கேள்வியைக் கேட்கிறேன்! உண்மை யாதெனில் ஆஸ்திக்கொரு ஆணும், ஆசைக்கொரு பெண்ணும் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் தேவைதான். இப்படிப்பட்டதொரு ஆசையையோ, விருப்பத்தையோ எத்தனைவித கட்டுப்பாடுகள் உள்ள அரசியலாலும் எந்தக் காலத்திலும் ஒழிக்கவோ அல்லது அளிக்கவோ முடியாது என்பது மட்டும் உறுதியான முடிவு. குழந்தைச் செல்வங்கள்தான் வருங்காலத்தில் நாட்டை வளமாக்கப் போகும் மாணிக்கங்கள். ஆனால், கூடுதலான எண்ணிக்கைகள் நிச்சயம் தேவையில்லைதான். இதில் என்றும் அதிகமான குழந்தைகளுடன் நடுத்தர வகுப்பினர்கள் மட்டுமே பாதிக்கப்படுகிறார்கள், அவதியும் அடைகிறார்கள். பெரும்பாலான செல்வந்தர்கள் குடும்பங்களில் குறிப்பிட்ட குழந்தைகளே பிறந்துள்ளன. ஆகவே அவர்களின் செல்வமும் கரைந்து போகாமல் காப்பாற்றப் பட்டு விடுகின்றது என்றாலும், எதையும் தாங்கக் கூடிய செல்வந்தர்களின் இல்லங்களில் குழந்தைகள் எண்ணிக்கைகள் எத்தனை அதிகமாக இருந்தால்தான் என்ன...? ஆனால், நம் நாட்டில் முக்கியமாய் ஏழைகளுக்கும், நடுத்தர வகுப்பினருக்கும் தான் அதிகமாக குழந்தைகள் பிறக்கின்றன. ஆகவே, அவர்கள் எந்தவகையிலும் உயர்வடைய முடியாமல் வர வர தாழ்ந்தே போகின்றனர் எனபதும் உண்மையே என்றாலும், எத்தனையோ சகோதரிகள் குழந்தைப் பேறின்றி இன்பகர வாழ்க்கையை துன்பமாய் அமைத்துக் கொண்டுமிருக்கின்றனர். அதுமட்டுமா...? அவள் பெறும் அபவாதங்களும், மலடி என்ற ஏககால வசை மொழிகளும் ஏராளம்...ஏராளம். மேலும் அவள் பெண்களின் உலகத்திலிருந்தே வெளியேற்றப்பட்டவளாகவே காணப்படுகிறாள். குழந்தைச் செல்வத்திற்காக அவள் படும்பாடும், தனிமையில் உதிர்க்கும் கண்ணீரும், உலகம் பேசுகிற பேச்சுகளால் அவளின் உள்ளம் படும் வேதனைகளும் எண்ணிலடங்கா. இத்தருணத்தில், இந்த வேதனை சூழ்ந்த வேளையிலேயே, தனக்கு இதுவரையில் அன்பையும், ஆசையையும், அளித்து வந்த அவளின் அன்புக் கணவன்—உற்ற துணைவன்—அவளுக்கு இதுவரையில் குழந்தையே பிறக்கவில்லை என்ற ஒரே காரணத்தினால்—இன்னொரு திருமணம் செய்து கொள்ள நிச்சயித்தல்...! செய்துக் கொள்ளல்...! இவைகளைக் காணும் அவளின் உள்ளம் பொறுக்க முடியாமல் உடைகிறது. ஒதுக்கப்பட்ட பெண்களின் உலகத்திலிருந்தே அவள் வெளியேற்றமட்டும் படவில்லை! எதை உண்டால் அது உயிரை உடனே குடிக்குமோ...! கொல்லுமோ.! அதைத் தேடி அவள் சென்று விடுகிறாள். இப்படிப்பட்ட தற்கொலைகள் பலவும் மலிந்ததுதான் நம் நாடு; இதுதான் பெண்களின் ஒரு உலகமும்.

சரித்திர கால ஆரம்பத்திலிருந்து இன்றுவரையில் குழந்தைக்காக வேண்டி ராமேஸ்வரம் முதல், காசி வரையில் சென்று வருவோர்களைப்பற்றி நாம் அறிந்து கொண்டிருக்கிறோம். மேலும் அரசமரத்தை வலம் வருதலும், அனாதைக் குழந்தைகளுக்கு அன்னதானம் செய்தலும், இஷ்ட தெய்வங்களை வணங்கி முடிப்புக்கள் போன்றவை கட்டுதலும் நம் கண்ணெதிரே நிகழ்ந்து வரும் சம்பவங்கள். இவ்வாறான சம்பவங்களாலும் குழந்தைகள் பிறக்கவில்லையே என்று பொறுத்திருந்த குடும்பத்தினர் இறுதியாக மந்திரம், மாயம் என்ற ஏமாற்று வித்தைகளுக்குப் பலியாகி, தங்களின் வாழ்க்கையையும் ஏமாற்றிக் கொண்டு விடுகின்றனர். இயற்கை நியதி முறைக்கேற்ற வழிகளைப் பின்னணியாய் கொண்டால் அல்லாமல், வேறு எந்த வழிகளாலும், குழந்தைப் பிறக்கச் செய்யவே முடியாது. இன்னும் எத்தனையோ சகோதரிகள் மாயம், மந்திரம், ஆகியவைகளுடன், கண்டகண்ட மருந்து வகைகள் போன்றவைகளுக்காகப் பொருளை ஏகமாய் செலவிட்டு, தங்கள் உடலையும் கெடுத்துக் கொள்ளுகின்றனர். இவ்வாறான செயல்களில் ஈடுபடும் பல சகோதரிகள் முதலில் தன் கணவனுக்கும், தன் குடும்பத்துக்குமே தெரிவிக்காமல், குழந்தையின் ஆசை ஒன்றின் காரணமாகவே ஈடுபட்டும் விடுகின்றனர். இதனால் பலவித சந்தேகங்களுக்கும் ஆளாகி அவதிப்பட்டோர் அநேகர். மேலும் பெருத்த ஏமாற்றத்திற்கும் ஆளாகி, இறுதியில் கணவன், மனைவி என்ற உறவும் பாதிக்கப்பட்டு, அவர்களுக்குள் ஒரு பிளவும் ஏற்பட்டு ஒற்றுமையே குலைந்துமிருக்கிறது. மேலும் திருமணமான சகோதரிகள் தங்கள் வாழ்நாள் முழுவதும்எவ்வாறு மலடி என்றஅபவாதத்துடனேயே காலம் கடத்தி, என்றுதான் தன் பேதை இல்லற வாழ்வை வளமுள்ளதாக்க முடியுமோ......?

சகோதரிகளுக்கு இருபத்தெட்டு நாட்களுக்கொரு முறை அண்டத்திலிருந்து பெண்ஜீவக்கரு ஒன்று உற்பத்தியாகி, ஒரு குழாயின்மூலம் அண்டாசயத்தில் சென்று விழுகின்றது. அது ஆண்விந்துவுடன் சேர்ந்து

ஐக்கியமாகிவிட்டால் அவள் தன்னுடைய பிறவிப் பயனை, குழந்தைப்பேற்றை பெற்றவளாகி விடுகிறாள். அந்த ஜீவக்கரு, கருப்பையினுள் சென்று ஒட்டிக் கொண்டு சுமார் ஒன்பது மாதங்கள்வரை அதில் தங்கி, வளர்ச்சியையும் பெறுகின்றது. பெண் ஜீவக்கருசினை யாவதற்கு ஆணின் ஒரே ஒரு ஜீவக்கரு அத்துடன் போய் சேர்ந்தால் போதுமானது. ஆனால், அது அத்தனை சுலபமல்ல. ஆணின் உயிர்த் துளிகள் உள்ளே சென்றவுடனேயே இவற்றிலுள்ள உயிர்க் கிருமிகளை விழுங்க பெண்ணின் உறுப்பிலுள்ள பக்கங்களிலிருந்து அணுக்கள் விரைந்து வருகின்றன. பெண்ணின் அணுக்களுக்கு ஆணின் பல ஜீவக்கிருமிகள் இறையாவதுண்டு. அவைகளிடமிருந்து ஆணின் ஜீவக்கரு தப்பித்துச் செல்லுவதுதான் பெருங்கஷ்டம். அப்படி அது வீரியம் பெற்று தப்பித்துச் சென்றதில் ஆணின் ஒரே ஒரு அணு பெண்ணின் சினை முட்டையிடம் சென்று தாக்கினால், உடனே முட்டை உடைந்து, ஆணின் ஜீவக்கருக்கு இடமளித்து, இன்புற்று அதை உருவகமாக்குகின்றது.



ஆரோக்கியமுள்ள ஒரு ஆடவனுக்கு சுமார் இருபது கோடி உயிர் அணுக்கள் உள்ளன. இவைகளின் ஆயுள் காலம் மிகவும் குறைவு. கணவனும், மனைவியும் உல்லாசமாக இருக்கும் சமயம் புரியும் பலவித கிரியைகளினால் பல லட்சக்கணக்கான உயிரணுக்கள் பாழாகி விடுகின்றன. மிஞ்சிய உயிரணுக்களில் ஒன்றாவது, அதன் எதிரிகளிடமிருந்து தப்பித்து மேலே கூறியபடி சென்றால்தான் பெண் கர்ப்பமுறுகிறாள். இதற்கு முக்கியமாய் பெண் ஜீவக்கரு உரிய காலத்தில் தயாராக வேண்டும். அதேபோல் ஆணின் ஜீவக்கருவும் எதிர்படும் தடைகளை நிவர்த்தித்துக் கொள்ள வேண்டும். இவை யாவும் சரிவர நிகழ்ந்தும் கூட பல சகோதரிகள் அதிகமாய் உணர்ச்சி வசப்பட்டு, மனஎழுச்சி, கிளர்ச்சி போன்றவைகளுக்கு அடிமையாகி, இறுதியில் கரு சிதைவிற்கும் ஆளாகி வருந்துகின்றனர். இவ்வித தடைகளையும் சகல வருத்தங்களையும் போக்கவே விஞ்ஞான மேதைகளின் ஆராய்ச்சியின் பயனாய் நமக்கு ஐந்து சிறந்த வழிகள் கிடைத்துள்ளன. அவைகளைப் பற்றி நாம் கீழே காண்போம். ஆனால் சகோதரிகள் அஞ்சத் தேவையில்லை!

**சிகிச்சை முறைகள் :**

1. பெயரிடப்படாத ஒளிக்கதிர்களை சிறிய அளவில், சரியாக அண்டத்தின்மீது ஒரு சில வினாடிகள் விழச்செய்யப்படுகிறது. இந்த கதிர்வீச்சு சிகிச்சை முறை சுமார் மூன்று வாரங்கள் வரை நீடிக்கவேண்டும். இதனால் அண்டம் நல்ல சுறுசுறுப்பைப் பெற்று, ஜீவக்கருக்களை குறித்தகாலத்தில் ஒழுங்காக உற்பத்தி செய்து கருப்பைக்கு அனுப்பிவைக்கிறது.


2. கதிர்வீச்சு சிகிச்சைக்கு பயப்படக் கூடியவர்கள், மாத்திரைவடிவில் கிடைக்கும் மருந்துகளை உபயோகித்து பலனடையலாம். இதைப் பற்றி நன்குணர்ந்த மருத்துவ மேதைகளிடம் அணுகித் தெரிந்தும் கொள்ளலாம்.

3. சமீபத்தில் ஒரு அமெரிக்க விஞ்ஞானியால் கண்டுபிடிக்கப்பட்ட 'பெர்டிலோ-பாக்' என்ற ரப்பர் குழாய், கணவனும் மனைவியும் உல்லாசமாக இருக்கையில் வீணாக்கப்பட்ட ஆணின் உயிரணுக்கள் போக மீதமுள்ளவற்றை, அவை செல்லும் வழியை நேர்செய்து வீரியமுள்ளதாக்கி அவைகள் எந்தவித தடையுமின்றி பெண்ணின் ஜீவக்கருவுடன் போய் சேர துணைபுரிகிறது.

4. உணர்ச்சி வசப்படாத பெண்களுக்கும் கருச் சிதைவு ஏற்படுவதுண்டு. அது எவ்வாறு நிகழ்கிறதென்றால்; பெண்ணின் ஜீவக்கருவில் ஆணின் உயிரணுபோய்ச் சேர்ந்தவுடன் உண்டாகும் கரு, கருப்பையின் ஒரு பாகத்தில் ஒட்டிக் கொண்டு வளர்கிறது. அது அப்படிச் சென்று ஒட்டிக்கொள்வதற்கு ரத்தத்தில் உள்ள சில ரசாயனப் பொருள்கள் காரணமாகும். எக்காரணத்தைக் கொண்டும் கர்ப்பம் தரித்த காலத்தில் அந்த ரசாயனப் பொருள்கள் போதிய அளவில் கருப்பைக்கு கிடைக்காவிடில் கருப்பைக்கும், கருவிற்கும் உள்ளபிடி விடுபட்டு, கரு வெளியேற்றப்பட்டு விடுகிறது. ஆனால், தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஒருவகை 'ஸ்டீராயிட்' மருந்துவகை மூலம் கருச்சிதைவை தடுக்க முடியும்.

5. குழந்தையே பெற்றெடுக்காதவர்களின் எண்ண எழுச்சிகளை நன்கு ஆராய்ந்து, அவர்களுக்கு மேலும் குழப்பம் உண்டாக்காமல் அவர்களின் மனதிற்கேற்ப நடந்து, நாளடைவில் அவர்களை உண்மையான நம்பிக்கை மிக்கவர்களாக மாற்றி, முறையோடு கருத்தரிக்க உதவும் அரிய மனோதத்துவமும், தேகப்பயிற்சியும் நல்ல பயனை அளிக்கும். மேலும் அவர்கள் தாங்கள் நிச்சயம் குழந்தையைப் பெற்றெடுப்போம் என்ற நம்பிக்கை மிக்கவர்களாக தங்களின் மனதிற்கே உறுதியை அளித்துக் கொள்ளல் எல்லாவற்றிலும் சிறந்தது.

இவைகள் அன்றி வேறு எந்த வழிகளைப் பின்பற்றினாலும் அவைகள் பயனளிக்காமல் போய்விடுவதுடன், இயற்கையின் நியதிக்கே மாறுபட்டதாகும். அத்துடன், ஏதாவது ஒரு ஆணின் ஜீவக்கருவை பெண்ணிற்கு இஞ்சக்ஷன் மூலம் செலுத்துவதும் முறையற்றது. வேண்டுமானால் இம்முறை ஆடுமாடுகள் வரையில் மட்டுமே நிறுத்திக்கொள்வது நலம்! சகோதரிகளே! இந்தக் கட்டுரையை நன்கு வாசித்து குழந்தைச் செல்வமின்றி தவிப்போர் அத்தனைப் பேர்களும் நான் கூறியுள்ள வழிகளை முயற்சித்துப் பெற்று, தங்களின் இல்லற வாழ்நாட்களை குழந்தைச் செல்வங்களுடன் பொன்னாட்களாக்கிக் கொள்ள வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.



'கலை' ஆசிரியர் அ. சீனு அவர்களும், நடிகவேள் எம். ஆர். ராதா அவர்களும். நடுவிலிருக்கும் படம்: எஸ். எஸ். வாசன் அவர்கள்.

## கலைத்துறை வள்ளல் - வாசனவர்கள் !

கண்டோரின் கைப்பாவையாக இருந்த கலையுலகை ஒழுக்கப் பாதையிலே அழைத்து வந்தவர் வள்ளலார் வாசனவர்கள் ! இந்த உண்மையை இன்றைய கலையுலகம் மறக்கவே முடியாது ! கலைத்துறைக்கும், கலைஞர்களின் நல்வாழ்வுக்கும் புதியதோர் இலக்கணம் வகுத்துத் தந்தவர் வாசனவர்கள். இதனைக் கலைத்துறையின் பெரும் பெரும் அதிகாரிகளாக உள்ளவரே இன்று உணரத் தொடங்கிவிட்டனர். இந்தியா முழுவதிலும் கலைத்துறையின் வளைவு நெளிவுகளை நன்கு உணர்ந்த ஒரே பேருருவம் வாசனூர் அவர்கள்தான் அவரைக்கண்டு பல படமுதலாளிகளும், இன்று அஞ்சி நடுங்கும் வகையில் அவரின் ஆற்றலும் சொல் வன்மையுமிருக்கிறது! இத்தனைக்கும் அவரோ எளிமையின் பிம்பமாக, உழைப்பின் சின்னமாக, அன்பின் பெட்டகமாக பிறர் நலனில் அக்கறை கொண்டவராகவே எப்போதும் காட்சியளிக்கிறார்கள் !

வாசனவர்கள் இன்று கலைத்துறையின் கலங்கரை விளக்கம் ! அடக்கம் அன்பு' அறிவு ஒழுக்கம், ஆற்றல் தன்னம்பிக்கை இவற்றின் சிகரத்திலே நிற்கும் வள்ளலார் வாசனவர்கள் தாம் வகுத்த பாதைக்குப் பிறரை அழைப்பவர்கள்—இலட்சியத்தில் ஒரு சிறிதும் மாறாதவர்கள் ...!

## நடிப்புத்துறைக் காவலர் - நடிகவேள் ராதா அவர்கள் !

இன்று நாடகத்துறையின் ஒரே காவலராகவும், உயர்ந்த நடிகராகவுமிருப்பவர் நம் நடிகவேள் ராதா அவர்கள் ! தன் தலைவரைப் போலவே எளிய உருவம் ! எளிய வாழ்க்கை ! எளிய நடை-முறைகள் ! அன்று போலவே இன்றும் எவரிடமும் அளவளாவும் சரள சுபாவம் ! எந்தச் சூழ்நிலைக்கும் தன்னைத் தயாரித்துக் கொள்ளும் பெரிய உள்ளம் ; ஆகிய இத்தனையும் கொண்டவர்தான் நடிகவேள் ராதா அவர்கள் ! நடிப்புத்துறைக்கும், நடிகர்களின் இலட்சியத்திற்கும் இன்றுவரை இலக்கணம் வகுத்துத் தந்தவரில் மிக மிக உயர்ந்தவர் - மிக மிகச் சிறந்தவர் ராதா அவர்கள் தான்.

திறமை, துணிவு, ஆற்றல், அறிவு இவற்றின் விளிம்பிலே நிற்பவர் ராதா அவர்கள் ! தன் வழி நடப்பதில் அஞ்சாதவர். எதிர்ப்புக்குத்தன் சொல்குறுதியால் எல்லைக் கோடு அமைத்துக் காட்டியவர் ! சிக்கனத்தில் பெரிதும் அக்கறைக் கொண்டவர் - கொண்ட லட்சியத்தில் ஒரு சிறிதும் மாறாதவர்—தவறாதவர்......!

இவர்களைப்பற்றி எண்ணுவதிலே 'கலை'—பெருமைக் கொள்ளுகிறது ! இவர்களைப் பாராட்டி எழுதுவதிலே பெருமகிழ்ச்சியடைகிறது.' கலையின் வளர்ச்சியில் இன்று இவர்கள் கொண்டிருக்கும் அன்பையும்—இவர்கள் உயர்வில் இன்று கலை காட்டும் பேரார்வத்தையும் காலம் என்றென்றும் மறவாது !

வாழ்க வள்ளலார் !

வாழ்க நடிகவேள் !

**ஓவியர் அ. சீனு.**

6-105E மவுண்ட் ரோட் சென்னை—18ல் உள்ள 'பாலு பிரதர்ஸ் ஆர்ட் பிரிண்டர்'ஸில் திரு. எஸ். நடராஜன் அவர்களால் அச்சிடப்பட்டு, 109 டி—6 மவுண்டு ரோட்டில் உள்ள பாலு சகோதரர்களின் வெளியீடுகளுக்காக ஓவியர் அ. பாலு அவர்களால் வெளியிடப்பட்டது. ஆசிரியர்: ஓவியர் அ. சீனு


அருணாசலம் பிக்சர்ஸ்
கைதியின் காதலி!
தயாரிப்பு & டைரக்ஷன்...
A.K.வேலன்
சங்கீதம்....
K.V.மஹாதேவன்
BALU BROS

REGD. No. 7033. Registered as A Newspaper in Ceyl

